இதயம் திறந்து இதழ்கள் பாராட்டு...

பிப்ரவரி 2022 – மே 2022

தொகுப்பு - 3

1 ஆண்டு ஆட்சி

ஓயா உழைப்பின் ஓராண்டு

இதயம் திறந்து இதழ்கள் பாராட்டு...

பிப்ரவரி 2022 – மே 2022

தொகுப்பு - 3

தினகரன்

01-Feb-2022

மக்கள் பெருமிதம்

தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப் பேற்ற பிறகு குறுகிய காலத்தில் அனைத்து துறைகளிலும் தமிழக அரசு பெருமை மிகு சாதனை படைத்துள்ளது. சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் மேம்பட பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. அனைத்து துறைகளிலும் நம்பர் 1 இடத்தை தமிழகம் விரைவில் எட்டும். அதற்கான முயற்சியில் தமிழக அரசு தீவிரமாக இறங்கியுள்ளது.

கடந்த ஆட்சியில் இருந்தவர்கள் மக்களுக்கான திட்டங்களில் கவனம் செலுத்தவில்லை. தங்களை காப்பாற்றி கொள்வதில் முழுக்கவனம் செலுத்தினர். இதனால் தமிழக மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது. மக்கள் நலன் சார்ந்த விஷயங்களை அவர்கள் கண்டு கொள்ளவில்லை. முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற பிறகு கடந்த ஆட்சியில் ஏற்பட்ட பல்வேறு குளறுபடிகளை சரி செய்து, அனைத்து துறைகளும் அதீத வளர்ச்சி அடைந்து, முதல் இடத்தை பெற வேண்டும் என்பதற்காக பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து வருகிறார். தற்போது தமிழகம் வளர்ச்சி, தொழில்வளம் உள்ளிட்ட அனைத்திலும் வீறுநடை போட்டு வருகிறது.

கொரோனா காலத்திலும் அதிகமான தொழில் முதலீடுகளை பெற்று தமிழகம் சிறந்து விளங்கி வருகிறது. நாட்டில் மற்ற மாநிலங்களை உதாரணம் காட்டி வந்த காலம் மாறிவிட்டது. இனி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் போல், பிற மாநில முதல்வர்கள் செயல்பட வேண்டும் என்று மற்ற மாநிலங்களை சேர்ந்த மக்கள் தெரிவித்து வருகின்றனர். அதற்கு முக்கிய காரணம், முதல்வர் மு.க.ஸ்டாலின் மக்களோடு மக்களாக இருந்து வருகிறார். மக்களுக்காக முதல்வர் உழைத்து கொண்டு வருகிறார்.

குறிப்பாக, முதல்வரின் முயற்சியால் தடுப்பூசி செலுத்துவது மக்கள் இயக்கமாக மாறியுள்ளது. மேலும், சென்னையில் பல இடங்களுக்கு நேரில் சென்று மக்களுக்கு முகக்கவசம் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். அனைத்திலும் முதல்வர் மிக சிறப்பாக செயல்பட்டு வருகிறார். இதனால் அவரை மக்கள் பாராட்டி வருகின்றனர். இது சிலருக்கு பொறுக்கவில்லை. குறுகிய காலத்தில் எண்ணற்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. அனைத்து துறைகளிலும் தமிழக அரசு சாதனை படைத்துள்ளதை நினைத்து மக்கள் பெருமிதம் கொள்கின்றனர்.

முக்கியமாக, கடந்த ஆட்சியை நினைத்து தற்போதும் மக்கள் கோபம் கொள்கின்றனர். அந்த அளவுக்கு மக்கள் கடும் இன்னல்களை சந்தித்தனர். கடந்த ஆட்சியில் சந்தித்த அவலங்களை மக்கள் மறந்து விடவில்லை, மறக்கவும் மாட்டார்கள். தங்களின் உரிமைகளை போராடி பெற வேண்டிய இக்கட்டான சூழ்நிலை இருந்தது. போராட்டம், ஆர்ப்பாட்டம், கொலை, கொள்ளை, வழிப்பறி உள்ளிட்ட சமூக விரோத செயல்கள் கடந்த காலத்தில் அதிகமாக இருந்தது. தமிழகம் பொருளாதார ரீதியாக சரிவை சந்தித்தது. தற்போது அமைதியாக உள்ள தமிழகத்தில் மதவெறியை விதைத்து, கலவரத்தை தூண்டி விட்டு அரசியல் செய்ய சிலர் விரும்புகின்றனர். இவர்களின் கோர முகம் மக்களுக்கு தெரிந்து விட்டது. எனவே, நடைபெற உள்ள நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் அவர்களுக்கு தகுந்த பாடத்தை புகட்ட மக்கள் தயாராகி விட்டனர்.

தினகரன்
03-Feb-2022

பசி போக்கும் மாநிலம்

கடந்தாண்டு அக்டோபரில் உலக பட்டினி குறியீடு பட்டியல் வெளியிடப்பட்டது. 116 நாடுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இதில் இந்தியா 101வது இடத்தில் உள்ளது. அதாவது, ஆப்கானிஸ்தான், காங்கோ, சோமாலியா உள்ளிட்ட 15 நாடுகளே நம்மை விட பின்தங்கி உள்ளன.

பொதுவாக, பட்டினி குறியீடானது ஊட்டச்சத்து குறைபாடு, 5 வயதுக்கு குறைவான குழந்தைகள் உயரத்திற்கு ஏற்ற எடை மற்றும் உயரம் இல்லாதது, அக்குழந்தைகளின் இறப்பு விகிதம் என 4 காரணிகளை அடிப்படையாக கொண்டு புள்ளிகள் வழங்கப்படும். இதில் இந்தியா 27.5 புள்ளிகளை பெற்று, அண்டை நாடுகளான இலங்கை, பாகிஸ்தான், வங்கதேசம் மற்றும் ஏழ்மையான நாடுகளான சூடான், அங்கோலாவை விட பட்டினியால் வாடுவோர் கணக்கீட்டில் பின்தங்கி உள்ளதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதை கவனத்தில் கொண்டு, இந்தியாவில் பொதுமக்கள் பட்டினியாக இருப்பதை தடுக்கும் வகையில் அனைத்து மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களில் சமத்துவ சமுதாய உணவுக்கூடம் அமைக்க வேண்டும் என உச்சநீதிமன்றத்தில் ஒரு பொதுநல வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் தமிழக அரசு தாக்கல் செய்த அறிக்கை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

அதில், தமிழகத்தில் பட்டினியால் யாரும் உயிரிழக்கவில்லை. கடந்த 40 ஆண்டுகளாக சமுதாய உணவுக்கூடம், மற்றும் பொதுவிநியோக உணவு திட்டம் ஆகியவை தமிழகத்தில் நடைமுறையில் உள்ளது. தற்போது மாநிலம் முழுவதும் அம்மா உணவகம் என்ற பெயரில் 654 சமுதாய உணவுக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. இதற்கான செலவை அரசே ஏற்று, ஓராண்டுக்கு அரசு சார்பில் ₹300 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மேலும் பள்ளிகளில் 1 முதல் 8ம் வகுப்பு வரை மாணவர்களுக்கு தினமும் உலர் உணவோடு சேர்த்து சத்து முட்டையும் வழங்கப்படுகிறது. இதுதவிர கோயில்களில் அன்னதானம் மூலம் உணவு வழங்கப்படுகிறது. இதைத்தவிர தமிழகம் முழுவதும் ''கலைஞர் உணவகம்'' என்ற பெயரில் கூடுதலாக 500 உணவுக்கூடங்கள், விரைவில் நடைமுறைக்கு வருகிறது. சமுதாய உணவுக்கூடம், அங்கன்வாடிகள் ஆகிய விவகாரத்தில் நாட்டிலேயே தமிழகம் முன்னுதாரணமாக இருந்து வருவதால் தமிழகத்தில் பட்டினி சாவு என்பதே கிடையாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் தமிழகத்தில் கனமழையால் சென்னை உட்பட பல்வேறு மாவட்டங்களில் கடும் பாதிப்பு ஏற்பட்டது. அந்த நேரத்தில் கூட பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உணவு வழங்கப்பட்டது. அவர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக மளிகை உள்ளிட்ட நிவாரணப் பொருட்களும் வழங்கப்பட்டன. அரசு நிர்வாக செயல்பாட்டில் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் திகழ்கிறார். அந்த வகையில் இந்திய திருநாட்டை பட்டினி குறியீடு பட்டியலில் பின்தங்க விடாமல் செய்வதை ஒவ்வொரு மாநிலங்களும் லட்சியமாக கொள்ள வேண்டும். ஏழை, எளிய மக்கள் அனைவருக்கும் உணவு என்ற தமிழக அரசின் கொள்கை முடிவினை மற்ற மாநிலங்களும் முன்னெடுத்தால் இந்தியாவில் பட்டினி சாவே இருக்காது. ஒன்றிய அரசும் இப்பிரச்னைக்கு முக்கியத்தீர்வு காண வேண்டும்.

மு.க.ஸ்டாலினுக்கு வீரமணி பாராட்டு!

சென்னை, பிப்.3

அண்ணாவின் நினைவு நாளில்அனைத்திந்தியசமூக நீதி கூட்டமைப்பில் இணைய 37 கட்சி தலைவர் களுக்கு அழைப்பு விடுத்து தந்தைபெரியாரின்சமூகநீதி தத்துவத்தை இந்திய அள வில்கொண்டுசென்றுள்ளார் முதலமைச்சர்எனதிராவிடர் கழக தலைவர் கி வீரமணி பாராட்டு தெரிவித்தார்.

பேரறிஞர் அண்ணாவின் 53வது நினைவு தினத்தை யொட்டி சென்னைமெரினா வில் உள்ள அண்ணா நினை விட வளாகத்தில் பேரணியாக நடந்து சென்று திராவிடர் கழகத்தின் தலை வர் ஆசிரியர் வீரமணி மற் றும் திராவிடர் கழகத்தை சேர்ந்தவர்கள் மலர் வளை யம் வைத்து மரியாதை செலுத்தினர். அதனை தொடர்ந்து செய்தியாளர் களை சந்தித்த வீரமணி கூறி யதாவது:–

அண்ணாவை பொறுத்த வரைஅவர்மறையவில்லை திராவிடத்தின் எழுச்சியாக வாழ்ந்து வருகிறார். அண் ணாவின் நினைவு நாளில் சமூக நீதி இயக்கத்தில் இணைய 37 கட்சிகளை இணையஅழைப்புவிடுத்து தந்தைபெரியாரின்சமூகநீதி தத்துவத்தை இந்திய அள வில் கொண்டு சென்றுள் ளார்.

ராகுல்காந்திதமிழகத்தை உணர்ந்து யதார்த்தத்தை புரிந்து பேசியுள்ளார். தமிழ கத்தில்உள்ளவர்களுக்குபுரி யாதது வடக்கில் உள்ள ராகுல் காந்திக்கு புரிந்துள்ளது. மண்ணால் மாறுபட்டிருந்தாலும், கொள்கையால் ஒன்றுபட்டி ருப்பது பெரியாருக்கு, அண் ணாவுக்கு, கலைஞருக்கும் கிடைத்த வெற்றி. அ. தி.மு.க.–பா.ஜ.க.கூட்டணி முறிவு தற்காலிக மனவில கல் ஆகும்.

இவ்வாறு வீரமணி கூறி னார்.

தினகரன்

04-Feb-2022

வரவேற்பு

நாட்டில் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களின் இடஒதுக்கீடு உள்ளிட்ட நலன்கள் பறிக்கப்படுகின்றன. இதனால் சமூகநீதி மறுக்கப்பட்டு அடித்தட்டு மக்கள் ஒடுக்கப்படுகிறார்கள். தமிழகம் மட்டுமின்றி நாடு முழுவதும் உள்ள பிற்படுத்தப்பட்ட, பட்டியலின, பழங்குடியின மக்களின் நலனை மீட்டெடுக்கும் வகையில் அனைத்திந்திய சமூக நீதிக் கூட்டமைப்பை தொடங்குவதாக தமிழக முதல்வர் அறிவித்துள்ளார். மேலும், சமூக நீதியை வென்றெடுப்பதில் ஒருமித்த சிந்தனையுள்ள, கொள்கையுடைய கட்சி தலைவர்கள் இணைய வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார். அதன்படி காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, ராஷ்டிரிய ஜனதா தள தலைவர் லாலு பிரசாத் யாதவ், மதசார்பற்ற ஜனதா தள தலைவர் தேவகவுடா, தெலுங்கு தேச கட்சி தலைவர் சந்திரபாபு நாயுடு உள்பட நாடு முழுவதும் 38 அரசியல் கட்சி தலைவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்,

தமிழகம் இன்று அனைத்து துறைகளிலும் முன்னேற்றமடைய காரணமாக இருப்பது சமூக நீதி எனும் அசைக்கமுடியாத தத்துவம் தான். ஆனால் பன்முகத்தன்மை வாய்ந்த பல பண்பாடுகளால் ஆன நமது ஒன்றியம் பிரிவினை மற்றும் சமய மேலாதிக்கத்தினால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.

இந்தியாவில் சமூகநீதிக் கருத்தியலை முன்னெடுத்து செல்வதற்கான திட்டத்தை வடிவமைத்து மேலும் சிறப்பாக செயல்படக்கூடிய வழிமுறைகளை கண்டறிவதற்கும் அனைத்து மாநிலங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்தபட்ச செயல்திட்டத்தை உருவாக்கும் தளமாக இந்த கூட்டமைப்பு இருக்கும் என்று உறுதிபட தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டமைப்பில் ஒவ்வொரு கட்சியும் அவர்களது பிரதிநிதியை நியமிக்க வேண்டும். அப்போது தான் ஒடுக்கப்பட்டோருக்கு பொருள் பொதிந்த உண்மையான சமூக நீதி சென்றடையும்.

அகில இந்திய மருத்துவப்படிப்பில் மாநிலங்களுக்கான இதர பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இடஒதுக்கீட்டை சட்டப்போராட்டம் மூலம் மீட்டெடுத்து சமூக நீதி தமிழகத்தில் நிலை நாட்டப்பட்டுள்ளது போன்று நாடு முழுவதும் பிற்போக்கு சக்திகளின் சவால்களை எதிர்கொள்ள இந்த கூட்டமைப்பு அவசியமாகிறது. ஒடுக்கப்பட்ட மக்களின் நலன் கருதி அவர்களுக்கான சமூகநீதி கருதி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் எடுத்துள்ள சமூக நீதி கூட்டமைப்பு எனும் வரலாற்று சிறப்பு மிக்க முடிவுக்கு ஆதரவுக்கரமும், நேசக்கரமும் நீண்டு வருகிறது. அனைத்து தரப்பினரும் வரவேற்றுள்ளனர். இந்நிலையில், நாடாளுமன்றத்தில் பேசிய காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி, 'பாஜ வாழ்நாளில் தமிழகத்தை ஆளமுடியாது என்று பேசியிருப்பது மதசார்பற்ற சக்திகளுக்கு மேலும் வலிமையை வழங்கியுள்ளது'.

தமிழக முதல்வரின் சமூகநீதி கருத்தியலை ஏற்கும் வகையில், 2024ம் ஆண்டு தேர்தலில் பாஜ ஆட்சியை வீழ்த்த அனைத்து மாநில கட்சிகளும் ஒரே அணியில் ஒன்றிணைய வேண்டும் என்று மேற்குவங்க முதல்வர் அழைப்பு விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

Andhra student thanks CM Stalin for fighting for NEET exemption



Sathish a student of Godavari dist, Andhra Pradesh, was standing with banner 'CM Sir Help me' on the TTK road, while crossing the student on his way to Secretariat Chief Minister Stalin stopped the car. Student thanked the CM Stalin for helping the student community by fighting for exemption of NEET. He told due to NEET, he could not get MBBS seat. He asked CM to extend help to Andhra Pradesh also.

மாலை முரசு

04-Feb-2022

உங்கள் கனிவான வார்த்தை எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது!

மு.க.ஸ்டாலினுக்கு ராகுல்காந்தி நன்றி!!

சென்னை, பிப்.4

உங்கள் கனிவான வார்த்தைகள் எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது என்று முதல்வர் மு.க.ஸ்டாலினுக்குகாங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி நன்றி தெரிவித்துள்ளார்.

இது குறித்து ராகுல் காந்தி வெளியிட்ட டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:

நாட்டின் ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ளவர்களிடம் சேர்த்து தமிழர்களும் என் சகோதரர்களும், சகோதரிகளுமே ஆவர். உங்களின் (முதல்வர் மு.க.ஸ்டாலின்)கனிவான வார்த்தைகளுக்கு மிக்க நன்றி.நம்முடையபகிர்ந்து கொண்ட நம்பிக்கை யான பன்முகத்தன்மை , கூட்டாட்சி மற்றும் கூட்டுறவு கொள்கையுடனான இந்தியா பற்றிய கொள்கை வெற்றி பெறும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை.இவ்வாறு அந்த டுவிட்டர் பதிவில் ராகுல் காந்தி கூறியுள்ளார்.

தினகரன்

05-Feb-2022

ஓங்கி ஒலிக்கட்டும்

'நீட்' தேர்வில் இருந்து தமிழகத்துக்கு விலக்கு அளிக்கக்கோரி, கடந்த செப்டம்பர் 13-ம் தேதி தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றிய மசோதாவை, தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி திருப்பி அனுப்பியிருக்கிறார்.

நாட்டில் சட்டங்கள் இயற்றுவதில் உச்சபட்ச அதிகாரம் பெற்ற அமைப்பு நாடாளுமன்றம் மட்டுமே. அவற்றுக்கு ஒப்புதல் அளிப்பது மட்டுமே ஜனாதிபதியின் வேலை. ஒருவேளை, மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்காமல் ஜனாதிபதி திருப்பி அனுப்பினால், ஒன்றிய அரசு, அந்த மசோதாவில் திருத்தம் செய்தோ அல்லது அப்படியே மீண்டும் ஒப்புதலுக்கு அனுப்பலாம். அப்படி இரண்டாவது முறை, வரும் மசோதாவுக்கு, அவர் ஒப்புதல் அளித்துதான் ஆகவேண்டும். நாடு தழுவிய ஒன்றிய அரசின் சட்டங்களுக்கு இதுதான் நடைமுறை.

இதேபோல், மாநில அரசுகளும், மாநில பட்டியலில் உள்ள விவகாரங்கள் மற்றும் பொதுப் பட்டியலில் உள்ள விவகாரங்களில் சட்டங்கள் இயற்றலாம். இந்த சட்டங்கள், ஒன்றிய அரசின் சட்டத்திற்கு உட்பட்டு இருக்கும் பட்சத்தில், கவர்னரே ஒப்புதல் அளித்துவிடலாம். உதாரணம், அரசுப்பள்ளி மாணவர்களுக்கு 'நீட்' கலந்தாய்வில் 7.5% இடஒதுக்கீடு வழங்கும் மசோதா.

இல்லையெனில், அரசியலமைப்பு சட்டம் பிரிவு 254(2)-ன்படி, ஜனாதிபதிக்கு அனுப்பி, ஒப்புதல் பெறவேண்டும். அவர் மாநில அரசின் மசோதாவை பரிசீலனை செய்துவிட்டு, ஒப்புதலும் அளிக்கலாம், நிராகரிக்கவும் செய்யலாம்.

இதுபோன்ற விஷயத்தில் கவர்னரின் வேலை என்பது, ஜனாதிபதிக்கும்-மாநில அரசுக்கும் இடையே பாலமாக செயல்படுவதுதான். மாநில அரசின் மசோதா, ஒன்றிய அரசின் சட்டங்களை மீறுவதாக இருந்தால், அதை ஜனாதிபதியின் ஒப்புதலுக்காக அனுப்புவதுதான் கவர்னரின் பணி. ஆனால், தற்போது தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி நேர்எதிராக செயல்பட்டுள்ளதால் இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

கவர்னரின் இந்த செயல், சட்ட விதிமுறைகளுக்கு எதிரானது என திமுக உள்ளிட்ட 99 சதவீத கட்சிகள் ஒட்டுமொத்தமாக எதிர்ப்பு குரல் கிளப்பியுள்ளன. தமிழக மக்களை, கவர்னர் அவமானப்படுத்திவிட்டார் என அரசியல் கட்சி தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். மாணவர் அமைப்பினர், கவர்னருக்கு எதிரான அறவழி போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்த விவகாரத்தில் தமிழக அரசு சார்பில் அடுத்தக்கட்ட நடவடிக்கை மேற்கொள்வது பற்றி விவாதிக்க, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அனைத்துக்கட்சி தலைவர்கள் கூட்டம் சென்னையில் இன்று நடக்கிறது. இந்த கூட்டத்தில் பாரதிய ஜனதா தவிர, மீதமுள்ள அத்தனை கட்சிகளும் ஒரு சேர பங்கேற்க உள்ளன. இது, தமிழக அரசு எடுத்துள்ள முயற்சிக்கு பெரும் வெற்றியாக அமைந்துள்ளது. இந்த கூட்டத்தில், ஒன்றிய அரசுக்கு எதிரான, தமிழக மக்களின் ஒட்டுமொத்த குரல் ஓங்கி ஒலிக்கும். அதன் அடிப்படையில் நீட் விவகாரத்தில் நல்லது நடக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

INDIA TODAY

07-Feb-2022

LORD OF THE FILES

M.K. Stalin waited an eternity to become Tamil Nadu chief minister. He won't be waiting as long for the verdict on his leadership. His first report card after eight months in office lists 2,619 out of 2,683 files cleared and government orders issued for 1,238 of 1,641 announcements. Stalin isn't stalling.

DMK'S FEDERATION HAS POTENTIAL

Speaking in Parliament days ago, Congress scion Rahul Gandhi spoke of two Indias to articulate a difference between the ruling BJP and the opposition. In that speech, he significantly spoke of Tamil Nadu and its anti-BJP sentiment to make the case that the saffron party could not rule from Delhi. Yet, the argument that India is a Union of States, in recent times came up not because of Gandhi, but the DMK's choice to refer to the NDA government in Delhi as the Union government, rather than the Central government. Similarly, despite Gandhi's eloquence, it is the DMK President and TN Chief Minister M K Stalin who has seeded what could be a meaningful and effective counter narrative that could challenge the BJP's dominance.

Significant among the DMK's core beliefs are social justice and federalism. It is these beliefs—along with secularism—that Stalin has put forth as a common platform on which political parties from across the country (barring the BJP) could come together in forming an 'All India Federation for Social Justice'. Recently, Stalin wrote to the leaders of 37 parties, including arch-rival AIADMK, calling for representatives to join the federation, pitching social justice, defined by Stalin as "everything for everyone", and federalism as common goals. The effort builds on the DMK's role in the legal battle to attain reservation for OBCs in the all India quota for medical seats.

While it is tempting to see the federation as simply a political effort to propel Stalin to a central role on the national stage, it may also offer the best chance for a broad-based coalition with a coherent strategy and narrative against the BJP in the 2024 Lok Sabha elections. Since taking charge of the party after the death of his father and leader M Karunanidhi, Stalin has consistently raised his voice against the BJP. After coming to power last year, Stalin and the DMK have recalled the party's roots in various ways, be it by standing for states' rights or by evoking party founder C N Annadurai's description of himself as coming from the Dravidian stock. In policy too, the party has made efforts to act on its founding principles. This last is key: social justice has shaped Tamil society over the last seven decades, on a national level too, being true to its meaning will ensure the federation offers more than clever rhetoric, but rather a roadmap for a more equal India.

தினகரன்

08-Feb-2022

மறக்க முடியுமா?

கடந்த ஆட்சியில் அமைச்சர்கள் தொடங்கி கீழ்மட்டம் வரை பல்வேறு துறைகளில் ஊழல்கள் அரங்கேறின. முக்கியமாக, எப்போது இந்த ஆட்சி முடிவுக்கு வரும் என மக்கள் காத்திருந்தனர். நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில், அவர்களுக்கு தகுந்த பாடத்தை மக்கள் புகட்டினர். தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாடு வளர்ச்சியில் முத்திரை பதித்து வருகிறது. தமிழகம் தொழில் வளம் மிக்க மாநிலமாக மாறி முதல் இடத்தை பெறும் வகையில் புதுப்புது திட்டங்கள் அறிவிக்கப்படுகிறது.

தமிழக அரசு அறிவித்து வரும் திட்டங்களால் ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரம் முன்னேறி வருகிறது. ஒவ்வொரு பகுதியும் வளர்ச்சியில் முன்னேற்றம் காணும் வகையில், சிறப்பு வாய்ந்த திட்டங்களை முதல்வர் அறிவித்து வருகிறார். அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குக்கிராமம் முதல் நகரம் வரை அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழகம் அனைத்திலும் மிக சிறப்பாக இருப்பதை சிலர் விரும்பவில்லை. குறிப்பாக, தமிழகத்தில் நோட்டாவை விட குறைவாக வாக்கு வாங்கியுள்ள ஒரு கட்சி, மக்களின் ஆதரவை எக்காலத்திலும் பெற முடியாது. கடந்த ஆட்சியில் அவர்கள் நினைத்ததை தமிழகத்தில் நிறைவேற்றினர். தற்போது அது நடக்காது. இதனால் வேறு வழியின்றி, பொய் மற்றும் அவதூறுகளை பரப்பி வருகின்றனர். மக்களிடம் செல்வாக்கு இல்லாததால், இதுபோன்ற வேலைகளில் அவர்கள் இறங்கியுள்ளனர். ஆனால், அனைத்து துறைகளும் வளர்ச்சி கண்டு வருகிறது.

தமிழகம் முதல் இடத்தை நோக்கி பயணிக்கிறது. இது அவர்களுக்கு பிடிக்கவில்லை. முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்து வரும் ஆக்கப்பூர்வமான திட்டங்கள் மற்றும் மக்கள் நலன் சார்ந்த விஷயங்களில் அவர் காட்டி வரும் அக்கறை, தமிழகம் அனைத்து துறைகளிலும் முதல் இடத்தை பிடிக்க வேண்டும் என்பதற்காக அயராது உழைத்து வருகிறார். இதனால் தமிழகத்தில் எதிர்க்கட்சி இருப்பதையே பொதுமக்கள் மறந்துவிட்டனர். தமிழகம் வளர்ச்சி, கல்வி, அறிவியல், விவசாயம், சுகாதாரம் மற்றும் அடிப்படை கட்டமைப்பு உள்ளிட்ட அனைத்திலும் மிக சிறப்பாக விளங்கி வருகிறது.

கடந்த கால ஆட்சிக்கு மக்கள் இறுதியாக முற்றுப்புள்ளி வைத்து விட்டனர். இனி, அவர்களும், அவர்களை சார்ந்தவர்களும் மக்களின் செல்வாக்கை பெற முடியாது. "நீட்" தேர்வு உள்ளிட்ட பல்வேறு விஷயங்களில் தமிழகத்துக்கு எதிராக ஒன்றிய அரசு செயல்படுகிறது. பிறகு தமிழகத்தின் மீது பாசம் உள்ளது போல், நாடகம் ஆடுவது ஏன்? தேர்தல் நேரங்களில் மாநிலங்களில் பிரச்னையை ஏற்படுத்தி அரசியல் செய்வதை அவர்கள் வாடிக்கையாக வைத்துள்ளனர். தமிழகத்தில், அது ஒருபோதும் நடக்காது. அமைதியாக உள்ள தமிழகத்தில் பிரச்னையை ஏற்படுத்த துடிப்பது ஏன்? தமிழகத்தை சீர்குலைக்க நினைக்கும் அவர்களுக்கு தக்க பதிலடியை நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் மக்கள் தருவார்கள்.

தினத் தந்தி
09-Feb-2022

சித்தூர் பள்ளிகளுக்கு பாட புத்தகங்கள் வழங்க உடனடி உத்தரவு

'மின்னல் வேகம்' அல்ல, இனி 'மு.க.ஸ்டாலின் வேகம்'

நகரி தொகுதி எம்.எல்.ஏ. ரோஜா புகழாரம்

சென்னை, பிப்.9-

சென்னை தலைமை செயலகத்தில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினை ஆந்திர மாநிலம் நகரி தொகுதி எம்.எல்.ஏ. ரோஜா நேற்று முன்தினம் சந்தித்து பேசினார். அப்போது அவர், 'சித்தூர் மாவட்டத்தில் வசிக்கின்ற தமிழர்கள் குழந்தைகளின் தமிழ் மொழி பாடத்திட்டத்துக்காக 10 ஆயிரம் புத்தகங்கள் இலவசமாக வழங்க வேண்டும்' என்று கோரிக்கை விடுத்தார். அவரது கோரிக்கையை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் உடனடியாக நிறைவேற்றி உள்ளார்.

மு.க.ஸ்டாலினின் மின்னல் வேக நடவடிக்கையால் ரோஜா வியந்துபோனார். இதையடுத்து அவர், மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்து கடிதம் அனுப்பி உள்ளார். அதில் ரோஜா கூறி இருப்பதாவது:-

"உங்களை (மு.க.ஸ்டாலின்) நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்துவிட்டு, நாங்கள் நகரி வந்து சேர்வதற்குள், தங்களது அரசு உத்தரவு என்னுடைய அலுவலகத்துக்கு வந்து சேர்ந்துவிட்டது. மின்னல் வேகம் என்பார்கள், ஆனால் அதைவிட வேகமாக தங்கள் உத்தரவு எங்களுக்கு வந்து அடைந்ததை கண்டு நாங்கள் வியந்து போனோம். இனி ஸ்டாலின் வேகம் என்றே குறிப்பிடலாம் என்று சந்தோஷத்தில் பாராட்ட தோன்றுகிறது."

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தினத் தந்தி
DAILY THANTHI
09-Feb-2022

சட்டமன்றத்தில் மீண்டும் 'நீட்' விலக்கு மசோதா:

டாக்டர் ராமதாஸ் வரவேற்பு

ஜனாதிபதிக்கு உடனடியாக அனுப்பி வைக்க கவர்னருக்கு வலியுறுத்தல்

சென்னை, பிப்.9-

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

மருத்துவக்கல்வி மாணவர் சேர்க்கைக்கு 'நீட்' தேர்வு கட்டாயம் என்பதற்கு நியாயமான காரணங்கள் ஒன்று கூட இல்லை. அதனால்தான் 'நீட்' தேர்வு கூடாது என்று கடந்த 12 ஆண்டுகளாகவே பா.ம.க. வலியுறுத்தி வருகிறது. அரசியல் ரீதியாக மாற்றுக் கருத்துகள் இருந்தாலும் கூட, 'நீட்' தேர்விலிருந்து விலக்கு பெறுவதற்காக தமிழகத்தை ஆளும் கட்சிகள் எடுக்கும் அனைத்து வகையான நடவடிக்கைகளுக்கும் பா.ம.க. ஆதரவளித்து வருவதுடன், ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் கவர்னரால் திருப்பி அனுப்பப்பட்ட 'நீட்' விலக்கு சட்டம் மீண்டும் நிறைவேற்றப்பட்டு கவர்னருக்கு அனுப்பப்பட்டுள்ள நிலையில், அதற்கு எவ்வளவு விரைவாக முடியுமோ, அவ்வளவு விரைவாக ஒப்புதல் அளிக்க வேண்டியது அரசியலமைப்பு சட்ட கடமையாகும். அதை மதித்து 'நீட்' விலக்கு சட்டத்திற்கு, ஒரு நாள் கூட தாமதிக்காமல், உடனடியாக கவர்னர் ஒப்புதல் அளித்து ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க வேண்டும். அதன்பின்னர் ஜனாதிபதியின் ஒப்புதலை பெறுவதற்கான நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

சமூகநீதி, பெண்ணுரிமை, ஒடுக்கப்பட்டோரின் கல்வி உரிமை, மாநில உரிமை, மக்களாட்சி உரிமை போன்ற பல தத்துவ விளக்கங்களை உள்ளடக்கியதாக முதல்-அமைச்சரின் உரையும், ஒருமித்த கருத்துகளை வழங்கிய சட்டமன்ற கட்சித் தலைவர்களின் உரைகளும் அமைந்து, கவர்னர் திருப்பி அனுப்பிய சட்ட வரைவினை மீண்டும் ஒருமனதாக நிறைவேற்றி கவர்னருக்கே திருப்பி அனுப்பியது வரலாற்று குறிப்பாகும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

மாலை முரசு

09-Feb-2022

நீட் விலக்கு மசோதாவை கவர்னருக்கு திருப்பி அனுப்பி

முன்னோடிகளை முந்தும் பாதையில் முன்னேறிக்கொண்டிருக்கிறார் ஸ்டாலின்!

கவிஞர் வைரமுத்து பாராட்டு!!

சென்னை.பிப்.9.

"நீட்தேர்வுமசோதாவை ஆளுநருக்கே திருப்பி அனுப்பி இறையாண்மைக்குட்பட்டு முறையாண்மை செய்திருக்கிறார் முதலமைச்சர் முக ஸ்டாலின் என கவிஞர் வைரமுத்துதனதுடுவிட்டர் பக்கத்தில் பாராட்டு தெரிவித்துள்ளார்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் நீட் தேர்வுக்கு விலக்கு அளிக்கக்கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அதற்கு ஜனாதிபதி ஒப்புதல் வழங்கவில்லை. இந்த நிலையில் தி.மு.க. ஆட்சி அமைந்ததும் கடந்த செப்டம்பர் மாதம் சட்டசபையை கூட்டி நீட் விலக்கு மசோதா கொண்டு வரப்பட்டது.அதைகவர்னர் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்தனர்.ஆனால்கவர்னர் 142நாட்களுக்குபிறகுஅந்த மசோதாவுக்கு ஒப்புதல்

வைரமுத்து

அளிக்காமல் திருப்பி அனுப்பினார்.நீட்தேர்வால் கிராமப்புறமாணவர்களுக்கு பலன் கிடைக்கும் என்றும் அவர் கருத்து தெரிவித்து இருந்தார்.

கவர்னர் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்த முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் கடந்த 5ந்தேதி சட்டசபை அனைத்துகட்சிதலைவர்கள் கூட்டத்தை கூட்டி ஆலோசனை நடத்தினார். அதில் நீட் தேர்வு விலக்கு மசோதாவை மீண்டும் சட்டசபையில் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என்றுதீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன்படி நேற்று,தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட நீட் விலக்கு மசோதா ஆளுநருக்கு மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில்,நீட்தேர்வு விலக்கு மசோதாவை மீண்டும் சட்டசபையில் தீர்மானமாக கொண்டு வந்துநிறைவேற்றிமீண்டும் ஆளுநருக்கே வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கவிஞர் வைரமுத்து தனது சமூக வலைதளத்தில் கூறியுள்ளதாவது, "நீட்தேர்வு மசோதாவை ஆளுநருக்கே திருப்பி அனுப்பி இறையாண்மைக்குட்பட்டு முறையாண்மை செய்திருக்கிறார் முதலமைச்சர் "எடுத்தது கண்டார்இற்றது கேட்டார்" என்று விரைந்து வினைபடுகிறார் முன்னோடிகளை முந்தும் பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கிறார் நல்லது வாழ்க நலமே சூழ்க". இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

NEET and States

Governor should not delay assent to TN's Bill for exemption from mandatory admission test

With the Tamil Nadu Assembly passing once again its earlier Bill seeking to exempt government seats in undergraduate medical and dental courses from the National Eligibility-cum-Entrance Test (NEET), the ball is once again in the court of Governor R.N. Ravi. The Governor had chosen to return to the House for reconsideration the Bill that was passed in September 2021, questioning the tenability of the Justice A.K. Rajan Committee Report that had given its findings in favour of the the passage of such a law. The DMK regime has thrown down the gauntlet as the Constitution is clear as far as the Governor's course of action is concerned. If the Bill is presented to him again, Mr. Ravi is constitutionally bound to grant assent. It is a matter of speculation whether the Bill will obtain presidential nod, but the episode raises a question whether the Governor could not have avoided the current situation by reserving the Bill for the President instead of returning it. After all, this is clearly a Bill that requires the President's acceptance – the exemption from NEET is in conflict with the central law that makes it mandatory and, therefore, can only be saved by the President's assent. Regardless of the Bill's merits, the Governor should delay the matter no further. The original intent of the Constitution makers was that the Governor, under Article 200, ought to have no discretion, save in the case of a law that undermines the position of the High Court, which he is bound to reserve for the President's consideration. However, the Governor's rare use of discretion to question the desirability or validity of a Bill, and ask for reconsideration is now a matter of constitutional practice.

Some parts of the Governor's communication to the Legislative Assembly Speaker seem to suggest that Mr. Ravi disagrees with the basis for the Bill, even though he is not wrong in highlighting a Supreme Court decision in favour of NEET. It is not generally desirable for the Governor to seek to match wits with the legislature's wisdom on social inputs that inform policy. It will be useful to recall that the Sarkaria Commission on Centre-State relations observed that the Governor should not act contrary to the advice of the Council of Ministers merely because he did not like the policy embodied in the Bill. The attention will now be on whether the NEET Exemption Bill will pass muster. For one thing, the exemption may not be a solution to the problem of government school students not making it to MBBS courses in sufficient numbers. The situation prior to the introduction of NEET was no better. However, the issue of NEET being a barrier to access is genuine. There is no doubt that the mandatory nature of NEET on a pan-India basis undermines the role of State governments in medical education. As the main deliverers of public health, the States cannot be denied a say in who joins medical courses in government colleges.

'NEET is discriminatory, against social justice'

The NEET Exemption Bill not only defends the right to education and social rights but also upholds Tamil Nadu's rights

M.K. STALIN

Hon'ble Speaker of the House. Elections were held in the Province of Madras when the electoral system was first established in India to elect people's representatives by the people. The Justice Party, pioneer of the Dravidian movement, formed the government in the first general election in 1920, when the country was under British rule.

All those who travelled to India from England to observe the working of the Madras Provincial Assembly remarked that the Madras Province is the only province in India governed by the rule of law and administrative protocols.

This is a significant day in the history of this House, which established such democratic values. We have assembled here to defend democracy, to preserve democracy's dignity, to uphold the principle of federalism, and to secure the right to education.

To defend federal philosophy

We are not only getting together to talk about the NEET Exam [the National Eligibility-cum-Entrance Test]. We have gathered to preserve the Tamil Nadu Legislature's sovereignty and rights. Federalism is a fundamental idea that truly safeguards the ethnic, linguistic, and cultural diversity of the Indian subcontinent! We have come together to ensure that the great federal philosophy remains intact.

I stand in this Assembly that has laid the foundation for success in upholding social justice, legal justice, oppressed people's rights, the greatness of Tamil ethnic community and its language. And I speak with the confidence that this Assembly can and will definitely eliminate the social injustice of NEET. Today, we are here in this Special Assembly to propose a policy of social justice in education for the entire country, having been trained in the footsteps of our leader Anna. To quench students' passion for medical education, we have all come together to work in solidarity and promote social justice.

NEET is not a system established by the Constitution. It was not made a part of the Constitution. The Medical Council of India mandated the creation of NEET. When such an examination was proposed in 2010, Muthamizharinar Kalaignar, the then-Chief Minister of Tamil Nadu, vehemently opposed it.

Much opposed

It was also opposed by a number of Indian States. This examination has been challenged in 115 cases across India. Tamil Nadu is the State that is leading the charge in this direction. All of these cases were heard by the Supreme Court.

NEET was declared unconstitutional by the Supreme Court itself on July 18, 2013. The Chief Justice of India delivered the judgment. The exam was subsequently abolished across the Indian subcontinent.

However, after the Bharatiya Janata Party (BJP) won the election and formed the government, a private training institute reopened the issue. The Supreme Court heard the case of NEET. "Judgment is recalled" and "Hear this case afresh," the Supreme Court said on May 24, 2016 after hearing the case. On this basis, the BJP-led Union government issued an ordinance on April 11, 2016, which quickly implemented NEET across the country.

Private training institutes benefit from NEET. The NEET Exemption Bill is being introduced for the benefit of those who cannot afford to pay so much for training. NEET is an impediment to the entitlement of poor and needy children to education. In their dream of becoming doctors, a barrier wall has been placed in the name of NEET. "You can't be a doctor," says NEET. "You don't deserve it," it says, halting one's progress. That is why the NEET Exemption Bill has been introduced. I do not think I need to go into great detail about the abnormalities in that exam at this assembly.

So, to summarise, NEET is not a holy cow. It attempts to marginalise students from low-income families in the guise of merit. As a result, we oppose the examination and demand an exemption.

The question I would want to address in this forum is whether NEET, which has sent some students to the graveyard and others to jail, is really required. This is a question that has been raised by the entire student community as well as parents.

GETTY IMAGES/ISTOCKPHOTO

A detailed review

On June 19, 2021, a committee led by retired High Court judge A.K. Rajan was formed to investigate the issues and submit a report on the effects of NEET on poor and backward students. The public was consulted. On July 14, 2021, the Committee submitted a 193-page report to the Government based on those comments. They claimed that Government school students were unable to follow their dreams of pursuing a medical education.

I have formed a committee under the leadership of the Chief Secretary to provide detailed recommendations on this report. After careful consideration, the Bill exempting Tamil Nadu from NEET was enacted by this Assembly. We did a lot of study and were able to pass this Bill, supported with factual information.

The NEET Exemption Bill was passed with the support of all members of this House, with the exception of four BJP members. The Bill reflected not only the sentiments of Tamil Nadu as a whole, but also the Assembly's notion of its sovereignty.

It had to be approved by the Hon'ble Governor, and he should have sent it to the Hon'ble President for his approval. Instead, he kept it pending for 142 days before reaching a decision – despite our numerous requests – and then returned it to us. In this Assembly, I must state unequivocally that the reasons he cited for rejecting the Bill were incorrect.

On June 10, 2021, the Justice A.K. Rajan Committee was set up under G.O. No.283, Department of Health and Family Welfare. The committee was made up of academics and government officials. The study's terms of reference were also made public by this high-level group.

The public was asked to provide feedback to the committee. Hundreds of thousands of people had expressed their opinions to the Commission by email, mail, and petition boxes put in various locations.

According to the recommendation, NEET has limited the diversity of community representation in MBBS and higher medical courses by impeding the desire of those underprivileged of receiving medical education and favouring the socio-economically rich sections. The statistics for this can be found in the report as well. According to the survey, government schoolchildren, those whose parents' annual income is less than ₹2.5 lakh, the backward (BC), the most backward (MBC), Scheduled Castes (SC), and Scheduled Tribes (ST) are the most affected.

The Governor criticised the study for claiming that NEET is "against merit". It is worth noting that the report of the Justice A.K. Rajan committee includes proven facts rejecting this. Among those chosen so far, rural poor students have been affected. According to the research, those who studied in the Tamil medium in government schools are also harmed. At this point, I strongly advise that no one mistakenly counts those who benefit from the Government of Tamil Nadu's 7.5% reservation as having profited from NEET.

The power to legislate

A five-judge Supreme Court Bench heard the matter of *Modern Dental College vs Madhya Pradesh government*. The Supreme Court verdict was clear: The State government has the power to legislate on student admissions to higher education institutions.

In a separate judgment delivered by Justice Banumathi in the same case, she also ruled that the law regulating student admission was within the jurisdiction of the State government. We passed the Bill against NEET solely using the legislative power of the State legislature.

The Governor has urged that NEET be made mandatory by the Constitution. According to the Constitution, any legal provision can be made, but only for the rights of the socially and economically disadvantaged. We are bringing this NEET Exemption Bill back on that basis. The Constitution is anti-discriminatory. However, NEET is inherently discriminatory. Social justice is emphasised in constitutional law. NEET, on the other hand, is opposed to social justice. The term "justice of the law" is used in constitutional law. But NEET favours the rich. The Indian Constitution is built on the principle of equality. NEET, on the other hand, is the polar opposite of equality. NEET is opposed to all of the Constitution's fundamental rights. That is why we are requesting NEET exemption.

My pain stems from having to debate for so long about a dreadful exam that disproportionately impacts poor and rural students.

The return of this Bill has also put into doubt the right of our State of Tamil Nadu. This legislature's sovereignty has been brought into question. The autonomy of States has been questioned. That is what concerns me. What will happen to the constitutionally mandated relationship between the Union and State governments? What are the rights and responsibilities of people of various races, languages, and cultures?

We passed a Bill on September 13, 2021 to exempt students from NEET based on the power we have. The Governor is required by law to reserve it to the President for approval. I expect the Governor to carry out his responsibilities correctly. That is the Governor's responsibility, which is limited by the legislative power of the legislature, which is elected by the people.

I hope that the Governor will respect the sentiments of the people of Tamil Nadu and act in the best interests of the students of Tamil Nadu by sending the NEET Exemption Bill to the President without delay, which will be reconsidered and passed under the power conferred on the people elected by the Legislature by the Constitution. I urge everyone to support this Bill in order to defend the right to education, which has been denied for a long time, as well as the State rights of Tamil Nadu and the social rights of Scheduled Castes, tribals, backward/most backward/the oppressed/the poor/the marginalised/and rural peoples.

Hail Tamil Nadu!

M.K. Stalin is the Chief Minister of Tamil Nadu and President of the Dravida Munnetra Kazhagam (DMK). This article is an edited version of the Chief Minister's speech

அன்று காயிதே மில்லத், இன்று தமிழக முதல்வர்



● ஜே.எம்.பஷீர்

"இஸ்லாமியர்களுக்கு இன்றைய காயிதே மில்லத் ஆக தளபதி உள்ளார். கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்கள் மீது அதிக அன்பு கொண்டவர் தளபதி. தொடர்ந்து பல வருடங்களாக காயிதே மில்லத் நினைவு நாள் அன்று அவரது நினைவிடத்துக்கு வந்து கொண்டு இருக்கிறார். முதல்வர் பொறுப்பேற்று இந்த வருடம் வருகை தந்தது மிகவும் பெருமை சேர்க்கிறது.

இந்தக் குடியரசு தின விழாவில் நடந்த சுதந்திரப் போராட்ட வீரர்கள் அணிவகுப்பில் கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்கள் சிலையையும் தேசியத் தலைவராக சேர்த்து மிகப்பெரிய அங்கீகாரம் தந்தார். தற்போதைய மத்திய அரசின் மதவாத அரசியலை எதிர்த்து சிறுபான்மை மக்களுக்கு பாதுகாவலனாக உள்ளதால் அவரை கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்களின் மறு உருவமாகவே பார்க்கிறேன். தளபதி ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தமிழக சிறுபான்மையினருக்கு NRC CAA பயம் இல்லை. விரைவில் மத்திய அரசு அந்தச் சட்டத்தை திரும்பப் பெறப் போராட்டம் நடத்தி இந்திய சிறுபான்மை மக்களுக்கு தளபதி பாதுகாப்பாக இருப்பார். நீட் தேர்வுக்கு எதிராகவும் போராட்டம் நடத்தி வருகிறார். மாணவர்கள் கனவுகள் நினைவாக நீட் தேர்வு விரைவில் ரத்து செய்ய தளபதியின் போராட்டங்கள் தொடரும்.

சட்டமன்றத் தேர்தலாக இருந்தாலும் நாடாளுமன்றத் தேர்தலாக இருந்தாலும் உள்ளாட்சித் தேர்தலாக இருந்தாலும் வேட்பாளர் தேர்வில் இஸ்லாமியர்களுக்கு அதிக இடங்களை எப்போதும் வழங்கும் ஒரே கட்சி திமுக மட்டுமே. தற்போது தளபதி அவர்கள் வெளியிட்ட வேட்பாளர் பட்டியலில் அதிக அளவில் இஸ்லாமியர்களைப் பார்ப்பது மிக்க மகிழ்ச்சி. உங்களில் ஒருவனாக முதல்வரின் உத்தரவை ஏற்று கழக சிறுபான்மை நல உரிமைப் பிரிவு சார்பில் பள்ளிவாசல்கள் மற்றும் சிறுபான்மை மக்களின் வீடுகளுக்குச் சென்று தளபதி ஆட்சியின் சாதனைகளைச் சொல்லி வாக்கு சேகரிக்க உள்ளோம்" என்கிறார் ஜே.எம்.பஷீர். MMM/22

தினகரன்

13-Feb-2022

கொரோனாவை விரட்டுவோம்

மாநில முதலமைச்சர்களில் நம்பர் ஒன் என்ற பெருமையை பதவி ஏற்ற சில வாரங்களிலேயே பெற்றவர் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். முதலமைச்சர் பதவிக்கு இலக்கணமாக இன்று இந்திய மாநிலங்களால் சுட்டிக் காட்டப்படுபவர் நம் முதல்வர்தான். அந்த அளவுக்கு அடுக்கடுக்கான சாதனைகளை நிகழ்த்தி இன்றைக்கு சாதனை நாயகனாக திகழ்கிறார்.

கொரோனா இரண்டாம் அலை உச்சத்தில் இருந்தபோது முதல்வராக பொறுப்பேற்றார் மு.க.ஸ்டாலின். தனது நிர்வாக திறமையால், அதிரடியான நடவடிக்கைகளால் பெரும் பாதிப்பு ஏற்படாமல் தமிழகத்தை பாதுகாத்தார். தற்போது, ஒமிக்ரான் என்ற உருமாறிய கொரோனா மூன்றாம் அலையாக வந்து தாக்கியது. இதில் இருந்து நம்மை காக்க முன்னெச்சரிக்கையாக நம் முதல்வர் எடுத்த நடவடிக்கைதான் இரவு நேர ஊரடங்கு, ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கு என்பது போன்ற தடுப்பு நடவடிக்கைகள். அதுவும், ஏற்கனவே அடுத்தடுத்த இரு அலைகளால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரம் இழந்து பல குடும்பங்கள் படும் வேதனையை நன்கு உணர்ந்ததால், இந்த முறை முழு ஊரடங்கை அறிவிக்காமல் தவிர்த்தார் மக்கள் நலன் காக்கும் முதல்வர்.

ஒமிக்ரான் தொற்று இந்தியாவில் நுழைந்து விட்டது என்ற தகவல் கிடைத்ததுமே, முதல்வர் மு.க.ஸ்டாலின் சுறுசுறுப்பாக களத்தில் இறங்கி விட்டார். அதிகாரிகள், மருத்துவர்களுடன் ஆலோசனை நடத்தி தடுப்பு நடவடிக்கைகளை முடுக்கி விட்டார். பாதிப்பு அதிகமானால் நோயாளிகளுக்கு தாமதமின்றி சிகிச்சை அளிக்க சிறப்பு கொரோனா சிகிச்சை மையங்கள் அதிரடியாக திறக்கப்பட்டன. முதல்வரின் உத்தரவிற்கேற்ப அரசு இயந்திரமும் பம்பரமாக சுழன்றது.

விளைவு, மற்ற மாநிலங்களே மூக்கில் விரல் வைக்கக் கூடிய அளவிற்கு மூன்றாம் அலையை சாதுர்யமாக தமிழகம் எதிர்கொண்டது. அதிமுக ஆட்சியில் நடந்ததுபோல மருத்துவமனைகளில் படுக்கை பற்றாக்குறை, ஆக்சிஜன் பற்றாக்குறை என்பதுபோன்ற பேரவலங்கள் எதுவும் இந்த முறை அரங்கேறவில்லை.

இதனால், தமிழ்நாடு அரசால் பல்வேறு தளர்வுகள் அறிவிக்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாக, நர்சரி பள்ளிகள், மழலையர் விளையாட்டு பள்ளிகள் திறக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, திரையரங்குகள், ஓட்டல்களில் 100 சதவீதம் பேருக்கு அனுமதி என்று அரசு அறிவித்துள்ளது.

கொரோனா அச்சம் இதோடு விலகிவிட்டதா? என்றால் இல்லை என்பதே மருத்துவ நிபுணர்களின் பதில். தற்போது கட்டுக்குள் வந்துள்ளது. மக்கள் பொது இடங்களில் கட்டாயம் முகக் கவசம் அணிந்து, சமூக இடைவெளியினை கடைபிடித்து மற்றும் இரண்டு தவணை தடுப்பூசியினை செலுத்திக்கொள்வது அவசியம்.

பெரும்பாலான கட்டுப்பாடுகள் விலக்கிக்கொள்ளப்பட்டுள்ள நிலையில், பொதுமக்களாகிய நாமும் நம் பங்களிப்பை செய்து கொரோனா ஒழிப்பில் முன்னோடியாக திகழும் நம் முதல்வர் மு.க.ஸ்டாலினின் கரத்தை வலுப்படுத்துவோம். தமிழகத்தில் இருந்து கொரோனாவை விரட்டுவோம்.

THE NEW INDIAN EXPRESS

13-Feb-2022

STALIN'S POLITICS FUELS NEW NATIONAL FEDERALISM

POWER & POLITICS

PRABHU CHAWLA
prabhuchawla@newindianexpress.com
Follow him on Twitter @PrabhuChawla

BELONGING is the praxis of cultural identity as defined by tradition. Soon after his swearing in on 7 May 2021, Tamil Nadu's Chief Minister MK Stalin changed his Twitter profile to one who "Belongs to the Dravidian stock"—"I Always Stand For Social Justice, Equality, and Brotherhood".

Being a legatee of the ancient ethos of Dravidian civilization contributes to his rise as a new leader setting the national agenda. His illustrious father M Karunanidhi was a Dravidian icon and the kingmaker behind many a premiership. He ruled Tamil Nadu while dictating the national agenda for over a decade. The Kalaignar rarely visited New Delhi, but even Prime Ministers made it a point to keep him on their right side. Stalin may not have reached that lofty level yet. But he is moving fast to step into his father's shoes. While Karunanidhi mesmerised audience with the magic of poetry and film scripts, Stalin is setting a new grammar and syntax in Southern politics. Instead of fighting solo against the Centre, he has taken the lead to forge a political alternative to the NDA. The intuitive Stalin, while acting local, is now ferociously vocal on national issues on an equal bandwidth, which shows that he has learned realpolitik well while serving in his gigantic father's shadow.

Last week, Stalin threw down the gauntlet to Modi after the PM acerbically referred to Tamil Nadu in Parliament. In an election rally, Stalin hit back, "Prime Minister Modi doesn't need to certify the patriotism of Tamils. History bears witness." He added that Tamil Nadu sees the country as one. The rhetoric showed a mass magnet maestro at work, subliminally invoking Chola glory — one of India's greatest empires that stretched across large parts of Asia. His words were a ringing condemnation that echoed through the ancient halls of Tamil heritage — castigation of the Centre's mule-headed rejection of the R-Day tableau depicting freedom fighters and poets such as Subramania Bharathi. The words were swords that defended the immutability of Dravidian designation, signaling that the DMK's identity in the Indian political establishment is non-negotiable.

Yet, Stalin is no regional exclusivist. His showed his nationalist outlook during the election campaign last summer. He thundered during rallies that his party won't allow the dilution of the Constitution which mandates unity in diversity. The soft speaking CM, in his trademark white shirt and *veshti*, has taken legislative and administrative actions that indicate his ideological and economic direction. Since both Dravidians parties DMK and AIADMK have ruled the state for the past 55 years, Stalin strikes a fine balance between preserving his local base and connecting with the rest of India on common issues. On federal rights, his stand is as clear as his vision. He took on New Delhi over the NEET. He has converted the controversy into an issue of autonomy of states to run their own educational system, which is on the Constitution's Concurrent List. The DMK feels that by introducing NEET, the Centre is depriving poor and backward community students from becoming doctors. They could get admission earlier because the entrance tests were local. Ignoring the Supreme Court ruling in NEET's favour, the DMK along with other opposition parties have passed law in their states against the NEET. Stalin wrote to a dozen other CMs that the Centre is violating the spirit of federalism and the constitutional balance of power. "In this regard, we consider that the state governments need to assert their constitutional right and position in deciding the method of admission to their higher educational institutions," were his words.

NEET is just one of the many battles which Stalin has unleashed against the Centre. Soon after taking over, his first directive to officials was to replace 'Central' government with 'Union' government. "The first article of our Constitution says that India, that is Bharat, shall be a union of states. We are only using that. We are not using something which does not find a place in the law. Union is not a wrong word and it implies union of states." His objective was to send a clear signal to Modi that the DMK won't play second fiddle to BJP like many other non-BJP CMs.

The spirit of federalism once again resonated in Stalin's war cry against the proposed amendments for central deputation of IAS, IPS officers. The fresh rules give sweeping powers to the Centre for taking away officers from the state without its prior concurrence. Stalin wrote to Modi, "The proposed amendments would cause irreparable damage to the spirit of cooperative federalism that exist between Union and the States and result in concentration of powers with the Union Government. I request you to drop these proposed amendments to IAS (Cadre) Rules, 1954 and instead engage with State Governments to further strengthen the federal spirit of the nation and take forward the noble ideas of our forefathers with reference to the steel frame as enshrined in the Constitution."

There is no doubt that a new sun has risen in the Dravidian galaxy. Stalin's social justice and inclusive mantra extends to management of temples. Traditionally, it is the Brahmins who perform the rituals at over 40,000 small and big temples under state control. Despite the Supreme Court verdict which prohibits caste-based appointments of *archaks* (temple priests), persons from backward classes and Dalits were kept out. Last year, Stalin handed appointment letters to over two dozen non-Brahmins of which five were Dalits. One of them was a woman, Tamil Nadu's second female priestess. Being a pragmatic atheist, Stalin doesn't frown on cadres following religious rituals and visiting temples. Inspired by his late litterateur patriarch's passion for erudition, Stalin has given up the traditional practice of offering silk shawls to dignitaries. Instead, he gifts books by noted Tamil scholars as well as volumes on Tamil history showing his commitment to Tamil literature, heritage and culture. During his first meeting with Modi, Stalin presented him a copy of '*Sculptors of Classical Tamil*'. He gifted President Ram Nath Kovind a copy of '*Multiple Facets of My Madurai*'. To Sonia Gandhi he gave a copy of '*Journey of a Civilisation: Indus to Vagai*'. The new sculptor of the Tamil narrative has arrived revealing multiple facets during his journey to the summit of power.

The pillars of statesmanship are economic initiative and political flexibility. Tamil Nadu under Stalin has joined the trillion dollar competitive economic game. Currently, it is the second largest economy in India with $300 billion GDP. During an investment meet, Stalin announced that his mission is to make Tamil Nadu a trillion-dollar economy by 2030. "We want Tamil Nadu to be one of the best states in South Asia." He directed officials to ensure conducive environment for attracting investments. Stalin also spoke like a corporate boss to senior officials. "Let the announcements translate into deeds. Let our thoughts blossom into new announcements. Our government should always function like a machine for the people."

Stalin is a third generation Dravidian leader who is on course to align Tamil Nadu's growth pace with national aspirations. The state has minimum unemployment and less than five percent of its people live below the poverty line. With more than half of its GDP coming from services, Tamil Nadu is one of the most favoured foreign investment destinations. In spite of economic development, its populace traditionally favours local parties while rejecting national outfits repeatedly. Stalin knows the virtues of sticking to DMK's core ideology since his success lies in his ability, agility and adaptability in Indian-ising his Dravidian edifice. His *bhakhtas* are convinced that Stalin's mind is set on a supreme goal — what Stalin thinks today, India does tomorrow.

ஜூனியர் விகடன்

13-Feb-2022

அதிகார எல்லைச் சண்டை!

"நீட் எனும் கொடுவாளால் சமூகநீதியை வெட்டிச் சாய்க்க வெறிகொண்டு துடிக்கின்றனர். கொடுவாளை ஏந்தியுள்ள யதேச்சதிகாரக் கரங்களை சட்டரீதியாக ஒடுக்க, அகிம்சைப் போரைத் தொடங்கியுள்ளோம்..!" - நீட் விவகாரத்தில் முதல்வர் ஸ்டாலினிடமிருந்து சமீபத்தில் வந்த வார்த்தைகள்தான் இவை. நீட் விலக்கு மசோதாவை ஆளுநர் ஆர்.என்.ரவி திருப்பியனுப்பியதால், கொந்தளிப்பின் உச்சத்திலிருக்கிறது தமிழக அரசு. இந்த மோதல் குறித்து, ஜனவரி 26-ம் தேதியிட்ட ஜூ.வி இதழில், 'பவன் பாலிடிக்ஸ்; சூடாகும் தி.மு.க' என்கிற தலைப்பில் கவர் ஸ்டோரி வெளியிட்டிருந்தோம். நாம் கூறியிருந்தபடியே, ராஜ்பவனுக்கும் தலைமைச் செயலகத்துக்கும் இடையேயான மோதல் முற்றியிருக்கிறது. ஆளுநரிடம் சிக்கியிருக்கும் ஐந்து அமைச்சர்களின் கோப்புகள், உளவு பார்க்கும் அதிகாரிகள், டெல்லி விசிட் ரத்து பின்னணி என அடுத்தடுத்த நகர்வுகளால் தமிழக அரசியலில் வெப்பம் கூடுகிறது!

"ஏன் விலக்கு அளிக்க வேண்டும்?" கேள்வி எழுப்பிய ஆளுநர்

2021, செப்டம்பர் 13-ம் தேதி, நீட் தேர்விலிருந்து தமிழகத்துக்கு விலக்கு அளிக்கக் கோரும் மசோதா தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, ஆளுநருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இந்த மசோதாமீது எந்தவித பதிலும் அளிக்காமல் நான்கு மாதங்களுக்கும் மேலாகக் கிடப்பில் போட்டிருந்தது ஆளுநர் மாளிகை. நாடாளுமன்றத்தில் தி.மு.க எம்.பி-க்களும், கூட்டணிக் கட்சியினரும் தொடர்ந்து எதிர்ப்புக் குரல் எழுப்ப, மசோதா குறித்துத் தன் நிலைப்பாட்டை அறிவிக்கவேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டார் ஆளுநர். இந்நிலையில், கடந்த பிப்ரவரி 1-ம் தேதி,

மசோதாவை சபாநாயகர் அலுவலகத்துக்குத் திருப்பி அனுப்பினார் ஆளுநர். ஆளுநரின் அதிகார எல்லைகள் குறித்த விவாதம் சூடுபிடித்திருக்கிறது.

நம்மிடம் பேசிய ஆளுநருக்கு நெருக்கமான முன்னாள் ஐபிஎஸ் அதிகாரிகள் சிலர், "இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 200-ன்படி, சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு தன் இசைவுக்காக அனுப்பிவைக்கப்படும் தீர்மானங்கள்மீது முடிவெடுக்க ஆளுநருக்கு அதிகாரமுள்ளது. நிதி மசோதாவைத் தவிர, வேறு எந்த மசோதா அனுப்பப்பட்டாலும், தனக்கு விருப்பமான கால வரையறைக்குள் அவர் முடிவெடுக்கலாம். நீட் விலக்கு கோரும் தமிழக அரசின் மசோதாவிலும் அதுதான் நடந்தது. நீட் தேர்வு சமூகநீதிக்கு எதிரானது என்கிற வாதத்தைத் தமிழக அரசின் தரப்பில் முன்வைக்கிறார்கள். அதில்தான் கேள்வி எழுப்புகிறார் ஆளுநர். 'நீட் தேர்வு நடைமுறைக்கு வருவதற்கு முன்பும் பின்பும் மருத்துவப் படிப்பில் சேர்ந்த அரசுப் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை என்ன... 'நீட் தேர்வு சமூகநீதிக்கு எதிரானதல்ல' என்று உச்ச நீதிமன்றமே தீர்ப்பளித்திருக்கும் நிலையில், எந்தத் தரவுகளின் அடிப்படையில் நீட் விலக்கு தீர்மானத்தைத் தமிழக அரசு நிறைவேற்றியது... இந்தியா முழுவதும் கட்டாயமாக்கப்பட்டுள்ள ஒரு தேர்விலிருந்து தமிழகத்துக்கு மட்டும் ஏன் விலக்கு அளிக்க வேண்டும்?' எனப் பல்வேறு கேள்விகளைத் தமிழக அரசுக்கு அனுப்பியிருக்கிறார் ஆளுநர்.

இந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்காமல், நீட் விலக்கு கோரும் தீர்மானத்தைவைத்து அரசியல் செய்கிறது தி.மு.க அரசு. இந்தத் தீர்மானத்தை பிப்ரவரி 1-ம் தேதியே சபாநாயகருக்கு திருப்பி அனுப்பிவிட்டார் ஆளுநர். ஆனால், அதை உடனடியாக வெளியிடாமல், 'அகில இந்திய சமூகநீதிக் கூட்டமைப்பு' குறித்து பிப்ரவரி 2-ம் தேதி 37 அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்குக் கடிதம் எழுதுகிறார் முதல்வர் ஸ்டாலின். மக்களவையில் அன்றைய தினமே, நீட் குறித்தும், 'தமிழகத்தில் ஒருபோதும் பா.ஜ.க ஆட்சியமைக்க முடியாது' என்றும் பேசுகிறார் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி. இதற்குப் பிறகுதான் ஆளுநர் மாளிகையிலிருந்து நீட் தீர்மானம் திருப்பி அனுப்பப்பட்டதாகச் செய்திக்குறிப்பு வெளியானது. தன்னுடைய பதவி, அரசியலாவதை ஆளுநர் ஆர்.என்.ரவி விரும்பவில்லை. அதேநேரத்தில், தன்னைச் சீண்டினால் அதற்கான எதிர்வினையை ஆளும் தரப்பிலிருப்பவர்கள் சந்தித்தாக வேண்டும் என்பதிலும் தீர்மானமாக இருக்கிறார் அவர்" என்றனர்.

நீட் விலக்கு தீர்மானத்தை ஆளுநர் திருப்பி அனுப்பிய நிலையில், அந்தத் தீர்மானத்தை மீண்டும் அவருக்கே அனுப்ப முடிவெடுத்தது தி.மு.க அரசு. இதற்காக, 'பிப்ரவரி 8-ம் தேதி சட்டமன்றம் கூடும்' என்று சபாநாயகர் அறிவித்தார். பிப்ரவரி 5-ம் தேதி தமிழக அரசு கூட்டிய அனைத்துக் கட்சி கூட்டத்தில், 'நீட் விவகாரத்தில் ஒருபோதும் தமிழக அரசு பின்வாங்கப்போவதில்லை' என்றும் ஆளும்தரப்பில் உறுதியளித்தனர். ஆளுநரின் கேள்விகள் அடங்கிய கடிதத்தை சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பியது சட்டப்பேரவைச் செயலகம். இந்தச் சூழலில், "இரண்டாவது முறையாகச் சட்டமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பினால், அதை ஆளுநரால் நிராகரிக்க முடியாது. இதை,

'தீர்மானங்கள்' தொடர்பாக ஆளுநருக்கு அதிகாரமளிக்கும் அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 200 தெளிவாகக் கூறுகிறது. நீட் விலக்கு தீர்மானத்தைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்புவதைத் தவிர இனி ஆளுநருக்கு வேறு வழியில்லை" என்கிறார்கள் சீனியர் ஐ.ஏ.எஸ் அதிகாரிகள். இந்த மோதல் முற்றிய நிலையில்தான், டெல்லி கிளம்ப முடிவெடுத்தார் ஆளுநர் ரவி. ஆனால், கடைசி நிமிடத்தில் அந்தப் பயணத்திட்டம் ரத்தானது.

ராஜ்பவன் வசம் அதிகாரிகள்...

சிக்கலில் அமைச்சர்கள்!

இந்தப் பயணத்திட்டம் குறித்து, ஆளுநர் மாளிகை அதிகாரிகள் சிலரிடம் பேசினோம். "ஆளுநரின் டெல்லி பயணத்திட்டத்தில் இரண்டு முக்கியக் காரணங்கள் இருந்தன. ஒன்று, தனது இல்லத் திருமணவிழா அழைப்பிதழை டெல்லி முக்கியஸ்தர்களுக்குக் கொடுப்பது. இரண்டாவது, நீட் தொடர்பாக விவாதிக்கவும் முடிவெடுத்திருந்தார். தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலைச் சந்திக்க ஆளுநர் நேரம் கேட்டிருந்ததுதான் இதில் 'ஹைலைட்.' தமிழக ஆளுநராகப் பொறுப்பேற்றதிலிருந்து, தனக்கென ஓர் அதிகாரிகள் வட்டாரத்தை உருவாக்கிவைத்திருக்கிறார் ரவி. அவர்கள் மூலமாகக் கிடைத்த சில தகவல்கள் ஆளுநரை அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டன.

தி.மு.க அரசு பொறுப்பேற்றதிலிருந்து சில ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் கடும் அதிருப்தியில் இருக்கிறார்கள். தமிழ் அதிகாரிகள் பலரும் பவர்ஃபுல் போஸ்ட்டிங்கிலிருப்பது அவர்களுக்கு நெருடலை ஏற்படுத்தியிருக்கிறது. தவிர, சிவில் சர்வீஸ் சட்டத் திருத்தம் கொண்டுவர மத்திய அரசு தயாராகிறது. இதன் மூலமாக, எந்த அதிகாரியையும் மத்திய அரசு நினைத்தால் பந்தாட முடியும். இதனால், ஒருவித அச்ச உணர்விலிருக்கும் அதிகாரிகள், மத்திய அரசைப் பகைத்துக்கொள்ள விரும்பவில்லை. இந்த நேரத்தில், ஆளுநர் மாளிகையிலிருக்கும் முக்கிய அதிகாரி ஒருவர், தனக்கு நெருக்கமாக இருக்கும் மேலும் சில ஐ.ஏ.எஸ் அதிகாரிகளை ஆளுநருக்கு ஆதரவானவர்களாக மாற்ற ஆரம்பித்தார்.

தமிழக அரசின் முக்கியத் துறை ஒன்றின் முதன்மைச் செயலாளர் அந்தஸ்தில் இருக்கும் ஓர் அதிகாரி, பா.ஜ.க தரப்புடன் நெருக்கமான தொடர்பைக்கொண்டவர். அவர் தற்போது பணியாற்றும் துறையில், மத்திய அரசின் நிதிகள் அதிகமாக வருகின்றன. அவரைக் கையில் எடுத்த ராஜ்பவன், டெண்டர், கமிஷன், செலவுகள், நிதி ஒதுக்கீடு எனப் பலவற்றையும் கேட்டுத் தெரிந்துகொள்கிறது. தலைமைச் செயலாளர் கனவில் இருக்கும் மற்றோர் அதிகாரி, தற்போது டம்மி பதவியில் இருக்கிறார். தமிழக அரசில் நடக்கும் தவறுகளை ஆவணங்களோடு சேகரித்து அதைக் கச்சிதமாக ஆளுநர் மாளிகைக்கு பாஸ் செய்கிறார். ராஜ்பவனின் நேரடிக் கண்காணிப்பிலுள்ள ஒரு துறையின் உச்ச அதிகாரி, வாரத்துக்கு மூன்று முறை ராஜ்பவன் வருகிறார். ஆளும்தரப்பின் செயல்பாடுகளை ஆளுநரிடம் புட்டுப் புட்டு வைக்கிறார். இப்படி ஆளுநருக்கு நெருக்கமான வட்டத்தில் ஐந்துக்கும் மேற்பட்ட சீனியர் ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் உலவ ஆரம்பித்துள்ளார்கள். அவர்கள் மூலமாகச் சில அமைச்சர்கள் பற்றிய ஃபைல்களைச் சேகரித்திருக்கிறார் ஆளுநர்.

மக்கள்நலன் பேணும் துறையில் நாள்தோறும் ஒரு கோடி ரூபாய்க்குக் குறையாமல் தினசரி கொள்முதல் நடக்கிறது. அமைச்சர் கை

காட்டுபவருக்குத்தான் இந்த ஆர்டர்கள் வழங்கப்படுகின்றன. இது குறித்து ஆதாரபூர்வமாகத் தகவல்களைத் திரட்டியிருக்கிறார் ஆளுநர். ஊரகப் பகுதிகளை நிர்வகிக்கும் துறை, ஊருக்கே படியளக்கும் துறை, சாலைமார்க்க துறை, கடல் சார்ந்த துறை ஆகிய துறைகளில் நடந்துள்ள முறைகேடுகள் ஆளுநர்வசம் ஆவணங்களாகச் சென்றுள்ளன. இதை வைத்துக்கொண்டு, ஆளும் தரப்புக்கு ஆட்டம் காட்டுவதுதான் ஆளுநரின் திட்டம். அதற்கு ஆலோசனை பெறத்தான் அவர் டெல்லி செல்வதாக இருந்தது. ஆனால், நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நடப்பதால் பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோரின் அப்பாயின்ட்மென்ட் கிடைக்கவில்லை. இதனால், பயணத்திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. 'ஆட்டுக்கு தாடியும் நாட்டுக்கு ஆளுநரும் தேவையா?' என்று அண்ணா அவர்கள் அன்றே காரணத்தோடு எழுப்பிய கேள்வியை எண்ணிப்பார்க்கிறேன்' என்று

ஸ்டாலின், அண்ணா நினைவுநாளில் ட்வீட் செய்ததும் 'ஆளுநர் எங்களுக்கு எஜமானர் அல்ல' என்று அமைச்சர் துரைமுருகன் பேசியதும், 'ஆளுநர் ஆர்.என்.ரவி தமிழகத்துக்குத் தேவையில்லை. அவர் பதவி விலக வேண்டும்' என தி.மு.க எம்.பி டி.ஆர்.பாலு பேசியதும், மனதளவில் ஆளுநர் ரவியைக் காயப்படுத்திவிட்டன. அவருடைய பர்சனல் ஈகோவை தி.மு.க-வினர் சீண்டிவிட்டனர். அதற்கான எதிர்வினையை ஆளும்தரப்பு சந்திக்கப்போகிறது" என்றனர்.

"ஷா காலத்திலேயே நாங்க பார்த்தாச்சு..." அசராத ஸ்டாலின்

ஆளுநரின் அதிரடி நடவடிக்கைகள் குறித்து தி.மு.க சீனியர் அமைச்சர் ஒருவரிடம் பேசினோம். "ஆளுநரின் ஈகோவை நாங்கள் யாரும் சீண்டவில்லை. மாநில அரசின் அதிகார



வரம்புக்குள் ஆளுநர் தலையிட்டால், அதற்கான விளைவை அவர் சந்தித்துத்தான் ஆக வேண்டும். ஜனவரி 31, 1976-ல் தமிழக ஆளுநர் கே.கே.ஷாவின் அறிக்கையால் தி.மு.க அரசு கலைக்கப்பட்டது. அதற்கு ஒரு நாள் முன்னதாகத்தான் காந்தி மண்டபத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் 'காந்திய வழியில் தி.மு.க ஆட்சி செய்கிறது' என்று வாயாரப் புகழ்ந்திருந்தார் ஷா. இதை அடிக்கோடிட்டுக் காட்டிய மறைந்த பேராசிரியர் அன்பழகன், 'ஒரே நாளில் தி.மு.க அரசு காந்திய வழியிலிருந்து பிறழ்ந்துவிட்டதா?' என்று கிண்டலடித்தார். ஆக, ஆளுநர்களின் சித்து விளையாட்டுகளை ஷா காலத்திலேயே நாங்கள் பார்த்துவிட்டோம். இதே போன்ற அறிக்கையைத் தரச் சொல்லி, அப்போதைய ஒன்றிய அரசு, ஆளுநராக இருந்த பர்னாலாவுக்கு 1991-ல் அழுத்தம் கொடுத்தது. ஆனால், பர்னாலா அதற்கு மறுத்துவிட்டார். ஆனாலும் ஆட்சி கலைக்கப்பட்டது. இப்படி, மாநில அரசின் அதிகாரத்தில் தலையிடும் ஆளுநர்களையும், தலைவணங்கும் ஆளுநர்களையும் தி.மு.க பார்த்துவிட்டுத்தான் வந்திருக்கிறது.

2006-ல் தமிழகத்தில் மருத்துவக் கல்வி நுழைவுத் தேர்வை ரத்துசெய்யும் தீர்மானம் தி.மு.க அரசால் நிறைவேற்றப்பட்டு, அது ஆளுநருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. பின்னர், மத்திய அரசின் பார்வைக்கும், குடியரசுத் தலைவருக்கும் அந்தத் தீர்மானம் அனுப்பப்பட்டது. அப்போதே தமிழகத்தின் கல்வித் தரத்தை மத்திய அரசின் மனிதவளத்துறையும் சுகாதாரத்துறையும் பாராட்டின. இப்போது அந்தத் தரத்தை ராஜ்பவன் கேள்வி எழுப்புவது உள்நோக்கம் கொண்டதாகும். 'நீட் விவகாரத்தில் தமிழக அரசு காட்டும் முனைப்பை, வேறு சில மாநிலங்களும் கையில் எடுத்துவிடுமோ' என்கிற அச்சமே ஆளுநர் மாளிகை இவ்வளவு தூரம் துடிப்பதற்குக் காரணம். அதனால்தான், இந்த விவகாரத்தில் ஆரம்பம் முதலே ஒன்றிய அரசு நெருக்கடியைக் காட்டிவருகிறது. நீட் தேர்வுக்கும் சமூகநீதிக்கும் இடையிலான தொடர்பே ஆளுநருக்கும் சரி, ஒன்றிய அரசுக்கும் சரி... புரியவில்லை. இவர்களுடைய அதிகாரப் பூச்சாண்டி காட்டலுக்கெல்லாம் முதல்வர் ஸ்டாலின் அசரப்போவதில்லை. சட்டரீதியாக ஒரு கை பார்த்துவிடும் முடிவில் தெளிவாக இருக்கிறார் அவர்" என்றார்.

"நீட் விவகாரம் மட்டுமல்ல, சமூகநீதிக் கொள்கைகளை வலியுறுத்தி, இந்திய அளவிலான கூட்டமைப்பை உருவாக்கும் முனைப்பில் இருக்கிறார் ஸ்டாலின். அதற்காக, தேசிய அளவிலான பல கட்சிகளுக்கு அழைப்பும் விடுத்திருக்கிறார். 'இந்தக் கூட்டமைப்பு தங்களின் தேர்தல் அரசியலுக்குப் பெரும் பிரச்னையாக அமையுமோ?' என்கிற அச்சமே மத்திய அரசை யோசிக்கவைத்திருக்கிறது" என்கிறார்கள் விவரமறிந்தவர்கள். இதற்கிடையே, ஆளுநர் - முதல்வர் மோதலாக ஆரம்பித்திருக்கும் இந்த யுத்தத்தை, பா.ஜ.க - தி.மு.க மோதலாகக் களத்தில் மாற்ற வியூகம் வகுக்கிறது கமலாலயம். எனவே, இந்த அதிகார எல்லைப் பிரச்னை இப்போதைக்கு ஓயாது என்பதே யதார்த்தம். ஆனாலும், கல்வி, சமூகநீதி, மாநில உரிமை என ஒன்றோடு ஒன்று பிணைந்திருக்கும் இந்தப் பிரச்னைகளில், கட்சி அரசியல் கடந்து தமிழகம் அனைத்து மாநிலங்களுக்கும் ஒரு முன்னுதாரணமாகத் திகழ வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு!

- அ.சையது அபுதாஹிர்
த.பொன்குமரகுருபரன்
அட்டை ஓவியம்: பாலகிருஷ்ணன்

தினகரன்

16-Feb-2022

எடப்பாடி... ஏனிப்படி...?

பாஜ ஆட்சி செய்யாத மாநிலங்களில் ஆளுநர்களின் அதிகார துஷ்பிரயோகம் அதிகரித்து வருவதாக மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தெலங்கானா முதல்வர் சந்திரசேகர் ராவ் ஆகியோருடன் ஆலோசனை நடத்தி, நாட்டின் கூட்டாட்சி கட்டமைப்பை பாதுகாக்க முயற்சிப்பதாக தெரிவித்திருப்பது வரவேற்கத்தக்கது.

தமிழக சட்டசபையில் நிறைவேற்றிய நீட் தேர்வு ரத்து தீர்மானத்தை, ஆளுநர் ஆர்.என்.ரவி திருப்பி அனுப்பினார். இதையடுத்து சிறப்பு சட்ட சபை கூட்டம் நடத்தி, மீண்டும் நீட் தேர்வு ரத்து தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றி உள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின். தமிழக அரசின் இந்த நடவடிக்கை தமிழக மக்களால் பெரும் பாராட்டை பெற்றுள்ளது. மாநில சுயாட்சியை திமுக அரசு கட்டிக் காக்கும் அதே வேளையில், அதை விமர்சிக்கும் வகையில் எதிர்க்கட்சி தலைவர், அதிமுக இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி பேசியிருப்பதற்கு அரசியல் கட்சி தலைவர்கள் கடும் கண்டனங்களை தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தில் தற்போது உள்ளாட்சி தேர்தலுக்கான இறுதிக்கட்ட பிரசாரத்தில் தலைவர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். எடப்பாடி பழனிசாமி சேலத்தில் நடந்த பிரசாரத்தில், "மேற்கு வங்கத்தில் ஆளுநர் சட்டசபையை முடக்கி உள்ளார். தமிழ்நாட்டிலும் ஆளுநர் சட்டசபையை முடக்கும் நிலை ஏற்படலாம்" என பேசி உள்ளார். மேலும், "ஒரே நாடு ஒரே தேர்தல்" என ஒன்றிய பாஜ அரசின் கோஷத்தையும் முன் வைத்து பேசியிருப்பதற்கு மக்கள் தரப்பிலும் கடும் எதிர்ப்பு கிளம்பி உள்ளது.

இதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது பிரசாரத்தில், "நாடாளுமன்றத்தில் ஒரு இடம் வென்ற கட்சி, சட்டமன்ற தேர்தலில் ஆட்சியை இழந்த கட்சி, ஆட்சியிலிருந்தபோது நடந்த ஊரக உள்ளாட்சி தேர்தலில் மரண அடி வாங்கிய கட்சி, முடக்கத்தை பற்றி பேசலாமா? நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலிலும் அதிமுக படுதோல்வியை சந்திக்கும். ஆக்கப்பூர்வமான அரசியல் தெரியாத அடிமைத்தனம் மட்டுமே தெரிந்த கட்சி" என தக்க பதிலடி கொடுத்துள்ளார்.

"தமிழக மக்கள் கடந்த 10 ஆண்டுகளில் அனுபவித்த நரக ஆட்சிக்கு மாற்றாகத்தான், திமுகவுக்கு வாக்களித்து ஆட்சி பொறுப்பை வழங்கி உள்ளனர். 5 ஆண்டுகள் ஆட்சி செய்யும் அளவுக்கு மெஜாரிட்டியும் வழங்கி உள்ளனர். அப்படிப்பட்ட சூழலில் ஒன்றிய பாஜ அரசின் நிழலில் முதல்வராக நீடித்த எடப்பாடி, இப்படி மாநில சுயாட்சிக்கு எதிரான கருத்துகளை பேசுவதா? பாஜவுடன் கூட்டணியே வேண்டாம். தனித்து போட்டி என தேர்தலில் களமிறங்கி விட்டு, பாஜ அரசின் கொள்கையை பிரசாரம் செய்வதா" என அரசியல் கட்சி தலைவர்கள், விமர்சகர்கள் எடப்பாடிக்கு தங்களது கடும் கண்டனங்களை பதிவு செய்துள்ளனர்.

பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக ஆட்சியை விமர்சிப்பது வேறு... அதே நேரம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஆட்சியை முடக்குவது என்ற பேச்சு, ஓட்டளிக்கும் மக்களின் மனநிலையை கேலிக்கூத்தாக்குவதற்கு சமம் என்பதை இனியாவது எடப்பாடி போன்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

THE NEW INDIAN EXPRESS
16-Feb-2022

With ₹29,000 cr loans, State tops in microfinance credit, says report

This points to resurgence in business activity, possible lack of access to cheaper bank loans

EXPRESS NEWS SERVICE
@ Chennai

TAMIL Nadu topped in borrowings from microfinance institutions in the country between September 2020 and September 2021, pointing to resurgence in business activity and a possible lack of access to relatively cheaper bank loans.

The 11th edition of "Microfinance Pulse", a quarterly publication by Small Industries Development Bank of India (SIDBI) and EquifaxIndia, revealed that TN's borrowing or outstanding loan portfolio of ₹29,000 crore for the period was 13 per cent of the total borrowings under microfinance sector in India.

Though borrowing from microfinance institutions for a shorter period is handy, especially when you have an order, the rate of interest is quite high.

Interest rate on loans offered by NBFCs is at least 3 per cent to 5 per cent more compared to bank rates.

"But such short-term borrowings from NBFCs are cheaper when compared to usury or 'kandu vatti,'' says K. Mariappan, president, Tamil Nadu Small and Tiny Industries Association.

FACTFILE

1. Tamil Nadu is leading with portfolio outstanding **₹29,335 crore** and contributes 13% towards the total portfolio outstanding of microfinance institutions

2. As on 30 September, 2021, Tamil Nadu, West Bengal, Bihar, Karnataka and Uttar Pradesh are top five States with huge borrowings

3. Book size of MFI industry as on September 30, 2021 is **₹2,26,123 crore**

4. Highest number of loans are issued under 30K-40K ticket size category across all the quarters

During the pandemic micro small and medium enterprises in Tamil Nadu were struggling to get funds to stay alive. Some of them were worried over being declared non-performing assets (NPAs) by banks if they fail to service their loans on time.

"Since banks refuse to extend the tenure of loans, these micro industries rely on microfinance institutions. They take loan from non-banking financial institutions or microfinance institutions at a higher interest than banks to meet their payment obligations with banks," says industrial estate manufacturers' association president K V Kanakabaram.

Delay in repaying loans during the pandemic crossed 90 days across the country, including Tamil Nadu, the report said.

The report said that microfinance industry witnessed a slowdown due to the nationwide lockdown from March 2020. The quantum of loan disbursed also contracted between October 2019 and September 2020 by 28 per cent in volume and 24 per cent in value, the report said.

The microfinance industry, however, is back to expansion mode and it grew by 35 per cent and 37 per cent by volume and value, respectively, between October 2020 and September 2021, the report said.

முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடுத்த

வாக்குறுதிகள் அனைத்தையும் ஒவ்வொன்றாக நிச்சயம் நிறைவேற்றுவார்!

பெண்கள் ஏகோபித்த கருத்து!

சென்னை, பிப்.17.

முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் ஒவ்வொன்றாக நிச்சயம் நிறைவேற்றுவார் என்று பெண்களுக்கு மாதந் தோறும் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வழங்குவது குறித்த கேள்விக்கு, பெண்கள் குறிப்பாக, குடும்பத் தலைவிகள் அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளனர்.

லிபர்டி தமிழ் (Liberty Tamil) இணையதளத்தின் சார்பில் பெண்களுக்கு ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வழங்குவது குறித்து பெண்கள் மத்தியில் வைத்த கேள்விக்கு அப் பெண்கள் அளித்த ஆணித் தரமான பதில்கள் வருமாறு:-

[illegible]

தினகரன்

18-Feb-2022

அதிமுக ஆட்சியில் பழிவாங்கப்பட்ட

இடைநிலை ஆசிரியர்களுக்கு அதே இடத்தில் பணி

முதல்வருக்கு சங்கத்தினர் நன்றி

சென்னை, பிப்.18: அதிமுக ஆட்சியில் பழிவாங்கப்பட்ட இடைநிலை ஆசிரியர்களுக்கு அதே இடத்தில் பணி வழங்கி ஆணையிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி நன்றி தெரிவித்துள்ளது.

இது குறித்து தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாநில பொதுச்செயலளார் மற்றும் ஜாக்டோ ஜியோவின் மாநில ஒருங்கிணைப்பாளர் இரா.தாஸ் வெளியிட்ட அறிக்கை:

ஜாக்டோ ஜியோ போராட்டத்தில் பாதிக்கப்பட்டு பதவி உயர்வு இழந்தவர்களுக்கு பதவி உயர்வு அளிக்கவும், அந்நேரம் பணி மாறுதலில் சென்றவர்களுக்கு தற்போது நடைபெற்று வரும் ஆசிரியர்கள் மாறுதல் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வில் முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற எங்களது கோரிக்கையை பரிசிலனை செய்து கலந்தாய்வில் முன்னுரிமை அளித்த தமிழக முதல்வருக்கும், பள்ளி கல்வித்துறை அமைச்சர் மற்றும் செயலாளருக்கும் நன்றியும், பாராட்டுக்களும்.

அதேபோல் எல்கேஜி, யுகேஜி வகுப்புகளுக்கு கடந்த ஆட்சியில் இடைநிலை ஆசிரியர்களை பழிவாங்கி பணியிறக்கம் செய்து மாறுதல் வழங்கியதை ரத்து செய்து பழைய பணியிடத்தில் சேர்த்து கொள்ள வேண்டும் என்ற எங்களது வேண்டுகோளை ஏற்று மீண்டும் அதே பணியிடத்தில் சேர ஆணையிட்டிருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினமணி

18-Feb-2022

தாமதமாக வந்த பெண் எழுத்தாளருக்கு விருது வழங்கிய முதல்வர்

காவல் அதிகாரியின் செயலால் நெகிழ்ச்சி

சென்னை, பிப். 17: சென்னையில் தொடங்கிய புத்தகக் காட்சிக்கு விருது பெற தாமதமாக வந்த எழுத்தாளர் மீனா கந்தசாமிக்கு நிகழ்ச்சி முடிந்த பின்னரும், முதல்வர் ஸ்டாலின் விருது வழங்கியது நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை புத்தகக் காட்சியை நந்தனம் ஒய்எம்சிஏ மைதானத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் புதன்கிழமை தொடக்கி வைத்தார்.

அவர் மேடையில் உரையாற்றி முடிக்கும் நிலையில் ஒரு பெண் வேகமாக அந்த மைதானத்துக்குள் வருவதை முதல்வரின் பாதுகாப்பு அதிகாரியான ஆர்.திருநாவுக்கரசு கவனித்தார்.

இதையடுத்து உடனடியாக அங்கு பாதுகாப்பிலிருந்த காவலரை ஒலிபெருக்கியில் அழைத்து அந்தப் பெண் குறித்து விசாரிக்க அறிவுறுத்தினார்.

அப்போது அந்தப் பெண் தாம் எழுத்தாளர் மீனா கந்தசாமி என தெரிவிக்க அப்பெயரைக் கேள்விப்பட்டதும் அதே மேடையில் அவருக்கு கலைஞர் பொற்கிழி விருது தரவிருந்ததும், அவர் வர இயலவில்லை என அறிவிப்பாளர் அறிவித்ததும் அதிகாரியின் நினைவுக்கு வந்தது. இதையடுத்து மீனா கந்தசாமி முதல் வரிசையில் அமர வைக்கச் சொல்லியிருக்கிறார்..

இது குறித்து முதல்வரின் கவனத்திற்கு கொண்டு செல்ல, அவரும் நன்றியுரை முடிந்ததும் எழுத்தாளர் மீனா கந்தசாமிக்கு கலைஞர் பொற்கிழி விருது வழங்கி சிறப்பித்தார்.

இது குறித்து எழுத்தாளர் மீனா கந்தசாமி தனது ட்விட்டர் பக்கத்தில், பரந்த மனதோடும் உடனடியான சமயோசித முடிவெடுக்கும் திறனோடும் இத்தகைய செயல்பாடுகளைச் செய்து முடித்த முதல்வரின் பாதுகாப்பு அதிகாரியான ஆர்.திருநாவுக்கரசுவிற்கு தனது மறக்க முடியாத நன்றியை உரித்தாக்குவதாக பாராட்டு தெரிவித்துள்ளார்.

THE HINDU
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

18-Feb-2022

A perfect host to companies from across the globe

With several advantages, Tamil Nadu has attracted more than 1,400 firms from many countries and has become a hub for global automakers

SANGEETHA KANDAVEL

Tamil Nadu, misconceived to be a conservative land, has played a perfect host to companies from across the globe. The MNC footprint here has expanded in the past quarter century.

Today, the State is home to over 1,400 companies from many countries, including South Korea, China, Japan, the U.K., the U.S., Singapore, Australia and Denmark. Further, it has attracted investors from Germany, France and Taiwan with over 200 companies operating in the State.

Over the years, the State has also become home and hub for global automakers. Hyundai from South Korea, Nissan and Yamaha from Japan, Daimler from Germany and Renault, and Peugeot from France have made huge investments in manufacturing.

In top gear: Hyundai Motor came with Korean suppliers, thus creating a vibrant supply chain. ▪B. VELANKANNI RAJ

Good infrastructure

"Tamil Nadu has many advantages over other countries and States in attracting foreign direct investment: relatively good infrastructure, including ports, plentiful qualified human resources, and well-established clusters in the automobile and IT sectors," said Young-seup Kwon, Consul-General of the Republic of Korea in Chennai.

Details provided by Guidance, the nodal agency for bringing investments into Tamil Nadu, show the State has also emerged as a leading destination for electronics, with Taiwan, Japan and Korea, in particular, at the forefront of investments. Companies such as Delta, Pegatron, Foxconn, Flex, Toshiba, Hitachi, Panasonic and Samsung have manufacturing facilities here.

The State has also been able to attract investments in renewable energy from Danish companies such as Vestas and Cubic and the U.S.-based companies like TPI and First Solar.

Most of these companies at a later stage brought in suppliers and other component manufacturers from their countries into Tamil Nadu. For instance, Hyundai Motor came with many globally competitive Korean suppliers, including Hyundai Mobis, Mando Automotive, and Hyundai Globis and has created a vibrant and competitive automobile supply chain and ecosystem. More than 150 Korean companies are operating in Tamil Nadu and over 4,000 Koreans are residing, forming the biggest expatriate community in Chennai.

Country-specific desks

Mr. Young-seup Kwon pointed out that the Korean desk of the Guidance has always been active in resolving Korean companies' difficulties, and has been very successful in receiving more foreign and domestic investment.

A few years ago, to get more multinational firms to set up shop in the State, Guidance opened country-specific desks at its office in Chennai. These desks are the first point of contact with the countries that generate a significant quantum of outward FDI.

The team at Guidance comprises 40-plus multi-linguistic personnel skilled in investment promotion with technically sound knowledge of the operating ecosystem, policies and regulatory updates. They are operating round the clock to ensure maximum utilisation across time zones.

Seamless facilitation

"There has been a high level of interest among Taiwanese companies in investment opportunities in Tamil Nadu and several Taiwanese companies are keen to engage with Guidance for seamless facilitation," said Ben Wang, Director-General, Taipei Economic and Cultural Center, Chennai. It is learnt that there are over 15 Taiwan firms in the State.

The State is also home to over 200 Japanese companies and around 589 business establishments. The Japanese business establishments include the liaison office/branch office of Japanese companies in India, the Indian subsidiary of a Japanese company and business enterprises founded by Japanese nationals.

Japanese companies and establishments are producing automobile, transport equipment, machinery, electric machine and chemicals, among others.

Japanese assistance

"There are many projects in Tamil Nadu funded by Japanese ODA (Official Development Assistance). Constructions of Chennai Metro, Chennai desalinisation plant, and AIIMS, Madurai, are some of the ongoing projects," said Taga Masayuki, Consul-General of Japan in Chennai.

Asked why so many Japanese companies have come up here, he said, "Availability of industrial zone/township, including those managed/supported by Japanese companies. Comparatively lower cost of labour and availability of quality engineers/professionals. Living conditions and availability of Japanese restaurants are the other key reasons for firms investing here."

Details provided by Guidance, the nodal agency for bringing investments into Tamil Nadu, show the State has also emerged as a leading destination for electronics

Availability of good international schools is another reason why residents and key officials of companies from these countries come and live in Tamil Nadu.

The growth of these companies has also led to creation of country-specific restaurants, bakeries and shops. Today, the State has several Korean and Japanese restaurants.

For foreign investors and for relocation investments, the State offers additional incentives as part of the Industrial Policy-2021, which include relocation benefits, a direct subsidy on its capital investment and incentives to boost the research and development innovation projects.

இந்து தமிழ் திசை
தமிழால் இணைவோம்
21-Feb-2022

கோயில் நிலங்கள் மீட்டெடுப்பு: பாராட்டுக்குரிய நடவடிக்கை!

இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள கோயில் நிலங்களின் ஆக்கிரமிப்புகளை அகற்றி, அவற்றை மீட்டெடுப்பதில் தமிழ்நாடு அரசும் அறநிலையத் துறையும் காட்டிவரும் செயல்முனைப்பு பாராட்டுக்குரியது. கோயில்களின் நில விவரங்களையும் மீட்கப்பட்ட நிலங்கள் பற்றிய விவரங்களையும் அறநிலையத் துறையின் இணைய தளத்தில் அனைவரும் பார்க்கும்வண்ணம் தொடர்ந்து வெளியிட்டுவருவது வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்தியுள்ளது. திமுக தலைமையிலான அரசு பொறுப்பேற்றுக்கொண்டதிலிருந்து இதுவரை ரூ.2,043 கோடி மதிப்புள்ள நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாகச் சமீபத்தில் அறநிலையத் துறை தெரிவித்துள்ளது. கோயில் நிலங்களை விழிப்புடன் பாதுகாக்க, அறநிலையத் துறை அலுவலகங்களில் வட்டாட்சியர் உள்ளிட்ட 100-க்கும் மேற்பட்ட புதிய அலுவலர்கள் நியமிக்கப்பட உள்ளனர். இதுபோலவே நீண்ட காலமாக நிலுவையில் இருக்கும் வாடகை, குத்தகை பாக்கிகளை வசூலிக்கவும் வளர்ச்சியடைந்துவரும் பகுதிகளில் உள்ள கட்டிடங்கள் மற்றும் கடைகளுக்கான வாடகை நிர்ணயங்களைக் காலத்துக்கேற்ப உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இம்முறை திமுக ஆட்சிக்கு வந்ததிலிருந்து கோயில்கள் நிர்வாகம் சார்ந்து தனி அக்கறை காட்டிவருகிறது. அறநிலையத் துறை மானியக் கோரிக்கையிலும் குறிப்பிடத்தக்க பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. அவற்றுள் முக்கியமானது, ஒரு கால பூஜைத் திட்டத்தின் கீழ் 12,959 கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கு மாத ஊக்கத்தொகையாக ரூ.1,000 அறிவிக்கப்பட்டதாகும். வருமானம் அதிகம் உள்ள கோயில்களிலும்கூட, அங்கு பணிபுரியும் அர்ச்சகர்கள் உள்ளிட்ட அனைத்து வகைக் கோயில் பணியாளர்களின் ஊதியமும் சொற்ப அளவிலேயே உள்ளது என்பதே உண்மை நிலை. இந்நிலையில், நீண்ட காலமாகத் தற்காலிக அடிப்படையில் பணிபுரிந்துவரும் கோயில் ஊழியர்கள் பணி வரன்முறை செய்யப்படுவார்கள் என்ற அறிவிப்பு வரவேற்பைப் பெற்றுள்ளது. அறநிலையத் துறை சார்பில் 10 இடங்களில் கலை, அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படுவதற்கான பணிகளும் திட்டமிடப்பட்டுள்ளன. அங்கு பணிபுரியத் தேர்ந்தெடுக்கப்படும் உதவிப் பேராசிரியர்களுக்குத் தொகுப்பூதியங்களை நிர்ணயிக்காமல், முன்கூட்டியே பல்கலைக்கழக மானியக் குழுவின் ஊதிய நிர்ணயங்களைப் பின்பற்றுவது நல்லதொரு முன்னுதாரணமாக அமையும்.

திருத்தணிகை, சமயபுரம், திருச்செந்தூர் கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம், முடி காணிக்கைக்கான கட்டணம் ரத்து, மாற்றுத் திறனாளிகளின் திருமணங்களுக்குத் திருமணக் கட்டணம் ரத்து போன்ற பல அறிவிப்புகள் நடைமுறைக்கு வந்திருப்பது பாராட்டுக்குரியது. முழு நாள் அன்னதானத் திட்டங்களை ராமேஸ்வரம், திருவண்ணாமலை போன்ற வாய்ப்புள்ள மற்ற கோயில்களுக்கும் இனி வரும் காலத்தில் விரிவுபடுத்த வேண்டும். கோயில் நிர்வாகம் தொடர்பில் மிகச் சில மாதங்களிலேயே வரவேற்கத்தக்க மாற்றங்கள் பல நடந்திருந்தபோதிலும், இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள பெரும்பாலான கோயில்களை இன்னும் அதிகாரிகளே நிர்வகித்துவருகின்றனர். அனைத்துக் கோயில்களிலும் அறங்காவலர்களை நியமிக்கவும் அதிகாரிகளுடன் அவர்கள் இணைந்து செயல்படவும் விரைந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

தினத் தந்தி
21-Feb-2022

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் 50 லட்சம் பயனாளிகள்!

எந்தவொரு திட்டம் என்றாலும் சரி, மக்கள் அதை தேடிச்சென்று பயனடைவதைவிட, அவர்களையே நாடிச்சென்று, அந்த சேவைகளை வழங்குவதன் மூலம் பெரிதும் பயனடைவார்கள், மகிழ்ச்சியும் அடைவார்கள். அந்த வகையில், மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை செயல்படுத்தும் மகத்தான திட்டம், 'மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்'. இந்த திட்டத்தின் மூலம் வயதுமுதிர்ந்த மக்களின் வீடுகளுக்கே சென்று மருந்துகளும் வழங்கப்படுகின்றன. மருத்துவ சேவைகளும் வழங்கப்படுகின்றன.

45 வயதுக்கு மேற்பட்டவர்களில், ரத்த அழுத்தம், நீரிழிவு நோய் உள்ளவர்கள், அரசு மருத்துவமனைக்கு சென்று அவ்வப்போது மருந்து - மாத்திரைகள் வாங்கும் நிலையில், இந்த திட்டத்தின் மூலம் அவர்களின் வீடுகளுக்கே சென்று அவைகளை மருத்துவ பணியாளர்கள் வழங்குகிறார்கள். சிறுநீரக கோளாறு காரணமாக மருத்துவமனைக்கு சென்று, வாரம் 2 முறை 'டயாலிசிஸ்' செய்ய வேண்டியவர்களுக்கு, அவர்கள் வீடுகளுக்கு 'போர்டபிள் டயாலிசிஸ்' என்று கையில் எடுத்துச் செல்லும் கருவியை கொண்டு, 'டயாலிசிஸ்'

வழங்குகிறார்கள்.

முடக்குவாத நோயால் அவதிப்படுபவர்களுக்கு, அவர்களின் வீடுகளுக்கே சென்று 'பிசியோதெரபி' சிகிச்சை வழங்குகிறார்கள் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெருமையோடு கூறுகிறார். கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் 5-ந்தேதி, கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி ஊராட்சி ஒன்றியம், சாமணப் பள்ளி கிராமத்தில் ஒரு ஆலமரத்தடி திண்ணையில், முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்த திட்டத்தை தொடங்கிவைத்தார். இதுமட்டுமல்லாமல், அங்குள்ள 2 பேர் வீடுகளுக்கு நேரடியாக சென்று, அவர்களுக்கு அளிக்கப்படும் மருத்துவ சிகிச்சையை பார்வையிட்டார். அவர்களுக்கு தேவையான மருந்து - மாத்திரைகளை வழங்கினார்.

பட்ஜெட்டில் இதற்காக ரூ.258 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இதற்காக, 7,200 செவிலியர்கள் மற்றும் களப்பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். இந்த திட்டம் மூத்த குடிமக்களுக்கு பெரும் பயனை அளிக்கிறது. மருத்துவமனைக்கு நடந்து சென்று அங்கு காத்திருந்து, மருந்து - மாத்திரைகளை பெறும் நிலையையும், 'டயாலிசிஸ்' சிகிச்சை, 'பிசியோதெரபி' சிகிச்சை பெறும் நிலையையும் தவிர்த்து, அவர்கள் வீடுகளுக்கே அதெல்லாம் தேடிவரும் நிலை, அவர்களுக்கு பெரும் உதவியாக இருக்கிறது.

இந்த திட்டத்தின் சிறப்பான செயல்பாட்டின் மூலம், தினந்தோறும் 20 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் புதிதாக பயன்பெற்று வந்தார்கள். நாளை மறுநாள் புதன்கிழமை 50 லட்சமாவது பயனாளி என்ற வகையில், சென்னையை அடுத்த சித்தாலப்பாக்கம் ஊராட்சியில் வயது முதிர்ந்த 3 முதல் 4 பயனாளிகளின் வீடுகளுக்கே சென்று 'பிசியோதெரபி' சிகிச்சையை மேற்பார்வையிடும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், அவர்களுக்கு தேவையான மருந்து-மாத்திரைகளையும் வழங்குகிறார்.

இந்த திட்டத்தில் 1 கோடி பேருக்கு வீடுதேடி மருந்துகளையும், மருத்துவ சிகிச்சையையும் அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதே நாளில், 2008-ம் ஆண்டு முதல்-அமைச்சராக இருந்த மறைந்த கலைஞர் கருணாநிதி, தொடங்கிவைத்த 108 ஆம்புலன்ஸ் திட்டத்துக்காக அதிநவீன உயிர்காக்கும் உபகரணங்கள் பொருத்தப்பட்ட அவசர கால சிகிச்சை ஊர்திகளின் பணிகளும் தொடங்கிவைக்கப்படுகிறது.

தற்போது, 1,303 ஆம்புலன்சுகள் மிக சீரிய பணியை ஆற்றிக்கொண்டிருக்கும் நிலையில், புதிதாக இந்த 188 ஆம்புலன்சுகளையும் சேர்த்தால், தமிழ்நாட்டில் இனி 1,491 ஆம்புலன்சுகள் பயன்பாட்டில் இருக்கும். விபத்தில் சிக்கியவர்களின் உயிரைக்காக்க தமிழக அரசு கொண்டுவந்துள்ள, 'நம்மை காக்கும் 48' திட்டத்தில் இந்த ஆம்புலன்சுகளின் செயல்பாடு உதவியாக இருக்கும். ஏதாவது விபத்துகள் ஏற்பட்டால், அதற்காக இலவச சிகிச்சை அளிக்க, தமிழக அரசு பதிவிட்டுள்ள 640 மருத்துவமனைகளில், ஏதாவது ஒரு மருத்துவமனைக்கு உடனடியாக அழைத்துச் செல்ல இந்த ஆம்புலன்சுகள் பெரும் சேவை புரியும். மொத்தத்தில், மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை செயல்படுத்தும் திட்டங்கள் மகத்தானவை. இவ்வளவு குறுகிய காலத்தில் 50 லட்சம் பயனாளிகளை அடையாளம் கண்டு 'மக்களை தேடி மருத்துவம் திட்டம்' மூலம் மருந்து - மாத்திரைகள் வழங்கி, மருத்துவ சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுவது பாராட்டுக்குரியது.

தினமலர்
உண்மையின் உரைகல்
22-Feb-2022

மாணவர்களுடன் முதல்வர் 'செல்பி!'

சென்னை, பிப். 22–
குடியரசு தின விழா அணிவகுப்பில் பங்கேற்ற அலங்கார ஊர்திகளை கண்டுகளித்த, மாணவ, மாணவியருடன், முதல்வர் ஸ்டாலின், 'செல்பி' எடுத்துக் கொண்டார்.

சென்னையில் நடந்த குடியரசு தின விழா அணி வகுப்பில், தமிழக அரசு சார்பில், 'விடுதலைப் போரில் தமிழகம்' என்ற தலைப்பில், மூன்று அலங் கார ஊர்திகள் பங்கேற்றன. தமிழக சுதந்திரப் போராட்ட வீரர்களின் பங்களிப்பை போற்றும் வகையில், அவை வடி வமைக்கப் பட்டிருந்தன.

அந்த ஊர்திகள், பொது மக்கள் பார்வைக்காக, சென்னை மெரினா கடற் கரையில் விவேகானந்தர் இல்லம் அருகே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

■ சென்னையில் நடந்த குடியரசு தின விழா அணிவகுப்பில் பங்கேற்ற அலங்கார ஊர்திகளை கண்டுகளித்த மாணவ – மாணவியருடன், 'செல்பி' எடுத்துக் கொண்ட முதல்வர் ஸ்டாலின்.

நேற்று, பள்ளி மாணவ, மாணவியர், ஆசிரியர் களுடன் அங்கு வந்து, ஆர் வமுடன் அலங்கார ஊர்தி களை கண்டுகளித்தனர்.

தலைமை செயலகத்தில் இருந்து முதல்வர் மதியம் தன் வீட்டிற்கு சென்றார். அப்போது, பள்ளி மாணவ, மாணவியர் அலங்கார ஊர்திகளை கண்டு களிப்பதை கண்டார்.

உடனே தன் வாக னத்தை நிறுத்தச் சொல்லி, அங்கு சென்றார். மாணவ, மாணவியருடன் கலந்து ரையாடினார். அலங்கார ஊர்திகள் முன், மாணவ, மாணவியருடன், தன் மொபைல் போனில், முதல்வர், 'செல்பி' எடுத் துக் கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு சென்றார்.

மாணவர்கள் மகிழ்ச்சி யுடன் கையசைத்து, அவரை வழியனுப்பி வைத்தனர்.

தினகரன்
22-Feb-2022

வழிகாட்டும் தமிழகம்

தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றதில் இருந்து பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து வருகிறார். கடந்த ஆட்சியில் சீரழித்து சென்ற நிதிநிலை சீரமைக்கப்பட்டு வருகிறது. தமிழர்கள் இழந்த உரிமைகள் மீட்கப்பட்டு வருகின்றன. இது மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. தமிழக மக்களுக்கு எதிரான விஷயங்களில் கடந்த ஆட்சியாளர்கள் ஈடுபட்டனர். மக்கள் நலன் சார்ந்த விஷயங்களில் முடிவு எடுக்க முடியாமல் கடந்த ஆட்சியாளர்கள் மவுனம் காத்ததை மறைக்கவே முடியாது.

தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற பிறகு குறைந்த மாதத்தில் மிக சிறப்பு வாய்ந்த எண்ணற்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. பொதுமக்கள் கோரிக்கை பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. பெருமை மிகு சாதனைகளை தமிழக அரசு படைத்து வருகிறது. ஆக்கப்பூர்வமான திட்டங்கள் மூலம் மக்களின் வாழ்வாதாரத்தை தமிழக அரசு உயர்த்தி வருகிறது. இதைப்பார்த்து ஒன்றிய அரசு பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். பேச்சு மூலம் மட்டும் வளர்ச்சியை எட்ட முடியாது என்பதை ஒன்றிய அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

சமீபகாலமாக, தமிழகத்தில் மக்களிடையே பிளவை ஏற்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்களில் அவதூறுகள் பரப்பப்பட்டன. பொய்கள் மூலம் மக்களை திசை திருப்ப முயற்சிகள் நடந்தன. இவைகள் அனைத்தும் மக்களிடம் எடுபடவில்லை. இதனால் சிலர் விரக்தி அடைந்துள்ளனர். பொய்கள் மூலம் தமிழக மக்களை ஒரு போதும் ஏமாற்ற முடியாது. மக்களை பிளவுபடுத்தும் எந்த ஒரு விஷயமும் தமிழகத்தில் எடுபடாது என்பதை அவர்கள் அழுத்தமாக புரிந்து கொள்ள வேண்டும்.

முக்கியமாக, முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு திட்டங்களை அறிவிப்பதிலும், அதை செயல்படுத்துவதிலும் மிக சிறப்பாக விளங்கி வருகிறது. முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்து வரும் திட்டங்களை வெளிநாட்டினரும் பாராட்டி வருகின்றனர். குறிப்பாக, மகளிருக்கு இலவச பேருந்து பயண திட்டம் நாடு கடந்தும் வரவேற்பை பெற்றுள்ளது. அந்த அளவுக்கு திட்டங்கள் மக்களை சென்றடைந்துள்ளது. மகளிர் முன்னேற்றத்துக்காக எண்ணற்ற திட்டங்களை தமிழக அரசு அறிவித்து வருகிறது. திட்டங்களால் மக்கள் முழு பயனை அடைந்துள்ளனர்.

தமிழக அரசு அறிவித்து வரும் திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளை பொதுமக்கள் வரவேற்கின்றனர். அனைத்து தரப்பு மக்களின் வாழ்வாதாரம் உயரும் வகையில், புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. பேரிடர் காலங்களில் முதல்வரே நேரில் களத்தில் இறங்கியது, அதிவேக மீட்பு பணிகளால் மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு விரைவில் திரும்பியது, தமிழக அரசின் முயற்சியால் குறுகிய காலத்தில் சுகாதாரம், அறிவியல், விவசாயம், கல்வி, தொழில் முதலீடு, சுற்றுச்சூழலை பாதுகாப்பது உள்ளிட்ட பல்வேறு துறைகளில் வலுவான கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த ஆட்சியில் அனைத்து துறைகளிலும் பின்தங்கியிருந்த தமிழகம், தற்போது வளர்ச்சியில் நாட்டிற்கே தமிழக அரசு வழிகாட்டி வருகிறது.

THE HINDU
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

22-Feb-2022

Stalin springs a surprise on students at R-Day parade tableau

Chief Minister was on his way back from Secretariat

SPECIAL CORRESPONDENT
CHENNAI

Students from at least four schools in Chennai were in for a surprise on Monday when Tamil Nadu Chief Minister M.K. Stalin made a pit stop at the Marina beachfront where they were visiting the Republic Day tableau near Vivekananda House on Kamarajar Salai.

Mr. Stalin interacted with the students and a few of them posed for a selfie with the Chief Minister, who was on his way back from the Secretariat and wanted to spend some time with the students, a release said.

It may be recalled that after Tamil Nadu government's tableau was rejected by a panel from taking part in the Republic Day parade in New Delhi last month, Mr. Stalin wrote to the Prime Minister requesting it to be considered for the parade.

After Union Defence Minister Rajnath Singh replied to the Chief Minister's letter explaining the reasons behind the rejection, Mr. Stalin announced that the rejected tableau along with a few others would be part of the Republic Day parade in Chennai, and would be taken for display to major towns and cities across the State.

A memorable day: Chief Minister M.K. Stalin taking a selfie with students in Chennai on Monday. • SPECIAL ARRANGEMENT

தினகரன்

23-Feb-2022

வரலாற்று வெற்றி

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் முடிவுகள் இதோ வந்துவிட்டன. மொத்தம் உள்ள 21 மாநகராட்சிகளையும் கைப்பற்றி சாதனை படைத்து இருக்கிறது திமுக அணி. கொங்கு மண்டலம் அசைக்க முடியாத அதிமுக கோட்டை என்றார்கள். அந்த கோட்டை இப்போது திமுக வசம். சாதித்து காட்டியிருக்கிறார் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். இந்த 9 மாத திமுக ஆட்சிக்கு மக்கள் வழங்கியிருக்கும் நற்சான்றிதழ்தான் இந்த வெற்றி. இன்னும் அதிகமாக வெறிகொண்டு தமிழ் சமுதாயத்திற்கு உழைக்கக்கூடிய உத்வேகத்தையும், உற்சாகத்தையும் இந்த வெற்றி நிச்சயம் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வழங்கும்.

மு.க.ஸ்டாலின் எனும் உறுதியான தலைவனை நோக்கி தமிழகம் திடீரென ஒரேநாளில் வந்துவிடவில்லை. 2019ம் ஆண்டு நடந்த மக்களவை தேர்தல், அடுத்து 2021ல் வந்த சட்டசபை தேர்தல், அதன்பின் 9 மாவட்ட ஊராட்சிகளுக்கு நடந்த தேர்தலிலும் வெற்றி. இப்போது நகர்ப்புற உள்ளாட்சியிலும் இமாலய வெற்றி பெற்று இருக்கிறார் மு.க.ஸ்டாலின் எனும் மாபெரும் தலைவன்.

மக்கள் தேடும் முதல்வர் அல்ல மு.க.ஸ்டாலின். மக்களைத்தேடும் முதல்வர் அவர். அதனால்தான் மக்களின் எண்ணம் அறிந்து, தேவை புரிந்து செயல்பட்டு, அவர்களின் தோளோடு தோளாக, தோழனாக நிற்பதால்தான் எங்கு பார்த்தாலும், எந்த இடம் நோக்கினாலும் மக்கள் மனங்களில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முகம் தெரிகிறது. இந்த உள்ளாட்சி தேர்தலில் மக்கள் அளித்த வாக்குகளில் அது புரிகிறது. கோவை முழுவதும் திமுக கோட்டையாகி நிற்கிறது. சேலம், தர்மபுரியும் அந்த வரிசையில் வந்து நிற்கிறது. முன்னாள் முதல்வர் எடப்பாடி வசித்து வரும் வார்டில் கூட திமுக அமோக வெற்றி பெற்று இருக்கிறது. எந்த இடங்கள் எல்லாம் இதுவரை திமுக வசம் வராமல் இருந்ததோ அந்த இடங்களில் கூட இப்போது திமுக சாதனை வெற்றி பெற்று இருக்கிறது.

தமிழகத்தில் பா.ஜ ஆதிக்கம் மிகுந்த நாகர்கோவில் கூட இப்போது திமுக வசம். தூத்துக்குடி மேயர் பதவி அதிமுக வசம் இருந்தது. இப்போது அபார வெற்றி. அசைக்க முடியாத வெற்றி. தென் மாவட்டம், கொங்கு மண்டலம் என்று இல்லாமல் ஒட்டுமொத்த தமிழகமும் முதல்வர் மு.க.ஸ்டாலின் காட்டிய பாதையில் பயணித்து இருக்கிறது. அவர் மீது முழு நம்பிக்கை வைத்து இருக்கிறது. அதனால் தான் இத்தனை பெருவாரியான வெற்றி திமுக அணிக்கு கிடைத்து இருக்கிறது. வாக்களித்தவர்கள் மகிழ்ச்சி அடையக்கூடிய வகையிலே, வாக்களிக்கத் தவறியவர்கள், வருந்தக்கூடிய அளவில் இந்த ஆட்சி அமையும் என்று அடிக்கடி சொல்வார் நமது முதல்வர். சட்டசபை தேர்தலில் திமுக அணிக்கு வாக்களிக்க தவறியவர்கள் கூட இந்த உள்ளாட்சி தேர்தலில் வாக்களித்து முதல்வர் மீதான நம்பிக்கையை உறுதி செய்து இருக்கிறார்கள். ஒட்டுமொத்த தமிழக மக்களின் நன்மதிப்பையும் பெற்று தனிப்பெரும் தலைவராக முதல்வர் மு.க.ஸ்டாலின் உருவெடுத்து இருப்பதை உள்ளாட்சி தேர்தலில் பெற்ற வரலாற்று வெற்றி உறுதி செய்து இருக்கிறது.

தினத் தந்தி
DAILY THANTHI

23-Feb-2022

உள்ளாட்சி, இனி உள்ளூராட்சி!

2011-ம் ஆண்டு நடந்த தேர்தலுக்குப் பிறகு இப்போது நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் நடந்து இருக்கிறது. 8 அரசியல் கட்சிகளும், சுயேச்சைகளும் போட்டியிட்ட 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 489 பேரூராட்சிகளில் 12 ஆயிரத்து 601 உறுப்பினர்களுக்கான தேர்தல் ஒரேநாளில் நடந்தது. 30 ஆயிரத்து 735 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 2 கோடியே 83 லட்சத்து 36 ஆயிரத்து 333 ஆக இருந்தாலும் வாக்குப்பதிவு மந்தமாகவே இருந்தது.

21 மாநகராட்சிகளில் மொத்த வாக்குப்பதிவு 52.22 சதவீதம்தான். இதில் அதிகபட்சமாக கரூர் மாநகராட்சியில் 75.84 சதவீத வாக்குகளும், குறைந்த வாக்குப்பதிவாக தலைநகரம் சென்னையில் 43.62 சதவீத வாக்குகளும் மக்களால் போடப்பட்டிருந்தன. 138 நகராட்சிகளில் மொத்த வாக்குப்பதிவு 68.22 சதவீதம். தர்மபுரி மாவட்டத்தில் அதிக அளவாக 81.37 சதவீதமும், நீலகிரி மாவட்டத்தில் குறைந்த அளவாக 59.98 சதவீதமும் பதிவாகி இருந்தன. 489 பேரூராட்சிகளில்

கரூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக 86.43 சதவீதமும், குறைந்த அளவாக நீலகிரி மாவட்டத்தில் 66.29 சதவீதமும் பதிவாகியிருந்தன. இதுதவிர தூத்துக்குடி மாவட்டம் கடம்பூர் பேரூராட்சியில் தேர்தல் ரத்து செய்யப்பட்டுள்ளது. ஆக, தமிழ்நாட்டில் மொத்த வாக்குப்பதிவு 60.70 சதவீதமாகும்.

40 சதவீத மக்கள் தங்கள் ஜனநாயக கடமையை ஆற்றவில்லை, மாநகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் அதிக அளவு வாக்குப்பதிவு செய்த பெருமையை கரூர் மாவட்டம் பெற்றிருக்கிறது. பேரூராட்சி பகுதி மக்களுக்கு வாக்களிக்க இருந்த ஆர்வம் பெரும்பாலான நகர்ப்புற மக்களுக்கு, குறிப்பாக சென்னை நகர மக்களுக்கு இல்லை என்பது வருந்தத்தக்கது. படித்தவர்களைவிட படிக்காதவர்களே தங்களை யார் நிர்வாகம் செய்யவேண்டும்? என்று தேர்ந்தெடுப்பதில் அதிக முனைப்போடு இருந்திருக்கிறார்கள்.

இந்த தேர்தலில் தி.மு.க.வும், அதன் கூட்டணி கட்சிகளும் மகத்தான மாபெரும் வெற்றியைபெற்று மகுடம் சூடியுள்ளது. இதை இமாலய வெற்றி என்றே சொல்லலாம். அனைத்து மாநகராட்சிகளையும் தி.மு.க. கைப்பற்றியுள்ளது. தி.மு.க.வின் 9 மாத கால ஆட்சிக்கு மக்கள் அளிக்கும் நற்சான்றிதழ் என்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியது பலித்துவிட்டது. இவ்வளவுக்கும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரடியாக பிரசாரத்துக்கு செல்லவில்லை. காணொலி மூலமாகவே மாவட்ட வாரியாக பிரசாரம் செய்தார். "வெற்றி விழாவுக்கு அனைத்து மாவட்டங்களுக்கும் வருவேன்" என்று மட்டும் கூறியிருந்தார். இந்த தேர்தலில் தி.மு.க. பெற்ற வெற்றி முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்காக கிடைத்த வெற்றிதான்.

அ.தி.மு.க.வை பொறுத்தவரையில், வெற்றி வாய்ப்பை இழந்ததோடு இது அதிர்ச்சிக்குரிய தோல்வியாகவும் அக்கட்சிக்கு அமைந்திருக்கிறது. ஆளுங்கட்சியாக இல்லையென்றாலும் பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக மக்களுக்கு தொண்டாற்ற வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்று நிச்சயமாக எடுத்துக்கொள்ளலாம். பா.ஜ.க.வும், அண்ணாமலை தலைவராக பொறுப்பேற்ற பிறகு புதுவேகம் கொண்டு செயல்படுகிறது என்றவகையில், இந்த தேர்தலில் தடம் பதித்துள்ளது. ஒரு சில இடங்களில் வெற்றியும், பல இடங்களில் 2, 3-வது இடங்களை பெற்றுள்ளது. தேர்தல் முடிந்துவிட்டது. இனி அனைவரும் மக்கள் சேவையில் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என்பதுதான் மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. அரசு மக்களுக்கு சேவை ஆற்றுவதுபோல, நகர்ப்புற உள்ளாட்சி என்பது அந்தப்பகுதி உள்ளூர் மக்களால், உள்ளூர் மக்களுக்காக பணியாற்றும் அமைப்புகள் என்றவகையில், தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் தங்கள் பகுதி மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் வாய்ப்பை பெற்றுள்ளார்கள். மக்களுக்கும் தங்கள் குறைகளுக்கு தீர்வுகாண தங்கள் அருகில் உள்ள தங்கள் உறுப்பினர்களை, தங்கள் பேரூராட்சி, நகரசபை தலைவர்களை அணுகலாம். மேயரை அணுகலாம் என்றவகையில், இனி ஜனநாயகம் தழைக்கும். ஏற்கனவே கிராமப்புற ஊராட்சிகளில் மக்கள் பிரதிநிதிகள் இருக்கும்நிலையில், இப்போது நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலும் முடிந்துவிட்டது. இனி ஒட்டுமொத்த தமிழ்நாட்டில் "உள்ளாட்சி இனி உள்ளூராட்சி" என்ற பெருமை கொடிகட்டும்.

உள்ளாட்சி தேர்தலில் திமுக அபாரம்

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நாராயணசாமி வாழ்த்து

புதுச்சேரி, பிப். 23-
புதுச்சேரி முன்னாள் முதல்வர் நாராயணசாமி முகநூல் வாயிலாக நேற்று கூறியதாவது:

தமிழகத்தில் நடந்து முடிந்த மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி தேர்தல்களில் திமுக, காங்கிரஸ் கூட்டணி அமோக வெற்றி பெற்றுள்ளது. இந்த மாபெரும் வெற்றிக்கு வித்திட்ட தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மனமார்ந்த நன்றியும், வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

கடந்த காங்கிரஸ், திமுக கூட்டணி ஆட்சியில் பட்ஜெட் நிதியில் 95 சதவீதம் செலவு செய்தோம். ஆனால் இப்போது 2021-22ல் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட நிதியில் இதுவரை செலவு செய்தது 40 சதவீதம் தான். இன்னும் 4 மாதத்தில் 100 சதவீத இலக்கை எப்படி எட்ட முடியும்? நாளை (இன்று) கூடவுள்ள சட்டமன்ற கூட்ட தொடரில் புதுச்சேரி நிதிநிலை சம்பந்தமாக முதல்வர் வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். சட்டமன்றத்தில் நிதிநிலை சம்பந்தமாக பேச வேண்டும். மக்கள் நலத்திட்டங்களை பேச வேண்டும்.

இமாலய சாதனை!

தமிழகத்தில் சென்னை, தாம்பரம், காஞ்சிபுரம், கோவை, திருச்சி, நெல்லை உள்ளிட்ட 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 489 பேரூராட்சிகளில் மொத்தமுள்ள 12,890 வார்டு கவுன்சிலர் பதவிகளுக்கும் கடந்த சனிக்கிழமை ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்று முடிந்தது. இந்த தேர்தலில் மொத்தம் 57,746 பேர் போட்டியிட்டனர். மொத்தம் 60.70 சதவீதம் வாக்குகள் பதிவானது. மிகவும் அதிகபட்சமாக தர்மபுரி மாவட்டத்தில் 80.49 சதவீதம் வாக்குகள் பதிவானது. மிகவும் குறைந்த அளவாக சென்னை மாநகராட்சியில் மொத்தமுள்ள 200 வார்டுகளில் 43.59 சதவீதம் வாக்குகளே பதிவானது.

இந்த வாக்குகள் அனைத்தும் நேற்று மொத்தமுள்ள 268 வாக்கு எண்ணிக்கை மையங்களில் எண்ணப்பட்டன. வாக்கு எண்ணிக்கை தொடங்கியது முதலே அனைத்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் உள்ள வார்டுகளில் திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சி வேட்பாளர்களே முன்னணியில் இருந்தனர். மொத்தமுள்ள 21 மாநகராட்சிகளில் 1,374 வார்டு கவுன்சிலர் இடங்களுக்கு நடந்த தேர்தலில் 1101 வார்டுகளை திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் கைப்பற்றியுள்ளன. அதிமுக 163 இடங்களிலும், சுயேச்சை உள்ளிட்ட மற்ற கட்சிகள் 104 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளனர். சென்னை உள்ளிட்ட தமிழகத்தில் உள்ள 21 மாநகராட்சிகளிலும் திமுக வேட்பாளர்களே அதிக வார்டுகளில் வெற்றி பெற்றுள்ளதால் அனைத்து மாநகராட்சியையும் திமுக கைப்பற்றி இமாலய சாதனை படைத்துள்ளது.

அதேபோன்று, மொத்தமுள்ள 138 நகராட்சிகளில் 3,842 வார்டு கவுன்சிலர் பதவிக்கு நடைபெற்ற தேர்தலில் சுமார் 2,659 இடங்களில் திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் கைப்பற்றியுள்ளது. அதிமுக கூட்டணி 638 இடங்களிலும், சுயேச்சை உள்ளிட்ட பிற கட்சிகள் 545 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளனர். அதன்படி, மொத்தமுள்ள 138 நகராட்சிகளிலும் திமுக மற்றும் அதன் கூட்டணி வேட்பாளர்கள் 132 இடங்களில் வெற்றிபெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளனர். அதிமுக 3 நகராட்சிகளை மட்டுமே கைப்பற்றி படுதோல்வியை சந்தித்துள்ளது.

அதேபோல, 489 பேரூராட்சிகளில் மொத்தமுள்ள 7,604 வார்டு கவுன்சிலர் பதவிக்கு நடைபெற்ற தேர்தலில் 4994 இடங்களில் திமுக கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வெற்றிபெற்றுள்ளனர். அதிமுக மற்றும் கூட்டணி வேட்பாளர்கள் 1206 இடங்களில் வெற்றி பெற்று 2வது இடத்தில் உள்ளனர். பேரூராட்சிகளில் திமுக மற்றும் கூட்டணி வேட்பாளர்களே 80 சதவீதம் இடங்களில் வார்டு கவுன்சிலர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதன்மூலம் தமிழகத்தில் அதிக பேரூராட்சிகளையும் திமுகவே கைப்பற்றி உள்ளது.

ஊரக உள்ளாட்சி தேர்தல் போன்று நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலிலும் அதிமுக கட்சி படுதோல்வி அடைந்துள்ளது. ஆனாலும், ஆறுதலாக மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் ஒரு சில வார்டு கவுன்சிலர் இடங்களை மட்டுமே அதிமுக கைப்பற்றியுள்ளது. இரண்டு பெரிய கட்சிகளை தவிர தனித்து போட்டியிட்ட பாமக, பாஜ, தேமுதிக, நாம் தமிழர், மநீம, அமமுக கட்சிகள் ஒரு சில வார்டுகளில் மட்டுமே வெற்றிபெற்று மற்ற இடங்கள் அனைத்திலும் படுதோல்வி அடைந்துள்ளன.

மாலை மலர்

23-Feb-2022

நல்லாட்சி கொடுத்ததால் கிடைத்த அங்கீகாரம்

சொல்லி அடித்த மு.க.ஸ்டாலின்....
கில்லியாக அரசியல் களத்தில் நிற்கிறார்...

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் முடிவுகள் முற்றிலும் வெளி வந்து விட்டன. இந்த முடிவுகள் சில அரசியல் கட்சிகளுக்கு எதிர்பாராத முடிவுகளாக இருந்தாலும் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினை பொறுத்தவரை எதிர்பார்த்த முடிவு தான் என்று சொல்வதில் தவறு இருக்காது.

தனது வாக்கை பதிவு செய்ததுமே 'உள்ளாட்சியிலும் நம் ஆட்சி. தி.மு.க. மிகப்பெரிய வெற்றியை பெறும்' என்று நம்பிக்கையுடன் தெரிவித்தார்.

அதற்கு காரணம் தனது நிர்வாகத்தின் மீது அவருக்கு ஏற்பட்டு இருக்கும் திருப்தியும், அதனால் மக்கள் நம்பிக்கையை பெற முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையும் தான் அவரை அவ்வாறு சொல்ல வைத்தது.

சொல்லியது போலவே வெற்றியும் அவரை தேடி வந்திருக்கிறது. பொதுவாக உள்ளாட்சி தேர்தல் என்றால் ஆளும் கட்சிக்கு சாதகமாக தான் இருக்கும் என்று சொல்வார்கள். அதற்கு காரணம் ஆளும் கட்சி வெற்றி பெற்றால் தான் மக்கள் நல திட்டங்களும் தேடி வரும் என்ற நம்பிக்கை தான்.

ஆனால் இந்த முறை அதையெல்லாம் தாண்டி மொத்த மாநகராட்சிகளும் தி.மு.க. வசமாகி இருக்கிறது. 138 நகராட்சிகளில் 132 நகராட்சிகளை கைப்பற்றி இருக்கிறது. இது சாதாரண வெற்றி அல்ல. மக்கள் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தால் இவ்வளவு பெரிய வெற்றியை வாரி வழங்கியிருப்பார்கள்.

அதைவிட முக்கியமாக கொங்கு மண்டலமும் தி.மு.க. வசமாகி இருக்கிறது. சட்டமன்ற தேர்தலின் போது ஸ்டாலின் தலைமையில் விடியல் வரவேண்டும் என்று தமிழக மக்கள் பெரும்பாலானவர்கள் அவர் பக்கம் இருந்தாலும் கொங்கு மண்டலம் எதிர்பார்த்த வெற்றியை தரவில்லை.

அதாவது அப்போது அவர்களுக்கு முழு நம்பிக்கை ஏற்படவில்லை. ஆனால் இப்போது 9 மாதகால ஆட்சியில் முழு திருப்தி அடைந்துள்ளார்கள். அதே நேரத்தில் எனக்கு வாக்களிக்காதவர்களும் நாம் ஸ்டாலினுக்கு வாக்களிக்காமல் தவறு செய்து விட்டோமே என்று நினைக்கும் அளவிற்கு எனது செயல்பாடுகள் இருக்கும் என்று ஆட்சி பொறுப்பேற்றதும் குறிப்பிட்டார்.

அதைப்போலவே மக்கள் விரும்பும் அளவிற்கு தனது செயல்பாட்டின் மூலம் அவர்களது மனங்களையும் வென்று இருக்கிறார். அதனால் தான் கொங்கு மண்டலமும் அவர் வசம் ஆகி இருக்கிறது.

பா.ஜனதாவின் கோட்டை என்று கருதப்படும் பகுதிகள் கூட தி.மு.க. வசமாகி இருக்கிறது. மக்களை பொறுத்தவரை நல்லது நடந்தால், நல்லதே செய்தால் நிச்சயம் பாராட்டுவார்கள். அதற்கான வெகுமதியையும் தருவார்கள்.

இப்போது தி.மு.க.வும் அப்படித்தான். மக்களின் ஆதரவை பெற்றுள்ளது. அடுத்து இதே நம்பிக்கை சற்றும் குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டியதும் தி.மு.க.வின் கடமை. இந்த கடமையில் தவறாமல் இருந்தால் என்றும் இதே வலிமையுடன் அரசியல் களத்தில் நிற்க முடியும்.

பொதுவாக தேர்தல் என்பது வெற்றி தோல்விகளை பார்ப்பதற்கு மட்டுமல்ல சில படிப்பினைகளுக்கும் தான். அந்த படிப்பினை என்பது கட்சிகளுக்கு மட்டுமல்ல மக்களுக்கும் உண்டு.

தேர்தல் முடிவில் சில இடங்களில் சிலர் பதித்திருக்கும் முத்திரை கவனிக்கத்தக்கது. எந்த கட்சியையும் சாராமல் தன்னால் இயன்ற உதவிகளை மக்களுக்கு செய்து வரும் உண்மையான மக்கள் சேவகர்கள் மக்கள் பிரதிநிதி ஆகி இருக்கிறார்கள்.

அதாவது உண்மையாக மக்களுக்கு உழைப்பவர்களை மக்கள் அடையாளம் கண்டு கொள்வார்கள் என்பதற்கு இவை ஒரு சாட்சி. அதேபோல் அரசியல் கட்சிகளிலும், வெறும் சின்னத்தை பார்த்து மட்டுமே மக்கள் வாக்களிப்பார்கள் என்று நம்பினால் அது மிகப்பெரிய தவறாகத்தான் இருக்கும். ஏனெனில் தி.மு.க., அ.தி.மு.க., உள்பட முன்னணி கட்சிகளில் வாய்ப்பு கிடைக்காதவர்களும், சுயேட்சையாக களத்தில் நின்று வெற்றி வாகை சூடியிருக்கிறார்கள்.

இது கட்சியையும் தாண்டி, அவர்கள் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு ஒரு சாட்சி. இப்படிப்பட்டவர்கள் தான் அவர்கள் சார்ந்திருக்கும் கட்சிக்கும் பலம் சேர்ப்பவர்கள் என்பதை சம்மந்தப்பட்ட கட்சிகளும் புரிந்து கொள்ள வேண்டும்.

வெறும் சொல் வாக்கு மட்டும் செல்வாக்கை தராது.

THE ECONOMIC TIMES

23-Feb-2022

DMK Alliance Sweeps Urban Local Body Polls

Stalin calls it a stamp of voters' approval to party's Dravidian model of governance

Our Bureaus

Dravida Munnetra Kazhagam workers celebrate after the party's victory in the local body elections, at the party headquarters, in Chennai on Tuesday. --PTI

New Delhi | Bengaluru: The ruling DMK-led alliance on Tuesday swept the urban local body elections in Tamil Nadu. The polls were conducted after 11 long years, and the results came as an endorsement of chief minister MK Stalin's leadership. The victory, Stalin said, was a certificate of appreciation by the people for the Dravidian model of governance provided by the DMK government in the past nine months. "I am not feeling arrogant by these victories, I feel more responsible," he said.

As of late evening on Tuesday, the DMK had won the majority of all corporations, municipalities and town panchayats in the state. In Chennai out of a total of 200 Corporation wards, the DMK has won 153.

Fifty percent of seats — that is, 100 of the 200 wards in the Greater Chennai Corporation (GCC) — were reserved for women. The DMK independently won the Greater Chennai Corporation with over 146 ward councillors as counting for 192 wards of the total 200 wards were completed. The AIADMK won 15 seats while the Congress won 13. Five independent candidates also won. The CPM won 4 seats while VCK won 3, and MDMK 2 while CPI, IUML, AMMK and BJP have won one each. The AIADMK lost some of its own strongholds while the ruling alliance won many seats in Salem, Erode and Coimbatore.

The DMK wrested even former chief minister Edappadi K Palaniswami's ward in Salem municipal corporation. Palaniswami is the leader of Opposition in the state Assembly. The BJP came third, improving its performance. According to the party state unit president K Annamalai, the BJP has won in areas where it did not have an elected representative before. "We are officially the 3rd largest party after DMK & AIADMK in TN," he tweeted, attributing the party's success to workers.

The polls were held for 21 corporations (1,374 wards), 138 municipalities (3,843 wards) and 490 town panchayats (7,621 wards) in the state on Saturday, February 19. The newly elected ward members will take oath on March 2 and the indirect polls for the posts of mayor and deputy mayor in corporations, and chairman and vice-chairman in municipalities and town panchayats, are scheduled to be held on March 4.

The Statesman

23-Feb-2022

DMK sweeps TN urban body polls, wins AIADMK bastions like Edappadi

AGENCIES
CHENNAI, 22 FEBRUARY

The DMK-led alliance on Tuesday swept the urban local body elections in Tamil Nadu with 75 per cent of the results declared.

The urban polls were held in the state after a gap of 11 years and the win of the DMK is considered as a stamp of approval for the nine-month-old M.K. Stalin government in the state.

The dismal performance of the AIADMK was reflected with the party losing its bastions and the DMK winning several seats in western Tamil Nadu including Coimbatore, Erode and Salem. In Edappadi, the home constituency of former chief minister K. Palaniswami too, the AIADMK candidate lost the polls to the DMK.

Palaniswami's own ward no 23 in Salem Municipal Corporation was also wrested by the DMK leading to a major loss of face for the former Chief Minister who is also the Leader of Opposition in Tamil Nadu.

According to the State Election Commission till the late afternoon, the DMK alliance won 494 seats in corporations, 2,021 in municipalities, and 4,619 seats in town panchayats.

DMK supporters raise slogans as they celebrate the party's victory in the Tamil Nadu Urban Local Body Elections, at the party headquarters, in Chennai on Tuesday. ■ ANI

The AIADMK, on the other hand won only 81 wards in corporations, 511 in municipalities, and 1,188 seats in town panchayats.

The BJP, which contested alone, won 255 wards - 7 in corporations, 113 seats in municipalities, and 135 seats in town panchayats.

Five candidates supported by Vijay Makkal Iyyakam, the fans association of superstar Vijay, won in corporation wards, including 3 in Chennai.

Transgender candidate, R. Ganga of the DMK, won from the Vellore Municipal corporation by a margin of 15 votes. This is the first time a transgender candidate has won from the DMK in urban local body polls.

Three candidates, including an AIADMK candidate, got only zero votes in Karambukudi panchayat in Pudukottai district even though all three had votes in the same constituency.

Tamil Nadu chief minister and Dravida Munnetra Kazhagam chief MK Stalin rejoiced by DMK's lead in the urban local body polls in the state on Tuesday said that results portray recognition of the Dravidian model and certification of good governance to his government.

"As DMK led UPA alliance are winning with huge margins, I thank people. This is a certificate given to the last 9 months of our governance. This is a reorganisation for the Dravidian model," said Stalin.

முரசொலி

24-Feb-2022

‘திராவிட மாடல்’ முதல்வரின் வெற்றி!

உள்ளாட்சித் தேர்தல் வெற்றியை முழுமையாக உடன்பிறப்புகளின் கூட்டம் கைப்பற்றி இருக்கிறது. இருந்த இடங்களில் 90 சதவிகிதத்துக்கும் மேலான இடங்களை அள்ளியதன் மூலமாக தமிழ்நாடே, தி.மு.க. நாடாக மாறி இருக்கிறது. 1967 தேர்தலில் வெற்றிச் செய்திகள் வந்து கொண்டு இருந்தபோது, “ரேடியோ ஸ்டேஷனுக்குள் நம்ம ஆள் யாராவது புகுந்து விட்டானா?” என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கேட்டதாகச் சொல்வார்கள். அந்த மாதிரி, மொத்த ஊடகங்களும் உடன்பிறப்புகளின் வெற்றிச் செய்தியை மட்டுமே நேற்றைய தினம் மொத்தமாகச் சொல்லிக் கொண்டு இருந்தன.

ஒன்பது மாதங்களுக்கு முன்னால் நடந்த சட்டமன்றத் தேர்தலில் அடைந்ததைவிட, மாபெரும் வெற்றியாக – மகத்தான வெற்றியாக – மற்றும் குறையாத வெற்றியாக – முழுமையான வெற்றியாக – சிறப்பான வெற்றியாக – சீர்மிகு வெற்றியாக உள்ளாட்சி அமைப்புத் தேர்தலின் வெற்றி அமைந்துள்ளது. இது சாதாரண வெற்றி அல்ல. சாமான்யமான வெற்றியுமல்ல.

‘உள்ளாட்சித் தேர்தல் என்றாலே ஆளும்கட்சிதான் வெற்றி பெறும்’ என்று சிலர் வியாக்கியானம் சொல்லி தங்களது விஷத்தை மறைக்க முடியாது. எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது நடந்த உள்ளாட்சித் தேர்தலில் அ.தி.மு.க. முழுமையாகத் தோற்று, தி.மு.க. வென்றது வரலாறு. அவ்வளவு ஏன், கடந்த ஊரக உள்ளாட்சித் தேர்தலில் எடப்பாடியின் ஆளும் கட்சியை வீழ்த்தி 70 சதவிகித இடங்களை தி.மு.க. பெற்றதை யாரும் மறந்து விட முடியாது. எனவே, ‘உள்ளாட்சித் தேர்தல் என்றாலே ஆளும் கட்சிதான் வெற்றி பெறும்’ என்ற வாதம் கூட சக்கையானது. சரியானது அல்ல.

உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி – தோல்விகள் மேடு பள்ளங்களாக அமையும். சில மாவட்டங்கள் வெற்றி பெறும், சில மாவட்டங்களின் நிலைமை மாறுபடும். ஆனால் ஒரே மாதிரி சீராக சட்டமன்ற – நாடாளுமன்றத் தேர்தலைப் போல தேர்தல் முடிவுகள் வந்துள்ளன. இதுதான் உன்னிப்பாக கவனிக்க வேண்டியது ஆகும்.

பொதுவாக உள்ளாட்சித் தேர்தல்களில் உள்ளூர் அரசியலுக்கு கூடுதல் முக்கியத்துவம் கிடைக்கும். உள்ளூர் மக்கள் தேவைகள் முன்னெழுந்து வரும். அந்த வட்டாரத்து மக்களில் யாருக்குச் செல்வாக்கு இருக்கிறது என்பதும் அழுத்தம் பெறும். அதனால் கட்சிகளின் வெற்றி – தோல்விகள் கூட சீரானதாக இல்லாமல் மாறி மாறி வரும்.

ஆனால் இப்போது நடந்துள்ள தேர்தலில் ஒரே சீராக – தமிழ்நாடு முழுவதும் – ஒற்றை மனதாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள். உள்ளூர் பிரச்சினைகளைத் தாண்டி, மாநிலம் முழுமைக்குமான ஒரு கவனத்தை வாக்காளர்கள் அடைந்திருப்பதை இது காட்டுகிறது.

அந்தக் கவனம் என்பது, ‘திராவிட மாடல்’ முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!

கடந்த ஒன்பது மாத காலமாக அவரை உற்றுக் கவனிக்கும் மக்கள் அவரது ஒன்பது மாதச் செயல்பாடுகளுக்குக் கொடுத்த சான்றிதழ்தான் இந்த உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள். கடந்த பத்தாண்டுக் காலமாக மக்கள் பார்த்த மூன்று முதல்வர்கள் ஜெயலலிதாவும், பன்னீர்செல்வமும், பழனிசாமியும்.

மகாராணியைப் போல வாழ்ந்தார் ஜெயலலிதா. எதுவும் தெரியாதவரைப் போல நடித்தார் பன்னீர்செல்வம். உதவாக்கரையாக இருந்தாலும் எல்லாம் தெரிந்தவரைப் போல ஆணவமாக நடந்து கொண்டார் பழனிசாமி. இந்த மூவரையும் பார்த்துப் பழகிய தமிழ்நாட்டு மக்களுக்கு ‘அரசியல்வாதி’ என்றாலே இப்படித்தானோ என்ற விரக்தி மனோபாவம் தொற்றிய நிலையில்தான் தமிழ்நாட்டு ஆட்சியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வந்து அமர்கிறார். அவர் கோட்டையில் அமர்ந்து ஆட்சி செய்யவில்லை. மக்களின் மனங்களுக்குள் ஊடுருவினார்.

மக்கள் பாதிக்கப்பட்ட இடங்களில் எல்லாம் முதல் ஆளாக இருந்தார். தடுப்பூசி போடும் இடத்துக்கு வந்தார். கொரோனா நோயாளிகள் படுத்திருக்கும் இடத்துக்குள் போனார். மக்களைத் தேடி மருத்துவம் தொடங்கினார். இன்னுயிர் காப்போம் திட்டம் தொடங்கினார். மருத்துவமனைகளுக்குள் போனார். அருந்ததியர் காலனியை பார்வையிட்டார். ஆதிதிராவிடர் விடுதியை பார்வையிட்டார். காவல் நிலையங்களை ஆய்வு செய்தார். மழையில் மிதந்த தெருக்களுக்குள் போனார். வீடுகளுக்குள் சென்றார். குடைப் பிடித்தபடி வீதிகளில் நடந்தார். முட்டு அளவு தண்ணீரில் போய் மக்கள் குறை கேட்டார். இரண்டு நாட்களுக்குள் தண்ணீரை முற்றிலுமாக அகற்றிவிட்டு அந்த இடத்துக்குப் போய் பார்வையிட்டார். இலங்கை அகதிகள் முகாம்களுக்குள் சென்றார். அர்ச்சகர்களுக்கு நிதி கொடுத்தார். பொட்டை போடுபவர்களையும் கருணையோடு கவனித்தார்.

பல்லாயிரம் கோடிக்கு முதலீடுகளைக் கொண்டு வந்தார். சுற்றுச்சூழலில் ஆர்வமாக இருந்தார். அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆக அனுமதித்தார். கோவில் நில ஆக்கிரமிப்புகளை அகற்றினார். அனைத்து மாவட்டங்களுக்கும் பல்வேறு பணிகளைத் தொடங்கி வைக்கிறார். சென்னையிலேயே இருந்து விடாமல் குமரி முனை வரை சென்று மக்களைப் பார்த்தார். தொழிலதிபர் நலன் மட்டுமல்லாமல் தொழிலாளர் நலனையும் கவனித்தார். இவை அனைத்துக்கும் ஒட்டுமொத்தமாக அவர் சூட்டிய பெயர்தான் ‘திராவிட மாடல்’

அத்தகைய ‘திராவிட மாடலாக’ இருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இத்தகைய ஒரு முதலமைச்சரை தமிழ்நாட்டு மக்கள் பத்தாண்டு கால இடைவெளிக்குப் பிறகு பார்க்கிறார்கள். அதனால் தான் கட்சி சார்பற்றவர்களாலும் அவர் ஈர்க்கப்படுகிறார். அரசியலை வெறுத்தவர்களாலும் கவனிக்கப்படுகிறார். இளைஞர்களை – அவர் தம் இளமைக் காலத்தில் ஈர்த்ததைக் காட்டிலும் – இப்போது அதிகமாக ஈர்க்கிறார். குழந்தைகள் அவரைப் பார்த்து குதூகலிக்கிறார்கள்.

இந்த வெற்றி என்பது அந்த ஒற்றை மனிதரை மனதில் வைத்து மக்கள் அளித்த வாக்குகள் ஆகும். ‘திராவிட மாடல்’ முதல்வரின் வெற்றி ஆகும். அவர் முன்னிலும் அதிகமாக மக்களுக்குச் சேவையாற்ற மக்கள் வழங்கிய வாழ்த்துப் பாடல் ஆகும். மொத்தத்தில் ஒரு கட்சியின் தலைவர் என்பதைத் தாண்டி – இனத்தின் தலைவர் என்பதையும் தாண்டி – ஆளுமைத் திறன் கொண்ட – ‘திராவிட மாடல்’ என்ற தத்துவத்தின் தலைவராக நிமிர்ந்து நிற்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

தினகரன்

24-Feb-2022

பலமும்... பலவீனமும்...

உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள், தமிழகத்தில் நடக்கும் நல்லாட்சிக்கு சான்றளித்துள்ளன. மொத்தமுள்ள 21 மாநகராட்சிகளையும் திமுக வென்றுள்ளது. மாநகராட்சியில் 100 சதவீதம், நகராட்சிகளில் சுமார் 95 சதவீதம், பேரூராட்சிகளில் சுமார் 80 - 85 சதவீதம் பிடித்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

தேர்தலில் வெற்றி, தோல்வி சகஜம் என்றாலும், தமிழகத்தில் 10 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த அதிமுக சந்தித்துள்ள தோல்வி அக்கட்சி தலைமையின் பலவீனத்தை வெளிப்படுத்தி உள்ளது. அதிமுகவின் கோட்டையாக கருதப்படும் கோவை, சேலம், தேனி உள்ளிட்ட மாவட்டங்களிலேயே அக்கட்சி படுதோல்வியை சந்தித்துள்ளது. முன்னாள் முதல்வரான எடப்பாடி பழனிசாமியின் தொகுதியில் உள்ள இடைப்பாடி நகராட்சியை திமுக வென்றுள்ளது. மேலும், சேலம், கோவை மாநகராட்சிகளில் 90 சதவீதத்துக்கும் மேலான வார்டுகளில் திமுக கூட்டணி வென்றுள்ளது. நகராட்சி, பேரூராட்சிகளிலும் அமோக வெற்றி பெற்றுள்ளது.

மற்றொரு முன்னாள் முதல்வரும், அதிமுகவின் ஒருங்கிணைப்பாளருமான ஓ.பன்னீர்செல்வத்தின் சொந்த ஊரான தேனி மாவட்டம், பெரியகுளம் நகராட்சியை திமுக கைப்பற்றி உள்ளது. பெரியகுளத்தில் ஓபிஎஸ் வசிக்கும் 21வது வார்டு மற்றும் அவரது போடி தொகுதியில் போடி நகராட்சி உட்பட மாவட்டத்தில் 6 பேரூராட்சிகளையும் திமுக கைப்பற்றி உள்ளது குறிப்பிடத்தக்கது. குடும்பத்தை வளர்த்துக் கொள்ள நினைக்கிறாரே தவிர, கட்சி, மாவட்ட வளர்ச்சிக்காக எதையுமே செய்யவில்லை என்ற எண்ணம் அம்மாவட்ட மக்கள் மத்தியில் எழுந்துள்ளதே தோல்விக்கு முக்கிய காரணமாக கூறப்படுகிறது.

தென்மாவட்டங்களின் தலைமையாக கருதப்படும் மதுரையும் அதிமுக செல்வாக்குள்ள மாவட்டமாகும். இங்குள்ள 10 தொகுதிகளில் 2016 சட்டமன்ற தேர்தலில் 7 தொகுதிகளிலும், 2021 சட்டமன்ற தேர்தலில் சரிபாதியாக 5 இடங்களிலும் அதிமுக வெற்றி பெற்றது. அக்கட்சி ஆட்சியின்போது 2 அமைச்சர்கள் இருந்த மதுரை மாவட்டம் வளர்ச்சிப்பணிகளில் பின்னடைவாகவே இருந்தது. வைகை அணையை தெர்மாகோல் கொண்டு மூடிய கதை எல்லாம் கூட நடந்தது. மதுரை ஸ்மார்ட் சிட்டி திட்டத்திலும் சுமார் ஆயிரம் கோடி ஊழல் நடந்ததாக புகார் எழுந்தது. இந்த மாவட்டத்திலும் ஒரு மாநகராட்சி, 3 நகராட்சிகள், 90+ சதவீத பேரூராட்சிகளை திமுக கூட்டணி கைப்பற்றி உள்ளது.

அதிமுக தலைமைகள் மற்றும் அக்கட்சியின் முன்னாள் அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் தங்களை எப்படி முன்னிலைப்படுத்திக் கொள்ள வேண்டும். எந்தெந்த வகையில் ஊழல் செய்து வசதி வாய்ப்புகளை பெருக்கிக் கொள்ள வேண்டுமென எண்ணினார்களே தவிர, கட்சியின் வளர்ச்சியை பற்றி துளியும் யோசிக்கவில்லை. சந்தர்ப்பவாதமாக அமைத்த கூட்டணியும் பிரிந்து சென்றதால், அரசியலில் கிட்டத்தட்ட ஓரங்கட்டப்படும் நிலைக்கு வந்துவிட்டது. அதே நேரம் தன்னலம் கருதாத பல்வேறு நலத்திட்டங்களுடன், தெளிவான திட்டமிடலோடு தேர்தலை சந்தித்து வெற்றிகளை குவித்து, தமிழக மக்கள் மனதில் திமுக விஸ்வரூபம் எடுத்துள்ளது. மக்களின் எண்ணம் போலவே மாநிலத்திலும், உள்ளாட்சியிலும் நல்லாட்சி தொடரட்டும்.

DECCAN Chronicle

24-Feb-2022

Stalin era is here to stay

DMK's total sweep of the urban local bodies, in a manner that is unprecedented in the history of Tamil Nadu, is just a reflection of the hopes and fears that dominate the minds of the people. As chief minister M.K. Stalin said, it is also an endorsement of the Dravidian model rule that his regime has adopted in the last nine months of power. But the Dravidian model, which primarily strikes a clear balance between economic growth and social justice, also emphasises religious harmony. For there can be no development in a society torn apart by infused communal hatred.

Opposition charges like failure to honour election promises and the chief minister shying away from meeting the people in the hustings did not stick. The Stalin era is here to stay.

Ever since Stalin stormed Fort St George last June, besides doing everything that is right to ensure that the State reaches its targeted goal of becoming a trillion dollar economy on its own, he has also assiduously prevented social flare ups, sought to be ignited by bigoted groups working in tandem with each other to rob the state of its quintessence in upholding secular values. The fear of the people that the toxicity spewed by vested groups, backed by a political party, could pervade the collective psyche of the traditionally harmonious population was one reason for the urban voters reaffirming their trust in the ruling party.

At a moment when the nation is in the midst of a political churning, the people of Tamil Nadu, whose priorities and ideological preferences have always been different from that of the other States, have once again proved that they are unique. By reposing their faith in the present government that efficiently managed the pandemic that was raging like mad when it took the reins and tackled the floods that wreaked havoc across towns and cities with the chief minister leading the fight from the front, they have acknowledged the merits of good governance. Opposition charges like failure to honour election promises and the chief minister shying away from meeting the people in the hustings did not stick as voters hoped for better days more under the present regime. The Stalin era is here to stay.

Dravidian Question

Stalin is now positioned to play a bigger role in national politics. But which way will he lean?

Nine months after winning the Tamil Nadu assembly elections, DMK has pushed AIADMK further to the backfoot in urban local body polls, potentially strengthening chief minister MK Stalin's hand in national politics. DMK's landslide victory in all the corporations and a majority of municipalities and town panchayats could trigger more churning in AIADMK, now run in a collegial style by former CMs EK Palaniswami and O Panneerselvam. Unlike AIADMK, which junked allies who had helped it perform creditably in defeat last year, the governing DMK carried its partners like Congress and Left parties along to notch an even bigger victory.

For Congress, which piggybacked on DMK to third position.– national rival BJP got attention by contesting alone and earning some wins in 28 of the state's 38 districts – the TN electorate's reaffirmation of Stalin will be a welcome development nationally. Recall that it was Maharashtra ally Shiv Sena that had objected to Bengal CM Mamata Banerjee's desire to build a coalition of anti-BJP parties without Congress. A strongly placed Stalin will have to be heeded and he is unlikely to be enthusiastic about excluding a key local ally like Congress in pan-Indian political alliances.

In all hung Lok Sabhas since 1989, TN with its 39 MPs has been crucial in government formation. DMK joined ministries in 1989, 1996, 1999, 2004 and 2009 while AIADMK's support mattered in 1991 and 1998. AB Vajpayee's failure to retain DMK in NDA in 2003 and BJP's mistimed pre-poll alliance with AIADMK – both were blanked out in 2004 – helped UPA's rise. So even as it targets a long-term strategy to increase its footprint in TN, BJP will be worried about erosion in AIADMK's popularity, since every big state counts in 2024 national polls. But in politics, no alliances are permanent. Will Stalin join other CMs like KCR, Mamata and Uddhav in "federal front" talks or pull a Dravidian surprise?

THE HINDU
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878
24-Feb-2022

People's endorsement

The DMK's victory is a vote of confidence for its record of governance over nine months

The victory of the ruling DMK front in the Tamil Nadu urban local body polls is a resounding mandate across corporations, municipalities and town panchayats. Though the Opposition was splintered, the string of successes is an endorsement of the governance in the last nine months. Party president and Chief Minister M.K. Stalin meticulously planned the AIADMK's decimation, wanting to avenge the DMK's humiliation in the western region nine months ago when no DMK candidate made it to the Assembly from Coimbatore and Dharmapuri. Apart from governmental attention to the region, Mr. Stalin deputed two Ministers to Coimbatore and Salem to prepare the political pitch. The DMK has captured local bodies in the backyards of former Chief Ministers Edappadi K. Palaniswami and O. Panneerselvam. As Mr. Stalin impressed upon the newly elected representatives, it is important to deliver on the ground. As a former Chennai Mayor, he is cognisant that missteps by councillors, the last mile connectors with the people, could tarnish the ruling party's image, and he will need to monitor their work constantly.

The AIADMK cannot wish away the rout on the scale of its 1996 debacle, blaming it on money power, misuse of government machinery or propounding it is natural for the Opposition to lose civic elections. Its two leaders can no longer confine operational bases to their respective caste-fortified political comfort zones and expect to ride on the approval by a coterie populated in the party's high-level committees. Their vote pulling capacity is based on the strength of the organisation built by M.G. Ramachandran and Jayalalithaa. Hence, they must reach out to ground functionaries and undertake course correction. There could be patch up calls with Jayalalithaa's confidante V.K. Sasikala and the breakaway Amma Makkal Munnetra Kazhagam. Since the separation has not helped either party, there will be pressure to enter into mutual adjustments. The party would do well not to fight shy of criticising the central government when it comes to issues affecting the people. The BJP, which has created a perception that it is no longer a pushover in the Dravidian heartland, has had no qualms attacking the AIADMK or poaching its steering committee member. Irrespective of poll statistics, the BJP has indeed scored victories in newer territories. A section of voters chose BJP candidates over the Naam Tamilar Katchi and the Makkal Needhi Maiam, though the party did not make much of an impact in what is still a bipolar polity. Given that past alternatives to the Dravidian majors faded after one or two stunning shows, it is too early to conclude that the BJP would stay the course as a political alternative. Meanwhile, Mr. Stalin, who described the victory as people's endorsement for the "Dravidian model" of governance, must continue to focus on development, and livelihood issues of the people, and not be distracted by petty politics.

முரசொலி

25-Feb-2022

ஆட்சிக்கு அ.தி.மு.க. வரவே முடியாது!

திராவிட அரசியலின் சாம்பியனாக முதல்வர் மு.க.ஸ்டாலின் மாறி வருகிறார்!

கேரளாவிலிருந்து வெளிவரும் மலையாள 'மீடியா ஒன்' இணையதளம் சிறப்புச் செய்தி!

திருவனந்தபுரம், பிப். 25 – கேரளாவிலிருந்து வெளிவரும் மலையாள "மீடியா ஒன்" இணைய தளத்தில் "அ.தி.மு.க. ஆட்சிக்கு வரவே முடியாது" என்றும், "திராவிட அரசியலின் சாம்பியனாக முதல்வர் மு.க. ஸ்டாலின் மாறி வருகிறார்" என்றும் சிறப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆட்சி அணுகுமுறையில் முழுமையான ஒரு மாற்றத்தைச் செய்துள்ளார்!

வாக்களிப்பும் எதிர்பார்ப்பும்!

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலும் வெற்றிகரமாக முடிந்து, அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். விரைவிலேயே மேயர்கள், நகர்மன்றத் தலைவர்கள் உள்ளிட்ட எல்லா பதவிகளுக்கும் உரியவர்கள் தேர்வு செய்யப்பட இருக்கிறார்கள். கடந்த ஆறு ஆண்டுகளாகப் பல்வேறு தடைகளையும் கடந்து ஒருவழியாக மக்கள் பிரதிநிதிகள் கைகளில் உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரம் முழுமையாக ஒப்படைக்கப்படுகிறது என்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

மத்திய – மாநில அரசுகள் இயற்றும் திட்டங்களும், எடுக்கும் கொள்கை முடிவுகளும் உள்ளாட்சி அமைப்புகளின் மூலம்தான் மக்களைச் சென்றடைந்தாக வேண்டும். பஞ்சாயத்து ராஜ் சட்டம் அமலுக்கு வந்தபிறகு, உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரங்கள் அதிகரிக்காவிட்டாலும், அதற்கு வழங்கப்படும் நிதியும் அதன் பங்களிப்பும் கணிசமாக அதிகரித்திருப்பதை மறுக்க முடியாது.

கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்கெனவே தேர்தல் நடந்து, அந்த அமைப்புகள் ஜனநாயக அடிப்படையில் இயங்கி வருகின்றன. இப்போது சுமார் 11 ஆண்டுகளுக்குப் பிறகு நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலும் நடந்திருக்கிறது. 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 489 பேரூராட்சிகளுக்கு 12,601 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் நடந்தது என்று ஒருபுறம் மகிழ்ச்சி அடைந்தாலும், அந்தத் தேர்தலை மக்கள் எதிர்கொண்ட விதம் பாராட்டும்படியாக இல்லை. மக்களவை, சட்டப்பேரவைத் தேர்தல்களின்போது அவர்கள் காட்டிய அளவிலான ஆர்வம் மக்கள் மத்தியில் இந்தத் தேர்தலில் காணப்படவில்லை. தங்களை நேரடியாக பாதிக்கும் அல்லது தங்களது அன்றாட வாழ்க்கையில் தாங்கள் சந்தித்தாக வேண்டிய செயல்பாடுகளில் முக்கியப் பங்கு வகிக்கும் உள்ளாட்சி அமைப்புகளின் மீது அவர்கள் ஏன் அக்கறை காட்டவில்லை என்பது தெரியவில்லை.

தமிழகத்தில் உள்ள 21 மாநகராட்சிகளில் மொத்த வாக்குப் பதிவு வெறும் 52.2%தான். பாதிக்குப் பாதி வாக்காளர்கள் தங்களது ஜனநாயகக் கடமை குறித்துக் கவலைப்படாமல், விடுமுறை கிடைத்த மகிழ்ச்சியில் இருந்தனர். 200 உறுப்பினர்கள் கொண்ட சென்னை மாநகராட்சிக்கான வாக்களிப்பில் கலந்து கொண்டவர்கள் 43.62% வாக்காளர்கள் மட்டுமே. மாமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் படித்தவர்கள் ஆர்வம் இல்லாமல் இருப்பது அதிர்ச்சி அளிக்கிறது.

138 நகராட்சிகளில் மொத்த வாக்குப் பதிவு 68.22%. தமிழகத்தில் மொத்த சராசரி வாக்குப்பதிவு 60.70% மட்டுமே. மாநகராட்சிகளுக்கான தேர்தலில் வாக்காளர்களுக்குப் பண விநியோகம் 'பரவலாக' இருக்கவில்லை என்பது வேண்டுமானால் உண்மையாக இருக்கலாம். பண விநியோகம் இல்லாததுதான் குறைந்த வாக்குப் பதிவுக்குக் காரணம் என்றால் அது ஜனநாயகத்துக்குத் தலைகுனிவு.

நகராட்சி, பேரூராட்சிகளில் எல்லா வேட்பாளர்களும், கட்சி பேதமின்றி பணமும், வெகுமதிகளும் வழங்கி வாக்காளர்களை வாக்குச்சாவடிக்கு வரவழைக்க பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டார்கள் என்பது உண்மை. கொலுசுகளும், மூக்குத்திகளும், சேலைகளும், வேட்டிகளும், ஏன் தங்கக் காசுகளும், கரன்சி நோட்டுகளும்கூட வழங்கப்பட்டதாகப் பரவலாகவே பேசப்பட்டது. சில இடங்களில் விநியோகப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

அப்படி இருந்தும் வாக்குப் பதிவு விகிதம் குறைவாகவே இருந்திருக்கிறது. வெகுமதிகளைக் கேட்டு வாங்கிக் கொண்டு வாக்களிக்க வராதவர்களை, அவர்களது துணிவுக்காகப் பாராட்டுவதா, இல்லை துரோகத்துக்காகப் பழிப்பதா என்று தெரியவில்லை.

மத்திய தேர்தல் ஆணையத்துக்கு இருக்கும் எந்தவித அதிகாரமும் இல்லாத அமைப்பாக மாநிலத் தேர்தல் ஆணையம் இருக்கிறது. அது மாநில அரசின் துறைகளில் ஒன்றாக இயங்குகிறது. தவறு செய்யும் கடைநிலை ஊழியரை இடைநீக்கம் செய்யும் அதிகாரம்கூட மாநிலத் தேர்தல் ஆணையருக்குக் கிடையாது.

மாநில அரசின் கைப்பாவையாக மாநிலத் தேர்தல் ஆணையம் செயல்படுவதால்தான், 2011-ஆம் ஆண்டு நடந்த நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் அன்றைய ஆளும் கட்சியும், இப்போது நடைபெற்ற தேர்தலில் இன்றைய ஆளுங்கட்சியும் ஏறத்தாழ ஒரே மாதிரியான வெற்றியை ஈட்டியிருக்கின்றன என்கிற குற்றச்சாட்டை முன்வைக்கத் தோன்றுகிறது. திமுகவின் மகத்தான வெற்றிக்கு அதுதான் காரணம் என்று கூற முடியாவிட்டாலும், ஆளுங்கட்சிகளின் வெற்றிக்கு அதுவும் ஒரு காரணம் என்று பதிவு செய்யாமல் இருக்க முடியவில்லை.

பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி ஒருமுறை, 'ப்ராப்ளம் ஆஃப் பிளென்ட்டி' என்று அங்கலாய்த்ததுபோல, முதல்வர் ஸ்டாலினுக்கு இனிமேல்தான் பிரச்சினைகள் அதிகரிக்கப் போகின்றன. எல்லா உள்ளாட்சி அமைப்புகளிலும் ஏறத்தாழ 80% உறுப்பினர்கள் திமுகவைச் சேர்ந்தவர்கள். அவர்களது நடவடிக்கைகளில் காணப்படும் குறைகள் நேரடியாக ஸ்டாலின் ஆட்சிக்கு கெட்ட பெயரை ஏற்படுத்தும். அதை உணர்ந்திருப்பதால்தான், எந்தவிதப் புகாரும் வராத வகையில் அவர்கள் பணியாற்றுவார்கள் என்றும், அவர்களது செயல்பாட்டைத் தானே நேரடியாகக் கண்காணிக்கப்போவதாகவும் முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்திருக்கிறார் என்று தோன்றுகிறது. அது நம்பிக்கை அளிக்கிறது.

முதல்வரின் நம்பிக்கையை, தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திமுகவினரும், மக்களின் எதிர்பார்ப்பை உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகளும் காப்பாற்றுவார்கள் என்று, ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த நாம் நம்புவோம்.

தென்மாநில ஊரக வளர்ச்சித் துறை பணி குறித்த ஆய்வு கூட்டம்

தமிழக அரசின் திட்டப் பணிகளுக்கு மத்திய அமைச்சர் பாராட்டு

சென்னை

தமிழக அரசின் ஊரக வளர்ச்சித் துறை திட்டப் பணிகளை மத்திய அமைச்சர் கிரிராஜ் சிங் பாராட்டியுள்ளார்.

மத்திய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அமைச்சர் கிரி ராஜ் சிங் தலைமையில், நேற்று தென்மாநிலங்களில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பாக செயல்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து காணொலி வாயிலாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பங்கேற்று பேசும்போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் 15 வது நிதிக்குழு மானிய பணிகள், தேசிய கிராம சுயாட்சி திட்டம், கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டம், கிராம சபைகளின் சிறப்பான செயல்பாடு, சுவமித்வா திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் தமிழகத்தின் செயல்பாடுகள், மகளிர் சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சி மற்றும் முன்னோடி செயல்பாடுகள் மற்றும் நிலைத்த நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்து தெரிவித்தார்.

> ▼ **அனைத்து ஊராட்சிகளிலும் ஊராட்சி மன்றக் கட்டிடங்கள், இணையவழி செயல்பாடுகளை நிறைவேற்றவும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.**

அப்போது மத்திய அமைச்சர் கிரி ராஜ் சிங், தமிழகத்தின் செயல்பாடுகளை பாராட்டியதுடன், அனைத்து ஊராட்சிகளிலும் ஊராட்சி மன்றக் கட்டிடங்கள், இணையவழி செயல்பாடுகளை நிறைவேற்றவும் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில், அரசின் ஊராட்சித் துறை உயர் அலுவலர்கள், தமிழக ஊரக வளர்ச்சி, ஊராட்சித் துறைச் செயலர் பெ.அமுதா, ஊரக வளர்ச்சி, ஊராட்சித் துறை இயக்குநர் பிரவீன் பி.நாயர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நூறாண்டு நிரந்தர முதல்வர் மு.க.ஸ்டாலின்

கோவை தங்கம் வாழ்த்து

சென்னை, பிப். 27-

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்து முன்னாள் எம்எல்ஏ கோவை தங்கம் வெளியிட்ட அறிக்கை: தமிழகத்தில் பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகியோரின் பொற்கால மக்களாட்சியை, 9 மாதங்களில் வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் மகத்தான சாதனை படைத்துள்ளார். அவருக்கு எனது பிறந்தநாள் வாழ்த்துக்கள்.

தமிழக முதல்வராக பொறுப்பேற்றதும் கொரோனாவை ஒழித்துக் கட்ட, தன் உயிரையும் பொருட்படுத்தாமல் மு.க.ஸ்டாலின் இரவுபகலாக உழைத்தவர். எந்த முதல்வரும் செய்யாத, கொரோனா வார்டுக்குள் நேரடியாக சென்று, அங்கிருந்த நோயாளிகளின் குறைகளை கேட்டறிந்தார். மேலும், சென்னை பெருமழையால் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, அவர்களுக்கு வேண்டிய உதவிகள் புரிந்தவர்.

மேலும் பெண்களுக்கு இலவச பஸ் வசதி, ஒவ்வொரு குடும்பத்துக்கும் ₹4 ஆயிரம், நகைக் கடன் தள்ளுபடி, மகளிர் சுயநிதி குழு கடன் தள்ளுபடி உள்பட பல்வேறு சாதனைகள் புரிந்த முதல்வர் மு.க.ஸ்டாலினின் பணியை பாராட்டி, அவருக்கு நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் மக்கள் பெரும் வெற்றியை அளித்துள்ளனர். அவர் 100 ஆண்டுகள் வாழ்ந்து, தமிழகத்தின் நிரந்தர முதல்வராக இருந்து, மக்களுக்கு தொடர்ந்து சேவை செய்ய வேண்டும். அதன்மூலம் அவர் இந்தியாவின் முதன்மையான முதல்வர் என்ற நற்பெயருடன் வாழ வாழ்த்துகிறோம்.

மாணவர்களுடன் பேச்சு:

மு.க.ஸ்டாலினுக்கு எர்ணாவூர் நாராயணன் பாராட்டு!

சென்னை, பிப்.27

உக்ரைனில் சிக்கித் தவிக்கும் தமிழக மாணவ–மாணவிகளுடன் காணொலி மூலம் பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு சமத்துவ மக்கள் கழக தலைவர் எர்ணாவூர் நாராயணன் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து வரும் நிலையில் உக்ரைனை ஆக்கிரமிக்கும் வகையில் தாக்குதல் நடத்தி வருவதால் பொதுமக்கள் ஆங்காங்கே பதுங்கு குழிகள், சுரங்கப் பாதைகளில் பதுங்கி வாழும் நிலையில் அரசையும், பொதுமக்களையும் பயமுறுத்த ரஷ்யா தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளதால் விமானங்களை இயக்க முடியாத நிலையில் வெளிநாடுகளில்

எர்ணாவூர் நாராயணன்

தங்கி படிக்கும் மாணவர்கள், புலம் பெயர்ந்தவர்கள் குடும்பத்தினர் தங்கள் நாட்டை விட்டு வெளியேற முடியாத சூழ்நிலையில் தவித்து வருகின்றனர்.

உக்ரைனில் தவிக்கும் தமிழக மாணவர்கள் மற்றும் புலம்பெயர்ந்தவர்கள் குடும்பத்தினர்கள் உதவிக்காக, தமிழக முதல்வர் எழிலகத்தில் கட்டுப்பாட்டு மையத்தை துவக்கி அதற்கான தொடர்ப எண்களையும், மாநில அவசர கட்டுப்பாட்டு மையத்தின் கட்டணமில்லா தொலைபேசி எண்கள் மற்றும் அயலகத்தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு ஆணையரகம் எண்களையும் வெளியிட்டுள்ளார். உக்ரைனில் தவிக்கும் தமிழர்களை மீட்க உதவியாக மாவட்ட கலெக்டர் அலுவலகங்களில் பொது நேர்முக உதவியாளர்களையும், கூடுதல் தலைமைச் செயலரையும் இதற்காக நியமித்து அறிவிப்புகள் வெளியிட்டுள்ளார்.

உக்ரைனில் தவிக்கும் மாணவர்களிடம் காணொலி வாயிலாக தைரியமாகவும், பாதுகாப்பாகவும் இருக்குமாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. தமிழக அரசு அறிவிப்புக்கு சமத்துவ மக்கள் கழகம் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்

28-Feb-2022

கடும் போர் நிலவிய சூழலில்

உயிர் பயத்தில் இருந்த எங்களை பாதுகாப்பாக அழைத்து வந்த தமிழக அரசுக்கு நன்றி

உக்ரைனில் இருந்து தமிழகம் திரும்பிய மாணவர்கள் கண்ணீர் பேட்டி

போர் நடந்து வரும் உக்ரைனில் இருந்து மீட்கப்பட்ட தமிழக மாணவர்கள் நேற்று சென்னை விமான நிலையம் வந்தனர். அவர்களை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வரவேற்றார்.

சென்னை, பிப். 28: “போர் சூழலில் உயிர் பயத்தில் இருந்த எங்களை பாதுகாப்பாக மீட்டு தமிழகத்துக்கு அழைத்து வர உதவிய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கும், மத்திய அரசுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். உரிய நேரத்தில் அவர்கள் எங்களை மீட்காவிட்டால் எங்கள் நிலை என்ன ஆகி இருக்கும் என்பதை நினைத்துகூட பார்க்க முடியவில்லை” உக்ரைனில் இருந்து மீட்கப்பட்டு, சென்னை வந்த மாணவர்கள் உருக்கமாக பேட்டியளித்தனர்.

உக்ரைனில் சிக்கித் தவிக்கும் தமிழக மாணவர்களை பத்திரமாக மீட்கும் முயற்சியில் மத்திய அரசும், தமிழக அரசும் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதையடுத்து உக்ரைனின் அண்டை நாடான ருமேனியாவிற்கு பாதுகாப்பாக அழைத்து வந்து அங்கிருந்து, ஏர் இந்தியா விமானம் மூலம் 220 இந்தியர்கள் நேற்று அதிகாலை டெல்லி விமான நிலையத்துக்கு வந்தனர். அவர்களில் 5 மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள். அவர்களை டெல்லி விமான நிலையத்தில் தமிழ்நாடு அரசு சிறப்பு அதிகாரிகள் வரவேற்றனர்.

அதன் பின்பு தமிழக மாணவர்களான சென்னை குரோம்பேட்டையை சேர்ந்த ஷகீர் அபுபக்கர், திருவல்லிக்கேணியை சேர்ந்த ஹரிகரசுதன், சேலத்தை சேர்ந்த சாந்தனு பூபாலன், அறந்தாங்கியை சேர்ந்த செல்வபிரியா, தேனியை சேர்ந்த வைஷ்ணவி ஆகிய 5 பேரை நேற்று காலை 10.30 மணிக்கு டெல்லியிலிருந்து சென்னை வந்த இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானத்தில் தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைத்தனர். அவர்களை சென்னை விமான நிலையத்தில் தமிழக அமைச்சர் செஞ்சி மஸ்தான், மற்றும் அரசு அதிகாரிகள் வரவேற்றனர். அதோடு மாணவ மாணவிகளின் குடும்பத்தினரும் வந்திருந்து கண்ணீர் மல்க கட்டித்தழுவி வரவேற்றனர்.

முன்னதாக சென்னை விமானத்தில் இருந்து மாணவர்கள் கண்ணீர்விட்டபடி கீழே இறங்கினர்.

புதுக்கோட்டை அறந்தாங்கியை சேர்ந்த மாணவி செல்வபிரியா கூறியதாவது: நான் உக்ரைனில் மருத்துவக்கல்வி முதலாம் ஆண்டு படித்து வருகிறேன். நாங்கள் அந்நாட்டின் மேற்கு பகுதியில் தங்கியிருந்தோம். அங்கு போர் பதற்றம் குறைவாகவே இருந்தது. ஆனாலும், பாதிப்பு அதிகமாகி விடக்கூடாது என்பதற்காக மத்திய, மாநில அரசுகள் முயற்சியால் இந்திய தூதரக அதிகாரிகள் எங்களை பத்திரமாக வெளியேற்றினர். பெரும் பாதிப்பிலிருந்து நாங்கள் தப்பி வந்தோம். அதேசமயம், கிழக்கு பகுதியில் நிறைய இந்திய மாணவ, மாணவிகள் சிக்கி தவிக்கின்றனர். அவர்களை மீட்டு கொண்டுவர மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். நாங்கள் ருமேனியா நாட்டு எல்லைக்கு வரும் போது, போக்குவரத்து தடைப்பட்டது. எனவே, நாங்கள் பல மைல் தூரம் நடந்து வரவேண்டிய நிலை ஏற்பட்டது. எங்களுக்கு உணவு ஏற்பாடுகள் செய்திருந்தனர். ஆனால் அது போதவில்லை. எனவே, நாங்களே அதிக விலை கொடுத்து உணவுகளை வாங்கினோம்.

மாணவர் ஹரிகரசுதன் கூறியதாவது: உக்ரைன் போரால் நாங்கள் மிகவும் கஷ்டப்பட்டோம். உணவு கிடைக்காமல் கடும் அவதிப்பட்டோம். நாங்கள் உயிருடன் வந்ததே மிகப் பெரிய விஷயம். உக்ரையில் இருந்து எங்களை பாதுகாப்பாக அழைத்து வந்ததற்காக மத்திய, மாநில அரசுகளுக்கு குறிப்பாக தமிழக முதலமைச்சருக்கு நன்றி என்றார்.

தேனி மாவட்ட மாணவி வைஷ்ணவி கூறுகையில், “உக்ரைன் நாட்டின் உள்பகுதியில் உள்ள பல மாணவர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றனர். ங்கள் திரும்பி வருவதற்கு தமிழக அரசு நல்ல முறையில் உதவி செய்தது. அதற்காக தமிழக முதல்வருக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

இதிலும் அரசியல்: உக்ரைன் போர் சூழலில் இருந்து மீட்கப்பட்ட தமிழக மாணவர்கள் நேற்று சென்னை விமான நிலையம் வந்திறங்கினர். அவர்களை காண உறவினர்களும், பெற்றோரும் அடக்கமுடியாத கண்ணீருடன் காத்திருந்தனர். போர் அச்ச உணர்வுடன் வந்த மாணவர்களை தேற்றும் வகையில் தமிழக அரசு சார்பில், அமைச்சர் மஸ்தான் வரவேற்று ஆறுதல் கூறினார். உருக்கமான இந்த நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்தபோது, திடீரென அங்கு பாஜ மகளிர் அணியினர் கும்பலாக வந்தனர். ‘பாரத் மாதா கி ஜே, மோடி ஜீ வாழ்க’ என்று கோஷமிட்டனர். இதனால் அங்கு சிறிய பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் அதிலிருந்து ஒருவர் மட்டும் மாணவிகளுக்கு சால்வை அணிவித்து திரும்பினார். மத்திய அரசு மற்றும் தமிழக அரசின் முயற்சியால் போர்ச் சூழலில் இருந்து மாணவிகள் மீட்கப்பட்டு உருக்கமான நேரத்தில் கட்சி சார்பில் வந்து அரசியல் செய்வதா என அங்கிருந்த பலர் வருத்தத்துடன் தெரிவித்தனர்.

LOUD AND CLEAR
M.K. Stalin wears a mask with anti-NEET messaging

TAMIL NADU

A NEET STRATEGY

By Amarnath K. Menon

Tamil Nadu chief minister M.K. Stalin is finding it daunting to keep at least one pre-poll promise: getting exemption for his state from the National Eligibility-cum-Entrance Test (NEET) for admissions to medical and dental colleges. On February 1, Governor R.N. Ravi returned the Tamil Nadu Admission to Undergraduate Medical Courses Bill, 2021, that proposes this change. Swiftly, the DMK government, at a special session of the legislative assembly on February 8, adopted the bill afresh to put the ball back in the governor's court.

As per the Constitution, the governor now needs to reserve the bill for consideration of the President of India, who is the assenting authority. There is no prescribed time limit, though, for the President to take a decision. "The reason why drafters of our Constitution did not specify timelines for constitutional authorities was that they believed these authorities would take quick decisions and not allow important issues to fester," says N.R. Elango, senior advocate and DMK MP. "The 10th schedule of the Constitution does not prescribe time limits for the assembly speaker to decide on the question of disqualification [of legislators]. But the Supreme Court, in its wisdom, has prescribed three months."

NEET is conducted in 11 languages, including Tamil. But Tamil Nadu argues that it is difficult to assess students' knowledge in all subjects, especially physics, chemistry and biology, through a common entrance test conducted largely on the basis of the CBSE (Central Board of Secondary Education) curriculum. The format indirectly favours CBSE students or those who have taken coaching for NEET. Tamil Nadu also contends that marks obtained in the 12th boards are

the best yardstick. It claims that those who secure over 90 per cent in the relevant subjects in the 12th boards are unable to score a higher percentile in NEET and that NEET is unfair to government school students.

The DMK has raised the pitch on the issue, saying that exemption from NEET alone can do away with such disparity and restore the autonomy of states in education. Almost all parties in the state are supporting the DMK's stand of giving admission to medical colleges on the basis of marks in the class 12 qualifying examination. Except the BJP. "NEET has broken the capitation fee mafia and ensured equal opportunity. Abolishing it entails the risk of return [of capitation fee]," says Tamil Nadu BJP chief K. Annamalai. On the issue of disparity, he adds: "A law in Tamil Nadu has brought the state syllabus on par with the CBSE syllabus. The state also provides 7.5 per cent reservation for government school students in admission to professional courses."

Doctors and medical college managements are apprehensive that withdrawing NEET may affect the quality of students and, ultimately, of doctors. They also raise the prospect of private colleges returning to their old ways, including demands for capitation fee. "NEET is a fair way to tap meritorious talent to produce skilled doctors. When states conducted their own tests, there were question paper leaks and other fraud," says Dr K. Ravindranath, founder, Global Hospitals Group, Hyderabad. Other medical experts caution that granting exemption from NEET to one state will have a domino effect and the ongoing efforts to improve the quality of medical education will suffer.

Similar legislation against NEET adopted by the previous AIADMK government was sent back by the President in September 2017. It was not presented for reconsideration within six months. Medical education is in the Concurrent List and the bill may not get assent as it seeks to carve an exception out of a central exam system. If the President declines assent this time, the option before the DMK will be to challenge the constitutional validity of Section 14 of the National Medical Commission Act, 2019, which mandates NEET.

Medical education experts point out how NEET evolved from the earlier ordeal of aspirants in the two-tier selection process—a mix of objective and subjective tests—and how multiple state-level exams have all merged into a single national-level examination. Also, it is alleged that before the introduction of NEET, several self-financing (private) medical college managements would use their clout to access the merit list of government quota seats in Tamil Nadu before the official release and include those names in the private college seats. So, when these students opted to go to a government medical college, the private college managements would rake in huge sums as capitation fees by allegedly 'selling' those seats.

8,000
UNDERGRADUATE MEDICAL SEATS in Tamil Nadu in the 2020-21 academic session, of which **55% were in private colleges**

11
NO. OF LANGUAGES, including Tamil, in which NEET is conducted

While the introduction of a common entrance test has eliminated such ills, NEET faces challenges of evolving into an enduring nationwide testing system. When the erstwhile Medical Council of India (MCI) introduced NEET in 2013, the Supreme Court had put a stay on it following petitions received against NEET. The court had said that the MCI could not interfere in the admission process. When NEET was reintroduced in 2017 and made mandatory for admission, the Tamil Nadu government slapped an ordinance which sought exemption for medical education aspirants from appearing for the common entrance test. The Supreme Court had, then, directed the Tamil Nadu government to stick to NEET and said there could be no "compromise on intellect".

NEET was initially conducted by the CBSE. While the multilingual nature of the examination allows students from state boards, or those whose medium of instruction is not English or Hindi, to easily attempt the exam, there were goof-ups as well since the regional language question papers were a translation of the paper set in English. For instance, in the Tamil version of the question paper in 2018, 49 questions had errors. The Madras High Court ordered the CBSE to grant 196 grace marks to all students who had appeared for the exam in Tamil. This was later quashed by the Supreme Court. Since 2019, NEET is being conducted by the National Testing Agency, a government entity formed specifically for the purpose of conducting entrance and recruitment examinations.

Many doctors and medical college managements in Tamil Nadu view the opposition to NEET as grandstanding by the state's politicians at the cost of glossing over the advantages of a nationwide common entrance exam. In 2017, following suicide by a student who could not secure a medical seat, the DMK tried to capitalise on the tragedy in its campaign against the entrance examination. "While the rest of India had no such issues, the DMK was pushing hard with their propaganda. The ecosystem they developed played spoilsport by constantly creating a sense of fear," says Annamalai. "Now, after playing dirty politics for four years, the DMK is not in a position to accept the reality."

Stalin, though, may have a case in demanding that NEET be made a greater level-playing field. Exemption from NEET is just one of several issues he is raising under the banner of social justice and state autonomy. Stalin is striving to rally the non-BJP-ruled states to forge a national front. None of them has responded on the NEET exemption demand yet, but with DMK on a strident path, expect the issue to remain politically hot in the days to come. ■

தினமணி

01-Mar-2022

முதல்வர் மு.க.ஸ்டாலின்

பிறந்த நாள் மலர்

கோபாலபுரம் முதல் கோட்டை வரை...

அரசியல் பொதுக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார் திமுகவின் நட்சத்திர பேச்சாளர்களில் ஒருவராக இருந்த மு.கருணாநிதி. மேடையில் பேசிக் கொண்டிருந்த அவரிடம் ஒரு துண்டுச் சீட்டு தரப்பட்டது. அதில் உங்களுக்கு மகன் பிறந்திருக்கிறான் என்று.

அந்த மகனுக்குத்தான் ரஷிய அதிபர் ஜோசப் ஸ்டாலின் நினைவாக அவருடைய பெயரையே சூட்டினார், கருணாநிதி. அவருக்கு மூன்றாவது மகனாக 1953-ஆம் ஆண்டு மார்ச் 1-ஆம் தேதி பிறந்தார், மு.க.ஸ்டாலின்.

புரட்சி செய்த பெயர் காரணப் பெயராக அமைந்து விட்ட ஸ்டாலின் என்ற பெயரே அவருக்கு வாழ்க்கையில் மாறா நினைவுகளை ஏற்படுத்தியது. சென்னை அண்ணா சாலையில் உள்ள சர்ச் பார்க் பள்ளியில் படிக்க மு.க.ஸ்டாலினுக்கு விண்ணப்பம் செய்யப்பட்டது. ஆனால், விண்ணப்பத்தில் ஸ்டாலின் என்ற பெயரைக் கண்டு பள்ளியில் சேர்க்க பள்ளி நிர்வாகம் மறுத்து விட்டது.

இதனால், சென்னை சேத்துப்பட்டு கிறித்துவ கல்லூரிப் பள்ளியில் மேல்நிலை பள்ளிப் படிப்பை முடித்தார். மாநிலக் கல்லூரியில் அரசியல் அறிவியல் பிரிவில் இளநிலை பட்டப் படிப்பை முடித்தார்.

திமுக ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பாகவே, தனது அரசியல் களத்தை அமைத்துக் கொண்டார் மு.க.ஸ்டாலின். அப்போதே தனக்கென ஒரு பாணி, தனக்கென்று ஒரு பாதையை வகுத்தார்.

தந்தையின் நிழலில் இல்லாமல் கட்சியின் கொள்கைகளை முன்னிறுத்தி களத்தில் இறங்கினார். 1967-68-ஆம் ஆண்டுகளில் பள்ளி மாணவராக இருந்தபோது தன் நண்பர்களுடன் அரசியல் கூட்டணி அமைத்தார். அவர்களை இணைத்து கோபாலபுரம் இளைஞர் திமுக என்ற அமைப்பை ஏற்படுத்தினார். பிரம்மாண்ட பொதுக் கூட்டத்திலோ, ஜோடனைகளிலோ அந்த அமைப்பினை தொடங்கவில்லை. முடிதிருத்தும் கடையில் அந்த அமைப்பினை ஏற்படுத்தி அதன்மூலம் அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினார். இந்த அமைப்பின் மூலமாகவே அந்தப் பகுதியில் சமூக நலத் திட்டப் பணிகளைச் செய்து வந்தார்.

கோபாலபுரத்தில் விளக்கின் வெளிச்சமாக ஒளி வீசிய அரசியல் வாழ்வு, 1972-ஆம் ஆண்டில் இருந்து ஜோதி போன்று பெரு வெளிச்சமாகத் தொடங்கியது. 1972-ஆம் ஆண்டு ஏப்ரலில் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற பொது குழுக் கூட்டத்துக்கு செங்கல்பட்டு மாவட்ட திமுகவின் சார்பாக கட்சியினர் எடுத்து வந்த அண்ணா ஜோதியை கட்சித் தலைவர் கருணாநிதியிடம் வழங்கினார், மு.க.ஸ்டாலின்.

1973-ஆம் ஆண்டு திமுகவின் பொதுக்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டார். செங்கல்பட்டில் பெறப்பட்ட ஜோதியானது, பெரு நெருப்பாக மாறியது மிசா காலத்தில்தான். 1975-ஆம் ஆண்டு இந்தியாவில் நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டது.

இதனை திமுக அரசு முற்றாக எதிர்த்தது. இதன் காரணமாக, மு.க.ஸ்டாலின் உள்பட்ட திமுக நிர்வாகிகள், மாவட்டச் செயலாளர்கள் உள்பட 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். நெருக்கடி நிலை ஒடுக்குமுறையால் ஸ்டாலின் ஓராண்டு காலம் சிறையில் அடைக்கப்பட்டார். ஸ்டாலினை தீவிரமான அரசியலில் பங்கு பெற வைத்து பக்குவப்படுத்தியதில் மிசா சிறை வாசத்துக்கு பெரும் பங்கு உண்டு. மிசா சிறை வாசத்துக்குப் பிறகு, 1977-ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டார்.

அதன் பின்னர், திமுகவில் இளைஞரணி அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன் அமைப்பாளர்களில் ஒருவராக மு.க.ஸ்டாலின் நியமிக்கப்பட்டார். அமைப்பாளராக இருந்தாலும், தமிழகம் முழுவதும் இளைஞரணியை அவரே கட்டமைத்தார். இதனால், அவருக்கு இளைஞரணி மாநிலச் செயலாளர் பொறுப்பு அளிக்கப்பட்டது. இந்தப் பொறுப்பில் சிறப்பாகச் செயல்பட்ட காரணத்தால் 'தளபதி' என அழைக்கப்பட்டார்.

இதன்பின், 2003-இல் நடைபெற்ற திமுக பொதுக் குழுக் கூட்டத்தில் துணைப் பொதுச் செயலாளராகவும், 2008-ஆம் திமுகவின் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். திமுக தலைவராக இருந்த மு.கருணாநிதியின் உடல்நலத்தைக் கருத்தில் கொண்டு கடந்த 2017-ஆம் ஆண்டு ஜனவரி 4-இல் அந்தக் கட்சியின் செயல் தலைவரானார். பின்னர், திமுக தலைவராக மு.க.ஸ்டாலின் ஒரு மனதாகத் தேர்வு செய்யப்பட்டார். கோபாலபுரத்தில் தொடங்கிய அவரது அரசியல் பயணம் இன்று புனித ஜார்ஜ் கோட்டை வரை நீண்டிருக்கிறது.

தினமணி

01-Mar-2022

நம்மில் ஒருவர் நம் முதல்வர்!

டாக்டர் எல்.பி.தங்கவேலு

2016-ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்பு நமக்கு நாமே, மக்கள் கிராம சபை போன்ற நிகழ்ச்சிகளை தமிழ்நாடு முழுவதும் நடத்தி கடுமையாக உழைத்தார். அப்படியொரு நமக்கு நாமே திட்டம் 2015-இல் கோவையிலும் நடைபெற்றது. அப்போது ஜெயலலிதா ஆட்சி என்பதால் இதில் பங்கேற்க கோவையைச் சேர்ந்த பிரபல மருத்துவர்கள் பலரும் தயக்கம் காட்டினர். தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மதுவினால் ஏற்படும் தீமைகள் பற்றி பேசினேன்.



இதற்காக ஏராளமான மாணவ, மாணவிகளைக் கூட்டத்துக்கு அழைத்துச் சென்றிருந்தேன். நான் சற்று அதிக நேரம் எடுத்துக் கொண்டபோது நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் குறுக்கிட்டனர். ஆனால், ஸ்டாலின் புரிந்து கொண்டு மேலும் நேரம் எடுத்துக் கொண்டு பேச அனுமதித்தார்.

அன்று அவர் பேசியது கல்லூரி மாணவர்களிடையே பெரும் தாக்கத்தையும், உற்சாகத்தையும் ஏற்படுத்தியது. இந்த எளிமையான குணங்கள் அவரது தலைமைப் பண்பை மேலும் மெருகேற்றியது என்றால் மிகையாகாது. 2016-ஆம் ஆண்டு தேர்தலுக்கு ஓராண்டுக்கு முன்பே திட்டமிட்டு தமிழகம் முழுவதும் ஒரு சிறு கிராமம் கூட விடாமல் சுற்றி சுற்றி வந்து கடுமையாக உழைத்து பிரசாரம் மேற்கொண்டார்.

முதல்வர் வேட்பாளராக ஸ்டாலினை தேர்தலுக்கு முன்பே அறிவிக்க வேண்டும் என்று திமுகவினரில் பெரும்பாலானோரும், பொது மக்களில் பலரும் விரும்பினர். ஆனால் கருணாநிதியே மீண்டும் முதல்வர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு அந்தத் தேர்தலில் திமுக பரவலாக வெற்றி பெற்றிருந்தபோதும் அதிமுகவே ஆட்சியைப் பிடித்தது.

தேர்தல் முடிவுகள் வந்த சில நாள்களுக்குப் பிறகு நான் அவரை மீண்டும் சந்தித்தேன். உங்களை முதல்வர் வேட்பாளராக அறிவித்திருந்தால் திமுக வெற்றிபெற்றிருக்கும். ஏமாந்துவிட்டோமே என்று கருணாநிதியின் முடிவின் மீது எனக்கு இருந்த ஆதங்கத்தை வெளிப்படுத்தியபோது சற்றும் தயங்காமல் அவர் சொல்லியது எனக்குப் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அவர் சொல்லியது இதுதான். கருணாநிதி என்னுடைய தலைவர், என் தந்தை என்பது அதற்குப் பிறகே. என் தலைவர் சொன்ன பிறகு எதிர்ப்பேச்சு பேசாமல் இதுநாள் வரை வாழ்ந்து வருகிறேன்.

அவரின் பேச்சை மீறி இந்த முதல்வர் பதவி வருமென்றால் அது எனக்குத் தேவையில்லை என்று உறுதிபடத் தெரிவித்தார். நான் விடாமல் உத்தர பிரதேசத்தில் அகிலேஷ் யாதவையும், காஷ்மீரில் ஓமர் அப்துல்லாவையும் எடுத்துக் காட்டியபோது என்னால் அப்படி நடக்க முடியாது என்று திட்டவட்டமாகச் சொன்னார். இச்செயல் அவர் தலைவர் மீதும், தனது தந்தை மீதும் வைத்திருந்த மரியாதையை எடுத்துக்காட்டியது.

ஜெயலலிதா மரணத்துக்குப் பிறகு ஒருநாள் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அதிமுகவில் குழப்பமான சூழ்நிலை நிலவியது. சிறிதளவு முயன்றால் கூட அதிமுக ஆட்சியைக் கவிழ்த்துவிட முடியும் என திமுக நிர்வாகிகள் பலரும் நம்பினர். பொதுமக்கள் பலரும் அதிமுக ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு திமுக ஆட்சிக்கு வர வேண்டும் என்று விரும்பினர்.

அதற்கெல்லாம் அவர் புன்னகையோடு சொன்ன ஒரே பதில் இன்னும் என் நினைவில் அப்படியே இருக்கிறது.

'மக்களை நேரடியாகத் தேர்தலில் சந்தித்து என்னை முன்னிறுத்தி, தேர்தலில் வெற்றி பெற்று முதல்வராவதை மட்டுமே விரும்புகிறேன். அதை விடுத்து குறுக்கு வழியில் முதல்வராவதை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன். அப்படியே முதல்வரானாலும் நல்ல அரசாங்கத்தை தரமுடியாது என்பதையும் அறிவேன்' என்று உறுதிபடக் கூறினார்.

அவர் சொன்னதெல்லாம் எவ்வளவு உண்மை என்பதைக் கடந்த 9 மாதங்களாக நடைபெற்று வரும் அவரின் ஆட்சியில் நாம் பார்க்க முடிகிறது. எளிமையான வாழ்க்கை, நிர்வாகத் திறன், மக்கள் மீது காட்டும் அன்பு ஆகிய நற்குணங்கள் அவரைச் சிறந்த முதல்வராக மக்களுக்கு அடையாளம் காட்டியுள்ளது.

திராவிட இயக்கத்தின் நம்பிக்கைகளில் ஈடுபாடு கொண்டவர் என்றாலும் குடும்பத்தினர், அமைச்சர்கள் உள்ளிட்ட மற்றவர்களின் வழிபாடு நம்பிக்கையிலும், சுதந்திரத்திலும் எத்தனை நிர்பந்தம் வந்தாலும் தலையிடாமல் இருப்பது என அவர் எடுத்திருக்கும் முடிவு அனைவராலும் பாராட்டப்படக் கூடியது. இத்தகைய நல்ல பல குணங்களைக் கொண்டிருக்கும் நம்முடைய முதல்வர் மு.க.ஸ்டாலின் நம்மில் ஒருவர்தான். வாழ்க நீவிர் நூறாண்டு!

கட்டுரையாளர்:
தலைவர், இந்திய இரைப்பை,
குடல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் சங்கம்.

தினமணி

01-Mar-2022

அரசியல் எதிரிகளை வியக்க வைத்த அற்புத சாதனையாளர்

பெரும்பான்மை பலத்துடன் தமிழக முதல்வராக நல்லாட்சி செய்து கொண்டிருக்கும் மு.க.ஸ்டாலின் கடந்து வந்த கடினமான, கரடுமுரடான பாதைகளை திரும்பிப் பார்த்தால் அவரது அரசியல் எதிரிகளும் வியந்தே போவார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

கடந்த 1960-ஆம் ஆண்டுகளில் அவர் வசித்து வந்த சென்னை கோபாலபுரத்தில் அப்பகுதியில் உள்ள இளைஞர் பட்டாளத்தை ஒருங்கிணைத்து கட்சி நிகழ்ச்சிகளை நடத்த தொடங்கினார். சென்னையின் மேயராக, உள்ளாட்சித் துறை அமைச்சராக படிப்படியாக முன்னேறி தற்போது முதல்வராகியுள்ளார் மு.க.ஸ்டாலின்.

சென்னை மேயராகவும், உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் பதவி வகித்தபோது அவர் சந்தித்த பல்வேறு பிரச்னைகளிலும் அவர் பெற்ற வெற்றி அவருக்கு பலமடங்கு பாராட்டுகளை பெற்றுத் தந்தது. இதனால் அவர் கட்சித் தலைமைக்கு சரியான தலைவர் என்பதை பலரும் உணர்ந்து கொண்டனர். கடந்த 2016-ஆம் ஆண்டுக்குப் பிறகு திமுக தலைவர் கருணாநிதி உடல்நலமின்றி இருந்த நேரத்தில் மு.க.ஸ்டாலினுக்கு கட்சியை வழிநடத்த வேண்டிய பொறுப்பும், கடமையும் ஏற்பட்டது.

கருணாநிதியின் மறைவுக்குப் பிறகு திமுகவின் தலைவராக பொறுப்பேற்று கட்சியின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் மூத்த நிர்வாகிகளிடம் கலந்து ஆலோசித்தும், திட்டமிட்டும் செயல்பட்டு பாராட்டுகளைப் பெற்றார்.

நெருக்கடியான நேரத்தில் கட்சியை வழிநடத்திய விதம், கட்சிக்கு நிர்வாகிகளைத் தேர்வு செய்து அறிவித்த பாங்கு, தேர்தலின்போது கட்சியை ஒருங்கிணைத்து கூட்டணிகளை அமைத்த ராஜதந்திரம், தேர்தல் பிரசாரத்தின்போது அவர் கையாண்ட யுக்திகள் ஆகியன அரசியல் எதிரிகளையும், கட்சியின் முக்கிய நிர்வாகிகளையும், தொண்டர்களையும் வியப்புக்குள்ளாக்கியது. கருணாநிதிக்குப் பிறகு கட்சியை இவரால் சிறப்பாக வழிநடத்த முடியாது. அதற்கான தகுதிகள் இல்லாதவர் என்ற பொய்பிம்பத்தை உடைத்தெறிந்து உயர்ந்தார்.

2-வது அலையோடு கொரோனா போய்விடும் என்று நினைத்த நேரத்தில், மீண்டும் 31-12-2021-ல் 1,155 பேருக்கு பாதிப்பு ஏற்பட்டு 3-வது அலை தொடங்கியது. 3-வது அலையிலும், கடந்த ஜனவரி மாதம் 22-ந்தேதி 30,744 பேர் பாதிக்கப்பட்டனர். ஆனால், இந்த அலை வேகமாக குறைந்து நேற்று 292 பேர் மட்டுமே பாதிக்கப்பட்டனர். ஒருவர் உயிரிழந்திருக்கிறார்.

கொரோனா பரவத்தொடங்கிய நேரத்தில், அதை கட்டுப்படுத்த 2020-ம் ஆண்டு மார்ச் 25-ந்தேதி முதல் ஊரடங்கு கடும் கட்டுப்பாடுகளோடு விதிக்கப்பட்டது. தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டு கிடந்தன. போக்குவரத்து முடங்கியது. கடுமையான ஊரடங்கு கட்டுப்பாடுகளால், மாநிலத்தின் வளர்ச்சியே அடிமட்டத்துக்கு சென்றுவிட்டது. குடும்பங்களிலும் வருமானம் இழப்பு, வேலையிழப்பு என்ற பரிதாபநிலை உருவானது. பிறகு, ஊரடங்கு கட்டுப்பாடுகள் கொஞ்சம் கொஞ்சமாக தளர்த்தப்பட்டது.

மத்திய அரசாங்கம் கடந்த மாதம் 25-ந்தேதி கொரோனா நோய் தொற்றை கட்டுப்படுத்த தேவையான கட்டுப்பாடுகள் மற்றும் பொருளாதார தொடர்பான தளர்வுகள் உள்பட இதர தளர்வுகளை அறிவிக்க அபாய மதிப்பீடு அடிப்படையிலான அணுகுமுறைகளை கடைப்பிடிக்க மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தியது. இத்தகைய சூழ்நிலையில், முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று முதல் மக்களின் இயல்பு வாழ்க்கை முழுமையாக மீண்டும் திரும்புவதற்கு, திருமணம் மற்றும் திருமணம் சார்ந்த நிகழ்வுகள் 500 பேருக்கு மிகாமல் நடத்த அனுமதி, இறப்பு சார்ந்த நிகழ்வுகளுக்கு அதிகபட்சம் 250 பேர்களுடன் அனுமதி என்ற 2 கட்டுப்பாடுகளை தவிர்த்து, மீதமுள்ள அனைத்து கட்டுப்பாடுகளையும் விலக்கிக்கொள்ள உத்தரவிட்டார்.

ஆக, தமிழ்நாடு இப்போது இயல்பு நிலைக்கு வந்துவிட்டது. ஆனால், இந்த சுதந்திரமான வாழ்க்கை நிலைக்க வேண்டுமென்றால், மீண்டும் கொரோனா பரவல் அதிகரிக்காத நிலையை உறுதிப்படுத்தும் பொறுப்பு மக்களின் கையில்தான் இருக்கிறது. அதற்கு அனைவரும் தொடர்ந்து முககவசம் அணியவேண்டும், சமூக இடைவெளியை பின்பற்றவேண்டும்.

நேற்று முன்தின கணக்குப்படி, 91.5 சதவீதம் பேர் முதல் டோஸ் தடுப்பூசி போட்டிருக்கிறார்கள். 72.46 சதவீதம் பேர்தான் 2-வது டோஸ் போட்டிருக்கிறார்கள். இவை இரண்டுமே 100 சதவீத இலக்கை அடைந்து பூஸ்டர் டோஸ் போடவேண்டிய காலக்கெடு அடைந்தவர்கள் அனைவரும் அதையும் போட்டுக்கொண்டால்தான் கொரோனாவை ஒழிக்க முடியும். மத்திய அரசும் உடனடியாக 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், அடுத்து குழந்தைகளுக்கும் தடுப்பூசிபோடும் நடைமுறையை தொடங்கவேண்டும். அடுத்த சில காலங்கள் முககவசம், சமூக இடைவெளி, தடுப்பூசி என்பது வாழ்க்கையின் நடைமுறையாக இருந்தால் மட்டுமே, கொரோனாவை மீண்டும் தலையெடுக்காமல் தடுக்க முடியும்.

முரசொலி

04-Mar-2022

திருச்சி தேசிய சட்டப் பல்கலைக் கழகத்தில் 69 சதவிகிதத்திற்கான இட ஒதுக்கீட்டு ஆணை!

சமூக நீதிக்கான சரித்திர நாயகருக்குப் பாராட்டு!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, மார்ச் 4- திருச்சி தேசிய சட்டப் பல்கலைக் கழகத்தில் அகில இந்தியத் தொகுப்பில் 69 விழுக்காடு முறை பின்பற்றப்பட ஆணை பிறப்பித்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களைப் பாராட்டி திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

'சமூகநீதிக்கான சரித்திர நாயகர்' முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சமூகநீதி வரலாற்றில் அரியதோர் சாதனை நிகழ்த்தி, மற்ற மாநிலங்களுக்கும் முன்னோட்டமாக வழிகாட்டியுள்ளார் என்பது நமது பெருமிதத்திற்கும், பாராட்டுதலுக்கும் உரியதொன்றாகும்.

தேசிய சட்டப் பல்கலைக் கழகம் (National Law Schools) என்ற அமைப்புகளில் இட ஒதுக்கீடே சரியாகப் பின்பற்றாத கொடுமை தொடர்ந்து வருகிறது.

அரசமைப்புச் சட்டப்படியும், உச்சநீதிமன்றத்தின் பல தீர்ப்புகளின்படியும் இட ஒதுக்கீடு சரியாகப் பின்பற்றி, சமூகநீதி அனைவருக்கும் அனைத்தும் கிட்டும் நிலை உருவாக்கப்படல் வேண்டும்.

பல ஆண்டுகளாக நிலவிய அநீதிக்கு முற்றுப்புள்ளி

இதுபற்றி நாம் தொடர்ந்து வலியுறுத்தியே வந்துள்ளோம்.

''தகுதி, திறமை - பூச்சாண்டி'' காட்டியே இட ஒதுக்கீட்டைத் தவிர்த்து வந்ததற்கு, தமிழ்நாடு முதலமைச்சர் பல ஆண்டுகளாக நிலவிய அநீதிக்கு முற்றுப்புள்ளி வைத்து தக்க பரிகாரம் தேடிவிட்டார்.

கடந்த 25.2.2022 நாளிட்ட அரசாணை (G.O.MS.66) மூலம் 2012 இல் திருச்சியில் தமிழ்நாடு (மாநில) அரசின் சார்பில் நடைபெற்று வரும் தமிழ்நாடு தேசிய சட்டக் கல்வி பல்கலைக் கழகத்தில், தமிழ்நாட்டின் சமூக நீதிச் சட்டமாக 69 விழுக்காடுபடி ஒடுக்கப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு கட்டாயம் அளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, முன்பு அகில இந்திய தொகுப்பு இடங்களில், திருச்சி சட்டப் பல்கலைக் கழகத்தில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கும், எஸ்.சி., எஸ்.டி., பிரிவினருக்கு சட்டப்படி உள்ள 69 சதவிகிதத்தைப் பகிர்ந்தளிக்க வழி செய்யப்பட வேண்டும்.

இதன் பயனாக இதற்கு பூஜ்ஜியம் (0) இடங்களைப் பெற்ற ஓபிசி மாணவர்களுக்குரிய 120 இடங்களில் 50 விழுக்காடான 60 இடங்களைப் பெறுகிறார்கள் - முதல் முறையாக. எஸ்.சி., பிரிவினர் 18 விழுக்காடு இடங்களையும், எஸ்.டி., பிரிவினருக்கு ஒரு விழுக்காடு இடங்களையும் பெறுகிறார்கள்.

தமிழ்நாடுதான் இப்படி வழிகாட்டியுள்ளது

இந்தியாவில் தமிழ்நாடு தான் இப்படி வழிகாட்டியுள்ளது மற்ற மாநிலங்களுக்கும். தற்போது மற்ற மாநிலங்களில் இப்படிப்பட்ட ஒதுக்கீடு முறை பின்பற்றப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முரசொலி

04-Mar-2022

அவசர நிலையும் அவசர உடுக்கையும்!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதிய 'உங்களில் ஒருவன்' தன் வரலாற்று நூலை அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர்களில் ஒருவரான ராகுல் காந்தி அவர்கள் வெளியிட வந்திருந்தார்கள். அதில் பேசும்போது, வரலாற்றுச் சிறப்புமிக்க உரையினை ஆற்றி இருக்கிறார்கள். இந்த உரையைக் கேட்டு உருக்குலைந்து கிடக்கிறது பா.ஜ.க. கூட்டம்.

நாடாளுமன்றத்தின் மையமண்டபத்தில் நின்று, 'இனி தமிழ்நாட்டில் பா.ஜ.க. வேரூன்றவே முடியாது' என்று சொன்னவர் ராகுல் காந்தி. பேசி முடித்துவிட்டு வெளியில் வந்த அவர், 'நானும் தமிழன்தான்' என்று சொன்னவர் ராகுல் காந்தி. அத்தகைய ராகுல் காந்தி, தமிழ்நிலத்தின் பெருமையை, மூவாயிரம் ஆண்டு வரலாற்றை ரத்தினச் சுருக்கமாகச் சொன்னார். இந்தியாவுக்கே மதச்சார்பின்மையைப் போதிக்கும் மண்தான் தமிழ் மண் என்றும் சொன்னார். இந்தியாவை, மாநிலங்களின் ஒன்றியம் என்று சொன்னார். மாநிலங்கள் சேர்ந்ததுதான் ஒன்றியம் என்றும் சொன்னார். ஒருவிதமான சர்வாதிகாரத் தன்மையுடன் பா.ஜ.க. அரசு ஆட்சி செலுத்தி வரும் நிலையில் ராகுல் காந்தியைப் போன்ற ஒரு அகில இந்தியத் தலைவர், கூட்டாட்சித் தத்துவம் குறித்துப் பேசுவது என்பது மிகமிக முக்கியமானது.

மாநிலக் கட்சிகள் பேசுவதை விட, ஒரு அகில இந்தியக் கட்சி பேசுவது முக்கியமானது. அதுவும் ராகுல் காந்தியைப் போன்ற ஒரு அகில இந்திய பிரபலம் பேசுவது அதனினும் முக்கியமானது.

இதனை பா.ஜ.க.வினரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நல்லதை உருவாக்கி பெயர் வாங்கத் தெரியாது அவர்களுக்கு. உருக்குலைப்பு தன் மூலமாக பேர் பெறுபவர்கள் அவர்கள். பிரதமர் நேரு உருவாக்கியது அனைத்தையும் உருக்குலைத்துக் கொண்டு இருப்பவர்கள் அவர்கள். நேர்மறை அரசியல் அவர்களுக்குத் தெரியாது. எதிர்மறை அரசியலையே எப்போதும் கைக் கொள்வார்கள்.

அவசர நிலைப் பிரகடனத்தையும் ராகுல்காந்தியையும் முடிச்சுப் போட்டு அவசர உடுக்கை அண்ணாமலை கருத்துச் சொல்லி இருக்கிறார்.

"முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டுகள். எமர்ஜென்சியில், தான் கைது செய்யப்பட்டதை தமிழ்நாட்டினுடைய இருண்ட காலம் என்று குறிப்பிட்டுள்ளார். திருமதி இந்திரா காந்தி அவர்களே இதைச் செய்தார். அவருடைய பேரன் ராகுல் காந்தி அவர்கள் பெருமையுடன் புத்தகத்தை இன்று வெளியிட்டுள்ளார்" – என்று பெரிய அரசியல் மேதையைப் போலக் கருத்துத் தெரிவித்துள்ளார் அண்ணாமலை.

முதலமைச்சரின் நூலை வெளியிட்டு ராகுல் காந்தி பேசிய பேச்சுக்கு பதில் சொல்லி இருக்க வேண்டும் அண்ணாமலை. அதை விட்டுவிட்டு, அவசர ஏன் அழைத்தீர்கள் என்ற தொனியில் கேள்வி கேட்டுள்ளார்.

1975 அவசர நிலையை இன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நியாயப்படுத்தி இருந்தால்தான் தவறு. அவர் அதனைச் செய்யவில்லை. அதனை அவர், இந்த நூலில் விமர்சிக்கவே செய்துள்ளார். இப்படி அவர் எழுதியதை ராகுல் காந்தியும் விமர்சிக்க வில்லை. இது எதையும் தெரிந்து கொள்ளாமல் அவசர உடுக்கை அடித்துள்ளார் அண்ணாமலை.

அவசர நிலைப் பிரகடனத்தை அமல்படுத்தியதற்காக, இந்திரா அம்மையார் அவர்களே வருத்தம் தெரிவித்த வரலாறு எல்லாம் அரை குறைகளுக்குத் தெரியாது.

1969 குடியரசுத் தலைவர் தேர்தலில் பிரதமர் இந்திராவால் குடியரசுத் தலைவர் தேர்தல் வேட்பாளராக நிறுத்தப்பட்ட வி.வி.கிரி அவர்களை ஆதரித்தார் அன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள். ஸ்தாபன காங்கிரஸ், இந்திரா காங்கிரஸ் என அக்கட்சி இரண்டாகப் பிளவுபட்ட போதும் இந்திராவை ஆதரித்தார் கலைஞர். 1975 அவசர நிலையை கலைஞர் அவர்கள் ஆதரிப்பார்கள் என்று பிரதமர் இந்திரா நினைத்தார். மாறாக, கடுமையான எதிர்ப்பை பதிவு செய்தார் கலைஞர். இதனைத் தொடர்ந்து தி.மு.க. சந்தித்த சோதனைகள் அனைத்தும் அனைவரும் அறிவார்கள். இன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்பட நூற்றுக்கணக்கானவர்கள் சிறையில் ஓராண்டு காலம் அடைக்கப்பட்டார்கள்.

அகில இந்திய அளவில் எதிர்க்கட்சிகள் அனைத்தையும் கூட்டி ஒரு கூட்டணியை உருவாக்க கலைஞர் அவர்கள் முயற்சித்தார்கள். அதுதான் 1977 ஆம் ஆண்டு ஜனதா அரசாக அமைந்தது. இன்றைய பா.ஜ.க.வின் அன்றைய தலைவர்களும் அதில் இருந்தார்கள். ஆட்சிக்கு வந்த ஜனதாக்காரர்கள் ஆளுக்கு ஒரு பக்கமாக ஆட்சியை இழுத்து தங்கள் சொந்த ஆசைகளை நிறைவேற்றிக் கொண்டு அவர்களது ஆட்சியை அவர்களே கவிழ்த்துக் கொண்டார்கள். இந்தச் சூழலில்தான் நிலையான ஆட்சி அமைய வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்திரா அம்மையாரை மீண்டும் ஆதரித்தார் கலைஞர் அவர்கள். 1980–ம் ஆண்டு மக்களவை தேர்தலில் தி.மு.க. – காங்கிரஸ் கூட்டணி உருவாகியது. கலைஞரும், இந்திராவும் ஒரே மேடையில் பங்கேற்ற பரப்புரைக் கூட்டம் சென்னை கடற்கரையில் நடந்தது. அதில் கலைஞர் அவர்கள் பேசும்போது சொன்னார்:

"டெல்லியில் கேலிக்கூத்தான அரசு அமைவதை நாங்கள் விரும்பவில்லை. நிலையான அரசு மத்தியில் அமைய வேண்டும் என விரும்புகிறோம். இந்திரா காந்தியால் மட்டுமே நிலையான ஆட்சியைத் தர முடியும்" என்று பேசினார்.

"நேருவின் மகளே வருக... நிலையான ஆட்சியைத் தருக!" என இந்திராவுக்குப் பட்டம் சூட்டினார். இது அவசர உடுக்கைகளுக்குத் தெரியாது!

அடுத்து பேசிய இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், **"நாங்கள் தவறு செய்திருக்கிறோம். அதை உணர்ந்து பாதிக்கப்பட்ட மக்களிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறோம். இனி தவறுகள் நடக்காது"** என பகிரங்கமாகக் கூறினார். அவசர நிலையைக் கொண்டு வந்ததற்காக லட்சக்கணக்கான மக்கள் முன்னால் வருத்தம் தெரிவித்தார் இந்திரா அம்மையார். இது அவசர உடுக்கைகளுக்குத் தெரியாது.

"கலைஞர் கருணாநிதியை நம்பலாம். அவர் ஆதரித்தால் முழுமையாக ஆதரிப்பார். எதிர்த்தால் தீவிரமாக எதிர்ப்பார். திரைக்குப் பின்னால் ரகசிய மான நடவடிக்கைகளை தி.மு.க எடுத்ததே இல்லை. கலைஞர் கருணா நிதி நண்பராக இருந்தாலும் விரோதியாக இருந் தாலும் இரண்டிலும் உறுதியாக இருப்பார்" என கலைஞருக்கு புகழாரம் சூட்டினார் இந்திரா. இது வரலாறு. தேர்தல் முடிவுகள் வெளியானபோது தமிழகத்தில் மொத்தமுள்ள 39 தொகுதிகளில் 37 இடங்களை தி.மு.க. – காங்கிரஸ் கூட்டணி கைப்பற்றியிருந்தது. இந்திரா பிரதமர் ஆனார். இது நடந்து 42 ஆண்டுகள் ஆகிவிட்டது. அண்ணாமலை அந்த வரலாறுகள் எதுவும் அறியாமல் ஏதோ கருத்துச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்.

நேரு காலத்தில் உருவாக்க நினைத்த மன மாற்றம் ராகுல் காந்தி காலத்தில் நடந்திருக்கிறது. பெரியார் அண்ணா செய்ய நினைத்த மனமாற்றத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செய்து காட்டி உள்ளார். எனவே, இந்தப் புத்தகத்தை வெளியிட ராகுல் காந்தியே பொருத்தமானவர்!

தினகரன்
05-Mar-2022

நற்பெயர் நிலைக்கட்டும்

தமிழகத்தில் மாநகராட்சி மேயர்கள், துணை மேயர்கள், நகராட்சி தலைவர்கள், துணை தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள், துணை தலைவர்கள் பதவிகளுக்கான மறைமுக தேர்தல் நேற்று நடந்தது. ஒட்டுமொத்தமாக 1,296 பதவிகள் மறைமுக தேர்தல் வாயிலாக நிரப்பப்பட்டன. மொத்தமுள்ள 21 மாநகராட்சிகளில் 20 மாநகராட்சியில் திமுக மேயர் பொறுப்பை பெற்றுள்ளது. கும்பகோணத்தில் காங்கிரஸ் கட்சிக்கு மேயர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் பட்டியலின பெண் பிரியா மேயராக பதவி ஏற்றுள்ளார். 360 ஆண்டு காலம் பழமை வாய்ந்த சென்னை மாநகராட்சியில் இதுவரை 46 மேயர்கள் பதவி வகித்துள்ளனர். ஆங்கிலேயர் கால மேயர்களை தொடர்ந்து, தமிழர்கள் மேயராக பதவி வகித்த சிறப்பும் உள்ளது. இந்த வரிசையில் சென்னை மாநகராட்சியில் பட்டியலின பெண் மேயராக முதன் முதலாக பதவி ஏற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

கும்பகோணம் மாநகராட்சி மேயராக சரவணன் பதவி ஏற்றுள்ளார். இவர், நேற்று முன்தினம் வரை ஆட்டோ ஓட்டிக்கொண்டிருந்தார். கோவை மேயராக கல்பனா பதவி ஏற்றுள்ளார். இவரும், நேற்று முன்தினம் வரை கோவையில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் மாதம் ரூ.15 ஆயிரம் சம்பளத்துக்கு சாதாரண ஊழியராக வேலை பார்த்து வந்தார். இப்படி, தமிழகம் முழுவதும் சாமானிய மக்கள், மேயர் மற்றும் துணை மேயர் பதவியில் அமர்ந்துள்ளனர். இது, தமிழக உள்ளாட்சி மன்ற தேர்தல் வரலாற்றில், நீங்கா இடம் பிடிக்கும் பெரும் முத்திரையாக பதிந்துள்ளது. பொருளாதார ரீதியில் வலுவாக இருப்பவர்கள், அரசியல் பாரம்பரியம் கொண்டவர்கள் என கூறிக்கொள்ளும் பலரும் இம்முறை பின்னுக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த 9 மாத காலம் சிறப்பாக ஆட்சி நடத்தி வருவதால், அவருக்கு அளிக்கும் பரிசாக, தமிழக மக்கள் பெருவாரியான வெற்றியை அளித்துள்ளனர். தமிழகம் முழுவதும் ஒட்டுமொத்த மேயர் பதவியையும் திமுக அள்ளுகிற அளவுக்கு மக்கள் மகத்தான வெற்றியை தந்துள்ளனர். திமுக மீது மக்கள் கொண்டுள்ள இந்த நம்பிக்கைக்கு மேலும் வலு சேர்க்கும் வகையிலும், முதல்வர் மு.க.ஸ்டாலின் செயல்பாட்டுக்கு மெருகேற்றும் வகையிலும் மேயர் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகளின் செயல்பாடுகள் இருக்க வேண்டும். இது கடந்த 9 மாத கால சாதனை ஆட்சிக்கு நற்பெயரை நிலைக்கச்செய்யும்.

தமிழக அரசியல் வரலாற்றில், கூட்டணி தர்மத்தை முறையாக கடைபிடித்து வருகிறது திமுக. இம்முறையும், அதன் தோழமை கட்சிகளுக்கு பாகுபாடின்றி பொறுப்புகளை முறையாக பிரித்து வழங்கியுள்ளது. ஆனாலும், ஒரு சில இடங்களில், கட்சி தலைமையை மீறி, சிலர் அதிகாரப்பூர்வ வேட்பாளர்களை தோற்கடித்துள்ளனர். இச்செயலில் ஈடுபட்டவர்கள், தாமாக முன்வந்து, உடனே பதவியை ராஜினாமா செய்யவேண்டும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்துள்ளார். முதல்வரின் உத்தரவை ஏற்று, அவரது விருப்பத்தை நிறைவேற்றி ஜனநாயக மாண்பை காப்பதே சிறப்பு.

உக்ரைன் மீட்புப் பணியில் மத்திய அரசாங்க - தமிழக குழுக்கள்!

கடந்த பிப்ரவரி மாதம் 24-ந்தேதி அதிகாலை முதல் ரஷிய ராணுவம், உக்ரைன் மீது தாக்குதலை தொடர்ந்தது. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நகரத்தையும் கைப்பற்றும் ரஷியாவின் குண்டு மழையினால், உக்ரைனே அல்லோலப்படுகிறது. இந்தியாவில் 'நீட்' தேர்வு எழுதினால்தான் மருத்துவக் கல்லூரியில் சேர முடியும் என்ற விதியினால், 'நீட்' தேர்வில் போதிய மதிப்பெண் பெறாத மாணவர்களும், 'நீட்' தேர்வு எழுதாத மாணவர்களும், உக்ரைன் போன்ற நாடுகளில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்து படிக்கிறார்கள்.

அந்த வகையில், இந்தியாவில் இருந்து சென்ற மாணவர்கள் உள்பட, 20 ஆயிரம் இந்தியர்கள் உக்ரைனில் வாழ்கிறார்கள். இதில், ஏறத்தாழ 5 ஆயிரம் தமிழக மாணவர்கள் உக்ரைனில் படிக்கிறார்கள். ரஷியா போர் தொடுப்பதற்கு முன்பே, போர் வரக்கூடும் என்ற அச்சத்தில் உக்ரைனில் படிக்கும் வெளிநாட்டு மாணவர்களை சொந்த நாடு திரும்ப அறிவுறுத்தப்பட்டது. தமிழகத்தில் இருந்து அங்கு படிக்கும் மாணவர்களில் சிலர் திரும்பினாலும்,

பெரும்பாலானோர் அடுத்த சில மாதங்களில் இறுதித் தேர்வு இருக்கிறது என்ற நிலையில், அது வீணாகிவிடக்கூடாது என்ற எண்ணத்திலும், விமானக் கட்டணம் ரூ.1 லட்சம் அளவுக்கு உயர்ந்துள்ள நிலையில், அந்தச் செலவை மேற்கொள்ள முடியாத நிலையிலும் அங்கேயே தங்கிவிட்டனர்.

போர் மூண்ட பிறகு, உணவு இல்லாமல், தண்ணீர் இல்லாமல் தங்கள் உயிரை காப்பாற்றிக்கொள்ள பதுங்கு குழிகளிலும், சுரங்க அறைகளிலும், மெட்ரோ சுரங்க ரெயில் நிலையங்களிலும் தஞ்சம் அடைந்தனர். இவர்கள் எல்லாம் உக்ரைன் எல்லையை கடந்து, அண்டை நாடுகளான போலந்து, ருமேனியா, சுலோவேகியா, ஹங்கேரி, மால்டோவா, இப்போது சில நாட்களாக ரஷியாவில் இருந்து விமானம் மூலம் இந்தியா திரும்ப வேண்டியநிலை இருக்கிறது.

அந்த எல்லைப்பகுதிக்கு வருவதற்கும், எல்லையை கடப்பதற்கும் பெரும் இன்னல் இருக்கிறது. குண்டு மழையில் இருந்து தப்பி கடுமையான பனிப்பொழிவுக்கு இடையே பல கிலோமீட்டர் நடந்துசெல்ல வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. உக்ரைனில் சிக்கித் தவிப்பவர்களை மீட்க மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு "ஆபரேஷன் கங்கா" என்று மத்திய அரசாங்கம் பெயர் சூட்டியுள்ளது. இந்த மீட்புப்பணியை ஒருங்கிணைக்க, உக்ரைனின் அண்டை நாடுகளுக்கு சென்று, அங்கேயே தங்கியிருந்து கவனிக்க 4 மத்திய மந்திரிகளை மத்திய அரசாங்கம் அனுப்பியுள்ளது.

ஜோதிராதித்ய சிந்தியா ருமேனியா மற்றும் மால்டோவாவில் இருந்தும், கிரண் ரிஜிஜூ சுலோவேகியா நாட்டில் இருந்தும், ஹர்தீப்சிங் புரி ஹங்கேரியில் இருந்தும், வி.கே.சிங் போலந்து நாட்டில் இருந்தும் மீட்புப் பணிகளை கவனிக்கிறார்கள். அங்கிருந்து ஏறத்தாழ 450 மாணவர்கள் தமிழ்நாட்டுக்கு அழைத்துவரப்பட்டிருக்கிறார்கள். மேலும், ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் தமிழ்நாட்டுக்கு திரும்ப காத்திருக்கிறார்கள்.

அவர்கள் பாதுகாப்பாகவும், விரைவாகவும் திரும்புவதை உறுதிசெய்ய ஏதுவாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, டாக்டர் கலாநிதி வீராசாமி, எம்.எம்.அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் ஏ.கே. கமல் கிஷோர், எம்.பிரதீப்குமார், அஜய் யாதவ், எம். கோவிந்தராவ் ஆகியோரை சுலோவேகியா, ஹங்கேரி, ருமேனியா மற்றும் போலந்து ஆகிய நாடுகளுக்கு அனுப்புவதற்காக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு பிறப்பித்து, இதற்கு தேவையான அனுமதியை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் விரைவாக வழங்கவேண்டும் என்று, மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கருக்கு, முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

மத்திய-மாநில அரசுகளின் இந்த முயற்சி வெகுவாக பாராட்டுக்குரியது. முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் நியமித்துள்ள தமிழக குழுவுக்கு வெளியுறவு அமைச்சகம் உடனடியாக அனுமதி வழங்கி, தமிழக குழுவினரை உக்ரைனின் அண்டை நாடுகளுக்கு அனுப்பினால், பதற்றத்தில் உக்ரைனில் இருக்கும் தமிழக மாணவர்களுக்கு, நம்மை மீட்டுச்செல்ல தமிழக அரசு இருக்கிறது, தமிழக மக்கள் இருக்கிறார்கள், தமிழக குழு இருக்கிறது என்ற நம்பிக்கையும், உற்சாகமும் பிறக்கும்.

dt DAILY THANTHI NEXT
05-Mar-2022

Stalin@69: A case of graceful maturing

Tamil Nadu Chief Minister MK Stalin recently hit a milestone as he turned 69. As part of the ongoing celebrations, national leaders such as Rahul Gandhi, Omar Abdullah and Pinarayi Vijayan, graced the launch of Stalin's autobiography, 'One Among You'. The gathering was a show of strength, and symbolic of Stalin's rising clout in national politics. The head of the ruling party carries the weight of DMK's illustrious legacy shaped by his father, and erstwhile patriarch, late M Karunanidhi. Stalin has the distinction of being one of the oldest candidates in the State's history to assume the CM's office.

But age is just a number, as he has proved over the last nine months that he's a leader who is both active and engaged. Whether it was dealing with the fallout of COVID that greeted him upon his appointment, or addressing the concerns of citizens battered by adverse weather events in the State, or even making surprise visits to traffic control rooms at midnight, Stalin was there in the thick of the action, exhibiting the agility of leaders half his age. His bicycling jaunts on ECR and workouts at the gym have also reinforced this image of a youthful and progressive leader. Holding counsel at his residence at Gopalapuram, Anna Arivalayam and Secretariat, Stalin has been working round the clock since he assumed office. Remarkably, he has kept his partymen together, in spite of the patriarch's absence, which speaks volumes of his leadership. This is in contrast to how AIADMK's fortress crumbled in the aftermath of the passing of party Supremo J Jayalalithaa. The party now faces breakaway clans vying for complete control of the Dravidian unit.

Stalin seems to have matured into a politician who is keeping his friends and enemies closer than before. When trading barbs with former CM Edappadi K Palaniswamy, Stalin has referred to his close association with the AIADMK founder MGR, who Stalin said was a 'Periyappa' of sorts to him. And despite being disappointed on account of AIADMK's initial refusal to grant M Karunanidhi a burial spot on Marina Beach, a tussle which was eventually resolved by the intervention of the Madras High Court, Stalin did not hold a grudge against the Opposition. When doubts regarding the possible closure of Amma canteens were expressed, Stalin obliged to continue them. A similar treatment was meted out to defectors like Ku Ka Selvam, a legislator who joined the BJP camp. His return to the DMK fold was an innocuous affair sans bad blood. On the same lines, critics of Stalin and former AIADMK men Senthil Balaji and Sekar Babu, who joined DMK were rewarded with rich portfolios.

Not everything has been smooth sailing for the DMK Chief, as there are several aspects of poll promises listed in DMK's election manifesto that are far from fruition. It took Stalin quite some time to gauge the actual position of TN's coffers. A white paper released last year said that in 2020-2021, the State's revenue deficit was Rs 61,320 crore or 3.16% of the Gross State Domestic Product (GSDP), which is beyond the permissible limit of 3%. So, measures like offering free travel for women in buses and relaxed old age pension norms place a massive burden on the exchequer.

What has been revelatory is how Stalin has been slowly shaping himself into a leader of national relevance – whether it's the push against enforcing NEET, and the three language policy of the NEP 2020, or even the formation of All India Federation for Social Justice, which aims at countering the communally divisive narratives percolating India's politics. While it is premature to assume such alliances and wishlists will take off as per Stalin's desire, what is evident is that Stalin is building himself a legacy, similar to that of his predecessor, which will in turn ensure the longevity of the DMK.

the pioneer
05-Mar-2022

The Indian Union is facing a big threat from divisive forces. We need to come together.

Tamil Nadu Chief Minister
— MK Stalin

சமத்துவம் பேணும் அரசு

உள்ளாட்சி தேர்தலில் பெண்களுக்கு 50 சதவீத ஒதுக்கீடு வழங்கி, அவர்களை மேயர் மற்றும் தலைவர் பதவிகளில் கம்பீரமாக அமர வைத்து 'சிங்கப்பெண்களாக' வலம் வர விட்டிருக்கிறது திமுக அரசு. மொத்தமுள்ள 21 மேயர்களில் 11 பேர் பெண்கள். இது 50 சதவீதத்தை விட அதிகம். 138 நகராட்சிகளில் 69 இடங்கள், 490 பேரூராட்சிகளில் 245 இடங்களை பெண்களுக்கு ஒதுக்கி உள்ளது. வார்டுகளிலும் சரிபாதியாக பெண்களுக்கு ஒதுக்கப்பட்டன. பொது இடங்களிலும் பெண்கள் போட்டியிட்டு வென்றுள்ளனர். சென்னை மாநகராட்சியில் 102 பெண் கவுன்சிலர்கள், 98 ஆண் கவுன்சிலர்கள் உள்ளனர்.

"சமைக்கின்ற கரங்களும் சரித்திரம் படைப்பதை பூமி பார்க்க வேண்டும்" என்ற கற்பனை வரிகள் உண்மையாகி உள்ளது. இதுவரை இந்திய அளவில் பெண்களுக்கு சம உரிமை வழங்கி, இதுபோன்ற ஜனநாயக ரீதியிலான தேர்தல் நடத்தப்படவில்லை என்ற பேச்சு பரவலாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. வளர்ச்சித்திட்டங்களில் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக இருக்கும் தமிழக அரசு, உள்ளாட்சி தேர்தலில் பெண்களுக்கு சம உரிமை வழங்கி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது.

இன்று, நேற்றல்ல... பெண்கள் முன்னேற்றத்திற்காக திமுக ஆரம்ப காலங்களில் இருந்தே பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. பெண்கள் அரசியலில் அவ்வளவாக ஆர்வம் காட்டாத காலமது. இதை உணர்ந்து அவர்களையும் அரசியலில் கொண்டு வர முடிவு செய்தார் அறிஞர் அண்ணா. இதற்காக திமுக மகளிர் மன்றத்தை 1956ல் உருவாக்கினார். கலைஞர் முதல்வராக இருந்தபோதுதான், 1989ல் முதன்முதலாக தர்மபுரி மாவட்டத்தில் மகளிர் சுயஉதவி குழுக்கள் தொடங்கப்பட்டது. பெண்கள் சொந்தக்காலில் நின்று முன்னேற வேண்டுமென்ற எண்ணத்தில் துவங்கப்பட்ட இக்குழுவில், தமிழகத்தில் மட்டும் சுமார் 60 லட்சத்துக்கும் மேற்பட்ட பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

திமுக ஆட்சியில் கலைஞர் முதல்வராக இருந்தபோது, உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்த மு.க.ஸ்டாலின், மகளிர் சுய உதவிக்குழுக்களை வளர்ச்சிப்பாதையில் கொண்டு சென்றார். அவர்களுக்கு சுழல்நிதி, மானியம், வங்கிக்கடன் பெறுவதற்கு பேருதவியாக இருந்தார். மேலும், திமுக ஆட்சியில்தான் சொத்தில் பெண்களுக்கு சம உரிமை, வேலை வாய்ப்பில் 30 சதவீத இட ஒதுக்கீடு, ஏழைப்பெண்களுக்கு திருமண உதவித்தொகை உள்ளிட்ட சட்டங்கள் கொண்டு வரப்பட்டன.

மேலும், மு.க.ஸ்டாலின் முதல்வராக வந்தவுடன் பெண்களுக்கு அரசு நகர பேருந்துகளில் இலவச பயணம் என்று அறிவித்தார். இத்திட்டத்தின் மூலம் கிராமங்களில் எத்தனையோ பெண் கூலித்தொழிலாளர்கள், ஏழைப்பெண்கள் பயனடைந்து வருகின்றனர். பெண்களுக்கான வேலை வாய்ப்பு இட ஒதுக்கீடு 40 சதவீதமாக உயர்த்தப்படுமென ஏற்கனவே அறிவித்துள்ளது திமுக அரசு. தொடர்ந்து மக்கள் மற்றும் பெண்கள் முன்னேற்றத் திட்டங்களை செயல்படுத்தி வரும் திமுக அரசுக்கு மக்கள் பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர்.

முரசொலி

06-Mar-2022

"கேள்வி - பதில்"

விளையாட்டு
வீரனின் வியர்வைக்கும்
விவசாயிகளின்
வியர்வைக்கும்
என்ன
வித்தியாசம் ?

விளையாட்டு
வீரனின்
வியர்வை
பரிசுகளைக்
குவிக்கும்.
விவசாயிகளின்
வேர்வை
தரிசுகளை
விளை நிலம்
ஆக்கும்.

.....முத்தமிழறிஞர் கலைஞர்

தினத் தந்தி
DAILY THANTHI
07-Mar-2022

வழிகாட்டுகிறார்கள் மோடியும், மு.க.ஸ்டாலினும்...

பொதுவாக இன்றைய காலகட்டங்களில் மக்களுக்கு வாசிப்பு பழக்கம் வெகுவாக குறைந்துவிட்டது. பத்திரிகைகளையும், புத்தகங்களையும் படித்தால் தான் அறிவாற்றல் வளரும். முழுமையான தகவல்களை பெறமுடியும். பரபரப்பான உலகில் பத்திரிகை படிப்பதற்கும், புத்தகங்களை படிப்பதற்கும் நேரத்தை ஒதுக்கினால்தான் நாட்டில் என்ன நடக்கிறது, நம் ஊரில் என்ன நடக்கிறது? என்பதை அறிந்துகொள்ள முடியும்.

பொதுவாக தலைவர்கள், பிரமுகர்கள், பெரியவர்களை பார்க்கும்போது பொன்னாடை போர்த்துவதும், மாலைகள் அணிவிப்பதும், பூங்கொத்துகள் வழங்குவதும் ஒரு வாடிக்கையாக இருந்து வருகிறது. ஆனால் பொன்னாடைகளை அந்த ஒரு சில வினாடிகள் தோளில் போட்டுக்கொள்கிறார்களே தவிர, அதற்கு பிறகு அதன் பயன்பாடு எதுவுமில்லை. அதுபோல பூங்கொத்துகள், மாலைகளை மரியாதைக்காக போடும்போது அந்த ஒரு சில

வினாடிகள்தான் அவர்கள் கழுத்திலோ அல்லது கையிலோ இருக்கும். அடுத்த நிமிடம் பயனற்றதாக போய்விடும்.

கடந்த 2017-ம் ஆண்டு ஜூன் மாதம் கேரள மாநிலம் எர்ணாகுளத்தில் உள்ள புனித தெரசா கல்லூரியில் நடந்த விழாவில் பிரதமர் நரேந்திரமோடி பேசும்போது, "நமக்கு பூங்கொத்துக்கு பதிலாக புத்தகம் பரிசாக வழங்கும் பாரம்பரியம் வேண்டும். நான் மக்களை கேட்டுக்கொள்வதெல்லாம் பூங்கொத்துக்கு பதிலாக புத்தகங்களை தாருங்கள் என்பதுதான். அதுதான் இன்றைய காலகட்டத்துக்கு மிகவும் தேவையானது. பல ஆண்டுகளுக்கு முன்பே ஒவ்வொரு கிராமத்திலும் புத்தகக்கோவில் அமைக்கவேண்டும் என்று மக்களிடம் கோரிக்கை விடுத்தேன். இந்த புத்தகக்கோவிலை 50 அல்லது 100 புத்தகங்களை கொண்டு தொடங்கலாம். யாரையாவது வாழ்த்தும்போது, பூங்கொத்துக்கு பதிலாக புத்தகம் கொடுத்து வாழ்த்தினால் அது பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தும்", என்று கூறியிருந்தார். அந்தவகையில் பிரதமரை பார்க்க செல்பவர்கள் ஒரு மலரையும், ஒரு புத்தகத்தையும் கொடுத்து வருகிறார்கள்.

தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பே, "பொது நிகழ்ச்சிகளில் பொன்னாடைகள், பூங்கொத்துகளுக்கு பதிலாக எனக்கு புத்தகங்களை கொடுங்கள்", என்று அறிவித்திருந்தார். அதுமட்டுமல்லாமல், "என்னை சந்திக்க வருபவர்கள் மட்டுமல்ல, பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு நான் செல்லும்போதும் அங்கே புத்தகம் கொடுக்கும் பழக்கம் பரவி வருவதை பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. இதுவரை எனக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்ட 1.5 லட்சத்துக்கும் அதிகமான புத்தகங்களை இலங்கை யாழ்ப்பாணம் நூலகம் தொடங்கி பல வெளிநாடுகளுக்கும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள சிறிய நூலகங்களுக்கும் நான் வழங்கி இருக்கிறேன். பல ஊர்களில் இருந்து நூலகங்கள் சார்பில் எனக்கு கடிதங்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. அந்தவகையில் தமிழகத்தின் அறிவுத்திறன் மேம்பாடு எந்தளவு பெரிதாக வளர்ந்திருக்கிறது என்பதை இந்த புத்தகங்களை அன்பளிப்பாக கொடுக்கிற அந்த காட்சியை பார்க்கும்போது நான் உணருகிறேன்", என்று சமீபத்தில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமிதமாக குறிப்பிட்டிருந்தார்.

முதல்-அமைச்சர் காட்டிய வழியை பின்பற்றி மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தன்னிடம் உள்ள 2 ஆயிரம் புத்தகங்களை அன்னியூர் என்ற ஊருக்கு அனுப்பி வைத்தார். இவ்வாறு தலைவர்கள் எல்லோருமே பூங்கொத்துகள், பொன்னாடைகளுக்கு பதிலாக நூல்களை பெறுவதன் மூலம் புதிய புதிய எழுத்தாளர்கள் உருவாகுவார்கள். ஏற்கனவே எழுத்து பணியில் உள்ளோருக்கும் இது உத்வேகமாக இருக்கும். நலிந்து கொண்டிருக்கும் பதிப்பக தொழிலும் உயிர்பெறும். இந்த புத்தகங்களை தலைவர்கள் யாருக்காவது வழங்கும்போது, அவர்களுக்கும் வாசிப்பு பழக்கம் ஏற்படுவதற்கும் உதவியாக இருக்கும்.

ஆக நரேந்திரமோடி, மு.க.ஸ்டாலின் போன்ற தலைவர்கள் ஏற்றிவைக்கும் தீபஒளி, அறிவு வெளிச்சத்தை தருவதற்கு பெரிய உந்துசக்தியாக இருக்கிறது. தலைவர்கள் காட்டும் வழியை மற்றவர்களும் இப்போது பின்பற்ற தொடங்குவதால், புத்தகங்களை எழுதும் பணி, அச்சிடும் பணி, பதிப்பக பணிகள் எல்லாவற்றுக்கும் மேலாக மக்களுக்கு புத்தகங்களை வாங்கும், படிக்கும் ஆர்வமும் புதிய உச்சத்தை காணப்போகிறது என்பதில் சந்தேகமில்லை.

உறவுகள் மேம்படும்

தமிழக, கேரள உறவில் நீண்டகால நெருடலாக இருக்கும் ஒரு விஷயம் - பெரியாறு அணை. விவசாயம், குடிநீர் உள்ளிட்ட தமிழகத்தின் நியாயமான கோரிக்கைகள் அங்குள்ள சில அமைப்புகளால் அரசியலாக்கப்படுவதால் பெரியாறு அணையில் நீர் தேக்குவது சிக்கலாகவே நீடிக்கிறது. தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, நல் வாய்ப்பாக, தமிழக, கேரள முதல்வர்கள் இடையில் பரஸ்பர புரிதல், நட்புணர்வு நிலவுகிறது. பராமரிப்புப் பணிக்காக, அணைப்பகுதியில் உள்ள சில மரங்களை வெட்ட அனுமதி கோரி சில நாட்களுக்கு முன்பு தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கேரள முதல்வர் பினராயி விஜயனுக்கு கடிதம் எழுதியுள்ளார். பெரியாறு அணை பலப்படுத்தும் பணிகளுக்கு கேரள அரசு உரிய ஒத்துழைப்பை தந்தால் அதை தமிழக அரசு சிறப்புற நிறைவேற்றும்.

இரு மாநில மக்களின் உறவில் பெரியாறு அணை முக்கியப் பங்கு வகிக்கிறது. அணையில் நீர்தேக்குவது குறித்து முடிவு செய்வதற்காக 1979ம் ஆண்டு தமிழக - கேரள அமைச்சர்கள், அதிகாரிகள் அளவிலான பேச்சுவார்த்தை திருவனந்தபுரத்தில் நடந்தது. அன்றைய தமிழக முதல்வர் எம்ஜிஆர், தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் ராஜா முகமது மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டத்தில் தான் அணையின் நீர்த்தேக்க அளவு 152ல் இருந்து 136 அடியாக குறைக்க முடிவெடுக்கப்பட்டது. அன்று துவங்கியது பிரச்னை.

இதற்கு பிறகு தான் தமிழகத்தில் பல்லாயிரம் ஏக்கர் பரப்பிலான விவசாயம் குறைந்தது. அணையின் நீர்மட்டத்தை குறைக்கும் முடிவு, ஏராளமான தென் தமிழகத்து விவசாயிகளை நாடோடிகளாக, கட்டிடக் கூலிகளாக மாற்றியது. 152 அடியாக இருந்தபோது 8,436 ஏக்கராக இருந்த நீர் தேங்கும் பரப்பளவு, 136 அடியாகக் குறைக்கப்பட்ட போது 7,080 ஏக்கராக குறைந்தது. இந்த 1,356 ஏக்கரில்தான் கேரள முக்கியப் புள்ளிகள் பலர் சொகுசு வீடுகள், ரிசார்ட்டுகள் கட்டியுள்ளனர். நீர்மட்டம் உயர்த்தப்பட்டால், ஆக்கிரமிப்பாளர்கள் சிக்கலை சந்திக்க வேண்டும். இவர்கள் தரும் அழுத்தம் காரணமாகவே, பெரியாறு அணை விவகாரம், ஒரு தீர்வை எட்ட முடியாமல் இழுத்துக் கொண்டே செல்வதாக தென்மாவட்ட விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதை முறியடிக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு, உச்சநீதிமன்றத்தில் பலமான வாதங்களை முன்வைத்து வருகிறது. தமிழகத்திலுள்ள மின் உற்பத்தி திட்டங்களில் கிடைக்கும் மின்சாரத்தில் பாதி மத்திய தொகுப்பிற்கும், அங்கிருந்து பிற மாநிலங்களுக்கும் பகிர்ந்து கொடுக்கப்படுகிறது. கூடங்குளத்தில் உற்பத்தி செய்யப்படுவதிலும் பாதி கேரளா உள்ளிட்ட பிற மாநிலங்களுக்கு போய் சேருகிறது. தன்னிடம் உபரியாக இருக்கும் பல்வேறு இயற்கை வளங்களை தமிழகம் பிற மாநிலங்களுக்கு பகிர்ந்து கொடுக்கிறது. தமிழகத்தோடு நெருங்கிய உறவும், பரிவர்த்தனைகளும் கொண்ட நீர் உபரி மாநிலமான கேரளா அவ்வாறு நடந்து கொண்டால் இரு மாநில மக்களும் மகிழ்வார்கள். உறவுகளும் மேம்படும்.

the pioneer
08-Mar-2022

Need to follow Constitution

Article 1 of our Constitution states: "India, that is Bharat, shall be a Union of States." Bhimrao Ramji Ambedkar said it worked as a federal Constitution under normal conditions and as unitary during war or crisis. However, the current ruling regime wants the Opposition-ruled States to implicitly toe its line and express no dissent to their diktats. Sangh politicians or *pracharaks* are sent to the States to occupy the Raj Bhavans to torment the Governments there. The Centre legislates on matters that form part of the State List in the Constitution without discussion with the federal States, and so on.

People in the country are fighting back to re-establish the doctrinal formulation that "the general and regional Governments are each within a sphere of co-ordinate and independent; and not subordinate to each other". The results of recent elections in Kerala, Bengal and Tamil Nadu, read with that in Andhra Pradesh, Odisha, Maharashtra and Telangana earlier, and the massive victories of the regional parties in local body elections in Odisha, West Bengal, Tamil Nadu, Andhra Pradesh and Maharashtra show that a silent change in Indian politics is taking place. A shift in mood, though gradual, in favour of regional parties, is noticeable now. The results in five States will set the trajectory of the course of events in the country.

Haridasan Rajan | *Kozhikode*

தலைமுறை, தலைமுறைக்கும் பயன்படும் 'நான் முதல்வன்' திட்டம்

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்றைய தலைமுறை மட்டுமல்லாமல், எதிர்கால தலைமுறையும் பயன்படவேண்டும் என்ற தொலைநோக்கு பார்வையில் பல புதிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். தன்னுடைய ஆட்சியை 'திராவிட மாடல்' ஆட்சி என்று கூறுகிறார். தான் எழுதிய 'உங்களில் ஒருவன்' என்ற தன் வரலாற்று நூலின் முதல் பாகத்தை வெளியிட்ட விழாவிலேயே அவர், "எனது தத்துவம் என்பது திராவிட மாடல் ஆட்சி. அதாவது திராவிடவியல் ஆட்சி முறை" என்பதை பறைசாற்றினார்.

திராவிட மாடல் ஆட்சி என்பதை அவர் ஒரே வாக்கியத்தில் சொல்லும்போது, 'அனைவரையும் உள்ளடக்கிய அனைத்து துறை வளர்ச்சி' என்று கூறுகிறார். அந்தவகையில், இன்றைய இளைய தலைமுறை வளர்ச்சியடையவேண்டும், எல்லோரும்

எல்லாமும் பெறவேண்டும் என்ற சீரிய நோக்கில் தமிழ்நாட்டின் முதல்-அமைச்சராக இருக்கும் மு.க.ஸ்டாலின் பள்ளி, கல்லூரி மாணவ-மாணவிகள், இளைஞர்கள், ஏதாவது ஒரு திறனில் 'நான் முதல்வன்' என்ற பெருமிதம் கொள்ளத்தக்க அளவில் அவர்களுக்கு சிறப்பான திறன் மேம்பாட்டு பயிற்சிகளை அளிக்கும் அவரது கனவு திட்டத்தை தொடங்கியுள்ளார்.

'நான் முதல்வன்' என்ற இந்த திட்டத்தை ஆழமாக படித்து பார்த்தால் இன்றைய இளைஞர்களின் எதிர்கால வாழ்வை ஒளிமயமானதாக மாற்றப்போகும் திட்டம் என்பது மட்டும் தெள்ளத் தெளிவாக தெரிகிறது. ஆட்சி பொறுப்பை ஏற்ற உடனேயே முதல்-அமைச்சர், '2030-ம் ஆண்டுக்குள் தமிழகத்தில் ரூ.75 லட்சம் கோடி பொருளாதாரத்தை உருவாக்கவேண்டும் என்பதே தனது லட்சியம்' என்று கூறினார். இந்த அளவில் பொருளாதாரம் வளரவேண்டும் என்றால் 2026-ம் ஆண்டுக்குள் 20 லட்சம் இளைஞர்கள் திறன் மேம்பாடு அடையவேண்டும்.

இப்போதெல்லாம் மாணவர்கள் நிறையபேர் படித்தவர்களாக இருக்கிறார்கள். நிறைய தொழிற்சாலைகளும் தொடங்கப்பட்டு வருகிறது. ஆனால் அந்த தொழிற்சாலைகள் எதிர்பார்க்கும் திறன் நமது மாணவர்களிடம் இல்லை. வேலைவாய்ப்பு இருந்தாலும் அதைப்பெறும் திறன் இல்லாததுதான் மாணவர்களிடம் பெரிய குறையாக இருக்கிறது. அந்தவகையில், முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கியுள்ள 'நான் முதல்வன்' திட்டத்தின் முக்கிய நோக்கம், ஆண்டுக்கு 10 லட்சம் இளைஞர்களை கல்வியில், அறிவில், சிந்தனையில், ஆற்றலில், தொழில்திறமையில், தனித்திறமையில் மட்டுமல்லாமல் நிறுவனங்களை நடத்தும் தொழில்முனைவோராகவும் மேம்படுத்தி நாட்டுக்கு வழங்குதல் ஆகும்.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் படிக்கும் மாணவ-மாணவிகள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக என்ன திறமை இருக்கிறது? என்பதை அடையாளம் கண்டு, அந்தந்த துறைகளில் அவர்களை மேலும் ஊக்குவிக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தான் இந்த திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். அதுமட்டுமல்லாமல், திறமையின் அடிப்படையில் அவர்கள் மேற்கொண்டு என்னென்ன படிக்கலாம்? எங்கு படிக்கலாம்? எப்படி படிக்கலாம்? என்றும் வழிகாட்டப்படும்.

தமிழில் தனித்திறன் பெற சிறப்பு பயிற்சி அளிப்பதோடு மட்டுமல்லாமல், ஆங்கிலத்தில் எழுதவும், சரளமாக பேசவும், நேர்முகத்தேர்வில் எப்படி கலந்துகொள்வது? என்பது தொடர்பாகவும் மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்படும். 9-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை இதற்காக தனி கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டமும் வகுக்கப்படும். தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப பள்ளிக்கூட மாணவ-மாணவிகளுக்கு அவர்கள் எதிர்காலத்தை கருத்தில்கொண்டு 'கோடிங்', 'ரோபோடிக்ஸ்' போன்ற பயிற்சிகளும் அளிக்கப்படும்.

தேவைக்கேற்ப வெளிநாட்டு மொழிகளும் அவர்களுக்கு பயிற்றுவிக்கப்படும். இதுபோன்ற பல அம்சங்கள் இந்த திட்டத்தின் கீழ் இடம்பெறும். மொத்தத்தில் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்புகளை பெறவும், பிற நிறுவனங்களில் வேலைக்காக கதவை தட்டுபவர்களாக மட்டுமல்லாமல், இன்றைய மாணவர்களே நாளை புதிய நிறுவனங்களை தொடங்கி மற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் உருவாகுவதை உறுதி செய்யும் இந்த 'நான் முதல்வன்' திட்டம் ஒரு முத்திரை பதித்துள்ள திட்டம் ஆகும். ஒவ்வொரு மாணவரும் தங்கள் துறையில் 'நான் முதல்வன்' என்ற பெருமையை பெறும் இந்த திட்டம் தமிழகத்துக்கு புதிய பெருமையை சேர்க்கும்.

மகளிர் நலன் அரசு

மகளிருக்கு அதிகாரம் வழங்கும் முயற்சியில் இந்தியாவிலேயே அனைத்து மாநிலங்களையும், பின்னுக்கு தள்ளி முந்தி நிற்கிறது தமிழக அரசு. காரணம் முதல்வர் மு.க.ஸ்டாலின். தீட்டுகிற ஒவ்வொரு திட்டத்திலும் மகளிர் நலன், அவர்கள் வாழ்க்கைத்தரம் உயர்த்தும் வழிகள் குறித்து ஆராய்ந்து அதற்கு ஏற்றார் போல் திட்டங்களை மாற்றி அமைத்து வலுசேர்த்து வருகிறார். அதனால் தான் மகளிர் நலன் காக்கும் அரசு என்று அனைவராலும் பாராட்ட பெறும் தகுதியை ஆளும் திமுக அரசு பெற்று இருக்கிறது.

தேர்தல் வெற்றி பெற்ற பிறகு பெண்களுக்கு இலவச பஸ் பயணத்திற்கு அனுமதி அளித்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின். படிப்பு, வேலை உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்காக, பஸ் பயணத்திற்காக திண்டாடும் பெண்களுக்கு இலவச பயணம் நிச்சயம் தன்னம்பிக்கையை அளித்து இருக்கிறது. தினமும் 36 லட்சம் பெண்கள் இந்த இலவச பயணத்தை பயன்படுத்துகிறார்கள் என்றால் முதல்வர் அறிவிப்பின் மகிமை புரிந்திருக்கும். திமுக அரசு எப்போது எல்லாம் அமைகிறதோ அப்போது எல்லாம் மகளிர் நலன் காக்கும் திட்டங்கள் அதிக அளவில் வகுக்கப்படும். அந்த வகையில் முதல்வர் மு.க.ஸ்டாலினின் மனதுக்கு மிகவும் நெருக்கமான மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.20,479 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 3,93,580 குழுக்கள் பயன் பெற்றுள்ளன என்றால் இந்த குழுக்களில் இடம் பெற்றுள்ள எத்தனை குடும்பங்கள் மேம்படும்?. அவர்கள் வாழ்க்கைத்தரம் உயரும் என்பதை கணிக்கலாம். அதோடு புதிதாக 36,321 சுய உதவிக்குழுக்கள் தொடங்க அனுமதியும் அளிக்கப்பட்டு இருக்கிறது.

தற்போது நடந்து முடிந்த நகர்புற உள்ளாட்சி தேர்தலில் கூட பெண்களுக்கு 50 சதவீத இடங்கள் வழங்கப்பட்டன. இதன் விளைவாக உள்ளாட்சி அதிகாரத்தில் ஆண்களை விட அதிக அளவில் பெண்கள் வெற்றி பெற்று இருக்கிறார்கள். 21 மேயர்பதவிகளில் 11 மேயர் பதவிகள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன என்றால் பெண்கள் அதிகாரம் பெறுவதில் நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டுள்ள அக்கறை இதில் புலனாகும். சென்னை, மதுரை, கோவை போன்ற முக்கிய நகரங்களின் மேயர் பதவிகள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இவை எல்லாவற்றையும் விட பணிபுரியும் மகளிர் நலன் காக்க அவர்களது பேறுகால விடுமுறையை 9 மாதத்தில் இருந்து 12 மாதங்களாக உயர்த்தி உத்தரவிட்டு இருக்கிறார்.

திருமண நிதி உதவித் திட்டங்கள், பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம், இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதிகள், மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் இலவச சீருடை தைத்து வழங்குதல் என்று சமூக நலத் துறை மூலம் எண்ணற்ற, ஏராளமான திட்டங்கள் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாதவகையில் தமிழகத்தில் அதிகம். அதிலும் மகளிர் உரிமை பெறும் திட்டம் என்றாலும் அதிலும் முந்தி நிற்பது நமது தமிழகம் தான். அதற்கு காரணம் நம் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

THE HINDU
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878
10-Mar-2022

State rolls out CM's fellowship programme

24 persons will be selected for research in 12 thematic areas

DENNIS S. JESUDASAN
CHENNAI

The State government has issued orders for implementing the Chief Minister's Fellowship Programme (TNCMFP) during 2022-24 at an estimated cost of ₹5.66 crore.

While 24 persons would get the fellowship for researching in 12 identified thematic areas (two fellows for each area) for synergies in implementation, monitoring and evaluation by grouping the various departments and schemes, another six would be in the Monitoring Cell of the Special Programme Implementation Department.

The selected Fellows would identify and monitor issues, and aid data-driven decision-making. • SPECIAL ARRANGEMENT

12 areas for research

Twelve areas identified for research are- augment water resources; increase agricultural production and create marketing linkages; provide housing for all; improve educational standards; boost health indicators; achieve social inclusion; upgrade infrastructure and facilitate industrial development; provide skill development and entrepreneurship development; facilitate institutional credit; protect heritage and culture; achieve ecological balance and enhance data governance.

The role of the selected Fellows will be to identify and monitor issues, and aid data-driven decision-making in the assigned programmes to address the gaps and optimise the service delivery. They have to undertake visits to districts to assess ground situation, elicit feedbacks and assist in appropriate follow-up actions.

They will get a monthly remuneration of ₹50,000 each and an additional allowance of ₹10,000 each to meet their incidental expenses. "Appropriately placed under the Chief Minister's Office/departments concerned, the Fellows will identify, monitor issues and aid in decision making of the assigned programmes to address the gaps and optimise qualitative delivery of services," a G.O. said.

The TNCMFP aspires to create a pool of knowledgeable and action-oriented resources to work on policy efficacy, identify gaps, build internationally referred benchmarks for policy and programme outcomes. It also aims at evolving a 'programme structure', to conceive and implement a framework of monitoring and evaluation, to develop the Key Performance Indicators (KPIs) for service delivery, among other objectives.

BIM to be partner

Bharathidasan Institute of Management (BIM) in Tiruchi, which is functioning as a not-for-profit society, registered under the Societies Registration Act, has been proposed to be the academic partner for the fellowships. A detailed Memorandum of Understanding (MoU) is to be entered into with BIM in this regard.

The State government also issued orders to accord financial sanction for ₹41.75 lakh for the financial year 2021-2022. The selection process would have three stages- preliminary assessment (internet-based test), comprehensive examination (written test) and a personal interview.

A candidate must hold a first class in bachelor's degree of professional courses (Engineering, Medicine, Law, Agriculture, Veterinary Science) or first class in Master's degree in Arts/Science from any of the universities. Candidates with a Ph.D. would be preferred. Work experience would be an added advantage and a working knowledge of Tamil is mandatory.

The candidates must be aged between 22-30 years at the time of applying for fellowship. For candidates of the SC/ST category, the maximum age limit is 35 years and for candidates of the BC/MBC category, it shall be 33 years. "The reservation policy of the Government of Tamil Nadu followed in admissions to academic institutions will apply."

the pioneer

10-Mar-2022

TINA?

The Opposition needs to throw up a worthy alternative to the BJP in the next LS polls

In an overt attempt to rally the non-NDA parties against the BJP ahead of the 2024 parliamentary elections, West Bengal Chief Minister Mamata Banerjee has again sounded the bugle for the Opposition parties to unite. Ridiculing the strength of the saffron outfit in Parliament and most of the State Assemblies, she asserted that the BJP was in power at the Centre only because people didn't see a viable alternative to it, not because it was worthy of leading them, and that it would be ousted the day the Opposition cobbled up a strong enough recourse. To achieve this end, she advocated coming together of her party, the TMC, along with other like-minded groups in the Opposition camp. She actually does have a point. As per the Constitution, the main role of the Opposition in Indian democracy is to question the Government of the day and hold it accountable to the public. This also helps fix the ruling party's mistakes or oversight. The Opposition must ensure that the Government does not take any steps which might have a negative effect on our nation. Its role in the legislature is basically to check the excesses of the ruling or dominant party, but not to be totally antagonistic.

In fact, as recently as on November 26, 2021, President Ram Nath Kovind had underlined that the "Opposition is, in fact, the most important element of democracy". Be it the AAP or other satraps in States across India, it is vital to have a vibrant Opposition. But sadly, they practically stand no chance in the face of the brute majority the BJP-led NDA enjoys in Parliament. For all practical purposes, the Opposition benches are lying vacant or their members are in a state of suspended animation. Of late, however, Mamata, Telangana Chief Minister K Chandrashekar Rao and their Tamil Nadu counterpart MK Stalin are trying their best to create ripples in Parliament and take the formidable BJP to task over issues of regional and national importance. At the national level, the Congress is in a moribund state but if it performs well in the just-concluded Assembly polls, the necessity to carry it along will become all the more imperative. These leaders need to draw more politicians with a good pan-India image into their fold; also, they should speak in one voice. Any infighting well before the final push may sound the death knell for Opposition unity and its ambition.

புத்தாய்வு திட்டம்

ஒரு நாட்டின் முன்னேற்றமும், மாநிலத்தின் முன்னேற்றமும் இளைஞர்கள் கையில் தான் இருக்கிறது. படித்த படிப்புக்கு சரியான வேலையில்லை என்று பட்டதாரி இளைஞர்கள் கவலைப்படாத நாளில்லை. மேலும் சுயதொழில் தொடங்க போதிய நிதியுதவியும் வழிகாட்டியும் இல்லை என்று ஆதங்கப்படுபவர்களும் உண்டு. படித்த அனைவருக்கும் அரசு வேலை வழங்குவது என்பது ஆகாத காரியம். இருந்தாலும் இளைஞர்கள் தங்கள் படிப்புக்கேற்ப தங்கள் திறனை வளர்த்துக்கொள்ள அரசு வழிகாட்டுகிறது. அவர்களை ஊக்கப்படுத்துகிறது. பயிற்சி அளிக்கிறது. இதில் சேர்ந்து திறன் வளர்த்துக்கொள்ளும் இளைஞர்கள் சுயமாகவும், தனியார் துறையிலும் சிறந்து விளங்க முடியும் என்பது அரசின் நம்பிக்கை. கொரோனா காலகட்டத்தில் நேரடி தேர்வு இல்லாமல் ஆன்லைன் தேர்வுகளை எழுதி பல இளைஞர்கள் தங்கள் பொறியியல் பட்டப்படிப்பை முடித்தார்கள். கொரோனா தொற்றால் பல தொழில்கள் முடங்கியதால் பல கல்லூரிகளில் காம்பஸ் நேர்காணல் நடக்கவில்லை. மேலும் கொரோனா காலகட்டத்தில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் என்ற முத்திரை பதிக்கப்பட்டு பல தனியார் நிறுவனங்கள் அவர்களை நிராகரித்து வந்தன. இதனால் இளைஞர்கள் பலர் விரக்தி அடைந்தனர்.

இதையெல்லாம் கருத்தில் கொண்டு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு, இளைஞர்களின் திறனை வளர்க்கும் வகையில் அவர்களது தொழில் முறை மற்றும் கல்வி அடிப்படையில் 2 ஆண்டுகாலம் ஊக்க ஊதியத்துடன் பயிற்சி வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த நடைமுறைக்கு புத்தாய்வு திட்டம் என்று பெயரிட்டு சரியான இளைஞர்களை தேர்வு செய்து அவர்களின் திறன்களை மேம்படுத்தி பயன்படுத்த இருக்கிறது. இந்த திட்டத்தில் தேர்வு செய்யப்படும் இளைஞர்கள் அரசுக்கு உதவியாக அரசு திட்டங்களை செயல்படுத்துவதில் உறுதுணையாக இருப்பார்கள். இந்த திட்டத்தில் 2 ஆண்டு ஊக்க ஊதியத்துடன் சேரும் இளைஞர்கள் முதல்வர் அலுவலகம், தமிழக அரசின் முதன்மை திட்டங்களை செயல்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

இந்த புத்தாய்வு திட்டத்துக்காக நடப்பாண்டில் 30 இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி வழங்கப்பட இருக்கிறது. இதற்காக தமிழக அரசு ₹5.66 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. இளம் வயதிலேயே அரசியலில் கால்பதித்த தமிழக முதல்வர் வேலையில்லா பட்டதாரிகளின் வலியும் வேதனையையும் நன்கு அறிந்தவர். உணர்ந்தவர். எனவே, இளைஞர்களின் வாழ்வு முன்னேற்றபாதையில் வீறு நடை போட வசதியாக அரசு சார்பில் திறன் வளர்க்கும் புத்தாய்வு பயிற்சி திட்டத்தை அறிமுகம் செய்து வைத்துள்ளார். இதன் மூலம் இளைஞர்கள் அரசு துறையில் நேரடியாக பணிபுரிந்து அனுபவம் பெறுவார்கள். அந்த அனுபவத்தை மூலதனமாக கொண்டு தங்கள் திறமையை மேலும் செப்பனிட்டு கொண்டு சுயமாக வாழ்வில் முன்னேற்றம் காணும் மன உறுதியையும், தன்நம்பிக்கையும் பெறுவார்கள் என்பது தொழிலதிபர்கள், தொழில் முனைவோர் மற்றும் கல்வியாளர்களின் கருத்தாக இருக்கிறது.

தினகரன்

12-Mar-2022

வலு சேர்ப்போம்

கோவையில் நேற்று துவங்கிய தென்மண்டல பல்கலைக்கழக துணைவேந்தர்கள் மாநாட்டில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக பேசும்போது, 'ஒன்றிய அரசு தனது அதிகாரத்தை பயன்படுத்தி பிற்போக்கு கருத்துகளை, பாடத்திட்டங்களில் புகுத்தும் போக்கு கவலைக்குரியதாக உள்ளது. கல்வி முழுமையாக மாநில பட்டியலுக்கு மாற்றப்படுவதே இதற்கு சிறந்த தீர்வாக அமையும்' என்றார்.

ஒன்றிய அரசை நோக்கி, முதல்வர் மு.க.ஸ்டாலின் செலுத்தும் அடுத்த அஸ்திரம் இதுவாகும். கடந்த அதிமுக ஆட்சி காலத்தில், தமிழர் உரிமைகள் அனைத்தும் பறிபோயின. ஒன்றிய பாஜ அரசு, தமிழ்நாட்டை கடுமையாக வஞ்சித்தது. ஆட்சி மாற்றத்துக்கு பிறகு, அதிமுக அரசைபோல், ஒன்றிய அரசுக்கு எந்த சூழலிலும் வளைந்து கொடுக்காமல் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாட்டுக்குரிய உரிமைகளை நிலைநாட்டுவதில் உறுதியாக உள்ளார். கடந்த அதிமுக ஆட்சியின் நிறைவில், தமிழக அரசின் கஜானா காலியாகி விட்டது. ஆனாலும், பல சவால்களை எதிர்கொண்டு, வளர்ச்சிக்கான பாதையில் தமிழகத்தை அழைத்துச்செல்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

தமிழகத்தில் கொரோனா தொற்று பரவல் அதிகம் இருந்த காலத்தில், ஆக்சிஜன் சிலிண்டர், கொரோனா தடுப்பூசி மற்றும் மருந்துகள் தேவையை குறிப்பிட்டு, ஒன்றிய அரசிடமிருந்து ஒன்றுவிடாமல், கேட்டுப்பெற்றுக்கொடுத்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின். ''செங்கல்பட்டில் கொரோனா தடுப்பூசி உற்பத்தி மையத்தை துவக்குவோம்'' என முதல்வர் காட்டிய அதிரடி காரணமாக, ஒன்றிய அரசு பணிந்தது. அத்துடன், தமிழ்நாட்டில் கொரோனா தடுப்பூசி தட்டுப்பாடு தீர்ந்தது.

இதேபோல், நீட் தேர்வு ரத்து, 7 தமிழர்கள் விடுதலை விவகாரம், ஹைட்ரோ கார்பன் திட்டம், தமிழகத்திற்கு ஒன்றிய அரசு, தரவேண்டிய ஜிஎஸ்டி பாக்கித்தொகை ரூ.12 ஆயிரம் கோடி, பெட்ரோல்-டீசல் வரி குறைப்பு என ஒவ்வொரு விஷயத்திலும் ஒன்றிய அரசுக்கு தமிழக அரசு அழுத்தம் கொடுத்து வருகிறது. ஜனநாயகத்தின் அடிப்படையான அதிகாரப்பகிர்வு என்பது நடைமுறையில் இல்லாமல், ஒன்றிய அரசிடமே அதிகாரங்கள் குவிந்துள்ளன. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசாகவே இருந்தாலும், ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிலும், அவர்களின் இசைவு பெற்றே செயல்பட வேண்டியுள்ளது.

இதை எதிர்த்து, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடர்ச்சியாக குரல் கொடுத்து வருகிறார். அதில் அடுத்த அஸ்திரம்தான் கல்வியை மாநில பட்டியலுக்கு மாற்றவேண்டும் என்பது. முதல்வரது துணிச்சல், பிற மாநில முதல்வர்களை திரும்பி பார்க்க வைத்துள்ளது. மாநில உரிமையை நிலைநாட்டும் விஷயத்தில், யாருக்கும் அடிபணிய மாட்டோம், எவ்வித சமரசமும் செய்து கொள்ள மாட்டோம் என முதல்வர் காட்டும் அதிரடிக்கு, ஒன்றிய அரசு அடுத்த பதில் சொல்லும் நேரம் நெருங்கிவிட்டது. தமிழ்நாட்டுக்கான உரிமையை மீட்கும் முயற்சியில், முதல்வரின் கரத்துக்கு அனைவரும் வலு சேர்க்க வேண்டியது அவசியம்.

13-Mar-2022

ஜனநாயக மரபுகளை மதித்து – மக்களோடு மக்களாய் இருந்து

மக்களுக்காக தினம் தினம் திட்டங்களை தீட்டி வருகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

'தமிழ் மின்ட்' தொலைக்காட்சிக்கு காவல்துறை முன்னாள் உயர் அதிகாரி திலகவதி ஐ.பி.எஸ். பேட்டி!

முதல்வரின் அறிவுரை

மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை, வனத்துறை அலுவலர்கள் பங்கேற்ற மூன்று நாள் மாநாடு சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்றுள்ளது. தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு நடந்த இந்த மாநாடு முக்கியத்துவம் வாய்ந்தது.

இந்த மாநாட்டில் அதிகாரிகள் அனைவரும் தெரிவித்த கருத்துக்கள், ஆலோசனைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் உன்னிப்பாக கவனித்ததோடு, ஒவ்வொருவருக்கும் தனித்தனியே பதிலளித்த விதம் பாராட்டுக்குரியது. மாநாட்டு நிறைவுரையாக முதல்வர் பேசிய பேச்சு அரசு ஊழியர்களுக்கு என்றென்றும் வழிகாட்டியாக இருக்கும்.

'எல்லாம் என்னால்தான் அப்படி என்று நினைக்கின்ற அளவிற்கு நான் நிச்சயமாக இருக்க மாட்டேன், இருக்கவும் இல்லை. நாம் அனைவரும் சேர்ந்தததுதான் இந்த அரசு' என்று நிறைவுரையில் முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

அதிகாரிகள் சொன்ன பிரச்னைகளை காது கொடுத்து கேட்டதோடு அதற்கான தீர்வுகளையும் முதல்வர் சொன்னது அருமை. சாதி மோதல்கள்- சட்டம் ஒழுங்கு பிரச்னை மட்டுமல்ல, அது சமூக ஒழுங்கு பிரச்னை என்று அதன் மற்றொரு பரிணாமத்தையும் அதிகாரிகளுக்கு உணர்த்தியுள்ளார். தமிழகத்தில் அண்மை காலங்களில், எதற்கெடுத்தாலும் மதச்சாயம் பூசப்பட்டு வருகிறது. இதன் பின்னணியில் அரசியல் நோக்கம் இருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. இது குறித்தும் முதல்வர் மாநாட்டில் பேசியுள்ளார். அரசியல் உள்நோக்கத்தோடு மத மோதல்களை திட்டமிட்டு உருவாக்குகிறார்கள், இதை தடுத்தாக வேண்டும் என்று அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளார். அதோடு, சாதி - மத வக்கிரம் பிடித்தவர்கள் சமூகவலைதளங்களை அழிவுக்குப் பயன்படுத்தி- சமூகத்தில் குழப்பம் ஏற்படுத்த முயல்பவர்களை முளையிலேயே களையெடுக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அரசு திட்டங்களை கண்காணிப்பது எப்படி என்று முதல்வர் சொன்ன அறிவுரை அதிகாரிகள் மட்டுமல்ல, அனைத்து அரசு ஊழியர்களும் கடைபிடிக்க வேண்டிய உத்தி. ஒவ்வொரு திட்டமும் எந்த மாதிரி செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது என்பதை- நாள்தோறும் கண்காணித்தால் போதும்- அந்தத் திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்படத் தொடங்கி விடும் என்று மாபெரும் நிர்வாகவியல் பாடத்தை மூன்றே வரியில் சொல்லிவிட்டார்.

மக்கள் நல திட்டங்களை தீட்டுவதில் நம் முதல்வருக்கு நிகர் யாருமே இல்லை. திட்டங்களை அறிவிப்பதோடு நின்றுவிடாமல், அதை நிறைவேற்றி அரசு ஒரு ரூபாய் செலவு செய்தாலும் அது கடைக்கோடி மக்களை சென்றடைவதை உறுதி செய்யும் வழிமுறையையும் அறிந்த வல்லவர் என்பதை அவர் நிரூபித்துள்ளார். பத்தாண்டு கால அதிமுக ஆட்சியில் படுகுழிக்குள் தள்ளப்பட்ட தமிழகத்தின் பொருளாதாரம் தற்போது மு.க.ஸ்டாலின் ஆட்சியில் வளர்ச்சி பாதையில் செல்லத் துவங்கியுள்ளது. முதல்வருடன் அதிகாரிகளும் கைகோர்த்து உழைத்தால், எல்லா துறைகளிலும் முன்னணி மாநிலம் என்ற பெருமை தமிழகத்திற்கு கிடைக்கும் என்பது உறுதி. மாநிலத்தின் வளர்ச்சியில் முதல்வருக்கு உறுதுணையாக இருப்போம் என்று அதிகாரிகள் அனைவரும் உறுதி ஏற்க வேண்டும்.

தினத்தந்தி DAILY THANTHI

14-Mar-2022

தமிழக மாணவர்கள் அனைவரும் பத்திரமாக மீட்பு!

உக்ரைன் நாட்டில் ரஷியா போர் தொடுத்ததையடுத்து, கடந்த பல நாட்களாக உயிருக்கு பயந்து, சரியான உணவு, தண்ணீர் இல்லாமல் தவித்துக்கொண்டிருந்த தமிழக மாணவர்கள் அனைவரும் மத்திய-மாநில அரசுகளின் முயற்சிகளால் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர். கடந்த சனிக்கிழமையன்று காலையில் உக்ரைன் நாட்டில் இருந்து கடைசியாக தமிழகம் திரும்பிய 9 மருத்துவ மாணவ-மாணவிகளை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை விமான நிலையத்துக்கு சென்று பூங்கொத்து கொடுத்து வரவேற்றது, அந்த மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் அவர்கள் பெற்றோருக்கும், ஏன் தமிழக மாணவர்கள் பத்திரமாக திரும்பவேண்டுமே என்ற பதைபதைப்பில் இருந்த தமிழக மக்களுக்கும் மகிழ்ச்சியை கொடுத்தது.

தமிழக மாணவ-மாணவிகள் உக்ரைன், போலந்து, ரஷியா, சீனா என்ற பட்டியலில் உள்ள பல நாடுகளுக்கு சென்று மருத்துவம் படிக்கிறார்கள். கடந்த மாதம்

24-ந்தேதி ரஷியா போர் தொடுத்த பிறகு உக்ரைன் ராணுவமும் எதிர் தாக்குதலை மேற்கொண்ட நேரத்தில், எங்கும் மழை போல குண்டுகள் பொழிந்தன. ராக்கெட்டுகள் வீசப்பட்டன. தமிழக மாணவர்கள் பதுங்கு குழிகளிலும், மெட்ரோ சுரங்க ரெயில் நிலையங்களிலும், சுரங்க அறைகளிலும், சரியான உணவு, கழிப்பிட வசதி, ஏன் தண்ணீர் கூட இல்லாமல் தவித்துக்கொண்டிருந்தனர். போர் தொடங்கிய உடனேயே தமிழக மாணவர்களை மீட்டு கொண்டுவர முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தீவிர நடவடிக்கை எடுத்தார். முதலில் எவ்வளவு தமிழக மாணவர்கள் உக்ரைன் நாட்டில் படிக்கிறார்கள்? என்ற தகவல் கிடைக்காமல் இருந்தது.

அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வு ஆணையர் ஜெசிந்தா லாசரஸ் மாநில தொடர்பு அலுவலராக, அரசு சார்பில் நியமிக்கப்பட்டார். சென்னையில் கட்டணம் இல்லாத தொலைபேசி எண்களோடு கட்டுப்பாட்டு அறையும் அமைக்கப்பட்டது. உக்ரைனில் உள்ள மாணவர்களோடும் அவர் தொலைபேசியில் தொடர்புகொண்டு, அங்குள்ள இந்திய தூதரகத்திடம் அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்துகொடுக்கவும் கேட்டுக்கொண்டார்.

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், அதேநேரத்தில் உக்ரைனில் சிக்கி தவிக்கும் தமிழர்களை மீட்கவேண்டும் என்று மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியதோடு, பிரதமருக்கும் கோரிக்கை விடுத்தார். தமிழக மாணவர்கள் தாயகம் திரும்புவதற்கான பயண செலவை தமிழக அரசே ஏற்கும் என்று முதல்-அமைச்சர் அறிவித்திருந்தார். மு.க.ஸ்டாலினே சென்னை கட்டுப்பாட்டு அறைக்கு சென்று காணொலி அழைப்பு வாயிலாக உக்ரைனில் மருத்துவம் படிக்கும் 3 மாணவர்களோடு பேசி அவர்களுக்கு, 'நாங்கள் இருக்கிறோம் பயப்படாதீர்கள்' என்று தைரியம் கொடுத்தார். இந்தநிலையில், மத்திய அரசாங்கம் அவர்களை அழைத்துக்கொண்டுவர விமானங்களை ஏற்பாடு செய்திருந்தது.

விமானப்படை விமானங்களும் மீட்பு பணியில் ஈடுபட்டன. ஆனால் மீட்பு விமானங்களில் ஏறவேண்டும் என்றால் உக்ரைனில் உள்ள அண்டை நாடுகளுக்கு மாணவர்கள் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்கு மத்திய அரசாங்கமும், தமிழக அரசும் ஏற்பாடு செய்தது. பல மாணவர்கள் அண்டை நாடுகளின் விமான நிலையங்களுக்கு செல்வதற்கான போக்குவரத்து செலவை தமிழக அரசு ஏற்றுக்கொண்டது. இந்தநிலையில் திருச்சி சிவா எம்.பி. தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர், அதிகாரிகள் அடங்கிய குழு அமைக்கப்பட்டு, அவர்கள் டெல்லியில் முகாமிட்டு மத்திய அரசோடு தொடர்புகொண்டு மீட்பு பணிகளை விரைவுபடுத்தினர். தற்போது தமிழ்நாட்டில் இருந்து உக்ரைனில் மருத்துவம் படித்து வந்த 1,921 மாணவர்களில் 1,890 பேர் பத்திரமாக மீட்கப்பட்டு, தமிழ்நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

இதுதவிர 31 மாணவர்கள் உக்ரைன் மற்றும் அண்டைநாடுகளில் பாதுகாப்பான பகுதிகளில் குடியேறிவிட்டனர். இவர்கள் திரும்ப வருவதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை. ஆக போர்க்களத்தில் பாதுகாப்பற்று இருந்த தமிழக மாணவர்களை மீட்டு கொண்டுவர நடவடிக்கை எடுத்த பிரதமர் மோடி, வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர், மத்திய அரசாங்கம், தமிழக அரசு குறிப்பாக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் மிகவும் போற்றுதலுக்குரிய கருணை அடிப்படையிலான பாராட்டுக்குரிய பணிகளை செய்திருக்கிறார்கள் என்று தமிழ் சமுதாயம் வாழ்த்துகிறது.

the pioneer

14-Mar-2022

CM STALIN'S CLARION CALL

Sir — It is very timely and laudable that Tamil Nadu Chief Minister MK Stalin has advised his law enforcement officers to act tough against bigots who are bent on creating religious conflicts in the State with political motives, particularly when we have witnessed polarisation of people in the name of religion to win elections in the just-concluded Assembly elections in five States. As mentioned by him, such bigots, particularly the communal-minded religious fanatics, misuse the social media platform for destructive purposes like fanning caste and religious conflicts.

A State like Tamil Nadu, which is known for its peace-loving people and its great values, particularly religious tolerance and unity among its people irrespective of their caste, community, creed or religion, should not be allowed to become a platform to promote hate in the name of religion by such brain-washing elements and any such move by anyone should be nipped in the bud. People should be very alert against being carried away by the vicious campaigns made by such fanatics and treat them like untouchables if they want the harmony of love that prevails among the people to be maintained in future also.

Tharcius S Fernando | *Chennai*

மாநில உரிமைகளுக்காகப் போராடும்

ஒரு சாம்பியனாகத் திகழ்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

பிறந்த நாளையொட்டி நடைபெற்ற 'பத்திரிகையாளர் அரங்க'த்தில் மூத்த பத்திரிகையாளர்கள் புகழாரம்!

சென்னை, மார்ச் 15-

சென்னை தெற்கு மாவட்டத்தில் மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான மா.சுப்பிரமணியன் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாளையொட்டி முன்னின்று நடத்திய 'பத்திரிகையாளர் அரங்கம்' என்ற தலைப்பில் நேற்று முன்தினம் கோயம்பேடு சுசீலா பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய மூத்த பத்திரிகையாளர்கள் "மாநில உரிமைகளுக்காகப் போராடும் ஒரு சாம்பியனாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திகழ்கிறார்" என்று புகழாரம் சூட்டினார்கள்.

பத்திரிகையாளர் அரங்கில் நடைபெற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 69 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நடைபெற்ற 'பத்திரிகையாளர் அரங்கில் மூத்த பத்திரிகையாளர்கள் முதல்வர் அவர்களை பாராட்டி பேசிய முக்கிய பகுதிகள் இணையதளத்தில் வைரலாகி வருகின்றன.

இந்த இணையதளத்தில் வைரலாகி வரும் மூத்த பத்திரிகையாளர்களின் பாராட்டுரை வருமாறு:-

இந்து என். ராம்:- திராவிட முன்னேற்றக் கழகம் தான் இன்றைக்கு மாநில உரிமைகளுக்கு ஒரு சாம்பியனாக இருக்க முடியும். இப்படி சாதனை செய்திருக்கிறார்கள். எதனால், அதற்கான காரணத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

காந்தியில் இருக்கிறது.

சமூக நீதியை மையமாக வைத்து இயங்குகிறது.

இதில் இடஒதுக்கீடு மிகவும் முக்கியமானது.

wishing the best;

Our government the best

DMk the best

-என்பதை மார்க் கொடுக்கலாம் என்றால் 100க்கு 100 இன்று நான் சொல்லுவேன்.

மூத்த பத்திரிகையாளர் பகவான் சிங்: உழைப்பு உழைப்பு உழைப்பு அது தான் ஸ்டாலின். உழைப்புக்கு ஒரு உதாரணமாகத் திகழ்ந்த ஒரு தலைவர் சொல்கிறார்.

நக்கீரன் கோபால்:- ஒரு மனிதன் கடுமையான உழைப்பாளியாகவும் இல்லாமல் பெரிய உயரத்திற்கு வந்திருக்கிறார். அவர் கலைஞர் கிடையாது. ஆனா, கலைஞர் இல்லாமல் அவர் கிடையாது. இந்த விழா உழைப்பாளிக்கான ஒரு அற்புதமான விழா. இன்னும் இதே பொறுப்பில் இருக்கும் முதல்வருக்கு நூற்றாண்டு காலம் பிறந்த நாள் கொண்டாட வேண்டும்.

மூத்த பத்திரிகையாளர் மணி:- முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் எனக்கு பிடித்த குணம் என்னவென்றால் கலைஞரிடம் பிடித்த அதே குணம்தான். அனைவரையும் அரவணைத்துப் போவது. திமுக இந்துக்களுக்கு எதிரான கட்சி, அப்படி என்றால் எதுவும் கிடையாது என்பதற்கு இந்த மேடையே சாட்சி. அது எப்படி ஒரு கட்சி, தமிழகத்தை இத்தனை ஆண்டு காலம் இருக்கக் கூடிய கட்சி, 80 சதவிகிதத்திற்கு மேல் இந்துக்களைக் கொண்ட ஒரு மாநிலத்தில் இந்து விரோத கட்சியாக எப்படி இருக்க முடியும் இது பச்சைப் பொய்.

துக்ளக் ரமேஷ்:- முன்களப் பணியாளர்கள் என்று மருத்துவர்களையும், நர்ஸ்களையும் நாம் குறிப்பிடுகிறோம். ஆனால், இந்த மாநிலத்தில் முதலமைச்சரே முன்களப் பணியாளராக மருத்துவமனைக்கு தன்னுடைய உயிரை பணயம் வைத்துச் சென்று, மக்களுக்கு நம்பிக்கையை ஊட்ட வேண்டும். அங்கே பணியாற்றுகின்ற மருத்துவர்களுக்கும், செவிலியர்களுக்கும் உற்சாகத்தை ஏற்படுத்த வேண்டும். அவர்கள் பணியில் களைப்பு இருக்கக் கூடாது என்று ஒரு மாநிலத்தினுடைய முதலமைச்சர் முன்களப் பணியாளராக மாறினார் என்பதை நாம் அப்போது பார்த்தோம்.

மைபா. நாராயணன்:- ஸ்டாலின் என்பவர் ஒரு திணிக்கப்பட்ட தலைவர் அல்ல. அவர் உருவாகி வருகின்ற தலைவர், உருவாக்குகின்ற தலைவர் அல்ல, கலைஞர் போல் என்னால் பேச முடியாது என்று முடியாது ஆனால் எல்லாவற்றையும் முயன்று பார்ப்பேன் என்றார். அங்கேதான் ஸ்டாலின் ஜெயித்தார். முயற்சியும், பயிற்சியும் இருந்தால் வாழ்க்கையில் எதை வேண்டுமானாலும் அடையலாம் என்பதற்கு நிகழ்கால உதாரணமாக இருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

இவ்வாறு பத்திரிகையாளர்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவில் பாராட்டுரை வழங்கினர்.

தினத் தந்தி

15-Mar-2022

திசைகாட்டியாய் அமைந்த கலெக்டர்கள் மாநாடு!

அரசில் பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் 2 நாட்கள் மாவட்ட கலெக்டர்கள், போலீஸ் சூப்பிரண்டுகள் மாநாடு நடப்பது வழக்கம். இந்த ஆண்டு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், 2 நாட்கள் அல்ல 3 நாட்கள் மாநாட்டை கூட்டினார். இந்த மாநாட்டின் மற்றொரு சிறப்பம்சமாக வனத்துறை அலுவலர்களும் புதிதாக சேர்க்கப்பட்டனர். இது வெறுமனே அதிகாரிகளுக்கு உத்தரவிடும் மாநாடாக மட்டுமல்லாமல், அவர்களின் கருத்தையும் பகிர்ந்துகொண்டு, அதற்கு முதல்-அமைச்சர் வழிகாட்டும் மாநாடாக இருந்தது. முதல்-அமைச்சர் கூறியபடி, தலைமைச்செயலாளர் வெ.இறையன்பு, பட்டிமன்றங்களின் நடுவராக இருந்தவர் என்பதால், மாநாட்டில் கலந்துகொண்ட அனைவருக்கும் பேச அனுமதியும் கொடுத்து, குறிப்பிட்ட நேரத்தில் முடிக்கச்செய்தது மிகவும் சிறப்புக்குரியது.

முதல்நாள் கூட்டத்திலேயே முதல்-அமைச்சர், 'நேர்மையான, வெளிப்படையான இந்த ஆட்சியில் சட்டம்-ஒழுங்கில் சமரசம் கிடையாது. சட்டம்-ஒழுங்கு

பிரச்சினைகளும், குற்றங்களும் நிகழ்ந்து முடிந்தபின்பு அவற்றை தீர்ப்பதற்கும், புலனாய்வு செய்வதற்கும் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளைவிட அவை நிகழாமல் தடுப்பதற்கான முயற்சிகள்தான் மக்களுக்கு மிகுந்த பயனைஅளிக்கும்' என்று கூறியது மிகவும் கவனிக்கப்படத்தக்க ஒன்றாக இருந்தது. வனத்துறை அலுவலர்களுக்கு அவர் கூறிய ஆலோசனை தற்போது தமிழ்நாட்டில் 24 சதவீதமாக இருக்கும், மொத்த பசுமை பரப்பை குறைந்தபட்சம் 33 சதவீதமாக 10 ஆண்டுகளுக்குள் உயர்த்திவிடவேண்டும் என்பதுதான். இதை மட்டும் வனத்துறை நிறைவேற்றிவிட்டால் தமிழகம் வளவளம் மட்டுமல்லாமல், மரவளமும், மழை வளமும் அதிகம் உள்ள மாநிலமாக திகழ்ந்துவிடும்.

2-ம் நாள் கூட்டத்தில், அதிகாரிகளிடம் 'எங்களை போன்ற அரசியல்வாதிகளுக்கும், உங்களை போன்ற அதிகாரிகளுக்கும் மக்கள்தான் எஜமானர்கள். ஒரு ரூபாய் செலவு செய்தால், அந்த ஒரு ரூபாய் சிந்தாமல், சிதறாமல் கடைக்கோடி மக்களுக்கும் சென்றடையவேண்டும். அதுதான் சிறந்த நிர்வாகத்துக்கு எடுத்துக்காட்டாக அமையும்' என்று கூறிய வார்த்தைகள் ஊழல் இல்லாமல் எல்லா திட்டங்களும் நிறைவேற்றப்படவேண்டும். முழுமையாக மக்களுக்கு சென்றடையவேண்டும் என்பதை தெள்ளத்தெளிவாக கோடிட்டு காட்டிவிட்டது. 3-ம் நாள் மாநாட்டின் நிறைவு உரையில், 'கடைக்கோடி மனிதனுடைய கவலைகளை தீர்க்கிற அரசாக, இந்த அரசு அமைந்திருக்கிறது. அதற்கு அனைத்து அதிகாரிகளும் உறுதுணையாக இருக்கவேண்டும். சாதிமோதல்களை சட்டம்-ஒழுங்கு பிரச்சினையாக மட்டும் பார்க்காதீர்கள். ஏனெனில் இது சமூக ஒழுங்கு பிரச்சினை' என்று கூறியது இப்போதுள்ள காலகட்டங்களில் பல இடங்களில் தலைதூக்கும் சாதிமோதல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்பதற்காக தெரிவித்தார்.

தாம்பரம் போலீஸ் கமிஷனர் மு.ரவி, காஞ்சீபுரம் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சுதாகர் உள்பட பல போலீஸ் அதிகாரிகள், கலெக்டர்கள் கூறிய கருத்துகளை தொகுத்து, எல்லோரும் பின்பற்றவேண்டிய அவசியத்தை எடுத்துக்கூறினார். 'உங்கள் தொகுதியில் முதல்-அமைச்சர்', 'மக்களை தேடி மருத்துவம்', 'வேளாண்மை நிதி நிலை அறிக்கை', 'இல்லம் தேடி கல்வி', 'நான் முதல்வன்' போன்ற திட்டங்களில் மாவட்ட கலெக்டர்கள் அதிககவனம் செலுத்தவேண்டும் என்பதை கூறினார். மிக முக்கியமாக அதிகாரிகள் முதல்-அமைச்சர் அலுவலகத்தில் உள்ளதுபோல, தங்கள் அலுவலகங்களில் 'டேஷ்போர்டு' அமைத்து, தங்கள் பணிகளை செதுக்கி வைத்துகொள்ளவேண்டும் என்று கூறியது மிகவும் அர்த்தமுள்ளதாக இருந்தது.

எல்லோருடைய பேச்சுகளையும் கேட்டு, அதற்கு தன்னுடைய கருத்துகளை கூறிய முதல்-அமைச்சர், இந்த கூட்டத்தில் 'திட்டமிடுதல் பற்றி அதிகம் பேசினோம்; அடுத்த கூட்டத்தில் சாதனைகளை பற்றி அதிகம் பேசுவோம்' என்று அதிகாரிகளிடம் இவையெல்லாம் நிறைவேற்றி கொண்டுவாருங்கள். அந்த சாதனையை பார்ப்போம் என சொல்லாமல் சொல்லி அதிகாரிகளுக்கு இடையே ஒரு ஆரோக்கியமான போட்டிக்கு மணி அடித்துவிட்டார். இதுவரை நடக்காத மற்றொன்று 3-ம் நாள் கூட்டத்தில் அவர் அதிகாரிகளோடு, ஒன்றாக உட்கார்ந்து உணவருந்தியது தான். முதல்-அமைச்சர் கூறியதை ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு வருகிற ஒரு ஆண்டில் அனைத்து ஆலோசனைகளையும் நிறைவேற்றும்வகையில், இந்த கூட்டத்தில் கலந்துகொண்ட அதிகாரிகள் தங்கள் அன்றாட பணிகளை வகுத்துக்கொண்டு, போட்டி மனப்பான்மையோடு செயல்படுவார்கள் என்பது எதிர்பார்ப்பாக இருக்கிறது.

DECCAN HERALD

15-Mar-2022

SPREADING WINGS

DMK set to open Delhi office; doors open for Oppn leaders

E T B SIVAPRIYAN
CHENNAI, DHNS

The inauguration of DMK's national office in New Delhi is likely to serve as yet another platform for anti-BJP parties to come together after the saffron party's massive victory in the elections held to five state assemblies.

DMK President and Tamil Nadu Chief Minister M K Stalin will throw open the Anna Arivalayam in the national capital in the presence of leaders from Opposition political parties.

The new building, likely to be inaugurated on April 2, will serve as DMK's national office as the party sets out on a journey to take its social justice agenda by launching an All India Social Justice Forum chaired by Stalin.

The swanky office is coming up at the Deen Dayal Upadhyaya Marg in central Delhi, where the headquarters of BJP is also located. The office complex has come up on land allotted by the Union government.

"The event will take place on April 2 most likely. Though it is not a gala event, we have decided to invite leaders of Opposition parties for the inauguration. The participant list is yet to be prepared. But we expect some leaders to participate," a senior DMK leader told *DH*.

He also said Stalin will not have many meetings in New Delhi during the visit as he is likely to return immediately owing to the Budget session of the Tamil Nadu Assembly which will commence on March 18.

MK Stalin

Sources said invitations are likely to be sent to leaders of all Opposition parties. This is the second event in as many months that the DMK is organising with national leaders as participants. In February, Congress MP Rahul Gandhi released the first part of the autobiography of Stalin which saw the participation of Kerala Chief Minister Pinarayi Vijayan, NC's Omar Abdullah, and Tejashwi Yadav of RJD.

The meeting assumes significance as it comes close on the heels of the Congress' loss in the Assembly elections and BJP and AAP winning Uttar Pradesh, Uttarakhand, Manipur, Goa, and Punjab respectively.

அலட்சியம் வேண்டாம்

2019ம் ஆண்டு நவம்பர் மாதம் இப்படித்தான் சீனாவை உருக்குலைத்த கொரோனா என்ற கொடிய தொற்று உலகம் முழுவதும் பரவியது. 2020 மார்ச் 24ல் முதல் இந்தியாவில் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. இரண்டு ஆண்டுகள் கடந்தும், மூன்று அலைகள் வந்த பின்னரும் இன்னும் எழுந்து நிற்க முடியவில்லை. தற்போதுதான் மூச்சுவிட முடிந்து இருக்கிறது. அதற்குள் சீனாவையே புரட்டிப்போடுகிற அளவுக்கு இன்னொரு கொரோனா தொற்று வேகமாக பரவி வருகிறது என்கிறார்கள். உக்ரைன்-ரஷ்யா போரால் சீனாவில் பரவும் தொற்று பாதிப்பு உலகத்தின் கண்களுக்கு தெரியவில்லை.

இன்றைய தேதிக்கு சீனாவில் 13 முக்கிய நகரங்களில் முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டு இருக்கிறது. சாங்சுன் மாகாணத்தில் உள்ள 90 லட்சம் மக்களை வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. தென்கிழக்கில் உள்ள தொழில்நுட்ப நகரான ஷென்சென் நகரில் 1.75 கோடி மக்கள் 3 நாள் வீட்டை விட்டு வெளியே வராத அளவுக்கு முழுஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது. பெய்ஜிங்கில் எப்போது வேண்டுமானாலும் முழுஊரடங்கு அமல்படுத்தப்படலாம் என்ற நிலை உள்ளது. கிட்டத்தட்ட 3 கோடிக்கும் மேல் மக்கள் ஊரடங்கு கட்டுப்பாட்டிற்குள் வந்து இருக்கிறார்கள். பெய்ஜிங், ஷாங்காய் இடையே இயக்கப்படும் பல்வேறு விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. அதிவேகமாக பரவும் ஒமிக்ரான் வகை தொற்று என்கிறார்கள் சீன வல்லுநர்கள்.

இந்தியாவில் 3ம் அலை தாக்கம் குறைந்து இப்போதுதான் மக்கள் தலைநிமிர்ந்தனர். குறிப்பாக தமிழ்நாட்டில் தொற்று வேகம் முற்றிலும் குறைந்துவிட்டது. முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளால் மக்கள் இயல்பு நிலைக்கு திரும்பியிருக்கிறார்கள். இந்த நேரத்தில் மீண்டும் கொரோனா பரவும் வேகம் சீனாவில் அதிகரித்து இருப்பது கவலை தரக்கூடிய செய்தியாக உள்ளது. தொற்று பரவும் வேகம் இங்கு குறைந்துவிட்டதால் மக்கள் அனைவரும் அலட்சியத்துடன் காணப்படுகிறார்கள். வீட்டை விட்டு பொதுவெளிக்கு வருகிற பெரும்பாலானோர் முககவசம் அணிந்து வருவது இல்லை. சமூக இடைவெளியைப்பற்றி கேட்கவே வேண்டாம். இதுவே இப்படி இருக்கும் போது குறிப்பிட்ட இடைவெளியில் கைகளை கழுவுதல், கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்தல் எல்லாம் எப்படி நடக்கும்?. முதல் தடுப்பூசி போட்டு விட்டு இரண்டாம் தடுப்பூசி போடாமல் அலட்சியம் காட்டுவோர் இன்னும் ஏராளம். பூஸ்டர் வந்தபிறகும் கூட இன்னும் தடுப்பூசி போடும் விவகாரத்தில் எத்தனை மெத்தனம்?.

எனவே தமிழக அரசின் நடவடிக்கையால் கொரோனா கட்டுக்குள் வந்துவிட்டது என்ற அலட்சியம் வேண்டாம். அத்தனை பேரும் வீட்டை விட்டு வெளியே வரும் போது கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும். சீனாவில் அதிவேகமாக பரவும் கொரோனா இந்தியாவிற்குள் நுழையாது என்று இல்லை. எந்தவகை கொரோனா வந்தாலும் நம்மை பாதுகாக்கும் ஒரே ஆயுதம் முககவசம், சமூக இடைவெளி, தடுப்பூசி என்பதை உணர்வோம். கொரோனாவை வெல்வோம்.

DECCAN HERALD
16-Mar-2022

Samsung to set up compressor plant in TN

E T B SIVAPRIYAN
CHENNAI, DHNS

South Korea-based Samsung will set up a compressor manufacturing unit for refrigerators in Sriperumbudur near here at a cost of Rs 1,588 crore. The new factory, which will come up in an area of 22 acres, will have the capacity to produce 80 lakh compressor units a year which will be utilised for the domestic and export markets.

A Memorandum of Understanding (MoU) for setting up the unit was signed between Samsung India and the Tamil Nadu Government on Tuesday. The unit will provide employment to 600 people and will produce 80 lakh compressor units to be used in refrigerators that the company manufactures in India and also for the export market. Stalin recalled his association with Samsung when he was the Industries Minister during the previous DMK regime (2006-2011) on how Samsung chose Tamil Nadu for its manufacturing plant. "Heeding to my request, Samsung enhanced its investment in Tamil Nadu to Rs 800 crore in 2010. I also inaugurated Samsung's refrigerator unit then and I am happy to inform today that the company's investment in this year has increased to Rs 1,800 crore," Stalin said.

Kang said the new compressor manufacturing plant will help Samsung cater to the growing demand for its "innovative digital appliances" across the country and also drive exports. The fresh investment by Samsung assumes significance in the wake of the Tamil Nadu government holding talks with it to invest in sunrise sectors.

FINANCIAL EXPRESS
Read to Lead

16-Mar-2022

Samsung to set up ₹1,588-cr compressor plant in TN

FE BUREAU
Chennai, March 15

SAMSUNG ON TUESDAY announced an investment of ₹1,588 crore in India to set up a new compressor manufacturing plant for refrigerators at Sriperumbudur near Chennai. The new facility, spread over 22 acres, will have a capacity to produce 8 million compressor units a year, which will be expanded in the future. Compressors produced at the plant will be used in refrigerators that Samsung manufactures in India and also for exports.

The company signed a memorandum of understanding (MoU) with the Tamil Nadu government for the new plant in the presence of chief minister MK Stalin.

Stalin said, "Samsung has been a shining example in Tamil Nadu's industrial growth story, driving investments and creating jobs. This new investment is yet another step by Samsung towards strengthening the manufacturing ecosystem in the state."

> **Chief minister MK Stalin also urged the South Korean company to set up a semiconductor manufacturing plant in Tamil Nadu and assured all support**

He said through this investment, around 600 people will get employment. The CM also urged the company to set up a semiconductor manufacturing plant in the state and assured all support.

Samsung has consolidated its market leadership in the country with two factories in Noida, five R&D centres and one design centre at Sriperumbudur. These are supported by a strong network of over 200,000 retail outlets and over 3,000 customer service points.

Ken Kang, president and CEO, Samsung Southwest Asia, said, "This new investment is a testimony to our continuing commitment to the people of Tamil Nadu, who have been our long-standing partners since we set up our factory in 2007. Over the years, we have received strong support from the state and local authorities. This new compressor manufacturing facility will help us cater to the growing demand for Samsung's innovative digital appliances across the country and also drive exports."

The Statesman

16-Mar-2022

Samsung to invest ₹1,588 cr to set up compressor plant in TN

STATESMAN NEWS SERVICE
KOLKATA, 15 MARCH

Consumer electronics and smartphones maker Samsung today announced an investment of Rs 1,588 crore in India to set up a new compressor manufacturing plant in Sriperumbudur near Chennai.

The new facility, spread over 22 acres, will have a capacity to produce 8 million compressor units a year, which will be expanded in the future, said a Press statement issued by the company.

Compressors produced at the plant will be used in refrigerators that Samsung manufactures in India and also be exported, the statement added.

Samsung today signed a memorandum of understanding (MoU) with the Government of Tamil Nadu for the new plant, expanding and strengthening the component ecosystem in the state.

Tamil Nadu chief minister M K Stalin was present during the MoU signing ceremony held in Chennai.

Speaking on the development, the Tamil Nadu CM said: "Samsung has been a shining example in Tamil Nadu's industrial growth story, driving investments and creating jobs. This new investment is yet another step by Samsung towards strengthening the manufacturing ecosystem in the state."

Ken Kang, president and chief executive officer, Samsung Southwest Asia, said: "This new investment of Rs 1,588 crore is a testimony to our continuing commitment to the people of Tamil Nadu, who have been our longstanding partners since we set up our factory in 2007. Over the years, we have received strong support from the state and local authorities, helping us drive our vision of powering digital India."

This new compressor manufacturing facility will help us cater to the growing demand for Samsung's innovative digital appliances across the country and also drive exports, Kang said.

Set up in 2007, the manufacturing facility in Sriperumbudur is one of two factories that Samsung operates in India.

THE NEW INDIAN EXPRESS

17-Mar-2022

BAPASI welcomes Stalin's plan to set up permanent book park

EXPRESS NEWS SERVICE @Chennai

MEMBERS of the Booksellers and Publishers Association of South India (BAPASI) expressed their delight over Chief Minister MK Stalin's announcement of a Book Park.

BAPASI general secretary SK Murugan told *TNIE* that former CM M Karunanidhi's dream has come true with this announcement. "When former CM Karunanidhi inaugurated the Chennai Book Fair, BAPASI members requested him to create a Book Park for publishers' welfare. The former CM promised that he would do it but the proposal was pending for years. Now, present CM Stalin has come forward to set it up," he said.

"If the park is established, 387 book publishers will be able to benefit from it. In addition, many Tamil associations abroad find it difficult to buy Tamil books frequently. Having a Book Park here will help them," Murugan added.

The State should allocate land in the centre of the city so that readers can access it easily, he urged.

BAPASI's former vice-president G Olivannan also welcomed the CM's announcement. "In addition to the Book Park, if a children's play area or park is set up in the same campus, it will attract more people. A small museum can also be started," he opined.

During the event organised by the Tamil Development Department on Tuesday, Stalin gave away awards and cash rewards to 21 eminent personalities for achievements in various fields. Speaking on the occasion, the CM said, "Once, former CM Karunanidhi said that the government would provide land to establish bookstalls to ensure the availability of all kinds of books in one place. And he named it 'Book Park'. My government would provide land to set up the park after getting suggestions from BAPASI."

Viswanathan Anand
@vishy64theking

Thank you sir for making Chennai all about chess ! A proud moment for all of Indian and Chennai chess community. Chennai Chess ... always has a nice ring to it. The efforts of @aicfchess and @FIDE_chess in working together so swiftly is to be commended.

M.K.Stalin @mkstalin · 14h

Delighted that the Chess Capital of India is set to host the 44th Chess Olympiad! A proud moment for Tamil Nadu! Chennai warmly welcomes all the Kings and Queens from around the world!

#ChessOlympiad2022

Chennai chosen to host 44th Chess Olympiad

PTI ■ CHENNAI

Legendary Viswanathan Anand says it's a proud moment for Chennai and the chess fraternity in the country as the capital city of Tamil Nadu has been chosen to host the Chess Olympiad, later this year.

The 44th Olympiad, which was supposed to take place in Moscow, was shifted out of Russia in the aftermath of its invasion of neighbouring Ukraine on February 24.

The prestigious event is tentatively scheduled to be held between July 26 and August 8.

State Chief Minister M K Stalin himself announced the news on Twitter late on Tuesday night after Chennai was awarded the right to host the prestigious event for the fist time ever.

"Thank you sir for making Chennai all about chess ! A proud moment for all of Indian and Chennai chess community. Chennai Chess ... always has a nice ring to it. The efforts of @aicfchess and @FIDE_chess in working together so swiftly is to be commended," Anand wrote, reacting Stalin's tweet.

"Delighted that the Chess Capital of India is set to host the 44th Chess Olympiad! A proud moment for Tamil Nadu! Chennai warmly welcomes all the Kings and Queens from around the world! #ChessOlympiad2022," Stalin wrote.

World chess federation FIDE tweeted, "Chennai is home to legendary @vishy64theking, and it hosted the 2013 World Championship Match, where Magnus Carlsen was first crowned World Champion, defeating Vishy Anand."

The former world champion reacted to that too, writing, "Like we say Vanakkam Chennai !!"

Anand had also sent a letter to the FIDE in which he said that it was a sense of personal pride to see the country being a host to one of the top events in the calendar.

இதுவரை இந்த மாதிரி பட்ஜெட்டை பார்த்ததே இல்லை!

கழக அரசின் பட்ஜெட் குறித்து வியந்து பாராட்டிய பிரபல எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி!

சென்னை, மார்ச் 19 –

இன்று தாக்கல் செய்துள்ள, தி.மு.கழக அரசின் நிதிநிலை அறிக்கை போன்று இதுவரை நான் பார்த்ததே இல்லை என பிரபல எழுத்தாளரும், இலக்கியவாதியுமான இந்திரா பார்த்தசாரதி வியந்து பாராட்டியிருக்கிறார்.

பிரபல மூத்த எழுத்தாளர் – இலக்கியவாதி இந்திரா பார்த்தசாரதி, அவர்கள் கழக அரசின் 2022 – 2023 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி தமது ட்விட்டர் பதிவில் தெரிவித்திருப்பதாவது:–

"நான் 1952 முதல் வாக்களித்து வருகிறேன். நான் பார்த்ததிலேயே மிகச்சிறந்த பட்ஜெட், இன்று தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த பட்ஜெட்தான். அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கியதாக இருக்கிறது , இந்த பட்ஜெட்.

நுணுக்கமான, பரந்த அடிப்படையிலான மக்கள் நலன் சார்ந்த பட்ஜெட் எப்படி இருக்கவேண்டும் என ஒன்றியத்துக்கே கற்றுக் கொடுப்பதாக இந்த பட்ஜெட் இருக்கிறது" என இந்திரா பார்த்தசாரதி மனந்திறந்து பாராட்டியுள்ளார்.

பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் பட்ஜெட்

இந்திய நிறுவனங்களின் கூட்டமைப்பு தலைவர் ஏ.சக்திவேல் பாராட்டு

சென்னை, மார்ச் 19: தமிழக பட்ஜெட் குறித்து இந்திய நிறுவனங்களின் கூட்டமைப்பு தலைவர் ஏ.சக்திவேல் வெளியிட்ட அறிக்கை:

மாநில பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள பல்வேறு நலத்திட்டங்கள் முதல்வரின் நீண்ட காலப்பார்வையுடன் மாநிலத்தின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு உதவும். 2030ம் ஆண்டுக்குள் மாநில ஜிஎஸ்டி 1 லட்சம் கோடி மதிப்பிலான 100 பில்லியன் அமெரிக்க டாலர் ஏற்றுமதியை எட்டும். தொழில் வளர்ச்சிக்காக கீழ்கண்ட வகையில் நல்ல பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

- ஏற்றுமதி நிறுவனக் கட்டமைப்பை உருவாக்க ரூ 100 கோடி ஒதுக்கீடு
- தமிழ்நாட்டின் சிறு குறு தொழில்நலத்துறையின் மூலதன முதலீட்டிற்கு ரூ 300 கோடி ஒதுக்கீடு.
- புவி சார்ந்த ஜவுளி (ஜியோ டெக்ஸ்டைல்ஸ்) மற்றும் தென்னை நார் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக கோவை இல் புதிய தொகுமையம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு
- சென்னையில் ரூ54.61 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு தொழில் நுட்ப மையம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு.
- தொழில் துறைக்கு 3,267.91 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கதாகும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தமிழக பட்ஜெட்டுக்கு தலைவர்கள் வரவேற்பு

சென்னை, மார்ச் 19: தமிழக அரசு 2022-23ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நேற்று முதல் தாக்கல் செய்து வருகிறது. இதற்கு அரசியல் கட்சி தலைவர்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

ப.சிதம்பரம் எம்.பி: தமிழக பட்ஜெட்டில் கல்வித்துறைக்கும், சுகாதாரத்துறைக்கும் மிகப்பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. நிதி மேம்பாட்டில் வருவாய் பற்றாக்குறை ரூ.7 ஆயிரம் கோடியாக குறைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நிதிப்பற்றாக்குறை அடுத்த ஆண்டு 0.7 சதவீதம் குறையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது வெற்றிகரமான நிதி மேலாண்மையை காட்டுகிறது.

கே.எஸ்.அழகிரி (தமிழக காங்கிரஸ் தலைவர்): கடந்தகால அரசுகள் செய்யத் தவறியதை தற்போது தமிழக அரசு செய்திருப்பது மிகுந்த பாராட்டுக்குரியது. அத்தகைய வளர்ச்சியை அனைத்துத் துறைகளிலும் ஏற்படுத்துகிற வகையில் நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்த நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜனை பாராட்டுகிறேன்.

ராமதாஸ் (பாமக நிறுவனர்): பள்ளிக்கல்வித்துறை மற்றும் உயர்கல்வித்துறைக்காக அறிவிக்கப்பட்டுள்ள சில திட்டங்கள் மிகவும் வரவேற்கத்தக்கவையாகும். ரூ.7,000 கோடியில் பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப் படும் என்று அறிவிக்கப்பட்டிருப்பதும் பயனளிக்கக் கூடியவை ஆகும்.

வைகோ (மதிமுக பொதுச் செயலாளர்): முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசின் இலக்குகளான சமூகப் பாதுகாப்பை வலுப்படுத்துதல், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு புதிய முதலீடுகளை ஈர்த்தல், மகளிர் மேம்பாடு, விளிம்பு நிலை மக்களின் சமூக, பொருளியல் முன்னேற்றம் அடையும்.

கி.வீரமணி (திக தலைவர்): பெரியார் சிந்தனைகள் அடங்கிய தொகுப்பு 21 இந்திய, உலக மொழிகளில், அச்சு மற்றும் மின்னூல் பதிப்பாகவும் வெளியிடப்படும். இப்பணிகள் ரூ.5 கோடி செலவில் மேற்கொள்ளப்படும் என்பது தித்திப்பான செய்தி.

முத்தரசன் (சிபிஐ மாநிலச் செயலாளர்): நிதி நிர்வாகத்தில் மேற்கொண்ட முயற்சியில் வருவாய் பற்றாக்குறையை குறைத்திருப்பது நல்ல முன்னேற்றமாகும். தொழிலாளர் பணிநிரந்தரம், ஓய்வூதியம் உள்ளிட்ட சமூக பாதுகாப்பை உறுதி செய்வதில் தான் உற்பத்தி ஆற்றல் மேம்படும் என்பதை நிதிநிலை அறிக்கை கவனம் செலுத்த வேண்டும்.

கே.பாலகிருஷ்ணன் (சிபிஎம் மாநில செயலாளர்): பல நல்ல நோக்கங்களையும், முன்மொழிவுகளையும் கொண்டுள்ள 2022-23 ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்கும் அதே வேளையில் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிட நிதி ஆதாரங்களை திரட்டும் முன்முயற்சிகளை அரசு எடுக்க வேண்டும்.

ஜி.கே.வாசன் (தமாகா தலைவர்): பட்ஜெட்டில் வருவாய் பற்றாக்குறை 7,000 கோடியாக குறைந்துள்ளது என்றால் வருவாயை பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

டிடிவி.தினகரன் (அமமுக பொதுச் செயலாளர்): அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்த மாணவிகளுக்கும் இந்த உதவித்தொகையை வழங்கினால் மட்டுமே திட்டத்தின் நோக்கம் முழுமையடையும்.

ஜவாஹிருல்லா (மமக தலைவர்): மிகப் பெரும் நிதி பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ள நிலையில் பெரும் வரி விதிப்பு இருக்கும் என்று எதிர்பார்த்திருந்த நிலையில் வரியில்லாமல் தமிழகத்தின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் வகையிலும் நலிவுற்ற பிரிவினர்களின் வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்தும் வகையிலும் சீர்மிகு நிதி நிலை அறிக்கை.

சரத்குமார் (சமக தலைவர்): நாட்டின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றி வரும் தமிழகத்திற்கு 14வது நிதிக்குழுவால் வழங்கப்பட்ட மானியங்களைக் காட்டிலும் குறைந்த அளவிலேயே 15வது நிதிக்குழு மானியம் அதிகரித்துள்ளது. ஒன்றிய அரசு, பாரபட்சமின்றி மாநில அரசுடன் ஒத்துழைப்பு நல்கி செயல்பட்டால், தேச வளர்ச்சியும், மாநில வளர்ச்சியும் சிறப்பாக அமையும்.

ஏ.எம்.விக்கிரமராஜா (வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர்): ஜி.எஸ்.டி. வரி குறைப்பு, செஸ் வரி குறைப்பு, நகராட்சி, உள்ளாட்சி, அறநிலையத்துறை கடைகளின் வாடகை குறைப்பு போன்றவற்றிற்கு தீர்வும், அதே போல தற்போது வணிகர்களை வெகுவாக பாதித்துக் கொண்டிருக்கும் மாசு கட்டுப்பாட்டு வாரிய துறை சம்மந்தமான பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டிற்கு அரசு துரித தீர்வு காணவும் அனைத்து வணிகர்களின் கேட்டுக்கொள்கிறோம். நீண்ட கால தீர்வுக்கு இந்த பட்ஜெட் வழிவகை செய்யும் என நம்புகிறோம்.

அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம்: நிதிநிலை அறிக்கை ஏதோ ஒரு வணிக நிறுவனத்தின் ஆண்டு வரவு செலவு கணக்கு சமர்ப்பிக்கப்படுவது போல் உள்ளதே தவிர, தமிழ்நாட்டு மக்களின் நலன்களை காக்கும் அறிக்கையாக, மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும் அறிக்கையாக, ஏழை எளிய மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் அறிக்கையாக இல்லை.

எதிர்காலம் குறித்த எந்த தீர்க்கமான பார்வையும் இல்லாமல் இருக்கிறது. மக்கள் நலனுக்கு என்று இந்த நிதிநிலை அறிக்கையில் ஏதுமில்லை. இந்த நிதிநிலை அறிக்கை ஓர் ஏமாற்றமளிக்கும் அறிக்கை.

இதே போல சமத்துவ மக்கள் கழகம் தலைவர் எர்ணாவூர் நாராயணன் உள்ளிட்டோர் பட்ஜெட் குறித்து வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

ஐஐடியில் சேரும் மாணவர்களின் கல்வி செலவை அரசே ஏற்கும்

இயக்குநர் வரவேற்பு

சென்னை, மார்ச் 19: சென்னை ஐஐடி இயக்குநர் காமகோடி அளித்த பேட்டி: அரசு பள்ளிகளில் படித்து ஐஐடியில் சேரும் மாணவர்களுக்கு, அவர்களின் கல்வித் தொகை முழுவதையும் அரசே ஏற்கும் என்ற அறிவிப்பு வரவேற்கத்தக்கது. ஐஐடி சார்பாக நாங்கள் அரசுடனும், அரசு பள்ளிகளுடனும் சேர்ந்து இந்த திட்டம் பல மாணவர்களை அடைய எங்களால் முடிந்த முயற்சிகளை எடுப்போம்.

முரசொலி
19-Mar-2022

தமிழக பட்ஜெட் உலகத் தரம் வாய்ந்தது!

சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் செல்வப்பெருந்தகை பாராட்டு!

சென்னை, மார்ச் 19-

அ.தி.மு.க.வினர் நிதி நிலை அறிக்கையில் என்ன சொல்லி இருக்கிறது என்பதை தெரிந்து கொண்டு வெளிநடப்பு செய்திருக்கலாம் என்றும் சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் செல்வபெருந்தகை தெரிவித்தார்.

இன்று தாக்கல் செய்யப்பட்ட 2022-23-ம் நிதியாண்டுக்கான தமிழக பட்ஜெட் உலகத் தரம் வாய்ந்ததாக உள்ளதென்று காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற தலைவர் செல்வப் பெருந்தகை பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அக்கட்சியின் சட்டமன்ற தலைவர் செல்வப் பெருந்தகை அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது :-



உயர்கல்வி பயில மூவலூர் அம்மையார் திட்டத்தின் கீழ் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் திட்டத்தை வரவேற்கிறோம். கொரோனா சூழலில் மக்களின் மன உளைச்சல் சுணக்கங்களை தீர்க்கும் வகையில் இந்த நிதிநிலை அறிக்கை அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகத்தரம் வாய்ந்த நிதிநிலை அறிக்கையாகத்தான் தமிழக பட்ஜெட்டை பார்க்கிறோம் என்று கூறியுள்ளார்.

முரசொலி

19-Mar-2022

தமிழக பட்ஜெட் 2022–23

“சொன்னதைச் செய்யும் தி.மு.க. அரசு”!

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ புகழாரம்!

சென்னை, மார்ச் 19- சொன்னதைச் செய்யும் திமுக அரசு என்று நிதி நிலை அறிக்கை காட்டியுள்ளது என்று மதிமுக பொதுச் செயலாளர் வைகோ புகழாரம் சூட்டியுள்ளார்.

தமிழக பொது பட்ஜெட் 2022-23 குறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில், "திமுக அரசு கடந்த 2021 மே மாதம் பொறுப்பேற்ற பின்னர், தாக்கல் செய்த முதல் நிதி நிலை அறிக்கையில் கூறப்பட்டிருந்த புதிய திட்டங்கள், அறிவிப்புகளில் பெரும்பாலானவை நிறைவேற்றப்பட்டு, இரண்டாவது முறையாக 2022-23 ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட அறிக்கை சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொரோனா பெருந்தொற்றின் முதல் அலையைவிட இரண்டாம் அலை ஐந்து மடங்கு வீரியத்துடன் பரவியபோது, திமுக அரசு போராடி கட்டுப்படுத்தியது. எதிர்பாராமல் ஏற்பட்ட செலவினங்கள், பொருளாதார நெருக்கடி மிகுந்த இக்கட்டான சூழ்நிலையிலும் 'நிதி மேலாண்மையையும் கடைபிடித்தது. 2014-ஆம் ஆண்டிலிருந்து வருவாய் பற்றாக்குறை அதிகரித்து வந்த நிலையில், திமுக அரசின் செயல்திறன் மிகுந்த நிதி நிர்வாகத்தால் நடப்பு ஆண்டில் ரூ.7 ஆயிரம் கோடிக்கு மேல் தமிழ்நாட்டின் வருவாய் பற்றாக்குறை குறைய உள்ளது என்பது பாராட்டுக்கு உரியது.

இந்தியாவின் வளர்ச்சிக்கு தமிழ்நாட்டின் பங்களிப்பு!

மேலும் நிதிப் பற்றாக்குறை 4.61 விழுக்காடு அளவிலிருந்து 3.80 விழுக்காடாகக் குறைந்து இருப்பதும் வரவேற்கத்தக்கது. இந்தியாவின் வளர்ச்சிக்கு தமிழ்நாடு 10 விழுக்காடு பங்களிப்பை அளித்து வருகிறது. ஆனால், ஒன்றிய அரசின் 15 ஆவது நிதிக் குழுவின் வெறும் 4.079 விழுக்காடு என நிதிப் பகிர்வு ஏமாற்றம் அளிக்கிறது. ஜி.எஸ்.டி. இழப்பீட்டுக்கு ஒன்றிய அரசு வழங்கும் கால வரையறை வரும் ஜூன் 30, 2022 இல்



முடிவடைவதால் வரும் நிதியாண்டில் ரூ.20 ஆயிரம் கோடி நிதி இழப்பை தமிழ் நாடு சந்திக்க நேரிடும்.

எனவே ஜி.எஸ்.டி. இழப்பீடு வழங்குவதை இன்னும் 2 ஆண்டுகளுக்கு நீடிக்க வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய பாஜக அரசு நிறைவேற்ற வேண்டும். பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் சிந்தனைகள் அடங்கிய தொகுப்பு, 21 இந்திய மற்றும் உலக மொழிகளில் அச்சு மற்றும் மின்னூல் பதிப்புகளாக வெளியிடப்படும் என்ற அறிவிப்பு செந்தேனாய் இனிக்கிறது. தமிழ் வளர்ச்சிக்கு முதன்மையான இடம் அளித்துள்ள திமுக அரசு, அகர முதலி திட்டத்திற்கு ரூ.2 கோடி ஒதுக்கி இருப்பதும், தாய்மொழிக் கல்வியை ஊக்குவிக்க அரசு சாரா தனியார் பள்ளிகளில் தமிழ்வழியில் பயிலும் மாணவர்களுக்கு ஒன்றாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை இலவசமாக பாடநூல், நோட்டுப் புத்தகம் போன்ற உதவிகள் வழங்க ரூ.15 கோடி ஒதுக்கி இருப்பதும் பாராட்டுக்குரியது.

உயர் கல்வி உறுதித் திட்டம்!

அரசுப் பள்ளி மாணவிகளின் உயர் கல்வியை உறுதி செய்யும் வகையில் மூவலூர் இராமாமிர்தம் அம்மாள் பெயரில் உயர்கல்வி உறுதித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதன்படி அரசுப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படித்து மாணவிகள் உயர் கல்வி பயிலச் செல்லும் போது, முதலாம் ஆண்டு முதல் இறுதியாண்டு வரை ஒவ்வொரு மாதமும் அவர்களது வங்கிக்கணக்கில் நேரடியாக ரூ.1000 உதவித் தொகை வரவு வைக்கப்படும் என்ற புரட்சிகரமான இத்திட்டத்தால் மகளிர் தடையின்றி உயர் கல்வி பெற வாய்ப்பு ஏற்படும்.

வேளாண் கூட்டுறவுச் சங்கங்களில் வழங்கப்பட்ட தங்க நகைக் கடன் தள்ளுபடிக்காக ரூ.1000 கோடி, மகளிர் சுயஉதவிக் குழு கடன் தள்ளுபடிக்கு ரூ.500 கோடி அளிக்கப்பட்டு இருப்பது, சொன்னதைச் செய்யும் திமுக அரசு என்பதற்குச் சான்றாகும். அரசுப் பள்ளிகளை மேம்படுத்த புதிதாக 13 ஆயிரம் கோடி செலவில் 18 ஆயிரம் வகுப்பறைகள் கட்டப்படும். சுய உதவிக்குழு கடன், வேளாண் கடன் வழங்க ரூ.4130 கோடி ஒதுக்கீடு, நீர்வளத் துறைக்கு ரூ.7338.36 கோடி ஒதுக்கீடு, வட்டியில்லா பயிர்க்கடன் வழங்க ரூ.200 கோடி ஒதுக்கீடு, சென்னை வெள்ளத் தடுப்புப் பணிகளுக்கு ரூ.500 கோடி ஒதுக்கீடு, தொல்லியல் ஆய்வுகள், பழங்குடிகள் அகழ்வைப்பக மேம்பாடு, பழமையான கட்டடங்களைப் புனரமைத்துப் பாதுகாக்க நிதி ஒதுக்கீடு போன்ற அறிவிப்புகள் வரவேற்கத்தக்கவை.

பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் தீர்த்து, தேவைகளை நிறைவு செய்யும் மக்கள் நல அரசு என்பதற்குச் சான்றாக "முதல்வரின் முகவரி" என்ற புதிய துறை உருவாக்கப்பட்டுள்ளதும், இத்துறையின் மூலம் இது வரை 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட மனுக்களுக்கு உரிய தீர்வு காணப்பட்டு இருப்பதும் திமுக அரசின் நிர்வாகச் சிறப்பை உணர்த்துகின்றன. மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசின் இலக்கான வேளாண்மை உள்ளிட்ட முதன்மைத் துறைகளின் வளர்ச்சி வீதத்தை அதிகரித்தல், சமூகப் பாதுகாப்பை வலுப்படுத்துதல், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு புதிய முதலீடுகளை ஈர்த்தல், மகளிர் மேம்பாடு, விளிம்பு நிலை மக்களின் சமூக, பொருளியல் முன்னேற்றம், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மூலம் வறுமையை ஒழித்தல், அனைத்துத் துறைகளிலும் சமூக நீதியை நிலை நாட்டுதல், சுற்றுச் சூழலில் நீடித்த நிலைத்தத் தன்மையையும், தலைமுறைகளுக்கு இடையேயான சமத்துவத்தையும் உறுதி செய்தல் போன்றவற்றிற்குச் செயல் வடிவம் கொடுக்கும் வகையில் 2022-23 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட அறிக்கை உருவாக்கப்பட்டு இருப்பது பாராட்டுக்குரியது ஆகும்" என்று வைகோ கூறியுள்ளார்.

கல்விக்கு முக்கியத்துவம்

தமிழக அரசின் பட்ஜெட், புதிய வரிகள் இல்லாத பட்ஜெட்டாக தனிச்சிறப்பாக அமைந்துள்ளது. இந்த பட்ஜெட்டை அனைத்து தரப்பினரும் வரவேற்றுள்ளனர். தமிழகத்தை கல்வித்துறையில் மேலும் சிறப்புமிக்க மாநிலமாக்கும் வகையில் அதிகபட்சமாக பள்ளிக்கல்வி துறைக்கு ₹36,895.89 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, 120 முக்கிய அறிவிப்புகள் இந்த பட்ஜெட்டில் இடம்பெற்றிருப்பது கல்வியாளர்களை கவர்ந்துள்ளது. அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவிகளின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து சிறப்பான திட்டங்களை அறிவித்திருப்பது சிறப்பானதாகும்.

முக்கியமாக 6-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரையில் அரசு பள்ளிகளில் பயின்று மேற்படிப்புக்கு செல்லும் அனைத்து மாணவிகளுக்கும் பட்டப்படிப்பு/பட்டயப்படிப்பு/தொழிற்படிப்பு ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி முடிக்கும் வரை மாதம் ₹1000 அவர்கள் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருப்பது அனைவராலும் பாராட்டப்படுகிறது.

ஐஐடி, எய்ம்ஸ் போன்ற புகழ்பெற்ற உயர் கல்வி நிறுவனங்களில் சேர, அரசு பள்ளி மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்நிறுவனங்களில் இளநிலை பட்டப்படிப்பு பயில்வதற்கான முழுச்செலவையும் மாநில அரசே ஏற்கும் என்ற அறிவிப்பு தமிழக பட்ஜெட்டின் கூடுதல் சிறப்பம்சம் ஆகும். பொறியியல், கலை மற்றும் மருத்துவம் போன்ற பிரிவுகளில் சேர்ந்து, கல்விபெற உதவும் நோக்கோடு, கல்வியில் பின்தங்கியுள்ள 15 மாவட்டங்களில் "முன்மாதிரி பள்ளிகள்" (மாடல் ஸ்கூல்) திறக்கப்படும் என்ற அரசின் அறிவிப்பு பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

உக்ரைனில் இருந்து தமிழகம் திரும்பிய மருத்துவ மாணவர்கள், உள்நாட்டிலோ அல்லது வேறு வெளிநாடுகளிலோ கல்வியை தொடர தமிழக அரசு உதவி செய்யும் என்ற அறிவிப்பு, அம்மாணவர்களின் நெஞ்சில் பால்வார்ப்பதுபோல் அமைந்துள்ளது. அரசு பள்ளிகளை நவீனமயமாக்க 'பேராசிரியர் அன்பழகன் திட்டம்' என்ற புதிய திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. புதிதாக அரசு பள்ளிகளில் 18 ஆயிரம் வகுப்பறைகள் கட்ட ₹13 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற அறிவிப்புகள் அரசு பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை அதிகரிக்கும் வகையில் அமைந்துள்ளது என கல்வியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட தாம்பரம், காஞ்சிபுரம், கும்பகோணம், கரூர், கடலூர், சிவகாசி ஆகிய 6 மாநகராட்சிகளில் அடிப்படை கட்டமைப்பை உருவாக்க தலா 10 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 60 கோடி ரூபாய் சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. புதிதாக தோற்றுவிக்கப்பட்ட 28 நகராட்சிகளுக்கு தலா 2 கோடி ரூபாய் வீதம் மொத்தம் 56 கோடி ரூபாய் சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு ₹20 ஆயிரத்து 400 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவை, அனைத்துமே மக்களுக்கு நேரடியாக பயன்தரும் அம்சங்கள் ஆகும். மொத்தத்தில் வரி மேல் வரி, வட்டி மேல் வட்டி என்ற சுமை இல்லாமல், மக்களை நசுக்காமல், எல்லா தரப்பு மக்களும் சீராக பயன்பெறும் வகையில் இந்த பட்ஜெட் மிக அற்புதமாக தயாரிக்கப்பட்டுள்ளது. திறமையான ஆட்சி நிர்வாகத்துக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இந்த பட்ஜெட் அமைந்துள்ளது.

தினத்தந்தி
19-Mar-2022

எதிர் காலத்தை மனதில் வைத்துள்ள 'பட்ஜெட்'!

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசின் முழு முதல் பட்ஜெட்டை நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் நேற்று தாக்கல் செய்தார். இதில் எதிர்பார்த்தது இல்லையென்றாலும், எதிர்பாராத நிறைய அறிவிப்புகள் இருக்கின்றன. இந்த பட்ஜெட்டை பார்க்கும்போது அரசு கடுமையான நிதி பற்றாக்குறையில் இருப்பது நன்றாகவே தெரிகிறது. 15-வது நிதிக்குழு பரிந்துரையின்படி, நிலுவை கடன் தொகை மாநில உற்பத்தி மதிப்பில் இந்த நிதி ஆண்டில் (2022-23) 29.3 சதவீதத்துக்குள் இருக்க வேண்டும். இந்த நிதி ஆண்டில் நிகர கடன் ரூ.90 ஆயிரத்து 116.52 கோடியாக கணிக்கப்பட்டு உள்ளதால் 31.3.2023 அன்று நிலுவை கடன் தொகை ரூ.6 லட்சத்து 53 ஆயிரத்து 348.73 கோடியாகவும், இந்த கடன் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 26.29 சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டு உள்ளது. ஆக நிலுவை கடன் தொகை 15-வது நிதி குழுவின் வரம்புக்குள்ளேயே அடங்குகிறது.

இதுபோல நிதிப்பற்றாக்குறை அதாவது செலவுக்கும், வரவுக்கும் உள்ள வித்தியாசம் வருகிற நிதி ஆண்டில்

3.5 சதவீதத்துக்குள் இருக்க வேண்டும். ஆனால் 2022-23-ம் ஆண்டு பட்ஜெட் மதிப்பீடுகளில் நிதிப்பற்றாக்குறை விகிதம் 3.63 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டு உள்ளது. எனவே வரவை அதிகரிக்கவும், செலவுகளை குறைக்கும் முயற்சிகளும் இன்னும் தீவிரப்படுத்தப்பட வேண்டும்.

இந்த பட்ஜெட்டின் முத்திரை பதிக்கும் அறிவிப்பு என்னவென்றால், அரசு பள்ளிக்கூடங்களில் 6-வது முதல் 12-ம் வகுப்பு வரையில் படித்து பட்டப்படிப்பு, தொழில் படிப்புகளில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் அவர்கள் இடைநிற்றல் இன்றி முடிக்கும் வரை மாதம் ரூ.1,000 அவர்கள் வங்கிக்கணக்குகளில் செலுத்தப்படும் என்பதுதான். இந்த திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 6 லட்சம் மாணவிகள் பயன் அடைவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோல அரசு பள்ளிக்கூடங்களில் 6-வது வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை படித்த மாணவர்கள் இந்திய தொழில்நுட்ப கழகங்கள், இந்திய அறிவியல் கழகம், அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகம் போன்ற புகழ் பெற்ற உயர்கல்வி நிறுவனங்களில் சேர ஊக்குவிக்கும் வகையில் இந்த மாணவர்களின் இளநிலை பட்டப்படிப்பு பயில்வதற்கான முழு செலவையும் அரசே ஏற்கும் என்பது மாணவர்களை நன்றாக படிக்க ஊக்குவிக்கும். வேலைவாய்ப்புகளை பெருக்கும் வகையில் புதிய தொழில் பூங்காக்கள், தொழில் தொகுப்புகள், தொழில் குழுமங்கள் தொடங்கும் அறிவிப்பு வரவேற்புக்குரியது. 'ஸ்டார்ட் அப்' என்று கூறப்படும் புத்தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை ரூ.50 லட்சம் வரை அரசு துறைகளும், நிறுவனங்களும் நேரடியாக கொள்முதல் செய்ய அனுமதிக்கப்படும் என்ற அறிவிப்பு புத்தொழிலை தொடங்க இளைஞர்களை ஊக்கப்படுத்தும்.

இந்த பட்ஜெட்டில் தேர்தல் வாக்குறுதிகளில் அறிவித்த பெண்களுக்கான மாதம் ரூ.1,000 உரிமைத் தொகை வழங்குவது பற்றிய அறிவிப்பு வரும் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சென்ற ஆட்சியில் விட்டு சென்ற நிதி நெருக்கடி சூழல் காரணமாக இந்த வாக்குறுதியை இந்த அரசின் முதல் ஆண்டில் செயல்படுத்துவது கடினமாக இருந்து வருகிறது. பயனாளிகளை கண்டறியும் பணிகள் முழு முனைப்புடன் நடைபெறுகிறது. நிதி நிலையில் முன்னேற்றம் ஏற்படும்போது இந்த திட்டம் செயல்படுத்தப்படும் என்று வெளிப்படையாகவே பட்ஜெட்டில் சொல்லப்பட்டுவிட்டது. இது வளர்ச்சிக்கான திட்டங்களை கொண்ட பட்ஜெட், எதிர்காலத்தை மனதில் கொண்டு தயாரித்த பட்ஜெட் என்பதில் சந்தேகமே இல்லை. என்றாலும், பட்ஜெட்டில் தெரிவித்தபடி வரும் நிதி ஆண்டு மிகவும் இக்கட்டான, பொருளாதார நிச்சயமற்ற தன்மையுடன் இருக்க வாய்ப்புகள் அதிகம் என்பது ஒரு எச்சரிக்கையாகவே தெரிகிறது. மொத்தத்தில் இருப்பதை கொண்டு சிறப்பாக பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது.

THE HINDU
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

19-Mar-2022

State bats for fiscal consolidation in Budget, keeps populism at bay

- ₹1,000 a month for girls to pursue higher education
- Industries and MSMEs get more fund allocation
- Urban Development, T.N. Police get boost

SANJAY VIJAYAKUMAR
T.K. ROHIT
CHENNAI

Tamil Nadu Finance Minister Palanivel Thiaga Rajan on Friday presented the State Budget for 2022-23, which focused on a fiscal consolidation path, without any populist measures.

For the first time in seven years, the revenue deficit (which implies the revenue expenditure exceeds revenue receipts) will be brought down by over ₹7,000 crore in 2021-22 and is expected to further reduce in the next financial year.

In his Budget speech, Mr. Thiaga Rajan said the ruling DMK's major poll promise of giving ₹1,000 a month to the woman head of the family would be implemented once the financial position improved. However, in a significant step recognising that the enrolment ratio of girl students from government schools in higher education is very low, the Budget announced ₹1,000 a month to girl students to pursue higher education.

The scheme, for which ₹698 crore was allocated, will benefit girls, throughout their degree, diploma or ITI course duration, who studied in government schools from Classes 6 to 12, and joined higher education institutions.

As per the Budget, Tamil Nadu's Gross State Domestic Product growth has been projected at 7.85% in 2021-22 at constant prices, indicating that the economy has bounced back after the COVID-19 pandemic.

"We expect better growth in the ensuing years compared to the current year projections. The nominal GSDP growth of Tamil Nadu is estimated to be 14% in 2022-23 and 14% in 2023-24," Mr. Thiaga Rajan said.

"Last year [2021-22], amidst the resurgence of the pandemic, we consciously tilted the scales towards social welfare, with the goal of alleviating the pain among the weaker sections of society. Now, as we see the economy bouncing back, we must rebalance our priorities and focus on social infrastructure and development without compromising on welfare schemes," he added.

The Budget made major allocations to sectors such as industries and MSME, transport, water resources, Police department and urban development, while the health sector understandably saw reduction in allocation. He warned that the State's tax revenue could see an adverse impact from the inflationary pressures caused by Ukraine crisis.

CONTINUED ON ▸ PAGE 10

Fiscal prudence | Budget presented by Tamil Nadu Finance Minister Palanivel Thiaga Rajan on Friday tried to balance fiscal prudence with growth and welfare-related expenditure

M.K. Stalin and Palanivel Thiaga Rajan before the Budget presentation. • SPECIAL ARRANGEMENT

REVENUE DEFICIT DOWN: ₹7,000 crore decline in revenue deficit in the revised estimate (RE) for 2021-22 compared to 2020-21. Decline seen for the first time after 7 years

விவசாயிகள் வாழ்வில் ஏற்றம் தரும் வேளாண் 'பட்ஜெட்'

பழங்காலங்களில் இருந்து மிகவும் மேன்மையான தொழிலாக விளங்கிய விவசாயத்தொழில், பிற்காலங்களில் நலிவடைய தொடங்கிவிட்டது. அதற்கு காரணம் விவசாயம், லாபகரமான தொழிலாக அமையாததுதான். அதாவது விவசாயிகளின் உழைப்புக்கும், செலவுக்கும் உரிய வருமானம் கிடைக்காமல் போனதால், கையிலிருந்து போட்ட செலவைக்கூட விவசாயிகளால் எடுக்க முடியவில்லை. இந்தநிலையில், வரப்புகளோடு செழிப்பாக இருந்த விவசாய நிலங்கள் மஞ்சள்நிற கல் நடப்பட்டு வீட்டு மனைகளாக மாறிக்கொண்டிருக்கின்றன.

மறைந்த பேரறிஞர் அண்ணா, 'உழவனின் உள்ளத்திலே புயல் இருக்குமானால், வயலிலே வளம் காணமுடியாது', என்றார். அப்படி நலிந்து போய்க்கொண்டிருந்த விவசாயத்தொழிலை மீட்க, விவசாயத்துக்கு புத்துயிரூட்ட விவசாயிகள் வாழ்வில் வளம்காண விவசாயத்துக்கென தனி 'பட்ஜெட்' வேண்டும் என்பது நீண்டநாட்களாக விவசாயிகளின்

கோரிக்கையாக இருந்தது. தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், 'வேளாண்மைக்கு தனி 'பட்ஜெட்' தாக்கல் செய்யப்பட்டு, வேளாண் பணிகள் மேம்படுத்தப்படும்' என்று கூறியிருந்தார்.

தேர்தல் அறிக்கையில் சொன்னதை நிறைவேற்றும் வகையில் கடந்தாண்டு ஆகஸ்டு 14-ந்தேதி, முதல் வேளாண் 'பட்ஜெட்' தாக்கல் செய்யப்பட்டது. கடந்த சனிக்கிழமை 2-வது 'பட்ஜெட்' தாக்கல் செய்யப்பட்டது. கடுமையான நிதிநெருக்கடி இருக்கும்போதும் விவசாயத்துக்கு கடந்த ஆண்டைவிட கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது, இந்தாண்டு ரூ.33,007 கோடியே 68 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது அரசுக்கு விவசாய வளர்ச்சியிலுள்ள அக்கறையை காட்டுகிறது. விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்கு மதிப்புக்கூட்டி ஏற்றுமதி செய்வதன் மூலம் அதிக வருமானம் கிடைப்பதற்காக, உணவு பதப்படுத்தும் துறை விரைவில் செயல்பாட்டுக்கு வரும் என்ற நல்ல அறிகுறி இந்த 'பட்ஜெட்'டில் தெரிகிறது.

2023-ம் ஆண்டை 'சர்வதேச சிறுதானிய ஆண்டு' என ஐ.நா. சபை அறிவித்துள்ள நிலையில், தமிழக அரசு இந்தாண்டு பல்வேறு மாவட்டங்களை உள்ளடக்கிய 'சிறுதானிய சிறப்பு மண்டலங்கள் உருவாக்கப்படும்' என்று அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. விவசாயிகள் தங்கள் சாகுபடியுடன் கறவை மாடுகள், ஆடுகள், நாட்டுக்கோழிகள், தீவன பயிர்கள், மரக்கன்றுகள், தேனி வளர்ப்பு, மண்புழு உரத்தயாரிப்பு ஆகிய வேளாண் தொடர்பான பணிகளையும் மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில், ஒரு தொகுப்புக்கு ரூ.50 ஆயிரம் மானியம் வீதம் 13 ஆயிரம் ஒருங்கிணைந்த பண்ணைய தொகுப்புகள் தொடங்கப்பட நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சூரியகாந்தி எண்ணெய் தற்போது இந்தியாவின் தேவைக்கு வெளிநாடுகளில் இருந்துதான் இறக்குமதி செய்யப்படுகிறது. சூரியன் இருக்கும் திக்கில் முகம்திருப்பி புன்னகைபூக்கும் சூரியகாந்தி பயிர் சாகுபடிக்கேற்ற தட்பவெப்பநிலை, சாகுபடி பரப்பு தமிழகத்தில் பல மாவட்டங்களில் ஏராளமாக இருப்பதால் நிலக்கடலை, எள், சூரியகாந்தி, ஆமணக்கு ஆகிய எண்ணெய் வித்து பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியது.

வேளாண் வளர்ச்சி மட்டுமல்லாமல் பணப்பயிர்கள், தோட்டக்கலை பயிர்கள், எண்ணெய் வித்துகள் சாகுபடியை உயர்த்தவும், 10 லட்சம் பனை விதைகளை வினியோகிக்கவும் அரசு மிகத்தீவிரமாக நடவடிக்கைகளை இந்தாண்டு மேற்கொள்ளப்போகிறது. விவசாயிகளுக்கு நல்ல லாபம் கொடுத்துவந்த, கலைஞர் கருணாநிதியால் தொடங்கப்பட்ட 'உழவர் சந்தை' புத்துயிர் பெறப்போகிறது என்ற செய்தி விவசாயிகளின் உள்ளத்தில் மட்டுமல்லாமல் பயன்பெறப்போகும் மக்களின் மனதிலும் பெருமகிழ்ச்சியை ஏற்படுத்தும். விவசாயம் மட்டுமல்லாமல் கால்நடை பராமரிப்பு, மீன்வளம், மீனவர் நலன், கூட்டுறவு, பட்டுவளர்ப்பு போன்ற அனைத்து துறைகளையும் தன்னோடு இணைத்து, அதன் விளைவாக விவசாயத்துக்கும், விவசாயிகளின் வாழ்வின் ஏற்றத்துக்குமான திட்டங்கள் இந்த வேளாண் 'பட்ஜெட்'டில் இடம்பெற்றுள்ளன.

வேளாண்மைத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் சொன்னதுபோல, மண்ணை கண்ணாய் மதித்து, உள்ளத்தை ஊன்றி உழவு செய்து, நாற்றுகளுக்கும் கைகளால் குடைபிடித்து, கடும் உழைப்பை நாள்தோறும் கடைபிடித்து, உடலை பேணுவது போல வயலைப்பேணி, வறட்சியை பொறுத்து, வெள்ளத்தை கடந்து, மகப்பேறு போல மகசூலைப்பெறும் உழவர் வாழ்க்கையை மீண்டும் செழிக்க செய்வது, இந்த 'பட்ஜெட்'டில் கூறப்பட்ட அறிவிப்புகளை அப்படியே சம்பந்தப்பட்ட துறைகள் செயல்படுத்துவதில்தான் இருக்கிறது.

TN BUDGET'S FOCUS ON SOCIAL WELFARE

The Tamil Nadu Budget presented by state Finance Minister Palanivel Thiaga Rajan is a work-in-progress towards the Dravidian dream of building an inclusive society. Clearly, education is his chosen path. Funding the college education of girl students (a monthly aid of ₹1,000 for 36 months) will ensure a higher enrolment ratio in colleges as well as a drop in early marriages. The earlier 'Thalikku Thangam' scheme—providing gold and financial assistance for women's marriages, a scheme that drew flak for indirectly institutionalising the dowry system, has now been reshaped as a higher education assurance scheme. With the highest allocation of ₹42,565 crore, including ₹7,000 crore for modernising government schools, education is at the top of the government's agenda.

The highlight is that PTR managed to reduce the revenue deficit, which has been on a steady increase since 2014. Most of it has come from a drop in expenditure, primarily thanks to the data purity project where a scrutiny of databases of old age pension, insurance and public distribution systems helped weed out unworthy beneficiaries. For next fiscal, PTR has projected revenues of ₹2.31 lakh crore, a much healthier growth of 13.5% over this year. As explained to this newspaper in a pre-Budget interview, PTR hopes to increase revenues by as much as 17.2% from excise and commercial taxes, mostly by plugging leakages. Just ahead of the Budget, TN recently came up with a policy on data. Using data, the government wants to enhance the quality of policymaking and implementation of schemes, encourage value-added services, and improve access to and quality of services.

Going ahead, PTR has his task cut out. He has consciously tilted the scales towards social welfare, with the goal of alleviating the pain among the weaker sections of the society. As the economy bounces back, the FM wants to focus on social infrastructure and development without taking his eyes off the ongoing fiscal consolidation process. He has surely made some firm steps towards building the state economy, but faces a huge challenge in climbing the $1 trillion peak by 2030.

DECCAN Chronicle
21-Mar-2022

Jail was 'torture camp' during Emergency: Stalin

Chennai, March 20: Marked by a sense of detachment 'like a saint', late DMK patriarch and his father M Karunanidhi handed him over to police during the infamous Emergency period, Tamil Nadu Chief Minister M K Stalin has reminisced in his autobiography.

Recounting his entry into the Central Prison here following arrest in 1976, Stalin in his autobiography described the jail time as a 'torture camp' that reverberated with wail. Though shocking, it gave 'Sakthi' (strength) to an ideologically committed person to face anything. "That day, I got the strength to face anything," Stalin said.

Stalin's 334-page autobiography in Tamil, 'Ungalil Oruvan' (One among you) Part I, was released here recently by Congress leader and MP Rahul Gandhi.

The Emergency was imposed by the then Indira Gandhi government in 1975 and was in place till 1977. The period was infamous for widespread arrests of opposition political leaders and curtailment of civil liberties.

Hours after the DMK government in Tamil Nadu led by Karunanidhi was dismissed on January 31, 1976, Stalin recalled that police arrived at their Gopalapuram residence here looking for him. However, he was at a near-by town of Mathuranthakam at the time.

When police officers said they had an order to search the house to ascertain if Stalin was available or not, Karunanidhi told them, 'by all means' and informed them that his son was out of town and would be back home the next day. Also, Karunaidhi 'offered' himself to be arrested.

The Chief Minister recalled that he and others had an apprehension that 'Thalaivar' could be arrested, but the 'jail breeze was blowing towards me.' When he arrived home the following day on February 1, 1976, Stalin said while his mother Dayalu Ammal and wife Durga wept, Thalaivar's stentorian voice advising that one should be prepared for all kinds of sacrifices in public life pacified family members.

"Be ready, police is looking for you," Stalin quoted his father and party chief Karunanidhi as telling him. Later, police officers arrived after Karunanidhi informed them over phone about Stalin getting back home. "Stalin is here, take him," Karunanidhi told police officials.

The Chief Minister said since he was arrested under the Maintenance of Internal Security Act (MISA), he was not sure how long the incarceration would last. Though his father had been the Chief Minister of the state for years till the government's dismissal, there was not even a trace of authority when he dealt with police.

Like an ascetic, with a sense of detachment, his father Karunanidhi sent him to jail, Stalin said. Karunanidhi had absolutely no regret that his son was going to jail, the Chief Minister said. Karunanidhi's face, at that moment, conveyed a sense that like many DMK members at the time, his son Stalin too has gone to jail.

Describing that many armed personnel were on guard at the fortified prison entrance when he was led into the jail, he said that scenario would make one wonder whether the person being jailed was a terrorist.

"I will recount the wail, the blood curdling scenes (from the jail) in the second party (of autobiography). I will take you also into the prison. I am waiting at the entrance of the jail! You too wait!" Stalin said dramatically ending the first part of his autobiography. —PTI

தினகரன்

22-Mar-2022

முற்றுப்புள்ளி வைப்போம்

சர்வதேச அளவில் அதிக சாலை விபத்துகள் நடக்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. விபத்துகளில் சிக்குபவர்களுக்கு உரிய நேரத்தில் சிகிச்சை கிடைக்காத நிலை இருந்தது. இந்த நிலை தமிழகத்தில் மாறி விட்டது.

தமிழகத்தில் சாலை விபத்துக்களை குறைக்கவும், சாலை விபத்தில் சிக்கியவர்களை மீட்டு உடனடியாக சிகிச்சை அளிக்கும் வகையில் "இன்னுயிர் காப்போம்- நம்மை காக்கும்-48" என்ற உயிர் காக்கும் திட்டம் உருவாக்கப்பட்டது. மக்கள் நலன் சார்ந்த விஷயங்களில் தமிழக அரசு சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்பதற்கு இதுவே சான்று. சாலை விபத்துக்களை குறைப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சாலை விபத்துக்களால் ஏற்படும் பாதிப்புகளை நன்கு உணர்ந்து, ஒவ்வொருவரும் சாலை விதிகளை கடைப்பிடிக்க வேண்டியது கட்டாயம். குறிப்பாக, டூவீலரில் ஹெல்மெட் அணியாமல் செல்லுதல், செல்போனில் பேசிக்கொண்டே வாகனங்களை இயக்குதல் மற்றும் சாலை விதிகளை மீறி செல்லுதல் உள்ளிட்ட காரணங்களால் அதிக அளவு உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. கார்களில் செல்லும்போது சீட் பெல்ட் கட்டாயம் அணிய வேண்டும். மதுஅருந்தி விட்டு வாகனம் ஓட்டக் கூடாது. வாகனங்களில் அதிவேகமாக செல்வதை தவிர்த்தல் உள்ளிட்ட விஷயங்களை பின்பற்றினால் 75 சதவீத விபத்துகள் குறையும்.

சாலை விபத்துகளுக்கு வாழ்க்கையை தலைகீழாக புரட்டிப்போடும் 'வல்லமை' உண்டு என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். விபத்துக்களால் ஏற்படும் பலிகளால் பல குடும்பங்கள் பரிதாப நிலைக்கு சென்றுள்ளன. சாலை என்பது 'விளையாட்டு மைதானம்' அல்ல என்பதை இன்றைய இளைய சமுதாயம் அழுத்தமாக புரிந்து கொள்ள வேண்டும். சாலை பயணம் பாதுகாப்பானது தான் என்பதை உறுதி செய்ய வேண்டிய கடமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

'இன்னுயிர் காப்போம்- நம்மை காக்கும்-48' என்ற திட்டம் மிக தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் விபத்துகளில் சிக்குவோருடைய உயிர் காப்பாற்றப்படுகிறது. இது பொதுமக்கள் இடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 33 ஆயிரத்து 247 பேர், 48 மணி நேர இலவச சிகிச்சை பெற்றுள்ளதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில் தெரிவித்துள்ளார். மேலும், சாலை விபத்தில் சிக்கிய நபர்களை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு வந்து அனுமதித்து உயிரை காக்கக் கூடிய மனித நேயப்பண்போடு பணியாற்றும் நல்ல உள்ளங்களுக்கு 'நற்கருணை வீரன்' என்ற நற்சான்றிதழும், ரூ.5 ஆயிரம் ரொக்கப்பரிசும் வழங்கப்படுவது பாராட்டுக்குரியது.

முக்கியமாக, தமிழகத்தில் சாலை பாதுகாப்பையும், சாலை விபத்தில் ஒருவர் கூட உயிரிழக்க கூடாது என்பதையும் உறுதி செய்யக்கூடிய உயரிய நோக்கத்தோடு அரசு செயல்பட்டு வருவது வரவேற்க வேண்டிய விஷயம். தமிழக முதல்வர் அறிவித்து வரும் திட்டங்கள் நாடு கடந்து பாராட்டை பெற்றுள்ளது. தமிழகத்தில் சாலை விபத்துகளை குறைக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைக்கு, மக்கள் முழு ஒத்துழைப்பு தர வேண்டும். சாலை விபத்தில் பலி இல்லை என்ற நிலையை உருவாக்கி வெற்றி பெறுவோம்.

DECCAN HERALD
22-Mar-2022

TN Assembly passes resolution against Mekedatu project

Urges Centre not to grant environmental clearance for it

E T B SIVAPRIYAN
CHENNAI, DHNS

Passing a unanimous resolution against the Mekedatu reservoir project, the Tamil Nadu Assembly on Monday asked the Kaveri Water Management Authority (KWMA) 'not to consider' the detailed project report (DPR) submitted by the Karnataka government and reject permission for the same.

The resolution, which was supported by all parties including principal opposition AIADMK and BJP, urged the union government "not to grant environmental and technical or any other clearance" required for going ahead with the reservoir project.

The Assembly criticised the Karnataka government for "unilaterally" allotting funds for the construction of a reservoir in Mekedatu across River Kaveri, without the concurrence of co-basin states and without obtaining necessary permission from the union government.

The resolution, moved by Water Resources Minister Durai Murugan, contended that the Karnataka government's action was against the 2007 final order of the Kaveri Water Disputes Tribunal and the 2018 Supreme Court verdict.

After the resolution was passed with support from all parties, Chief Minister M K Stalin asserted that Tamil Nadu will take every step to stop Karnataka from executing the project, which he said, will affect farmers of the state.

"The government is resolute in taking all legal steps to stop the project, while urging the Centre not to grant any permission. This government will protect Tamil Nadu's interests and that of the farmers," he said.

While seeking the support of all parties for the resolution and reinforcing the need to "speak in one voice," Durai Murugan expressed hope that Karnataka Chief Minister Basavaraj Bommai will respect the "democratic traditions" by not going ahead with the project.

The minister accused successive union governments of a step-motherly attitude towards Tamil Nadu.

Representatives from various parties asked Stalin to consider leading an all-party delegation to Prime Minister Narendra Modi to apprise him of the problems that a new reservoir across River Kaveri in Karnataka would cause to farmers of the state.

"This is a sensitive issue for both the states. Hence, the House calls upon the union government to advise Karnataka not to go ahead with the construction of any reservoir across Kaveri," the resolution said.

It urged the KWMA not to consider Karnataka's detailed project report of the Mekedatu project, which was not part of the Supreme Court verdict.

"The House supports all the actions that the Tamil Nadu government takes to stop Karnataka from going ahead with the project, to protect the interests of the farmers of the state," the resolution read.

A file photo of River Kaveri in Mekedatu. Karnataka plans to construct a concrete gravity dam at Mekedatu with a storage capacity of 67.16 tmcft for supplying drinking water to Bengaluru.

Hindustan Times

22-Mar-2022

MEKEDATU ROW: TN HOUSE PASSES RESOLUTION AGAINST K'TAKA

CHENNAI: The Tamil Nadu assembly on Monday adopted a unanimous resolution condemning the Karnataka government for its 'unilateral' decision to proceed with the Mekedatu dam project, across Cauvery river.

Water resources minister Duraimurugan said Karnataka's decision to proceed with the dam (balancing reservoir) project "disrespecting" the Supreme Court verdict is reprehensible.

Hitting back, Karnataka chief minister Basavaraj Bommai said his government was committed to implement the project. HTC

துபாய் செல்லும் தமிழக முதல்வர்

அமீரக வாழ் தமிழர்கள் உற்சாகம்

துபாய், மார்ச் 23: துபாயில் நடைபெற்று வரும் சர்வதேச எக்ஸ்போவில் பங்கேற்க தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வரும் 26ம் தேதி துபாய் செல்ல உள்ளார். அங்கு அவர் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்கேற்க திட்டமிட்டுள்ளார். தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் பதவியேற்ற பிறகு மேற்கொள்ள உள்ள முதல் வெளிநாட்டு பயணம் இது.

இதையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலினை வரவேற்க அமீரக தமிழர்கள் சார்பில் பல்வேறு பிரமாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இது குறித்து அமீரக திமுக அமைப்பாளர் எஸ் எஸ் மீரான் கூறுகையில், "தமிழக முதலமைச்சரின் இப்பயணம் வரலாற்று சிறப்புமிக்கதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. முதல்முறையாக வெளிநாட்டு வாழ் தமிழர் நல அமைச்சகம் அமைத்து எண்ணற்ற திட்டங்களை அறிவித்த முதல்வரை வரவேற்க அமீரக வாழ் தமிழர்கள் ஆர்வத்துடன் காத்திருக்கின்றனர்" என்றார்

வெளிநாட்டு வாழ் தமிழக தொழிலதிபர் கும்பகோணம் பிளாக்துலிப் எஹ்யா கூறுகையில், "முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளிநாட்டு வாழ் தமிழர் நலனுக்கு என்று தனி துறை மற்றும் வெளிநாட்டு வாழ் தமிழர்களுக்கு புலம்பெயர் தமிழர் நல வாரியம் அறிவித்தது எங்கள் அனைவரையும் மகிழ்ச்சிக்கு உள்ளாக்கியது. அவரை அமீரகத்தில் நேரில் நன்றி சொல்ல உள்ளோம்" என்றார். அமீரக வாழ் தமிழக தொழிலதிபர் கமால் கூறுகையில், "அமீரகத்தில் 3.5 லட்சத்திற்கும் அதிகமான தமிழர்கள் உள்ளோம். குறிப்பாக இங்கு உள்ள தமிழ் தொழிலதிபர்கள் தாயகத்தில் தொழில் செய்யும் ஆர்வம் உள்ளது. அவர்களுக்கு நம்பிக்கை தரும் வகையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பயணம் அமையுமென்று நாங்கள் நம்புகிறோம்" என்றார்.

தமிழ் சமூக நல அமைப்பான துபாய் ஈமான் தலைவர் ஹபீபுல்லா கூறுகையில், "வெளிநாடுகளில் பணியாற்றி வரும் தமிழர்கள் பல்லாண்டு காலமாக தங்களது நலன் சார்ந்த கோரிக்கைகளை வலியுறுத்தி வருகின்றனர். தற்போது அக்கோரிக்கைகளை முழுமையாக ஏற்று பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளார். குறிப்பாக உக்ரைனில் தவித்த தமிழ் மாணவர்களை நேரடி பார்வையில் குழு அமைத்து தாயகம் அழைத்து வந்து வெளிநாட்டு வாழ் தமிழர்களின் மனதில் பெரும் நம்பிக்கையை விதைத்துள்ளது" என்றார்.

THE NEW INDIAN EXPRESS

24-Mar-2022

MAIDEN VISIT ABROAD

CM to visit UAE to woo investors & meet CEOs

EXPRESS NEWS SERVICE @Chennai

IN a bid to woo potential investors in Dubai and Abu Dhabi, Chief Minister MK Stalin will be embarking on his first international trip starting from Thursday, when he will visit the Indian Pavilion during the last week of Dubai Expo.

A senior official from the Industries Department told *TNIE* that the visit is timed in such a way as to provide the State with visibility not only in the UAE but across the Middle East. It is learnt that the State is expecting the visit of several ministers and officials not only from UAE but also from other countries.

The CM during his visit is likely to meet CEOs of industries and government officers which the official termed as significant. The visit by CM highlights how serious the State is about wooing investments. It is learnt that after Stalin's visit, officials from Industries Department and Guidance will be following up at the local-level.

After his visit to Dubai, the CM will fly to Abu Dhabi, the capital of UAE, where he will be meeting high-level officials and there could even be some signing of investment agreements. The CM is also likely to meet the diaspora in UAE, sources added.

To give TN visibility

A senior official from the Industries Department said the visit is timed in such a way as to provide the State with visibility not only in the UAE but across Middle East

THE HINDU
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878
24-Mar-2022

Stalin to attend Dubai Expo

SPECIAL CORRESPONDENT
CHENNAI

Chief Minister M.K. Stalin will leave for Dubai on Thursday on a four-day trip.

Mr. Stalin will leave after the conclusion of the debate on the State Budget in the Assembly. This will be his first overseas visit after taking over as Chief Minister. Mr. Stalin will visit the Dubai Expo 2022 and inaugurate pavilions set up by a few departments of the State government. He will be meeting investors.

தினகரன்

25-Mar-2022

வெற்றி பயணம்

தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் பதவியேற்ற நாளில் இருந்து தனது சிந்தனை, செயல் முழுக்க தமிழ், தமிழக மக்கள், தமிழக வளர்ச்சி என்ற கொள்கையை அடிப்படையாக கொண்டு திட்டங்களை வகுத்து அமல்படுத்தி வருகிறார். இந்நிலையில், துபாயில் உலக கண்காட்சி நடந்து வருகிறது. கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் தொடங்கிய இக்கண்காட்சி இம்மாதம் 31ம் தேதி நிறைவடைகிறது. இந்த கண்காட்சியில் உள்ள தமிழக அரங்கில் இந்த வாரம் தமிழக வாரமாக கடைபிடிக்கப்படுகிறது.

இதில் கலந்து கொண்டு தமிழக அரங்கினை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்துவைக்கிறார். தொழில்துறை, மருத்துவம், சுற்றுலா, கலை, கலாச்சாரம், கைத்தறி, கைவினைப்பொருட்கள், ஜவுளி, தமிழ் வளர்ச்சி, தகவல், மின்னணுவியல், தொழிற்பூங்காக்கள், உணவு பதப்படுத்தல் ஆகிய முக்கிய துறைகளில் தமிழகத்தின் சிறப்பை உலகிற்கு பறைசாற்றும் வகையில் காட்சிப்படங்கள் அந்த அரங்கில் திரையிடப்பட இருக்கிறது. தமிழகத்தில் உற்பத்தியாகும் மோட்டார் வாகனங்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள், மின்சார வாகனங்கள், மின்னணுவியல் சாதனங்கள், காற்றாலைகள் உள்பட பல உற்பத்தி பொருட்களின் மாதிரிகளும் காட்சியகப்படுத்தப்பட உள்ளன. இந்த அரங்கை பார்வையிடுவோர் தமிழகத்தின் ஒட்டுமொத்த சிறப்பினை அறிந்துகொள்ள வழிவகை செய்யும் வகையில் பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்தியா உள்பட 192 நாடுகள் பங்கேற்றுள்ள இக்கண்காட்சியில் ஒவ்வொரு நாட்டுக்கும் பிரத்யேக அரங்குகள் உள்ளன. இந்த கண்காட்சியை 2.50 கோடி பேர் பார்வையிடுவார்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழக முதல்வரின் பயணம் தமிழகத்துக்கு தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் அமைய இருக்கிறது. வெளிநாட்டு வர்த்தகம், பொருளாதாரம் போன்ற முக்கிய துறை அமைச்சர்களை சந்தித்து தமிழகத்தில் தொழில் தொடங்க அழைப்பு விடுக்க இருக்கிறார். இதே போன்று முன்னணி தொழில் நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகள், வர்த்தக, தொழில் சங்க தலைவர்களுடன் சந்தித்து ஆக்கப்பூர்வமான முயற்சிகளை முன்னெடுக்கும் வகையில் ஆலோசனை மேற்கொள்ள இருக்கிறார். மேலும் அபுதாபி, துபாயில் புலம்பெயர்ந்த தமிழர்களையும் சந்தித்து பேசுகிறார். முதல்வருடன் தொழில்துறை அமைச்சர், தொழில் துறை செயலாளர், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் உள்பட ஒரு குழு பயணித்துள்ளது. தமிழகத்தை நம்பர் ஒன் மாநிலமாக மாற்ற தனது துபாய் பயணம் உதவும் என்று தமிழக முதல்வர் சட்டமன்றத்தில் கூறியுள்ளார். எனவே, இந்த பயணத்தின் மூலம் தமிழகத்துக்கு பல்வேறு தொழில் முதலீடுகளை கொண்டு வந்து தமிழகத்தை ஒரு முன்னணி மாநிலமாக வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்வார் என்று உறுதியாக கூறலாம். தமிழகத்தில் பட்டதாரி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கி தர வேண்டும் என்ற முதல்வரின் தொலை நோக்கு பார்வையில் இந்த துபாய் பயணம் அமைந்துள்ளது. எனவே, தமிழக முதல்வருக்கும், அவருடன் பயணித்த குழுவுக்கும் இந்த பயணம் வெற்றிப்பயணமாக அமைய வேண்டும் என்று தமிழக தொழில் துறையினர் மற்றும் மக்கள் சார்பில் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழகம் வரும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவுக்கரம்:

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்புக்கு கி.வீரமணி வரவேற்பு

சென்னை, மார்ச்.25-
திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

இலங்கையில் அதிபர் ராஜபக்சே தலைமையிலான ஆட்சி பொருளாதாரத்தில் மிகவும் நலிவடைந்த மக்கள், விலைவாசி உயர்வு, நிதித் தட்டுப்பாட்டால் தத்தளித்து வருகிறார்கள்.

இலங்கை குடிமக்களில் தமிழர்கள் கடும் பஞ்சத்தால், வறுமையால் அவதிப்படுகிற நிலையில், "பஞ்சம்" காரணமாக வேறு வழியின்றி மீண்டும் 'ஏதிலிகளாக' எம் தொப்புட்கொடி உறவுகள் தமிழ்நாடு நோக்கி வருவோருக்கு ஆதரவுக் கரத்தை, மனிதாபிமானத்தின் அடிப்படையில் தமிழ்நாடு தி.மு.க. அரசு, வழங்கி சட்டப்படி உதவிகள் செய்வோம் என்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், சட்டப்பேரவையில் கூறியிருப்பது, கருணை மழை பொழிந்ததாகவே கருதி வரவேற்கப்பட வேண்டும்.

நிலைமை சரியாகும் வரை அவர்களுக்குத் தமிழ்நாடு ஆதரவு காட்ட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

காமராஜர் பெயரில் கல்லூரி மேம்பாட்டு திட்டம்:

தமிழக அரசின் அறிவிப்புக்கு பல்வேறு அமைப்புகள் பாராட்டு

சென்னை, மார்ச்.25-
ரூ.1,000 கோடியில் காமராஜர் பெயரில் கல்லூரி மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்படும் என்ற தமிழக அரசின் அறிவிப்புக்கு பல்வேறு அமைப்புகள் பாராட்டு தெரிவித்துள்ளன.

கல்லூரி மேம்பாட்டு திட்டம்

தமிழக சட்டசபையில் நேற்று நடந்த பட்ஜெட் கூட்டத்தொடரில், காமராஜர் பெயரில் ரூ.1,000 கோடியில் கல்லூரிகளை மேம்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படும் என நிதி அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் அறிவித்தார்.

தமிழக அரசின் இந்த அறிவிப்புக்கு பல்வேறு அமைப்புகள் பாராட்டு தெரிவித்துள்ளன.

பெருந்தலைவர் மக்கள் கட்சி தலைவர் என்.ஆர்.தனபாலன் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழகத்தை பொறுத்தவரை காமராஜர் பெயரில் எந்த வளர்ச்சி திட்டத்தை அறிவித்தாலும் அது மக்களுக்கு பயன்தரும் வகையில் இருக்கும். காமராஜர் பெயரை சூட்டுவதால் அத்திட்டத்துக்கு பெருமை. இத்திட்டத்துடன் தமிழக அரசு புதிதாக அறிவித்துள்ள அரசு பள்ளிகளில் படித்து, கல்லூரிகளில் சேர்ந்து படிக்கும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 வீதம் வழங்கும் திட்டத்தையும் இணைத்து காமராஜர் பெண்கள் கல்வி மேம்பாட்டு திட்டம் என பெயரிட்டு பெருமை சேர்க்க வேண்டும்", என்று கூறியுள்ளார்.

பாராட்டு

சமத்துவ மக்கள் கழக தலைவர் எர்ணாவூர் நாராயணன் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'இந்த அறிவிப்பின் மூலம் அரசுப்பள்ளி மாணவிகளின் கல்வித்தரம் உயரும். காமராஜர் கல்விக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் அளித்தாரோ அதே அளவுக்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கல்வி வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தி முதன்மை முதல்-அமைச்சராக திகழ்ந்து வருகிறார். இதற்காக முதல்-அமைச்சருக்கு பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன்' என்று கூறி உள்ளார்.

தமிழ்நாடு நாடார் சங்க தலைவர் ஜெ.முத்துரமேஷ் நாடார் தனது அறிக்கையில், 'இந்த புதிய அறிவிப்பை சட்டசபையில் வெளியிட்ட நிதி அமைச்சருக்கும் மற்றும் முதல்-அமைச்சருக்கும் வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழக மக்களின் நீண்டநாள் கோரிக்கையான பெருந்தலைவர் காமராஜர் பெயரில் சென்னை, மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திலும் ஆய்வு மாணவர்கள் பயனடையும் வகையில் காமராஜர் ஆய்வு இருக்கை அமைக்க வேண்டும். அதற்கு தமிழக அரசு ரூ.10 கோடி நிதி வழங்க முதல்-அமைச்சரை கேட்டுக்கொள்கிறோம்' என தெரிவித்துள்ளார்.

தினத்தந்தி
DAILY THANTHI

25-Mar-2022

முதலீடுகளை கொண்டுவரும் முதல்-அமைச்சரின் துபாய் பயணம்!

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றவுடன் 2030-ம் ஆண்டுக்குள் ரூ.75 லட்சம் கோடி மொத்த உள்நாட்டு உற்பத்தி கொண்ட பொருளாதாரமாக தமிழ்நாட்டை உருவாக்குவதே அரசின் குறிக்கோள் என்று பிரகடனப்படுத்தினார். அந்தவகையில், தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் பரவலான தொழில்வளர்ச்சி ஏற்பட பல்வேறு முதலீட்டாளர்கள் மாநாடுகளை நடத்தியிருக்கிறார். அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கிய வளர்ச்சி, அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வளர்ச்சி, அனைத்து பிரிவினரையும் உள்ளடக்கிய வளர்ச்சி இதுதான் "திராவிட மாடல்" என்பது. அந்த நோக்கத்துடன் தமிழ்நாடு வளரவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை என்று எப்போதும்கூறும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், அந்த திசையில் தொழில்வளர்ச்சி மேம்படுவதை தன் இலக்காக கொண்டு செயல்பட்டு வருகிறார்.

தொழில்புரிவதை மிகவும் எளிதாக்கிடவும், அதற்கு

உகந்த சூழ்நிலையை உருவாக்கிடவும் நான் உறுதிபூண்டுள்ளேன் என்று கூறிவரும் அவர், முதலீட்டாளர்கள் தொழில்தொடங்குவதற்கு தேவையான அனைத்து அனுமதிகளையும் உடனுக்குடன் பெற்று, தங்கள் திட்டங்களை விரைவாகவும், எளிதாகவும் நிறுவுவதற்கு 24 துறைகளின் 100 சேவைகள்கொண்ட ஒரு மேம்படுத்தப்பட்ட ஒற்றைசாளர இணையதளமாக விளங்கும் வகையில் ஒரு புதிய இணையதளத்தையும் தொடங்கிவைத்தார். தமிழக அரசு அளிக்கும் ஊக்கத்தால், வழங்கப்படும் சலுகைகளால் நம் மாநில தொழில்முனைவோர்கள் மட்டுமல்லாது, அகில இந்திய தொழில்முனைவோர், ஏன் வெளிநாட்டு தொழில்முனைவோர்கூட தமிழ்நாட்டில் தொழில்முதலீடுகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்தவகையில், துபாய், அபுதாபி போன்ற வெளிநாட்டு தொழில்முனைவோர்களை நேரடியாக சந்தித்து புதிய முதலீடுகளை ஈர்க்க முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், நேற்று தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தொழில்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் எஸ்.கிருஷ்ணன், தொழில் வழிகாட்டி நிறுவன மேலாண்மை இயக்குனர் பூஜா குல்கர்னி உள்பட ஒரு குழுவை அழைத்துக்கொண்டு துபாய், அபுதாபிக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் உலக கண்காட்சிகள் மிக பழமையான, மிகப்பெரிய சர்வதேச நிகழ்வுகளில் ஒன்றாகும். இந்த உலக கண்காட்சி 6 மாதம் நடைபெறும். கடந்த ஆண்டு அக்டோபர் 1-ந்தேதி முதல் வருகிற 31-ந்தேதி வரை துபாயில் எக்ஸ்போ கண்காட்சி, மத்திய கிழக்கு, ஆப்பிரிக்கா, தெற்கு ஆசியா பிராந்தியத்தில் நடத்தப்படும் முதல் கண்காட்சியாக நடந்துவருகிறது. இந்த உலக கண்காட்சியில் தமிழ்நாடு அரங்கில், இன்று முதல் கண்காட்சி முடியும் 31-ந்தேதி வரை தமிழ்நாடு வாரமாக அனுசரிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டு அரங்கை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைக்கிறார். இந்த கண்காட்சிக்கு வருபவர்கள் தமிழ்நாட்டில் தொழில்துறை, மருத்துவம் உள்பட பல்வேறு துறைகளில் தமிழ்நாட்டின் சிறப்பை உலகுக்கு எடுத்துக்காட்டும் வண்ணம் காட்சிஅரங்குகளில், காட்சிப் படங்கள் திரையிடப்படுகின்றன. இதுமட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் பல்வேறு தொழில்கள் மூலம் உற்பத்திசெய்யப்படும் பொருட்களும் காட்சிப்படுத்தப்படுகின்றன. இந்த உலக கண்காட்சியில் 192 நாடுகள் பங்கேற்பதால், அதில் கலந்துகொள்பவரும் எல்லோரும் தமிழ்நாடு அரங்கை பார்ப்பார்கள். தமிழ்நாட்டில் தொழில்தொடங்கஇருக்கும் வாய்ப்புகளை பார்ப்பார்கள். அதுசம்பந்தமாக விளக்கமளிக்க முதல்-அமைச்சர் தலைமையிலான குழுவும் அங்கு தயாராக இருக்கிறது. இந்த பயணத்தின்போது முதல்-அமைச்சர் தமிழ்நாட்டுக்கு மேலும் முதலீடுகளை ஈர்க்கும்வகையில் துபாய், அபுதாபி போன்ற நாடுகளின் பொருளாதாரம், வெளிநாடு வர்த்தகம் போன்ற முக்கிய துறைகளின் மந்திரிகளையும், துபாயில் முன்னணி வணிக மற்றும் தொழில்நிறுவன அதிகாரிகளையும் சந்திக்கிறார். வர்த்தகம் மற்றும் தொழில்சங்கங்களின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தையும் நடத்துகிறார்.

நேற்று சட்டசபையிலேயே முதல்-அமைச்சர், இந்தியாவிலேயே தொழில்வளர்ச்சியில் தமிழ்நாடுதான் முதல் மாநிலம் என்று சொல்லும் அளவுக்கு நம் தமிழகம் வரவேண்டும். அப்படிப்பட்ட நம் வெற்றிக்கு என்னுடைய துபாய், அபுதாபி பயணம் நிச்சயம் துணைநிற்கும் என்று உறுதியளித்திருக்கிறார். தொழில்முதலீடுகளை ஈர்க்க முதல்-அமைச்சரே வெளிநாடுகளுக்கு செல்வது மிகவும் பாராட்டுக்குரியது. 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!' என்று அன்று பாடினார் பாரதியார். அதுபோல 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் தொழில்வளங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்று தமிழகமக்கள் முதல்-அமைச்சருக்கு வாழ்த்து தெரிவிக்கிறார்கள்.

முரசொலி
26-Mar-2022

தமிழக நிதிநிலை அறிக்கையில்

மாணவிகளின் உயர் கல்விக்கு ரூ.1000 ஊக்கத்தொகை!

ரிசர்வ் வங்கி ஆளுநர் ரகுராம் ராஜன் புகழாரம்!

சென்னை, மார்ச் 26 –

தமிழ்நாடு அரசின் நிதி நிலை அறிக்கை மாணவிகள் மற்றும் சமூக, பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியோருக்கு பலன் தரும் என ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநரும், முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழு உறுப்பினருமான ரகுராம் ராஜன் புகழாரம் சூட்டியுள்ளார்.

மெட்ராஸ் இன்ஸ்டிட்யூட் ஆப் டெவலப்மெண்ட் ஸ்டடீஸ் சார்பில் சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்று வரும் கருத்தரங்கில் ரகுராம் ராஜன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இந்திய பொருளாதார வளர்ச்சி குறித்து உரையாற்றிய அவர், கல்லூரி மாணவர்களின் பொருளாதாரம் தொடர்பான கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

அப்போது, தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையை வெகுவாக வரவேற்ற ரகுராம் ராஜன், அரசுப் பள்ளி மாணவிகளின் உயர் கல்விக்கு ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகை மிகச்சிறப்பான திட்டம் என பாராட்டினார்.

‘பட்ஜெட் திட்டம் பெருமைக்குரியதாக அமைந்திருக்கிறது’

குமரி அனந்தன் பாராட்டு

சென்னை, மார்ச்.26-

தமிழ்நாடு காந்தி பேரவையின் தலைவர் குமரி அனந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு உள்ளதாவது:-

கல்விக்கண் தந்த காமராஜர் என்று போற்றப்படும் பெருந்தலைவரின் புகழை மேலும் மேம்படுத்த, அரசு கல்லூரிகளை மேம்படுத்த ரூ.1,000 கோடி தமிழக அரசு ஒதுக்கியிருப்பது உள்ளத்தை உவகை கடலில் ஆழ்த்துகிறது.

கற்பகத் தருவாம் பனைகளை அதிகமாக்க 35 லட்சம் பனை விதைகளை நடத் திட்டம் கொண்டு வருவதை பெரிதும் போற்றுகிறேன். எளிய வசதியான பனை ஏறும் கருவி காண்பார்க்கும் பரிசளித்தல் ஊக்கம் தரும். மொத்தத்தில் பட்ஜெட் திட்டம் பெருமைக்குரியதாக அமைந்திருப்பதை பாராட்டுகிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

3 ஆண்டுகள் போராட்டத்துக்கு பிறகு முதல்வரின் தனி கவனத்தால்

பழங்குடியின மாணவருக்கு வேளாண் கல்லூரியில் படிக்க வாய்ப்பு

■ கோவை

'இந்து தமிழ்' செய்தி எதிரொலியாக முதல்வரின் தனி கவனத்தால் ஈரோடு அருகே உள்ள பழங்குடியின கிராமத்தைச் சேர்ந்த மாணவருக்கு வேளாண் கல்லூரியில் இடம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டம் கண்டப்போடு பழங்குடியின கிராமத்தைச் சேர்ந்தவர் சந்திரன்(21). குழந்தைத் தொழிலாளியாக மாடு மேய்த்துக் கொண்டிருந்த சந்திரன் மீட்கப்பட்டு, குழந்தைத் தொழிலாளர்களுக்கான சிறப்புப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். அங்கு 2 ஆண்டுகள் படித்தார்.

அருகே உள்ள குன்றி எனும் கிராமத்தில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளியில் 10-ம் வகுப்பு வரை படிப்பைத் தொடர்ந்தார். இதையடுத்து, கோபிசெட்டிப்பாளையம் வைரவிழா மேல்நிலைப் பள்ளியில் வேளாண்மைச் செயல்பாடுகள் தொழிற்பிரிவில் சேர்ந்து படித்தார்.

கண்டப்போடு கிராமத்தில் இருந்து இதுவரை ஒருவர்கூட கல்லூரிப் படிப்பில் சேர்ந்ததில்லை. முதலாவது நபராக, கடந்த 2019-ம் ஆண்டு பிளஸ் 2 முடித்ததும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துக்கும், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகத்துக்கும் சந்திரன் விண்ணப்பித்திருந்தார்.

கால்நடை மருத்துவப் பட்டப் படிப்புக்கு விண்ணப்பித்த மாணவர்களின் தகுதி மதிப்பெண் பட்டியலில் பழங்குடிப் பிரிவில் முதலாவது இடத்தில் இருந்தார் சந்திரன். இருப்பினும் அவருக்கு கால்நடை மருத்துவம் படிக்க வாய்ப்பு கிடைக்கவில்லை. வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலும் அவருக்கு இடம் கிடைக்கவில்லை.

▲ எதிர்க்கட்சி தலைவராக மு.க.ஸ்டாலின் இருந்தபோது அவரை சந்தித்த பழங்குடியின மாணவர் சந்திரன்(இடது). அவருக்கு உறுதுணையாக இருந்த 'சுடர்' அமைப்பின் நடராஜ். (கோப்பு படம்)

பழங்குடியினருக்கான இடஒதுக்கீடு அவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் ஒரு சதவீதம் மட்டுமே வழங்கப்பட்டுவருகிறது. உயர் கல்வியிலோ, வேலை வாய்ப்பிலோ நூற்றுக்கும் மேற்பட்ட இடங்கள் இருந்தால் மட்டுமே அந்த வாய்ப்பைப் பழங்குடியினர் பெற முடிகிறது. இல்லை என்றால், அவர்களின் உயர் கல்விக் கனவுக்கு நிரந்தரமான முற்றுப்புள்ளியைத்தான் வைத்துக் கொள்ள வேண்டும். இடஒதுக்கீட்டின் அடிப்படைக்கே இது எதிரான அணுகுமுறை.

வெளியான கட்டுரை

கல்லூரியில் குறைவான இடங்களே உள்ளபோது, பழங்குடியினர் விண்ணப்பித்தால் அவர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி 'ஒரு சதவீத இடஒதுக்கீடு: உயர்கல்வி மறுக்கப்படும் பழங்குடி மாணவர்கள்' என்ற தலைப்பில் 'இந்து தமிழ்' நாளிதழின் நடுப்பக்கத்தில், 2019 ஆகஸ்ட் 20-ம் தேதி விரிவான கட்டுரை வெளியானது.

இந்த கட்டுரையை படித்துவிட்டு அப்போதைய எதிர்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் சந்திரனை நேரில் அழைத்து, சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு முழுமையான உதவிகளைச் செய்வதாக உறுதி அளித்தார். அந்த செய்தி 2019 ஆகஸ்ட் 23-ம் தேதி படத்துடன் வெளியானது.

அதைத் தொடர்ந்து கடலூர் மாவட்டம், பாதிரிகுப்பத்தைச் சேர்ந்த வாசகர் பி.கிருஷ்ணராஜ், நமது நாளிதழில் செய்தி வெளியான பழங்குடி மாணவரின் தற்போதைய நிலை குறித்து அறிந்துகொள்ள விரும்புவதாக கடிதம் அனுப்பியிருந்தார்.

அதன் பிறகு, குடும்ப வறுமையால் மீண்டும் சந்திரன் மாடு மேய்த்துக் கொண்டிருக்கிறார் என்ற தகவல் 'இந்து தமிழ்' நாளிதழின் நடுப்பக்கத்தில், 'இப்படிக்கு இவர்கள்' பகுதியில் 2021 ஜூலை 5-ம் தேதி வெளியானது. இதையடுத்து, மீண்டும் அந்த செய்தி கவனம் பெற்றது.

முதல்வருக்கு நன்றி

நடப்பு ஆண்டு மீண்டும் கால்நடை மருத்துவப் படிப்புக்கும், வேளாண்மை பாடப் பிரிவுக்கும் சந்திரன் விண்ணப்பித்திருந்தார். அதைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் முதல்வர் அலுவலகத்தில் இருந்து சந்திரனுக்கு அவசர தகவல் கிடைத்துள்ளது. அப்போது, கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்துக்கு நேரில் வருமாறு தெரிவித்துள்ளனர்.

அங்கு சென்றபோது, சந்திரனுக்கு வேளாண்மை பாடப் பிரிவில் (வடிநீர்) இடம் உறுதிசெய்யப்பட்டு உள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக சந்திரன் கூறும்போது, 'இந்து தமிழ்' நாளிதழில் வெளியான தொடர் செய்திகள், முயற்சிகளுக்குப் பிறகு இடம் கிடைத்துள்ளது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இதற்காக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்" என்றார்.

THE NEW INDIAN EXPRESS
26-Mar-2022

TN'S EDU FOCUS FOR INCLUSIVE GROWTH

A raft of reforms introduced by the Tamil Nadu government recently has brought back the focus on quality of education in the state. These include the 'Naan Mudhalvan' scheme, through which the government plans to improve academic and employability skills of 10 lakh youth every year, and the 'Illam Thedi Kalvi', launched with the help of 1.8 lakh volunteers to address children's learning losses due to Covid. Recently, the state Budget allocated ₹36,895 crore, TN's highest, for school education. The state's emphasis on social inclusivity over the years and pioneering intervention measures such as noon-meals scheme and free distribution of notebooks, uniforms and laptops have ensured consistently high enrolment rate at all levels, but quality of education has been a concern for long.

The state faces three significant changes. First, the UGC has decided to introduce a mandatory Common University Education Test (CUET) for admission to UG programmes in all 45 central universities. It is important for TN to raise the standard of school education lest students face challenges akin to NEET. Second, despite long years of political and legal struggle, TN has not got an exemption from NEET for medical admissions. While it is important to continue the fight to wrest back the state's rights over education, it would be prudent for TN to expeditiously improve the quality of learning and teaching to progressively move students from rote learning to conceptual learning.

Third, the recent Annual Status of Education Report (ASER) for 2019-20 shows that the majority of children in Class 3 in rural schools across the country do not have the basic skills to read and write, and perform basic operations with numbers. On a 70-point grading index, TN, with a score of 132, has the lowest learning outcome and quality compared to Karnataka (160), Kerala (154), Andhra Pradesh (154) and Telangana (142). The state finance minister said the Budget was prepared keeping in mind generations of Tamils yet unborn. The fight for social justice is only half-won. Education may be the first and best place to start this battle for an inclusive Dravidian model of growth.

THE NEW INDIAN EXPRESS

26-Mar-2022

1ST GRAD FROM HIS VILLAGE

CM's help gets tribal youth reservation, college seat

SUBASHINI VIJAYAKUMAR
@ Chennai



Chandran along with parents outside his house | EXPRESS

BRAVING many an odd, U Chandran, a tribal from Sudaipodu village in Burgur in Erode is set to join B.Sc Agriculture at Tamil Nadu Agricultural University (TNAU), thanks to the special interest shown by Chief Minister MK Stalin. Chandran will be the first graduate from his village, and is all set to join a private college in Erode.

TNAU Dean (Agriculture) and Chairman of Admissions, M Kalyanasundram, said reservation was extended to accommodate Chandran. "Out of 6,175 seats, as many as 2,565 are in government colleges. Earlier, five per cent reservation was given only for government seats in four streams. After the intervention of CM's office to ensure a seat to Chandran, we passed a resolution at the academic council, extending reservation to private colleges as well," he said.

Belonging to Cholagar tribal community, Chandran lives in Sundaipodu in a remote part of the village. Though he wanted to pursue Bachelor of Veterinary Sciences and Animal Husbandry in TANUVAS, Chandran could not get through in 2019-20, despite securing first rank among Scheduled Tribe community and 146th among all the vocational stream candidates. At that time, TANUVAS allocated only 5 per cent (18 seats) of its 360 seats to students studying vocational courses. "Out of these 18 seats, only one per cent is allocated to tribal students, making students of ST category ineligible for admission," they said.

The situation at TNAU, where only 5 per cent of the seats in 14 government colleges were allocated to vocational stream students, was also no different. To accommodate Chandran and to help other students studying vocational streams, the 5 per cent reservation has been extended to 28 private colleges in the current academic year. Kalyanasundaram added Chandran will be given the seat on March 29.

THE TIMES OF INDIA

26-Mar-2022

Fashion Statement Through The Ages

SUITS YOU, CHIEF MINISTER

Times News Network

Social media has been going gaga over photographs of chief minister M K Stalin in a suit in Dubai. It's not the first time he is seen in the western wear, but a Tamil politician in anything other than shirt-veshti is a rarity.

While C Rajagopalachari and K Kamaraj stuck to their usual attire even while visiting a foreign country, DMK founder C N Annadurai, his successor M Karunanidhi and rival M G Ramachandran chose the dapper look in smart suits when they travelled abroad.

Anna wore a suit with a tie when he visited the US and Japan in 1968. Karunanidhi did the same when travelled to Paris in 1970 for the third World Tamil Conference and later when he visited the Pope in the Vatican. During his three-week tour that included western Europe and parts of the US, he wore Indian suits, buttoned up to his neck.

While in India, however, they rarely tried the modern outfit. In his autobiography, Karunanidhi mentions 'Navalar' (V R Nedunchezhiyan) having begun to wear Indian suits and how a distance crept in between him and the cadres.

In August 2019, then chief minister Edappadi K Palaniswami wore three-piece suits on a tour of the US, UK and Dubai. A couple of months later, his deputy O Panneerselvam wore a deep grey suit with a matching tie while receiving an award from a community group in Chicago.

On Friday, Stalin, dressed in an suit, appeared to be at ease with his hosts at the Dubai International Financial Centre. A close associate said the chief minister's suits are tailored in Chennai at the renowned Syed Bawkher & Company.

DRESS CODE: From C N Annadurai onwards, chief ministers of Tamil Nadu have exchanged their white shirts and dhoties for suits on their travels abroad

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் துபாய் பயணம்!

அமீரக பத்திரிகைகள் – ஊடகங்கள் பாராட்டு!

துபாய், மார்ச் 27–

தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் வகையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 4 நாள் பயணமாக துபாய் மற்றும் அபுதாபி புறப்பட்டார். முன்னதாக துபாயில் 5 நிறுவனங்களுடன் ரூ.2600 கோடி முதலீட்டில் 9700 பேருக்கு வேலை வாய்ப்புகள் பெருகும் வண்ணம் 5 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கையெழுத்தாகியுள்ளது.

இந்நிலையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்டுள்ள துபாய் பயணத்தை அமீரக பத்திரிகைகள் மற்றும் பல்வேறு ஊடகங்கள் பாராட்டியுள்ளன.

ஐக்கிய அரபு அமீரகத்தின் முதன்மை பத்திரிகையான AL Khaleej வெளியிட்டுள்ள செய்தியில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுடனான ஐக்கிய அரபு அமீரக வெளியுறவு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் Thani bin Ahmed Al Zeyoudi சந்திப்பு மிக முக்கியமானது என குறிப்பிட்டுள்ளது. இரு தரப்பிலும் பொருளாதார மற்றும் வணிக வாய்ப்புகளில் கூட்டு ஒத்துழைப்பு குறித்து விவாதிக்கப்பட்டதாக AL Khaleej பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்தியா – ஐக்கிய அரபு அமீரகம் இடையேயான ஒத்துழைப்பானது, உலக அளவில் வர்த்தகம் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கான பரந்த வாய்ப்புகளை ஏற்படுத்தி வருவதாகவும் AL Khaleej பத்திரிகை கூறியுள்ளது.

இந்த சந்திப்பின்போது விவசாயம் உள்ளிட்ட துறைகளில் தமிழ்நாட்டில் முதலீடு செய்வது குறித்து விவாதிக்கப்பட்டதாகவும் AL Khaleej பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதேபோல், துபாயில் இருந்து வெளியாகும் மலையாளப் பத்திரிகைகளும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் துபாய் பயணத்தை பாராட்டி முதன்மைச் செய்தியாக வெளியிட்டுள்ளன.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் துபாய் பயணத்தை பாராட்டி மீடியா ஒன் உள்ளிட்ட ஊடகங்களும் செய்தி வெளியிட்டுள்ளன.

முரசொலி

27-Mar-2022

திருநங்கைகளும் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யலாம் என்ற

மகத்தான திட்டத்தைக் கொண்டு வந்தவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

சென்னை தெற்கில் "திராவிடத் திருமகனைப் போற்றும் திருநங்கையர்" நிகழ்ச்சியில் திருநங்கையர் புகழாரம்!

சென்னை, மார்ச் 27–

"திருநங்கைகளும் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யலாம் என்ற மகத்தான திட்டத்தைக் கொண்டு வந்தவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள்" என்று திருநங்கைகள் புகழாரம் சூட்டியுள்ளனர்.

தென் சென்னை மாவட்டக் கழகம் சார்பில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஒரு வித்தியாசமான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் "திராவிடத் திருமகனைப் போற்றும் திருநங்கையர்" என்ற தலைப்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் திருநங்கைகள் மட்டும் கலந்து கொண்டு வாழ்த்தும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தினை கழக மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா, தொடங்கி வைத்து பேசுகையில்;

"மகிழ்ச்சியாக இருக்கிறது. பெருமிதமாக இருக்கிறது. ஒரு மேடை முழுவதும் திருநங்கைகள் உட்கார்ந்து எதிரே ஆயிரக்கணக்கானோரை உட்கார வைத்து உரையாற்றுகின்ற சரித்திரம் தமிழ்நாட்டில் மட்டும்தான் நடைபெறும். இந்த கருப்பு சிவப்பு கொடி உயர, உயர இந்த தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை பேருடைய வாழ்வும் உயரும், மரியாதை உயரும், கண்ணியம் உயரும், இவ்வளவு பெரிய கட்சி ஆதரிக்கின்றது. இத்தனை பெரிய தலைவர் நம்பிக்கை தருகிறார். ஒரு ஆட்சி உறுதுணையாக இருகிறது என்கிற போது, நம் பிள்ளையை நாம் புறக்கணிப்பதா? என்று பெற்றோர்களுக்கே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய இயக்கம் தி.மு.க." என்று பேசினார்.

இதனைத் தொடர்ந்து திருநங்கைகள் வாழ்த்தி பேசியதாவது:-

திருநங்கை1 – வாழ்க்கையில் எத்தனையோ போராட்டங்கள், எத்தனையோ சவால்கள், எவ்வளவோ விஷயங்களைக் கடந்து இன்று இந்த மேடையில் நாங்கள் இருக்கின்றோம் என்றால், இதற்கான வாய்ப்புகள் எல்லாம் யாரால் உருவாக்க முடியும் என்றால் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களால் மட்டும் தான் உருவாக்க முடியும்.

திருநங்கை 2 – பெண்களைப் போலும் திரு நங்கைகளும் பேருந்தில் இல வசப் பயணம் செய்யலாம் என்ற மகத்தான திட்டத்தைக் கொடுத்தவர் நம்முடைய தலைவர்.

இன்றைக்கு ஒரு மாமன்ற உறுப்பினராகவும். இன்றைக்கு ஒரு ஒன்றியக் குழு உறுப்பினராகவும், இன்றைக்கு ஒரு காவல் துறை ஆய்வாளராகவும், இன்றைக்கு இந்த மேடையில் அமர்ந்திருக்கிறோம் என்றால் இது திராவிட ஆட்சி செய்த மிகப் பெரிய சாதனை

திருநங்கை 3 – எத்தனையோ பேர் ஆட்சி ஆண்டு விட்டு போனாலும் கூட, நிம்மதியான ஒரு ஆட்சியை நாம் இப் போது தான் பார்க் கின்றோம். அய்யா உங்களது ஆட்சி வளர்க, வாழ்க.

திருநங்கை 4 - இது தான் ஒரு ஈர்ப்பு. இது தான் சமத்துவம் இங்கு தான் நடந் திருக்கு. இதைத்தான் பின்னால் இருக்கின்ற தலைவர் சொல்லி கொடுத்து இருக்கார். திருநங்கைகள் என்று பெயர் வைத்தார் பாருங்கள். கலைஞர் அவருதான் எங்கள் தந்தை. அவர் தான் எங்களுக்கு வழிகாட்டி, எங்களுக்கு முகவரி கொடுத்தவரே அவர் தான். அவரைத்தான்ங்க நாங்க தெய்வமா நினைக்கிறோம், தந்தை வழி வந்த தனயன், அவரிடத்தில் இருக்கக்கூடிய அத்தனை குணமும் கொண்டவர் இவரு. இவருதான் இங்கே இருக்க முடியும்.

திருநங்கை 5 – உண்மையாகவே எங்களுக்கு இன்றைக்கு தான் ஒரு சுதந்திரம் கிடைத்த நாளாக இருக்குது. இந்தச் சமுதாயத்துக்கும் ஒரு தினம் வேண்டும் என்று சொல் லிட்டு, ஏப்ரல் 15ஆம் தேதியை திருநங்கைகள் தினமா அறிவிச் சதை நம்முடைய தி.மு.க. என்பதை ஆணித் தரமாக இந்த இடத்தில் சொல்ல கடமைப் பட்டு இருக்கிறேன். 2008ல் இருந்து திருநங்கைகள் தினம் கொண்டாடிட்டு இருக் கோம். அது உண்மையாகவே எங்களுக்கு ஒரு சந்தோஷத்தைக் கொடுக்குது.

திருநங்கை 6 – ஒவ்வொரு துறையிலும் சாதிச்சுட்டுப் போகின்றது கண்டிப்பா ஒரு திருநங்கையாக இருக்காது, நூறு திருநங்கைகள் இருப்பாங்க என்கின்ற நம்பிக்கை எனக்கு வந்துடுச்சு.

திருநங்கை 7 – திருநங்கைகளுக்கு வீட்டு மனைப் பட்டா, எங்களுக்கு ஓட்டு உரிமை கார்டு, எங்களுக்கு நல வாரிய கார்டு, எங்களுக்கு பேங்க் அக்கவுண்டு, சுய உதவிக் குழு, மக்கள் உதவிக் குழு, தனிப்பட்ட வேலைவாய்ப்பு அரசின் சார்ந்த வேலை வாய்ப்பு திட்டம், அலுவல் சாரா வேலை வாய்ப்புத் திட்டம் இது போல எல்லாவற்றையும் கொடுத்தது தி.மு.க. ஆட்சிதான்.

இவ்வாறு திருநங்கைகள் பேசினர்.

STATE OF PLAY

A surprising budget

The Tamil Nadu budget marks a shift in the approach of the DMK towards subsidies

T. RAMAKRISHNAN

A tweet by Tamil playwright and public intellectual Indira Parthasarathy on Tamil Nadu's budget and the way it went viral symbolises the public perception of the budget by and large. Professor Parthasarathy, not known for making comments often on political events, called the budget "nuanced, broad-based and people-oriented." But what was more surprising, to critics and supporters of the ruling DMK alike, was the budget itself, the regime's first budget for a full financial year (2022-23).

The supporters were surprised by the absence of any dramatic announcement of freebies. There was no word on the restoration of the old pension scheme for government staff, which was promised by the ruling party during the 2021 Assembly elections. The critics were surprised as the DMK, which rode back to power in 2006 on the assurances of free distribution of colour TV sets and cooking gas stoves, was showing an inclination towards the rationalisation of subsidy distribution.


Tamil Nadu

The budget sends a clear message that the government is conscious of the challenges that lie ahead. The impact of the Russia-Ukraine war, the expected rise in inflation and interest rates, the COVID-19 pandemic, uncertainty over the continuation of compensation to States for the implementation of GST and the probability of monetary loss, and the absorption of entire losses of the perennially loss-making power utility, the Tamil Nadu Generation and Distribution Corporation, from 2022-23 all find a mention in the Budget. Keeping these factors in view, the government conservatively estimates only 17% growth for the next year with regard to the State's Own Tax Revenue (SOTR), which accounts for 60% of its total revenue receipts. However, it has projected a growth rate of nearly 25% for 2023-24. Interestingly, since 2006, the SOTR growth rate breached the 20% mark only twice.

However, the government is bullish about the progress on the fiscal front in two years in the backdrop of what it has 'achieved' in the current year. As stated by Finance Minister Palanivel Thiaga Rajan in his budget speech, this year there will be "a reduction in the absolute level of the Revenue Deficit by over ₹7,000 crore [vis-à-vis the previous year, a COVID-19 year], reversing an alarming trend of increasing deficits every year" since 2013-14. The government is upbeat about realising substantial gains in cost savings through measures including the data purity project, which is expected to weed out ineligible persons from the purview of welfare schemes.

This year's budget is noteworthy for more reasons. It is seeking to refashion the existing marriage assistance schemes into one of promoting higher education for girls by paying ₹1,000 a month directly into their bank accounts provided they have studied from Classes 6 to 12 in government schools and joined undergraduate degree, diploma and ITI courses. The candidate will get the assistance till the completion of her courses without any break. Increasingly, the emphasis of the government is on ensuring that its welfare schemes reach only genuine beneficiaries. This DMK regime is seeking to mark a shift in the approach of the party towards subsidies, as universal application of subsidies had all along been the cry of the DMK and also of the AIADMK.

To give the much-needed push to the construction industry, the government has decided to raise the existing Floor Space Index in areas adjoining the alignments of metro rail, suburban rail, national highways and bypasses. Landowners have demanded a similar measure along the East Coast Road too. What is to be seen is how long the DMK regime is able to hold on to its position firmly on fiscal consolidation, without compromising on the concept of welfarism.

ramakrishnan.t@thehindu.co.in

DMK plans to make inauguration of Delhi office mega political event

S KUMARESAN @ Chennai

BEING the third-largest party in the Lok Sabha, the DMK is taking extensive measures to make the inauguration of its New Delhi office a grand political event, with invitations sent to all parties, including DMK's ideological rival the BJP.

Speaking to *TNIE*, DMK Lok Sabha floor leader TR Baalu said: "So far, our MPs have invited Prime Minister Narendra Modi, Union Home Minister Amit Shah, Vice-President M Venkaiah Naidu, all union ministers, and leaders of all parties."

Many term the move strategic. "The DMK invited Union Home Minister Amit Shah despite his refusal to meet TN MPs delegation over NEET for nearly a week last month. This shows the DMK understands politics and friendship are different," said Raghavendra Aara, political editor of digital news portal Minnambalam.

On the reason for inviting the BJP, DMK's organising secretary RS Bharathi told *TNIE*: "We have invited all parties, including the AIADMK. It is a political courtesy." DMK sources said invitation for leaders of all national and regional parties have been handed over to the respective MPs.

GK Muralidharan, state general secretary of the Congress, opined that it's good to maintain a cordial relationship with all parties, despite the political difference. The inauguration of the office, located at Pandit Deen Dayal Upadhyay Marg in central Delhi, is scheduled at 5 pm on April 2.

Thiruma welcomes Stalin's visit

COIMBATORE: It looks like the BJP government has put the entire nation for sale, said Viduthalai Chiruthaigal Katchi leader Thol Thirumavalavan in Salem on Sunday. Seeking cooperation from public for the two-day strike announced by Central Trade Union organisations on March 28 and 29 against the Centre's move to privatise public sector units (PSU), Thirumavalavan said the VCK will also participate in it. Referring to Chief Minister MK Stalin's visit to Dubai, the VCK chief said, his foreign visit instills confidence and will take the state towards economic prosperity.

முரசொலி

29-Mar-2022

முதலமைச்சரின் வெற்றிகரமான

முதல் வெளிநாட்டுப் பயணம் - வாழ்த்துகிறது தமிழ்நாடு!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, மார்ச் 29-

முதல் அமைச்சராக முதல் வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் செய்து, புதிய முதலீடுகளையும், புதிய வேலை வாய்ப்புகளையும் கொண்டு வந்துள்ள இந்தியாவிலேயே தலை சிறந்த முதல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சாதனையைப் பொறுக்க முடியாமல், அதிமுக மற்றும் பா.ஜ.க.வும் பொய் நெல்லைக் குத்திப் பொங் கலிடும் பரிதாபத்தை இடித்துரைத்து திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் தொழில் வளம் - வேலை வாய்ப்புகள் பெருகினால்தான், வேலை கிட்டாது பதிவு செய்துள்ள பல லட்சம் இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும் 'வாய்ப்பு ஏற்படும் என்பது சராசரி அரசியல் அறிவு படைத்தவருக்கும் தெரியும்.

முந்தைய அ.தி.மு.க.

தமிழ்நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் பெரும் அளவில் வேலை வாய்ப்பைத் தேடித் தரும் மத்திய - மாநில அரசுத் திட்டங்களை பூதக் கண்ணாடியில்தான் தேடிப் பார்க்க வேண்டும்.

வெளிநாடுகளிலிருந்து வந்த சில தொழில் நிறுவனங்கள்கூட, இங்கே முந்தைய அரசின் "மேஜையின்கீழ்" நடைபெற்ற விவகாரங்களால் வெளி மாநிலங்களுக்கு ஓடிப் போய் விட்டன.

இந்த வேதனை மிகுந்த வேலை கிட்டாத இளைஞர்களின் வாழ்க்கையில் 'வெந்த புண்ணில் வேலைச் சொருகுவது போல்' கொரோனா கொடுந்தொற்று, ஊரடங்கு, சிறு - குறு தொழில்களும் முடக்கம் - மூலம் திருப்பூர் போன்ற தொழில் மய்யங்களே வெகுவாக பாதிக்கப்பட்டன!

2014இல் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முதலில் வந்து நின்ற பிரதமர் மோடி, ஆண்டுக்கு இரண்டு கோடிப் பேருக்கு வேலை வாய்ப்பு என்றும், குடி மக்கள் எதிர்பார்க்காத வகையில் ஒவ்வொருவர் கணக்கிலும் 15 லட்ச ரூபாய் தானே 'போத்தென்று' - வந்து குதிக்கும் எனவும், 'சப்கா சாத், சப்கா விகாஸ்' என்று முழக்கமிட்டவாக் குறுதிகளும் காற்றில் பறந்தோடு, வசதியாக மக்களிடம் மறக்கடிக்கப் பட்டே விட்டது! விலை வாசியோ - பெட்ரோல் - டீசல், இல்லத்தரசிகளின் சமையல் எரிவாயு சிலிண்டர் விலை எல்லாம் ஏற்றம்! தின ஏற்றத்தின் மூலம்!

இந்த நிலையில் கடந்த 10 மாதங்களுக்கு முன் மக்களால் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்பட்ட முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தி.மு.க. ஆட்சி பல்வேறு சோதனைகளை உறுதி குலையாது சந்தித்து, பத்து ஆண்டுகளில் முந்தைய அரசுகள் பெறாத நற்பெயரை அகில இந்திய அளவில் பெற்று, இந்தியாவின் முதல் முதலமைச்சர் தலைமையில் - நம்பர் 1 மாநிலமாக தமிழ்நாட்டில் 'திராவிட மாடல்' ஆட்சி நடைபெறுகிறது என்று ஆய்வாளர்கள் முதல் அரசியல் அறிஞர்கள் வரை அனைத்துலக ஏடுகளில் பாராட்டைப் பொழிகின்றனர்!

முதலமைச்சரின் வெற்றிப் பயணம்

முதலமைச்சர் வேலை வாய்ப்புகளைப் பெருக்க, பதவிக்கு வந்த பின்பு அவரது முதல் வெளிநாட்டுப் பயணமாக அமீரகத்திற்கு (U.A.E) துபாய், அபுதாபி போன்ற நாடுகளுக்குச் சென்று, அங்கே முதலீடுகளை ஈர்க்கும் வண்ணம் கடந்த 2, 3 நாள்களில் தமது பயணத்தில் வெற்றிவாகை சூடி திரும்பி உள்ளார்!

அவரது இந்த முதலீட்டாளர்களை ஈர்க்கும் பயணம் மூலம் சுமார் 2,600 கோடி ரூபாய் முதலீட்டையும், 9,700 பேருக்கு வேலை வாய்ப்பையும் உருவாக்க முதல் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைப் போட்டதோடு, புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களிடையே அவர்களது வாழ்வாதாரம் பற்றியும், பிரச்சினைகள் பற்றியும் அறிந்து, தனது அமைச்சரவையில் அமைத்துள்ள ஒரு தனித் துறைக்கான இலக்குகளையும் அடையும் வண்ணம் உழைத்து வருகிறார்.

எதிர்க்கட்சித் தலைவருக்கு உகந்ததல்ல

தமிழ்நாட்டில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் (மேனாள் முதல்வராக இருந்தவர்) இதனை வரவேற்க வேண்டாமா? வரவேற்க மனமில்லாவிட்டாலும் கூட வாயைப் பொத்திக் கொண்டிருந்தாவது தனது கவுரவத்தையும், தாம் தற்போது வகிக்கும் பதவியின் மாண்பினையாவது காப்பாற்றிக் கொண்டிருக்க வேண்டாமா?

முதலமைச்சரை கொச்சைப்படுத்துகின்றார்!

ஆக்கப் பூர்வ எதிர்க்கட்சித் தலைவராக அவர் பொறுப்பை உணர்ந்திருந்தால் இப்படிப் பேசுவாரா? தமிழ்நாடு முதலமைச்சர் அரசு செலவில் தனி விமானத்தில் சென்றாரா? அல்லது அவரது கட்சியின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட தனி விமானத்தில் சென்றாரா? என்ற விவரங்களைக்கூட சரியாக அறிந்து கொள்ளாமல், இப்படிப் பேசுவதை உளறல் என்று எடுத்துக் கொள்வதா? 10 மாதத்துக்குள் இப்படி முதல் அமைச்சருக்கு இவ்வளவுப் பெருமையா என்ற எரிச்சல்தானே!

பா.ஜ.க. என்ற கட்சியின் புதிய தலைவர் பொறுப்பேற்று நாளும் பேசிடுவது - காவிக் கட்சி அதிமுக முதுகில் சவாரி செய்து பெற்ற இடங்களைக்கூட இனி எதிர்காலத்தில் சட்டமன்றத்திலோ, நாடாளுமன்றத்திலோ பெற முடியாத நிலைக்கு அவர்களே அன்றாடம் பறிக்கும் குழியே தவிர வேறில்லை.

எதை எப்படி விமர்சிப்பது என்ற பால பாடத்தைக்கூட அவர் சரியாக இன்னும் கற்றுக் கொள்ளாத காரணத்தினால்தான், தமிழ்நாடு பட்ஜெட்பற்றி "ஒன்றிய அரசு திட்டங்களைக் காப்பியடித்து பெயரை மாற்றி ஒட்டி விட்டார்கள்" என்று சொல்லிய அடுத்த நிமிடம் "அது ஒன்றுமில்லாத சரக்கு" என்றார். அவர் யாரை விமர்சிக்கின்றார்? ஒன்றிய மோடி அரசையா? மாநில அரசையா? இது நல்ல நகை முரண் அல்லவா என்று ஊடகவியலாளர்கள் அண்ணாமலையார்களின் "ஆரோகணம் - அவரோகணம்" பற்றிக் கேலியாக நமுட்டுச் சிரிப்பு சிரிக்கிறார்கள்.

"பொய் நெல்லைக் குத்திப் பொங்கலிட முடியாது" என்றபடி ஏற்பட்ட தோல்விகள்கூட இவர்களின் கண்களைத் திறக்க முடியவில்லை என்பதால் - இவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் இரு கட்சித் தலைவர்களுக்கும் மக்கள் நன்கு பாடம் புகட்டுவர்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுப் பயணம்!

முதலமைச்சர் தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்க்கிறார்!

கவிப்பேரரசு வைரமுத்து புகழாரம்!

சென்னை, மார்ச் 29–

"முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வெளிநாட்டுப் பயணம் தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்த் துள்ளது'' என்று கவிப்பேரரசு வைரமுத்து புகழாரம் சூட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் தமது ட்விட்டர் பதிவில் பதிவிட்டிருப்பதாவது:–

முதலமைச்சரின் வெளிநாட்டுப் பயணம் நன்று.

புர்ஜ் கலீஃபாவின் உயரத்தில் தமிழ்.

2600 கோடி முதலீடு ஈர்ப்பு பல்லாயிரம் வேலைவாய்ப்பு வெளி நாடுகளில் தமிழ்நாட்டு பிம்பம் கட்டமைப்பு அயலகத் தமிழர்க்கு நம்பிக்கை.

முதலமைச்சர் தமிழ்நாட்டுக்கும் தனக்கும் பெருமை சேர்க்கிறார்.

நாடு வாழ்த்தும்!

இவ்வாறு கவிப்பேரரசு வைரமுத்து தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

உலகக் கொடியேற்றிய முதலமைச்சர்!

'துபாய் செல்ல இருக்கிறார் முதலமைச்சர்' – என்பது முதல் கட்டச் செய்தி! ஆனால் செய்தியை வரலாறு ஆக்கிவிட்டுத் திரும்பி இருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!

இன்றைய செய்தி இன்றே வரலாறு ஆகிறது. அதுதான் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தனி முத்திரை ஆகும். துபாய் செல்வதும், தொழிலதிபர்களைச் சந்திப்பதும், தொழில் முதலீடுகளை ஈர்ப்பதும் எனபதுமான செய்திகளைத் தாண்டி, செய்திகள் இன்று வலம் வரத் தொடங்கி இருக்கின்றன.

அதுதான், உலகளாவிய தனது கொடியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஏற்றிவிட்டார் என்பது!

துபாய் நாடு அவருக்குக் கொடுத்த மரியாதை என்பது எந்த மாநிலத்தின் முதலமைச்சருக்கும் சாதாரணமாகக் கிடைத்துவிடும் மரியாதை அல்ல. மாநில முதலமைச்சர்களை 'நாடுகள்' வரவேற்பது இல்லை. ஆனால் மு.க.ஸ்டாலினை நாடு வரவேற்றுள்ளது. காரணம், தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்பதால். உலகம் முழுவதும் பரந்து விரிந்த தமிழ்ப் பேரினத்தின் தலைவர் என்பதால் இத்தகைய வரவேற்பை அந்த நாடு வழங்கியது.

ஒரு மாநிலத்தின் எல்லையைக் கடந்து ஒரு இனத்தின் தலைவராக அவரை அடையாளம் கண்டதால் இத்தகைய வரவேற்பை அந்த நாடு வழங்கி இருக்கிறது. தமிழ்ப்பேரினத்தின் தலைவராக அவரை அடையாளம் காட்டும் நிகழ்ச்சி ஒன்றும் துபாயில் நடந்துள்ளது. அதில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசிய ஒவ்வொரு சொல்லும் தமிழினத்தின் தலைவரின் முழக்கமாக அமைந்திருந்தது.

• தமிழர்கள், தமிழ்நாட்டில் மட்டுமல்ல –உலகம் முழுவதும் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்பது தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியம் ஆகும். அப்படித் தலை நிமிர்ந்து துபாய் நாட்டில் வாழ்ந்து வரும் உங்கள் அனைவரையும் பாராட்டுகிறேன்.

• உங்களையும் வளர்த்துக் கொள்ளுங்கள்.

இந்த நாட்டையும் வளப்படுத்துங்கள்.

• இந்த நாட்டின் குடிமக்களாக நாட்டுப்பற்றுடன் வாழுங்கள். அதேநேரத்தில் நாம் தமிழினத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை மறந்து விடாமல் வாழுங்கள்.

• நீங்கள் வாழும் நாட்டை முன்னேற்றுங்கள்.

இந்த நாட்டின் வளத்தையும், அறிவையும், தொழில் நுட்பத்தையும் தமிழ்நாட்டுக்கும் அறிமுகம் செய்யுங்கள்.

• கடல் கடந்து வாழ்ந்து வரும் நீங்கள் அனைவரும் மொழியால் தமிழர்கள், இனத்தால் தமிழர்கள் என்ற உணர்வோடு ஒற்றுமையாக இருக்க வேண்டும். ஒற்றுமையாக வாழ வேண்டும். சாதியோ, மதமோ உங்களை பிளவுபடுத்தக் கூடாது. இத்தகைய பிளவுபடுத்தும் சக்திகளை உங்களுக்குள் நுழைய அனுமதிக்காதீர்கள்.

• எது நம்மை ஒற்றுமைப்படுத்துகிறதோ அதற்கு முக்கியத்துவம் தாருங்கள்.

எது நம்மை பிளவுபடுத்துகிறதோ அவை அனைத்தையும் உதறித் தள்ளுங்கள்.

• பேதமற்ற சமூகமே, அனைத்திலும் வளர்ச்சியைப் பெறும் என்பதை மனதில் வையுங்கள். அதனால்தான் அனைவர்க்குமான வளர்ச்சி, அனைத்துக்குமான வளர்ச்சி என்ற இலக்கை முன்வைத்து தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது.

• நம்மை நாடுகள் பிரிக்கிறது. நிலங்கள் பிரிக்கிறது. ஆனாலும் மொழி இணைக்கிறது. அந்த வல்லமை தமிழ் மொழிக்கு உண்டு.

• நான் நம்பர் ஒன் என்பதை விட தமிழ்நாடு நம்பர் ஒன் ஆக வேண்டும் என்று நான் உழைத்து வருகிறேன். அதற்கு கடல் கடந்து வாழக் கூடிய தமிழர்கள் உதவி செய்ய வேண்டும்.

• தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் வளர்கிறது என்றால் அந்த வளர்ச்சியில் உங்களுக்கும் பங்கு இருக்க வேண்டும்.

• தமிழ்நாட்டில் தி.மு.க. அரசு அமைந்துள்ளது என்றால் –அது ஒரு கட்சியின் அரசு அல்ல, ஒரு இனத்தின் அரசு.

• பேரறிஞர் அண்ணா சொன்னதைப் போல யாரையும் தாழ்த்தாமல் – யாருக்கும் தாழாமல் – யாருக்கும் அடிமையாக இல்லாமல் –யாரையும் அடிமைப்படுத்தாமல் – வாழ வேண்டும்.ஒரு தாய் மக்களாக வாழுங்கள்.

• கல்வியிலும் வேலை வாய்ப்பிலும், தொழில் வளர்ச்சியிலும் முன்னேற்றம் காணுங்கள்.

• எவ்வளவு உயரமாக மரம் வளர்ந்தாலும் அது தன்னுடைய வேரை விட்டு விடுவதில்லை என்பதைப் போல தமிழை – தமிழ்நாட்டை விட்டு விடாதீர்கள்.

• தமிழால் இணைவோம். தமிழராய் இணைவோம்!

தமிழை வளர்ப்போம். தமிழரை வளர்ப்போம்!

– இதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் – தமிழ்நாட்டின் முதலமைச்சர் – தமிழினத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் செய்துள்ள உலகளாவிய முழக்கத்தின் உள்ளடக்கம் ஆகும்.

தமிழினத்தை சாதியின் பேரால், மதத்தின் பேரால் பிளவு படுத்தும் சக்திகள் அதிகமாகி வரும் சூழலில் இத்தகைய தமிழினக் குரலை முன்னெடுத்துள்ளார் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள். பேதமற்ற சமுதாயமே அனைத்திலும் வளர்ச்சி பெறும் என்கிற கருத்துதான் இன்றைய தினம் முன்னேற்றத்துக்கு வழி வகுக்கும் கருத்தாகும்.

தமிழினம் கல்வியில், வேலைவாய்ப்பில் முன்னேறிய இனமாக மாறி வருகிறது. தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு மேன்மை அடைந்து வருகிறது. தமிழ் மொழியைப் போற்றும் அரசாக தமிழ்நாடு அரசு இருப்பதால் இலக்கியம் செழிக்கத் தொடங்கி இருக்கிறது. இலக்கியவாதிகளை அவர்கள் வாழும் காலத்திலேயே அரசு போற்றிப் பாராட்டி வருகிறது. இதனைச் சிலரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவர்களது அண்டசாரங்களும் எரிகிறது. அதனால் தான் தமிழினத்தை சாதியை, மதத்தைச் சொல்லி பிளவுபடுத்தப் பார்க்கிறார்கள். அத்தகைய பிளவுபடுத்தும் சக்திகளைத்தான் தனது உர மேற்றிய முழக்கத்தால் அம்பலப்படுத்தி இருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

துபாயில் ஐந்து நிறுவனங்களுடன் ஒப்பந்தம் – 2600 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் – 9700 பேருக்கு வேலை கிடைக்கும் என்பது மாபெரும் சாதனை என்றால் – அதனையும் தாண்டிய சாதனையாக இந்த முழக்கம் அமைந்துள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துபாய் சென்றார். அபுதாபி சென்றார். அங்கிருந்து உலகக் கொடியை ஏற்றி விட்டு வந்திருக்கிறார் என்பதே வரலாறு பதிய வைக்கும் வரலாறு ஆகும்!

தமிழ்நாட்டு முதலமைச்சரே வருக! – என்பதைத் தாண்டி உலகத் தமிழினத்தின் தலைவரே வருக வருக என்று அவரை வாழ்த்தி வரவேற்போம்!

தினகரன்

29-Mar-2022

முதல்வரின் அமீரக பயணம்

தமிழ்நாட்டிற்கு பயனுள்ளதாக உள்ளது ஜவாஹிருல்லா வரவேற்பு

சென்னை, மார்ச் 29: மனிதநேய மக்கள் கட்சி தலைவர் ஜவாஹிருல்லா அறிக்கை:

முதல்வர் மு.க.ஸ்டாலினின் அமீரக பயணம் தமிழகத்திற்கு முதலீடுகளை ஈர்க்கும் வகையில் வெற்றிகரமான பயணமாக அமைந்துள்ளதுள்ளது. சுமார் ₹6,100 கோடிக்கான முதலீடுகளைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவரும் வகையில் இந்த பயணம் அமைந்துள்ளது. வெளிநாட்டிற்குச் சென்று தமிழ்நாட்டுக்கு முதலீடுகளை அள்ளிவரும் முதலமைச்சரின் இந்த நடவடிக்கைக்கு மனிதநேய மக்கள் கட்சி சார்பில் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மொத்தத்தில் முதலமைச்சரின் இந்த அமீரக பயணம் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், தமிழக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை அளிப்பதிலும் பெரும் பங்காற்றும்.

தினத்தந்தி
DAILY THANTHI

29-Mar-2022

தமிழகத்துக்கு தஞ்சம் கேட்டு வரும் இலங்கை தமிழர்கள்!

இலங்கையில் வரலாறுகாணாத வகையில் பொருளாதார நெருக்கடி நிலவுகிறது. இலங்கை அரசாங்கத்தின் கையில் நிதியில்லாததால், கடும் நிதிநெருக்கடியில் சிக்கித்தவிக்கிறது. அன்னிய செலாவணி கையிருப்பு இல்லாததால், வெளிநாட்டிலிருந்து எதையும் இறக்குமதி செய்யமுடியாத சூழ்நிலையில், எல்லா விலையும் விண்ணுக்கு எகிறிவிட்டது. வருமானமும் இல்லாமல், இப்போதுள்ள விலைவாசியில் எந்த பொருட்களையும் வாங்கமுடியாமல் அடித்தட்டுமக்கள் பசி, பட்டினியில் வாடிக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே, கடந்த 1980-ம் ஆண்டுகளிலிருந்து 2009-ம் ஆண்டு வரை இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டு போரினால் ஏராளமான பேர் தமிழ்நாட்டுக்கு அகதிகளாக வந்தனர். லட்சக்கணக்கில் வந்த நிலையில் பலர் திரும்பிச்சென்றபிறகு, தற்போது தமிழ்நாட்டில் உள்ள 106 அகதிகள் முகாம்களில் 60 ஆயிரம் பேரும், போலீஸ் பதிவோடு வெளியே 30 ஆயிரம் பேரும் தங்கியிருக்கிறார்கள். 2012-ம் ஆண்டுக்குப்பிறகு யாரும் அகதிகளாக தமிழ்நாட்டுக்கு இலங்கையிலிருந்து வந்ததில்லை.

தற்போது இலங்கையில் வாழ வழியில்லாமல், தாய்

தமிழ்நாட்டுக்கு தஞ்சம்தேடி கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை அதிகாலையில் 2 குடும்பங்களைச்சேர்ந்த கஜேந்திரன் (வயது 24), மேரி கிளாரின் (23), இவர்களுடைய 4 மாத ஆண் குழந்தை நிஜாத், மற்றொரு குடும்பத்தைச் சேர்ந்த தியோரி (28), குழந்தைகள் எஸ்தர் (9), மோசஸ் (6) ஆகியோர் இலங்கையிலிருந்து ஒரு ஆளுக்கு தலா ரூ.10 ஆயிரம் கொடுத்து, இரவு முழுவதும் பயணம்செய்து, தனுஷ்கோடி அருகிலுள்ள 4-ம் மணல்திட்டில் இறங்கி என்ன செய்வது? என்று தெரியாமல், திக்குமுக்காடிப்போய் நின்றிருந்தனர். அன்று இரவு மேலும் 2 ஆண்கள், 3 பெண்கள், 3 பெண் குழந்தைகள், 2 ஆண் குழந்தைகள் கொண்ட 10 பேர் தனுஷ்கோடி அருகே உள்ள மற்றொரு மணல் திட்டில் படகில் வந்து இறங்கியிருக்கிறார்கள். இவர்களை இந்திய கடலோர காவல்படை மீட்டு, தமிழக போலீசாரிடம் ஒப்படைத்திருக்கிறார்கள்.

தஞ்சம் கேட்டுவந்த தியோரி, 'இலங்கையில் விலைவாசி உயர்வு, யாரும் வாங்கமுடியாத நிலையிலிருக்கிறது. சிலிண்டர் விலை ரூ.1,900-ல் இருந்து ரூ.4 ஆயிரம் ஆகவும், ஒரு கிலோ அரிசிவிலை ரூ.130-ல் இருந்து ரூ.230 ஆக உயர்ந்தும், ஒரு முட்டை விலை ரூ.35 ஆகவும் இலங்கை பணத்தில் விற்கப்படுகிறது' என்றார். இலங்கையில் ஒரு ரூபாய் என்பது இந்திய பணத்தில் 27 காசுகளுக்கு சமமானது. இதற்கு முன்பாக வந்தவர்கள் அகதிகளாக கருதப்பட்டு, உடனடியாக அகதிகள் முகாம்களுக்கு அனுப்பப்பட்டார்கள். அகதிகள் தொடர்பான ஐ.நா. ஒப்பந்தத்தில் ஏதாவது நாட்டிலிருந்து சாதி, மத, இன, தேசியவகையிலோ, ஏதாவது ஒரு சமூகஅணி அல்லது அரசியல் கருத்தைக் கொண்டிருப்பவர்களோ கொடுமைப்படுத்தப்பட்டு, அங்கு வாழமுடியாமல் வெளிநாடுகளில் தஞ்சம்அடைந்தால்தான் அகதி என்ற கணக்கில் சேர்க்கப்படுகிறார்கள். இவ்வாறு விலைவாசி உயர்வு, பொருளாதார நெருக்கடியால் வந்தவர்கள் அகதிகள் கணக்கில் எடுப்பதில்லை.

தற்சமயம் இவர்கள் மண்டபம் முகாமுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அவர்களிடம் எதற்காக, எப்படி வந்தார்கள்? என்ற வகையில் விசாரணை நடந்துவருகிறது. தமிழக அரசின் அயலக தமிழர்நலம் மற்றும் மறுவாழ்வுத்துறை கமிஷனர் ஜெசிந்தா லாசரஸ் மண்டபத்தில் முகாமிட்டார். இந்த 16 பேர் போல, இன்னும் பலர் வரும் சூழ்நிலை இருக்கிறது. இப்போது வந்துள்ள 16 பேருக்கும் தமிழ்நாட்டில் எந்த அடிப்படையில் தஞ்சம்கொடுப்பது? என்ற கேள்வி பலமாக எழுந்துள்ளது. இதற்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில், 'இதுதொடர்பாக அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதோடு, மத்திய அரசாங்கத்திடமும், அங்கிருக்கக்கூடிய அதிகாரிகளிடத்திலும், மந்திரிகளிடத்திலும் தொடர்புகொண்டு, இதை எப்படி கையாளவேண்டும் என்று சட்டரீதியாக நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம். எனவே விரைவில் அதற்கொரு விடிவுகாலத்தை நிச்சயமாக தமிழக அரசு ஏற்படுத்தித்தரும்' என்ற தெளிவான உறுதியை அளித்துள்ளார். மு.க.ஸ்டாலின் அளித்திருக்கும் உறுதி, இலங்கை தமிழர்களுக்கு நம்பிக்கையை அளித்துள்ளது. இனி மத்திய அரசாங்கம் கையில்தான் இருக்கிறது. சட்டத்தில் இடம் இல்லையென்றாலும், மனிதாபிமான அடிப்படையிலும், தமிழர்கள் என்பதாலும் மத்திய அரசாங்கம் அவர்களை அகதிகளாக கருதி, அவர்களுக்கான உதவிகளை செய்யவேண்டும்.

முரசொலி

30-Mar-2022

துபாய் 'எக்ஸ்போ'வில்

தமிழகத்தைப் புறக்கணித்த ஒன்றிய மோடி அரசு!

'லிபர்ட்டி தமிழ்' இணையதளம் அம்பலப்படுத்தும் உண்மைகள்!

Liberty Tamil



முரசொலி

30-Mar-2022

ஐக்கிய அமீரகத்திலிருந்து

100 கோடி அமெரிக்க டாலர் முதலீட்டை தமிழ்நாடு எதிர்பார்க்கிறது!

❖ துபாய் 'கலீஜ் டைம்ஸ்' ஏட்டுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

தினத் தந்தி
DAILY THANTHI
30-Mar-2022

ரூ.6,100 கோடி முதலீடுகளை அள்ளிக்கொண்டு வந்த முதல்-அமைச்சர்!

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றதில் இருந்தே, தொழில் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டுள்ளார். இந்த நிலையில், "தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்ப்பதற்காக நானே உங்களை தேடி வருகிறேன்" என்ற முடிவில், முதல்-அமைச்சரான பிறகு தனது முதல் வெளிநாட்டு பயணமாக கடந்த 24-ந்தேதி துபாய் மற்றும் அபுதாபிக்கு சென்றார்.

துபாய் விமான நிலையத்தில் ஏராளமான தமிழர்கள் அவருக்கு சிறப்பான வரவேற்பு அளித்தனர். அன்று இரவு, ஏற்கனவே தி.மு.க. அரசுடன் ரூ.2 ஆயிரம் கோடி முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டுள்ள டி.பி. வேர்ல்டு என்ற புகழ்பெற்ற நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி சுல்தான் அகமதுபின் சுலைமானுடன் இரவு உணவை சாப்பிட்டுக்கொண்டே,

"எங்கள் மாநிலத்தில் நீங்கள் மேலும் முதலீடு செய்யவேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார்.

அப்போது, "ஏற்கனவே செய்துள்ள முதலீட்டை செயல்படுத்துவதற்காக எங்கள் அரசில் ஏதாவது இடர்பாடு இருக்கிறதா?" என்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டபோது, "எந்த சிக்கலும் இல்லை. ரொம்ப சிறப்பாக நடைபெறுகிறது" என்று அவர் கூறியவுடன் மனம் மகிழ்ந்தார். அடுத்த நாள் துபாய் சர்வதேச வர்த்தக கண்காட்சியில், தமிழ்நாடு அரங்கை திறந்துவைத்து, துபாய் பன்னாட்டு நிதி மையத்தில், ஐக்கிய அரபு அமீரக மந்திரிகளுடன், தமிழ்நாட்டில் முதலீடுகள் மேற்கொள்வது குறித்து ஆலோசனை நடத்தி, முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

இந்த நிகழ்ச்சிக்கு முதல்-அமைச்சர் வரும்போது, ஏராளமான தமிழர்கள் நின்று வரவேற்பு கொடுத்தனர். நம் நாட்டில் இவ்வளவு மகத்தான வரவேற்பை பெறும் இவர் யார்? என்று பார்ப்பதற்காக, துபாயிலுள்ள அரேபியர்கள், அங்குவாழும் வெளிமாநில இந்தியர்கள் மட்டுமல்லாமல், சுற்றுலா வந்த வெளிநாட்டினரும், ஆர்வத்தோடு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினை பார்க்க திரண்டு வந்திருந்தனர். அங்கிருந்து உலகிலேயே அதிக உயரமான கட்டிடமான புர்ஜ் கலீபா கோபுரத்தில், தமிழ்நாட்டின் வரலாறு, பண்பாடு, செம்மொழி, தமிழ்நாட்டின் சமீபத்திய அகழ்வாராய்ச்சி குறித்து ஒளிபரப்பப்பட்ட அழகிய காட்சிப்படத்தை பார்வையிட்டார். செம்மொழியான தமிழ்மொழியாம் பாடல் இசைக்கப்பட்டபோது, வெளிநாட்டினர் கூட அதைக்கண்டு ரசித்தனர்.

அடுத்த நாள் ஐக்கிய அரபு நாட்டின் முதலீட்டாளர்களை சந்தித்த முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், எல்லோரையும் தமிழ்நாட்டில் தொழில் தொடங்கவருமாறு அழைப்பு விடுத்தார். இந்த கூட்டத்தில், துபாயை சேர்ந்த 5 நிறுவனங்களுடன் ரூ.2,600 கோடி முதலீட்டில் 9,700 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் ஒப்பந்தங்கள் அவர் முன்னிலையில் கையெழுத்தானது. அன்று துபாய் வாழ் தமிழர்கள் அளித்த வரவேற்பு நிகழ்ச்சியில் உரையாற்றினார். முதல்-அமைச்சரை பார்த்தவுடன் அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. "நாம் தமிழினத்தை சேர்ந்தவர்கள் என்பதை மறந்துவிடாமல் வாழுங்கள். இந்த நாட்டின் வளத்தையும், அறிவையும், தொழில்நுட்பத்தையும் தமிழ்நாட்டுக்கு அறிமுகம் செய்யுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

அன்று மாலையில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அபுதாபி சென்றார். அங்கு கேரளாவை சேர்ந்த லுலு நிறுவனத்தின் சார்பில் தமிழ்நாட்டில் ரூ.3,500 கோடி முதலீட்டில் 5 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும் வகையில், 2 வணிக வளாகங்கள், ஒரு ஏற்றுமதி சார்ந்த உணவு பதப்படுத்தும் நிறுவனம் தொடங்க கையெழுத்திட்டார். தொடர்ந்து, அபுதாபி வாழ் தமிழ் சமூகம் நடத்திய பாராட்டு விழாவில் பலத்த கைதட்டல், ஆரவாரத்துக்கிடையே கலந்துகொண்டார்.

அறிஞர் அண்ணாவை, நின்றால் பொதுக்கூட்டம், உட்கார்ந்தால் மாநாடு, நடந்தால் ஊர்வலம் என்பார்கள். அதேபோலத்தான், முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினின் துபாய், அபுதாபி சுற்றுப்பயணத்திலும், எங்கு சென்றாலும் மாநாடாகவும், ஊர்வலமாகவும் இருந்தது. அங்குவாழும் தமிழர்களின் மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடியது. மொத்தத்தில் ரூ.6,100 கோடி முதலீடோடு 14,700 பேருக்கு வேலைவாய்ப்பையும் கொண்டுவந்த முதல்-அமைச்சரின் இந்த பயணம், ஒரு வெற்றிப்பயணம் என்பதில் சந்தேகமே இல்லை. புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தான நிறுவனங்களோடு தொடர்ந்து பணியாற்றி, விரைவில் அனைத்து திட்டங்களும் செயல்பாட்டுக்கு வருவது, இனி அனைத்துத்துறை அலுவலர்களின் கையில்தான் இருக்கிறது.

வளம் பெருகட்டும்

தமிழக முதல்வராக பொறுப்பேற்ற பிறகு முதன்முறையாக துபாய், அபுதாபிக்கு சுற்றுப்பயணம் சென்று விட்டு, வெற்றிகரமாக திரும்பியிருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின். பதவி ஏற்றது முதல் கொரோனா பேரிடரை ஒழிப்பது வரை இத்தனை மாதங்கள் காட்டிய அதே ஆர்வத்தையும், வேகத்தையும், உழைப்பையும் இப்போது தொழிற்துறையை மேம்படுத்துவதிலும், தமிழகத்தில் வேலை இல்லாமல், வேலை வாய்ப்பிற்காக பதிவு செய்து விட்டு ஏங்கி தவித்துக்கொண்டு இருக்கும் அத்தனை இளைஞர்களின் வாழ்வில் ஒளி ஏற்றவும் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார் மு.க.ஸ்டாலின். அந்த இலக்கோடு, லட்சியத்தோடு அவர் சென்ற துபாய், அபுதாபி பயணம் இன்று தமிழ் இளைஞர்கள் வாழ்வில் வெளிச்சத்தையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தி இருக்கிறது.

முதல்வரின் இந்த பயணத்தால் இரும்பு தளவாட துறையில் உள்ள நோபல் ஸ்டீல்ஸ் நிறுவனத்தோடு ₹1100 கோடிக்கும், ஜவுளித்துறை சார்ந்த வைட் ஹவுஸ் நிறுவனத்தோடு ₹500 கோடிக்கும், மருத்துவத்துறை சார்ந்த ஆஸ்டர் டிஎம் மற்றும் ஹெல்த் கேர் நிறுவனத்துடன் ₹500 கோடிக்கும் சரக்கு துறை சார்ந்த ஷெராப் நிறுவனத்துடன் ₹500 கோடிக்கும், லூலூ நிறுவனத்துடன் ₹3500 கோடிக்கும் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. மொத்தமாக 6 நிறுவனங்களுடன் 6100 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இதன் மூலம், 14700 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக போகிறது. இன்னும் சொல்லப்போனால் துபாய், அபுதாபி நாட்டின் முக்கியமான துறை சார்ந்த அமைச்சர்களையும், அரசு சார்ந்த அலுவலர்களையும், பெரிய தொழில் நிறுவனங்களின் தலைவர்களையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்தித்து பேசியிருக்கிறார் . இதன் தொடர்ச்சியாக அடுத்தடுத்து பல ஒப்பந்தங்கள் கையெழுத்தாக இருக்கின்றன. நிச்சயம் தமிழகத்தை வளம் சேர்க்கும் பணிகள் தொடர்ந்து நடைபெறும் என்று நம்பலாம்.

இவை எல்லாவற்றையும் விட துபாய் மற்றும் அபுதாபியில் முதல்வர் மு.க.ஸ்டாலினை வரவேற்க திரண்ட மக்கள் அலை நிச்சயம் ஒரு பெரும் மாற்றத்தை கொடுத்துள்ளது. தமிழ் மக்கள் என்று இல்லாமல் அங்கு வசிக்கும், பணிபுரியும் அத்தனை மாநில மக்களும் அதே ஆர்வத்துடன் திரண்டு நின்று நமது தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வரவேற்பு அளித்தும், செல்போனில் வீடியோ எடுத்தும் மகிழ்ச்சி கடலில் ஆழ்ந்துள்ளனர் என்றால் அனைவரும் விரும்பும் வகையில் ஆட்சி நடத்துவதும், மக்கள் மனம் விரும்பும் வகையில் ஆட்சி நிர்வாகத்தை வழிநடத்துவதும் முக்கிய காரணம் என்றால் மிகையல்ல.

இன்று ஒரு வெளிநாடு பயணத்திற்கு எத்தனை கணக்கு கேட்கிறார்கள், எத்தனை புகார்கள் வாசிக்கிறார்கள். எதிர்க்கட்சிகள் என்றால் அப்படித்தான் சொல்வார்கள் என்று அதையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் எளிதாக கடந்து விட்டார். பிரதமர் மோடியின் வெளிநாடு சுற்றுப்பயணங்கள் குறித்து பட்டியல் போட்டு விமர்சனம் செய்து இருக்கலாம். அதை செய்யவில்லை. விமர்சனங்களுக்கு தனது செயல் மூலம் அவர் ஒவ்வொரு முறையும் பதில் அளித்து வருகிறார். விமர்சிப்பவர்களும் விரும்பும் வகையில் ஆட்சி நடத்த விரும்பும் முதல்வர் அல்லவா மு.க.ஸ்டாலின்.

முதல்வரின் அமீரகப் பயணம்: புதிய முதலீடுகள்... புதிய வேலைவாய்ப்புகள்!

ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாய், அபுதாபி நகரங்களுக்குத் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் மேற்கொண்ட சுற்றுப்பயணமும் அங்குள்ள முன்னணித் தொழில் நிறுவனங்களோடு அவர் நடத்திய பேச்சுவார்த்தைகளும் புதிய முதலீடுகளையும் புதிய வேலைவாய்ப்புகளையும் பெற்றுத்தந்திருக்கின்றன. அபுதாபியில் நடந்த பாராட்டு விழாவில் பேசிய முதல்வர், இந்தப் பயணத்தில் முதற்கட்டமாக ரூ.6,100 கோடி மதிப்பிலான தொழில்கள் தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியிருப்பதாகத் தெரிவித்துள்ளார். குறிப்பாக, லுலு நிறுவனம் தமிழ்நாட்டில் ரூ.3,500 கோடி மதிப்பீட்டில் தொடங்கவுள்ள 3 தொழில்கள் 5,000 வேலைகளை உருவாக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டிய உடனடித் தேவை எழுந்துள்ள நிலையில், அந்நிய நேரடி முதலீடுகளின் வழியாக அதை விரைந்து செய்துமுடிக்க முதல்வர் களத்தில் இறங்கியிருப்பது பாராட்டுக்குரியது.

இந்தியாவின் தொழில் வளர்ச்சியடைந்த மாநிலங்கள் துபாயில் நடத்தப்படும் தொழில் கண்காட்சிகளில் பங்குபெறுவதிலும் அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதிலும் கடந்த சில ஆண்டுகளாகத் தீவிர ஆர்வம் காட்டிவருகின்றன. சமீப காலமாக, தென்னிந்திய மாநிலங்கள் இம்முதலீடுகளை ஈர்ப்பதில் சிறப்புக் கவனம் செலுத்துகின்றன. வணிகரீதியாக மட்டுமின்றி, கலாச்சாரரீதியாகவும் தென்னிந்தியாவுக்கும் ஐக்கிய அமீரகத்துக்கும் இடையே ஒரு பிணைப்பு வலுப்பட்டுவருகிறது. ஐந்து மாதங்களுக்கு முன்னால் தொழில் கண்காட்சி தொடங்கியபோது, துபாயின் உலகப் புகழ்பெற்ற புர்ஜ் கலீபா கட்டிடத்தில் நவராத்திரியையொட்டி தெலங்கானாவின் மலர்த் திருவிழா கொண்டாடப்பட்டது. ஏ.ஆர்.ரஹ்மான் தெலுங்கில் இசையமைத்த பாடலும் அப்போது அங்கு ஒலிபரப்பப்பட்டது. இந்த ஆண்டு பிப்ரவரியில் கண்காட்சியில் பங்கேற்ற ஆந்திரப் பிரதேச மாநிலம் ரூ.10,350 கோடி முதலீட்டை ஈர்த்துள்ளது. மேலும், கேரள முதல்வர் பினராயி விஜயனும் இக்கண்காட்சியில் பங்கேற்றார். மற்ற மாநிலங்களின் முதல்வர்கள் ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து முதலீடுகளைப் பெறுவதற்கான முயற்சிகளில் தீவிரமாக இறங்கியுள்ள நிலையில், தமிழ்நாடும் தன்னை இம்முயற்சிகளில் ஈடுபடுத்திக்கொண்டிருப்பது காலத்தே எடுத்த மிகச் சரியான முடிவு.

தமிழ்நாடு முதல்வரின் இப்பயணத்தில் உணவு பதப்படுத்துதல், ஜவுளி, உள்கட்டமைப்பு என்று பல்வேறு தொழில்துறைகளில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டிருந்தாலும் மின்சக்தியால் இயங்கும் வாகன உற்பத்தித் தொழில்துறையில் முதலீடுகள் செய்யுமாறு அவர் விடுத்திருக்கும் அழைப்பு மிகவும் தொலைநோக்குப் பார்வை கொண்டது. வாகன உற்பத்தித் துறையில் இந்தியாவின் முன்னணித் தொழில் நகரமாக விளங்கிவரும் சென்னை, அடுத்த வளர்ச்சிக் கட்டத்தை நோக்கி நகர வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. அதிகரித்துவரும் பெட்ரோலிய எரிபொருட்களின் தேவையைக் குறைப்பதற்காக, உலகம் முழுவதுமே மின்சக்தியால் இயங்கும் வாகனங்களின் உற்பத்தியில் ஆர்வம்காட்டப்படுகிறது. இந்நிலையில், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் அத்தகைய ஒரு தொலைநோக்குத் திட்டத்துக்கு முதல்வரின் இந்த நான்கு நாள் வெளிநாட்டுப் பயணம் வித்திட்டுள்ளது.

THE HINDU
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878
30-Mar-2022

CM's UAE trip may prove more fruitful than his predecessor's

State expected to benefit more in terms of investment

Investment push | MoUs signed with different companies during Chief Minister M.K. Stalin's recent visit to Dubai and Abu Dhabi

Company	Investment (₹ in crore)	Potential for employment generation	Purpose
LuLu Group International	3,500	5,000	Two large shopping complexes, a food processing unit
Noble Group of Companies	1,000	2,000	A facility around Chennai to manufacture steel pipes, precision tubes, galvanised pipes/tubes
Aster DM Healthcare	500	3,500	A 500-bed multi-specialty hospital in Chennai
Sharaf Group (Hind Terminals Pvt Ltd)	500	1,000	A logistics park near Chennai
White House Exports	500	3,000	A garment & sewing unit at Tindivanam & Walajabad
Transworld Group	100	600	A food processing park
TOTAL	6,100	15,100	

SOURCE: T.N. GOVERNMENT

T. RAMAKRISHNAN
CHENNAI

Tamil Nadu is expected to get more benefits, in terms of investment and job creation, from the latest set of memoranda of understanding signed during Chief Minister M.K. Stalin's recent visit to the United Arab Emirates (UAE) than what it got from the visit of his predecessor Edappadi K. Palaniswami in September 2019.

As happened now, six MoUs were inked two-and-a-half years ago. But the value of investment, envisaged by the present set of MoUs, was ₹6,100 crore as against ₹3,750 crore on the previous occasion. The current initiatives are likely to create 15,100 jobs as against 10,800 jobs under the earlier initiatives.

Enquiries reveal that two out of six firms, which signed the MoUs with the State in 2019, have invested ₹450 crore. In future, ₹650 crore more may materialise. While the projects proposed by three other companies are said to have been put on hold, there is no word about the fourth. But officials are hopeful of the present set of MoUs getting fructified fully, besides attracting more investors from the UAE, thanks to the Comprehensive Economic Partnership Agreement signed recently between India and the UAE.

வேளாண் கல்லூரிகளில் சிறப்பு ஒதுக்கீடு:

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பழங்குடியின மாணவன் நன்றி

சென்னை, மார்ச்.31-

12-ம் வகுப்பில் தொழில்கல்வி பாடப்பிரிவில் வேளாண்மை படித்த மாணவர்களுக்கு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் இணைப்பு கல்லூரிகளில் 5 சதவீத சிறப்பு ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டிருந்தார். இதன் அடிப்படையில் பி.எஸ்.சி. வேளாண்மை பட்டப்படிப்புக்கான சேர்க்கை ஆணை பெற்ற ஈரோடு மாவட்டம் பர்கூர் மலை கிராமத்தை சேர்ந்த பழங்குடியின மாணவன் சந்திரன், மு.க.ஸ்டாலினை சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று சந்தித்து நன்றி தெரிவித்தார்.

அப்போது, வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் சந்திரனின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

டெல்லியில் 3-வது தேசிய நீர் விருது வழங்கும் விழாவில், தேசிய அளவில் மூன்றாவதாக தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டதையொட்டி தமிழக அரசு சார்பில் பெற்ற விருதை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகனிடம், நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா நேற்று காண்பித்து வாழ்த்து பெற்றார். அப்போது, நீர்வளத்துறை முதன்மை தலைமை பொறியாளர் கு.ராமமூர்த்தி உடனிருந்தார்.

31-Mar-2022

Cattle rearing is past, college is new pasture

After a 3-year wait, tribal boy gets admission to his dream course in agriculture

PON VASANTH B.A.
CHENNAI

Born with 10 siblings in a poor tribal family in a remote hamlet on the Bargur Hills in Erode district of Tamil Nadu, all that U. Chandran wanted after completing Class 12 was to pursue a degree programme in agriculture or veterinary science.

"My family did cattle rearing and farming. Naturally, I was inclined to become a trained professional in that field," he said.

After studying in a school run under the National Child Labour Project (NCLP) for a few years, Chandran subsequently stayed in a Tribal Welfare department-run hostel to complete Class 12 by specialising in the vocational stream – Agricultural Practices – in 2019.

Despite scoring 98% in core subjects and 74% in total in Class 12, Chandran could not get admission to the courses he wanted due to the systemic unfairness in the admission processes of Tamil Nadu Veterinary and Animal Sciences University and Tamil Nadu Agricultural University towards students from vocational streams.

While the seat arithmetic in TANUVAS did not allow the reservation of a single seat for a tribal student from the vocational stream, the TNAU allowed vocational stream students only in its own colleges and not in its affiliated colleges. Even in its own colleges, the TNAU did not apply reservation policies in the admission of vocational stream students.

Tamil Nadu Chief Minister M.K. Stalin congratulating U. Chandran on Wednesday.

Dejected with not being able to get a seat, Chandran went back to cattle rearing while occasionally working as a labourer in textile companies in the last three years.

Just when Chandran was about to give up his dream, he has secured a seat in the Kumaraguru Institute of Agriculture this year, thanks to the efforts of Sudar, an NGO, and intervention from the Tamil Nadu Chief Minister's Office.

The Madras High Court had ruled last year that the TNAU should admit vocational stream students in its affiliated colleges. While the court ordered the implementation from the next academic year, the Chief Minister's Office ensured implementation in the present year itself, enabling Chandran to get admission.

THE TIMES OF INDIA

31-Mar-2022

CM to meet PM for 'state's rights'

Anna-Kalaignar Arivalayam To Be Opened

TIMES NEWS NETWORK

WHAT'S ON THE AGENDA

- Inter-state water disputes involving Karnataka and Kerala governments
- Release of pending GST dues and dues for shared schemes
- **19** bills pending with Raj Bhavan for seeking assent for several months
- Drop NEET for medical students
- Speedy execution of infrastructure projects, including AIIMS in Madurai
- Traditional fishing rights of Indian fishermen in Palk Bay

Chennai: Chief minister M K Stalin is scheduled to meet Prime Minister Narendra Modi in New Delhi on Thursday after a span of nine months since his first visit as soon as he took charge, to seek the PM's intervention on various issues. These include allocation of funds and pending dues for shared schemes. The CM's three-day visit to the national capital will see 'secular allies' coming together for the opening of Anna-Kalaignar Arivalayam, the DMK party office in New Delhi on Saturday.

During this three-day visit, the chief minister would meet five Union ministers — Amit Shah, Rajnath Singh, Nitin Gadkari on Thursday, and Nirmala Sitharaman and Piyush Goyal on Friday. "This is a meeting to demand our state's rights, including allocation of funds for projects announced by the government, the tax revenue to be paid by the Union government to Tamil Nadu, and flood relief," Stalin said.

The state government has been confronting "a series of challenges" in terms of finances and lack of support in getting assent for the legislations unanimously passed by the House, and frequent arrests of fishermen in Palk Bay. The DMK government re-adopted the anti-NEET bill within days after Raj Bhavan returned the bill stating that it was against the interests of students.

In Parliament, the DMK had accused the Union government of not releasing the pending dues of ₹20,287 crore under various heads, including GST compensation and MGNREGA, the rural employment scheme, and grants of the rural local bodies. "We have to get the rightful share. It is the duty of the Centre to extend all possible approvals and address the pending issues. The Union government should say in no uncertain terms that no dam shall be built without the concurrence of the lower riparian state, TN," DMK Parliamentary party leader, T R Baalu told **TOI**.

Stalin is expected to raise the Mekedatu dam issue with the PM. In a statement, Stalin said many historians had insisted that the history of India should be written from the south. "The proud event of writing the history of the south in Delhi takes place on April 2. The DMK and the Dravidian model of implementing its policies are indispensable in national politics. Anna-Kalaignar Arivalayam to be opened in Delhi is the strong sign of that," the CM said. Invitations were extended to Vice-President Venkaiah Naidu, Lok Sabha speaker Om Birla, finance minister Nirmala Sitharaman and several party leaders.

மாலை முரசு
01-April-2022

டெல்லி அரசு உருவாக்கிய மாதிரி பள்ளி:

கேஜ்ரிவாலுடன் இணைந்து ஸ்டாலின் பார்வையிட்டார்!

சென்னை, ஏப். 01

டெல்லி அரசு உருவாக்கிய மாதிரி பள்ளியை டெல்லி யூனியன் பிரதேச முதல்வர் கேஜ்ரிவாலுடன் இணைந்து முதல்–அமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று பார்வையிட்டார்.

முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் 4 நாள் பயணமாக நேற்று முன்தினம் டெல்லி சென்றார்.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினை நேரில் சென்று சந்தித்தார். இதன் பிறகு மதியம் 1 மணிக்கு பிரதமர் நரேந்திர மோடியை அவரது அலுவலகத்தில் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று சந்தித்து பேசினார்.

இதன் பிறகு மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை மந்திரி நிதின்கட்காரி, உள்துறை மந்திரி அமித்ஷா, மத்திய ராணுவ மந்திரி ராஜ்நாத் சிங் ஆகியோரையும் சந்தித்து பேசினார்.

இன்று காலை மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமனை சந்தித்தார். அதன் பிறகு டெல்லி மேற்கு வினோத் நகரில் உள்ள ராஜ்கியா சர்வோதயா பால் வித்யாலயா பள்ளிக்கூடத்தை பார்வையிட சென்றார்.

நவீன மாதிரி பள்ளியான இந்த பள்ளிக்கூடத்துக்கு சென்ற முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினை டெல்லி முதல் மந்திரி அரவிந்த் கேஜ்ரிவால் வாசலில் நின்று வரவேற்று அழைத்து சென்றார்.

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினை அந்த பள்ளியின் முதல்வர், அன்போடு உபசரித்து கவுரவப்படுத்தினார். பள்ளிக்கூடத்தின் செயல்பாடுகளை விளக்கி கூறினார்.

அதன் பிறகு அரசு பள்ளிக்கூடத்தின் நவீன மாற்றங்கள் குறித்தும், அங்கு கற்பிக்கப்படும் பாடங்கள், வகுப்பறைகள் குறித்தும் குறும்படம் திரையிடப்பட்டது.

இவற்றை டெல்லி முதல் மந்திரியுடன் அமர்ந்து முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் பார்த்தார். டெல்லி கல்வி இயக்குனர் ஹிமான்ஷு குப்தா அரசு பள்ளியின் கல்வி தரம், டெல்லியின் கல்வி மாடல்களை விளக்கி கூறினார்.

இதன் பிறகு அங்கிருந்த மாணவர்களுடன் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துரையாடினார்.

பின்னர், அங்கிருந்து புறப்படும் முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆம் ஆத்மி மொஹல்லா கிளினிக் என்ற ஆஸ்பத்திரியையும் சென்று பார்வையிட்டார். அவருக்கு முதல் மந்திரி அரவிந்த் கேஜ்ரிவால் ஆஸ்பத்திரியின் செயல்பாடுகள் குறித்து விளக்கி கூறினார்.

தமிழ் முரசு

01-April-2022

முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில்

போராட்டம் நடத்தாமலே இட ஒதுக்கீடு கிடைக்கும்

ராமதாஸ் நம்பிக்கை

சென்னை, ஏப்.1-

பாமக நிறுவனர் ராமதாஸ் இன்று கட்சி தொண்டர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு தொடர்பான வழக்கில், நம்முடன் இணைந்து தமிழக அரசும், மூத்த வழக்கறிஞர்களை அமர்த்தி வாதிட்டது. இப்போதும் கூட சட்ட வல்லுனர்களுடன் கலந்து பேசி வன்னியர் இட ஒதுக்கீட்டு விவகாரத்தில் அடுத்தக் கட்ட நடவடிக்கை குறித்து முடிவெடுப்போம் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. தமிழ்நாட்டைக் கடந்து தேசிய அளவில் சமூகநீதியை பாதுகாப்பதற்கான கூட்டமைப்பு ஒன்றை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உருவாக்கியிருக்கிறார். இரு வாரங்களுக்கு முன்பு தான் அவரது முயற்சிக்கு நான் வாழ்த்துகளைத் தெரிவித்தேன். தேசிய அளவில் சமூகநீதியை பாதுகாக்க வேண்டும் என்று நினைக்கும் மு.க.ஸ்டாலினுக்கு அவரது ஆட்சியின் கீழ் இருக்கும் தமிழ்நாட்டில் சமூகநீதியை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணமும், அக்கறையும் இருக்காதா?. அதனால், போராட்டம் நடத்தாமலேயே வன்னியர் இட ஒதுக்கீடு கிடைக்கவும் வாய்ப்பிருக்கிறது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

மாலை முரசு

01-April-2022

முதல்வரின் தொடர் பயணம்!

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 5 நாட்கள் அமீரகத்துக்கு பயணம் மேற்கொண்டு அங்குள்ள தமிழர்களின் தனிப்பாசத்திலும், பேரன்பிலும் மூழ்கி திளைத்து, அந்நாட்டு அரசு சார்பிலான அன்பு கனிந்த மரியாதையைப் பெற்று துபாய்–அபுதாபி தொழில் நிறுவனங்களிடம் முதலீட்டுக்கான ஒப்பந்தங்கள் முடிவு செய்யப்பட்டு தமிழகம் திரும்பினார். 14 ஆயிரத்து 700 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய ரூ.6,100 கோடிமுதலீட்டுக்கானஒப்பந்தங்கள்குறித்துதமிழ்நாட்டு மக்களிடம் தெரிவித்து மகிழ்ந்திருக்கிறார். இது தமிழக மக்களுக்கு கிடைத்த பெருமை என்றும் முதல்வர் ஸ்டாலின் உளம் மகிழ கூறியிருக்கிறார். முதலமைச்சர் என்ற முறையில் முதல் முறையாக மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணம் மிகவும் வெற்றிகரமாக அமைந்தது.

அரசியலுக்காக சிலர் அதை ஏற்காமல் அழுக்காறு மேலிட்டு வதந்திகளையும், அவதூறுகளையும் பரப்பினாலும் அவர்களின் மனச்சாட்சிக்கும் உண்மை நிலவரம் நன்றாகவே தெரியும். வெற்றியை வெளிப்படையாக ஏற்றுக்கொண்டால் பிறகு எப்படி அவர்கள் அரசியல் பிழைப்பு நடத்த முடியும் என்று கேள்வி விடுக்கவும், முதல்வர் ஸ்டாலின் மறக்கவில்லை. அமீரகப்பயணம் வெற்றிகரமாக நிறைவடைந்த நிலையில் அடுத்தப்பயணம் இந்திய ஒன்றியத்தின் தலைநகராம்புதுடெல்லியைநோக்கிஅமைந்திருக்கிறது. 4 நாள் பயணமாக டெல்லிக்குப் புறப்பட்ட முதலமைச்சர் ஸ்டாலின் தமிழ்நாட்டில் தி.மு.க. அரசு அறிவித்துள்ள திட்டங்களுக்குரிய நிதி ஒதுக்கீடு, தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு தர வேண்டிய வரி வருவாய், மழை வெள்ள நிவாரணத்தொகை உள்ளிட்ட மாநில உரிமைக்காக பிரதமர் மோடியை சந்தித்திருக்கிறார் ஸ்டாலின்.

இந்தியாவின் வரலாறு தெற்கிலிருந்து எழுதப்பட வேண்டும் என்பதை வரலாற்று ஆய்வாளர்கள் பலர் தொடர்ந்து வலியுறுத்தி உள்ளனர். தெற்கில் வரலாற்றை டெல்லிப் பட்டணத்தில் எழுதும் பெருமிதமிகு நிகழ்வு நாளை நடைபெற இருக்கிறது. தி.மு.க. கட்சி அலுவலகமான அண்ணா அறிவாலயம் அங்கே திறந்து வைக்கப்படுகிறது.வடநாட்டுத்தலைவர்கள்பங்கேற்கும் இந்தவிழாவில்அண்ணாஅறிவாலயம்புதுப்பொலிவுடன் கம்பீரமாக காட்சி அளிக்கும். இந்த நிலையில் முதல்வர் ஸ்டாலின் தமிழகம் தொடர்பான 14 கோரிக்கைகள் அடங்கிய 41 பக்க மனுவை பிரதமர் மோடியை சந்தித்தபோது வழங்கியிருக்கிறார்.

தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு முதல்வர் ஸ்டாலினின் 3–ஆவது டெல்லிப்பயணம் இது. பிரதமர் மோடியிடம் முதல்வர் ஸ்டாலின் அளித்த கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்திருக்கிறார். பிரதமருடனான இந்த சந்திப்பு மகிழ்ச்சி அளிப்பதாகவும், மனநிறைவு தருவதாகவும் ஸ்டாலின் கூறியுள்ளார். இலங்கையில் அசாதாரண சூழ்நிலை நிலவுவதாகவும், அங்கிருந்து வரும் தமிழர்களுக்கு எல்லா வகையிலும் உதவிகள் செய்ய வேண்டும் என்றும் இந்த சந்திப்பின் போது பிரதமர் மோடியிடம் ஸ்டாலின் வலியுறுத்தி இருக்கிறார். இலங்கை தமிழர்களுக்கு அரசியல் மற்றும் பொது உரிமைகள் வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருப்பதோடு தமிழக மீனவர்களுக்கு மீன்பிடி உரிமைகளை பெற்றுத்தர வேண்டும் என்றும், கச்சத்தீவு கோரிக்கையையும் பிரதான கோரிக்கைகளாக பிரதமரிடம் ஸ்டாலின் முன்வைத்து இருக்கிறார்.

உக்ரைனில் இருந்து திரும்பிய தமிழக மாணவர்கள் இந்தியாவிலேயே மருத்துவப்படிப்பை தொடர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார். நீட் விலக்கு தொடர்பாக சட்டசபையில் 2–ஆவது முறை மசோதா நிறைவேற்றி கவர்னருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் இதுவரை அது ஜனாதிபதியின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. எனவே நீட் விலக்குக்கு அனுமதி பெற்றுத்தர வேண்டும் என்ற கோரிக்கையையும் முன் வைத்துள்ளார். பிரதமரை சந்தித்த கையோடு உள்துறை மந்திரி அமித்ஷாவையும் முதல்வர் ஸ்டாலின் சந்தித்துப் பேசியிருக்கிறார். தமிழகத்துக்கான வெள்ள நிவாரண நிதியை வழங்குமாறு கேட்டிருக்கிறார். அதேபோல ராணுவ மந்திரி ராஜ்நாத் சிங்கிடமும், தமிழகத்தில் புதிய விமான நிலையத்துக்கு பாதுகாப்பு துறையின் கீழ் ஒதுக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் வைத்துள்ளார்.

சேலம் உருக்காலையில் உள்ள மிகை நிலத்தை பாதுகாப்புதொழில்துறைவழித்தடத்துக்குதரவேண்டும். கோவையில் ஏவியேஷன் மையம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைக்க முதல்வர் தவறவில்லை. சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை மந்திரி நிதின் கட்கரியிடமும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இருக்கிறார். சென்னையில் இருந்து கன்னியாகுமரி வரை உள்ள நெடுஞ்சாலையை 6 வழிச்சாலையாக ஆக்க வேண்டும். நிலுவையில் உள்ள நெடுஞ்சாலை திட்டப்பணிகளை விரைந்து முடிக்க வேண்டும். மதுரவாயல் உயர்மட்ட சாலையை திருப்பெரும்புதூர் வரை நீட்டிக்க வேண்டும். தாம்பரத்தில் இருந்து செங்கல்பட்டுக்கு உயர்மட்ட சாலை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கைகளையும் முன்வைத்து இருக்கிறார்.

மத்தியமந்திரிகளுடனானஇந்தசந்திப்புமனநிறைவை தந்திருப்பதாக ஸ்டாலின் கூறியிருக்கிறார். மேலும் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை தமிழர்களுக்கு அத்தியாவசியப் பொருள், மருந்துகளை அனுப்ப அனுமதிக்க வேண்டும் என்ற மனிதாபிமானமிக்க கோரிக்கையையும் பிரதமர் முன் ஸ்டாலின் முன்வைத்துள்ளார். அமீரகப் பயணம் வெற்றியுடன் அமைந்தது போல, முதல்வர் ஸ்டாலினின் டெல்லி பயணமும் வெற்றிப்பயணமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

மாலைமலர்

01-April-2022

முதல்-அமைச்சரின் சமயோசிதமும்...! மக்கள் பாராட்டும்....!

ஒரு செயலை செய்வதற்கு ஏற்ற கருவி, காலம், செய்யும் வகை, செயலின் அருமை ஆகியவற்றை சிந்தித்து செயல்படுத்துவதே நல்ல அமைச்சருக்கு அழகு என்பது வள்ளுவர் வாக்கு. அந்த வகையில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனக்கு கிடைத்த வாய்ப்பு, காலம் எல்லாவற்றையும் சிந்தித்து சாதுர்யமாக செயல்பட்டு பாராட்டு பெற்றுள்ளார்.

டெல்லியில் நாளை அண்ணா-கலைஞர் அறிவாலயம் திறக்கப்பட இருப்பதும், அது தொடர்பாக பிரதமர் மோடி உள்ளிட்ட அகில இந்திய தலைவர்களை சந்தித்து விழாவுக்கு அழைக்கவும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் டெல்லி சென்றது எல்லோரும் அறிந்ததே.

அரபு நாடுகளில் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பிய வேகத்தில் ஓய்வு இல்லாமல் உடனடியாக டெல்லி பயணத்தையும் தொடர்ந்தார். தனது கட்சியின் சார்பில் நடைபெறும் வரலாற்று சிறப்புமிக்க நிகழ்ச்சியில் அகில இந்திய தலைவர்களை கலந்து கொள்ளச் செய்து வரலாறு படைக்கவே மு.க.ஸ்டாலின் முயற்சிப்பார் என்றுதான் எல்லோரும் எதிர்பார்த்தனர்.

ஆனால் அவரோ ஒரு கட்சியின் தலைவராக இருந்து என்ன செய்ய வேண்டும், அதே நேரம் மாநிலத்தின் முதல்வராக இருந்து என்ன செய்ய வேண்டும் என்று திட்டமிட்டு செயல்பட்டு எல்லோராலும் சபாஷ் போட வைத்துள்ளார்.

கட்சி தலைவராக இருந்து நாளை நடக்கப் போகும் விழாவுக்கு காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி உள்ளிட்ட தலைவர்களை சந்தித்து அழைப்பு விடுத்தார். அதேநேரம் பிரதமர் மோடியை தி.மு.க. தலைவர் மற்றும் முதல்-அமைச்சர் என்ற இரண்டு முகங்களோடு சந்தித்தார்.

கட்சி அலுவலக திறப்பு விழாவுக்கு கட்சியின் தலைவராக அழைப்பு விடுத்துவிட்டு கட்சி தலைவராக மட்டுமல்ல தமிழகத்தின் முதல்வராகவும் நான்தான் இருக்கிறேன் என்ற ரீதியில் தமிழகத்தின் சார்பில் 14 அம்ச கோரிக்கைகளையும் பிரதமர் மோடியிடம் அளித்துள்ளார்.

நடுவிலே கடல் பிரித்தாலும் தமிழன் என்ற எங்களுடனான உறவை எதுவும் பிரிக்க முடியாது என்பது போல பொருளாதார நெருக்கடியில் சிக்கி இருக்கும் இலங்கை தமிழர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் தமிழகத்தின் சார்பில் உதவுவதற்கு அனுமதி தாருங்கள் என்று கேட்டு உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கு தமிழகம் என்றும் உதவிக்கரம் நீட்டும் என்பதை நிலை நாட்டி உள்ளார்.

அடுத்து தமிழகத்தின் மிக முக்கிய பிரச்சினைகளான நீர் வளத்துறையில் காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டும் பிரச்சினை, மீன் வளத்துறையில் பாக். வளைகுடாவில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாத்தல், தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை மீட்டெடுப்பது. எரிசக்தி துறையில் நிலக்கரி குறித்த விவகாரங்கள், நிதித் துறையில் ஜூன் 2022-க்குப் பின்பும் ஜி.எஸ்.டி. இழப்பீட்டை தொடர்ந்து வழங்க வேண்டும்.

சுகாதாரத் துறையில் நீட் தேர்வுக்கு எதிர்ப்பு, வேளாண்மை துறையில் பிரதம மந்திரி வேளாண்மை பயிர் பாதுகாப்புத் திட்டத்திற்கு ஒன்றிய அரசின் பங்களிப்பை முந்தைய நிலைக்கு உயர்த்துதல்.

பல தொழில்கள் தொடங்க அனுமதி கேட்டல், தமிழ்நாட்டில் புதிய ரெயில்வே திட்டங்கள் தொடங்குதல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், நரிக்குறவர்கள், குருவிக்காரர்கள் சமூகங்களை தமிழ்நாட்டின் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் இதில் அடங்கும்.

ஒரு முதல்-அமைச்சருக்கு தனது மாநிலத்திற்கு என்னென்ன தேவை என்பதை அறிந்து அதை செய்வதற்கு ஏற்ற காலம், செய்யும் வகையில் அருமையாக வள்ளுவன் கூட்டிய நல் அமைச்சர் என்ற வழியில் நின்று தனது கடமையை சிறிதும் பிறழாமல் செய்து முடித்து இருக்கிறார்.

ஒரு முதல்-அமைச்சராக தனது கடமையை மு.க.ஸ்டாலின் செய்துள்ளார். மத்திய அரசும் ஒரு மாநிலம் எதிர்பார்ப்பதில் நியாயமான மற்றும் உடனடியாக நிறைவேற்ற வேண்டிய கோரிக்கைகளை நிறைவேற்றி தமிழக மக்களின் பாராட்டை பெற வேண்டும்.

THE HINDU
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878
01-April-2022

Opposition MPs meet and greet Stalin

Sonia drops by in Parliament; leaders of various parties plan informal parleys at DMK office opening

SOBHANA K. NAIR
NEW DELHI

Leaders of various Opposition parties met Tamil Nadu Chief Minister M.K. Stalin during his brief visit to Parliament on Thursday. Apart from meetings with Prime Minister Narendra Modi and Union Ministers, Mr. Stalin is here to inaugurate the Dravida Munnetra Kazhagam's office on Rouse Avenue, close to the BJP headquarters, on Saturday.

Congress president Sonia Gandhi dropped by at the DMK's parliamentary office to greet him. "I just came to say *vanakkam*. I will see you on Saturday, at the opening of your office," she told Mr. Stalin.

The DMK has invited West Bengal Chief Minister Mamata Banerjee to the event, but so far, there has been no confirmation of her participation. Nationalist Congress Party patriarch Sharad Pawar is expected.

Many Opposition leaders are looking forward to this event for an informal meeting of the Opposition to discuss the current situation and the possibility of fielding a joint candidate for the presidential elections in July.

The DMK has invited Mr. Modi and BJP president J.P. Nadda. Mr. Nadda told *The Hindu* that the party had not yet taken a final call on who would represent it at the inauguration.

On capital turf: Tamil Nadu Chief Minister M.K. Stalin at the Parliament House complex in New Delhi on Thursday. • PTI

Many Trinamool Congress MPs, including Mahua Moitra, Mausam Noor and Jawahar Sircar, turned up at the Central Hall of Parliament to meet Mr. Stalin.

“முதலமைச்சர் இப்படி செய்வார்னு எதிர்பார்க்கவேயில்லை!” என கசிந்துருகும் சந்திரனின் படிப்புக்கு ரூ.2.5 லட்சம் செலவாகுமாம்.

இந்நிலையில், தான் பொருளாதார உதவிகளுக்கு ஏற்பாடு செய்வதாக சொல்லியிருக்கிறார் சுப்புலட்சுமி ஜெகதீசன். தவிர சந்திரனின் நிலையைக் கண்ட பல்கலைக்கழக அலுவலர்கள் கணிசமான நிதி வசூலித்துத் தருவதாகவும் சொல்லியிருக்கிறார்கள்.

சமூக நீதிக்கான வெற்றி

ஒன்றிய அரசு கடந்த 2017ம் ஆண்டு முதல் நீட் தேர்வை அமல்படுத்தியது. தமிழ்நாடு, கேரளா, மேற்குவங்கம் உள்பட சில மாநில அரசுகள் நீட் தேர்வு முறைக்கு எதிராக குரல்கொடுத்து வருகின்றன. இந்த தேர்வை, அடியோடு ரத்து செய்ய வேண்டும் என தமிழக அரசு தொடர்ந்து போராடி வருகிறது.

நீட் தேர்வால் தமிழகத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து ஆராய ஓய்வுபெற்ற நீதிபதி ஏ.கே. ராஜன் தலைமையில் 9 பேர் கொண்ட குழுவை தமிழக அரசு கடந்த ஆண்டு ஜூன் 10ம் தேதி அமைத்தது. இந்த குழுவை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. இது, தமிழக அரசின் முயற்சிக்கு கிடைத்த முதல் வெற்றியாக அமைந்தது.

மருத்துவப்படிப்பில், அகில இந்திய ஒதுக்கீட்டில் ஓபிசி பிரிவினருக்கு வழங்கப்பட்ட 27 சதவீத இடஒதுக்கீடு செல்லும் என உச்சநீதிமன்றம் கடந்த ஜனவரி மாதம் மிக முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை அளித்தது. திமுக வழக்கறிஞர்கள் முன்வைத்த அழுத்தமான வாதத்தின் அடிப்படையில் கிடைத்த இந்த தீர்ப்பு தமிழக அரசின் முயற்சிக்கு கிடைத்த அடுத்த வெற்றியானது.

தற்போது மருத்துவ மாணவர் சேர்க்கையில் தமிழக அரசுப்பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவீத இடஒதுக்கீடு வழங்கி தமிழக அரசு இயற்றிய சட்டம் செல்லும் என சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. தமிழக அரசால் இயற்றப்பட்ட சட்டத்தை எதிர்த்தும், அரசு உதவிபெறும் தனியார் பள்ளி மாணவர்களுக்கும் இந்த இடஒதுக்கீட்டை வழங்கக்கோரியும் தொடரப்பட்ட வழக்குகளின் விசாரணை முடிவில் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி முனீஷ்வர்நாத் பண்டாரி மற்றும் நீதிபதி பரத சக்கரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த தீர்ப்பை அளித்துள்ளது.

சமூக, பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்குவதற்காகவே இந்த சட்டம் இயற்றப்பட்டது என்ற வாதத்தையும், அரசு பள்ளி மாணவர்களுக்கு சமூக ஒதுக்கீடு வழங்குவது அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளது என்ற வாதத்தையும் உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது. கிராமப்புற ஏழை மாணவர்கள், கல்வி அறிவு பெறாத பெற்றோரின் மாணவர்கள், கூலித் தொழிலாளர்களின் குழந்தைகள் பயன்பெறும் வகையிலும், தமிழகத்தைவிட்டு நீட் தேர்வு விலகும் காலம் நெருங்கிவிட்டது என்பதை உணர்த்தும் வகையிலும் இந்த தீர்ப்பு அமைந்துள்ளது. மேலும் சமூக நீதிக்கான சட்ட போராட்டத்துக்கு கிடைத்த வெற்றியாகவும் இந்த தீர்ப்பு பார்க்கப்படுகிறது. "இந்த அரசு ஆட்சிப்பொறுப்பேற்று 10 மாத காலத்தில், சமூக நீதிக்கான சட்டப்போராட்டத்தில் கிடைக்கும் மூன்றாவது வெற்றி இது" என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார். "சமூக நீதியை மக்கள் மன்றத்திலும், நீதிமன்றத்திலும் நிலைநாட்டி, நாட்டிற்கே வழிகாட்டும் வரலாற்று கடமையை இந்த அரசு தொடர்ந்து செய்யும். திராவிட மாடல் ஆட்சியில், சமூக நீதியை காப்பாற்ற அயராது உழைப்போம்" எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தினத் தந்தி
DAILY THANTHI

09-April-2022

அரசு பள்ளிக்கூட மாணவர்களுக்கு கிடைத்த ஆனந்த பரிசு!

சமூகநீதி என்பது எல்லோருக்கும் எல்லா உரிமைகளும் சமமாக கிடைப்பதை உறுதிப்படுத்துவதாகும். 'நீட்' தேர்வு வருவதற்குமுன்பு 2014-2015-ல் அரசு பள்ளிக்கூடங்களில் படித்த 38 மாணவர்களுக்கும், 2015-2016-ல் 36 மாணவர்களுக்கும் மருத்துவக்கல்லூரிகளில் இடம்கிடைத்த நிலையில், இவ்வளவு குறைவான இடங்கள் கிடைத்திருக்கிறதே என எல்லோரும் ஆதங்கப்பட்டு கொண்டிருந்தனர். 'நீட்' தேர்வு அமலுக்கு வந்ததும் இந்த ஆதங்கம் பெரும்கவலையாக மாறிவிட்டது. 2017-2018-ல் 3 மாணவர்களுக்கும், 2018-2019-ல் 5 மாணவர்களுக்கும் மட்டுமே மருத்துவக்கல்லூரிகளில் இடம்கிடைத்தது.

அந்தநேரம் முதல்-அமைச்சராக இருந்த எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. அரசு, அரசு பள்ளிக்கூடங்களில் படித்து, 'நீட்' தேர்வு எழுதி வெற்றி பெற்ற மாணவர்களில் 7.5 சதவீதம் பேருக்கு இடம்கிடைக்கும் வகையிலான உள்இடஒதுக்கீடு சட்டமசோதாவை நிறைவேற்றியது. 2020-2021-ம் ஆண்டில் இந்த 7.5 சதவீத இடஒதுக்கீடு காரணமாக 436 பேருக்கு இடம் கிடைத்தது. இந்த ஆண்டு 544 பேர் மருத்துவப்படிப்பில் சேர்ந்திருக்கின்றனர். முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சிபொறுப்பை ஏற்றவுடன், மருத்துவக்கல்லூரி மாணவர்களுக்கு மட்டுமல்லாமல், என்ஜினீயரிங், வேளாண்மை, கால்நடை, மீன்வளம், சட்டப்படிப்பு போன்ற தொழிற்கல்விப்படிப்புகளுக்கும் 7.5 சதவீத இடஒதுக்கீடு

அளிப்பதற்கான சட்டத்தை நிறைவேற்றி மிகப்பெரிய புரட்சியை செய்தார். மேலும் இந்தக்கல்லூரிகளில் 7.5 சதவீத இடஒதுக்கீட்டின்படி இடம்கிடைத்த மாணவர்களுக்கு ஆகக்கூடிய செலவும், கல்வி, விடுதி, கலந்தாய்வுக்கட்டணங்கள் உள்பட அனைத்தையும் அரசே ஏற்றுக்கொள்ளும் என்ற அறிவிப்பை வெளியிட்டு அதற்குரிய அரசாணையையும் பிறப்பித்து, நிதியையும் ஒதுக்கீடு செய்தார்.

இத்தகைய சூழ்நிலையில், மருத்துவக்கல்லூரி மாணவர்சேர்க்கையில் அரசுப்பள்ளிக்கூட மாணவர்களுக்கு இடஒதுக்கீடு செய்தது, அரசியல் சட்டத்துக்கு முரணானது; இது செல்லாது என்று சி.பி.எஸ்.இ. மாணவர்களும், அரசு உதவிபெறும் பள்ளிக்கூட மாணவர்களும் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்குகளை தலைமை நீதிபதி முனீஸ்வர்நாத் பண்டாரி, நீதிபதி டி.பரத சக்கரவர்த்தி ஆகியோர் விசாரித்து, ஒரு வரலாற்று சிறப்புமிகுந்த தீர்ப்பை வழங்கியிருக்கின்றனர். 7.5 சதவீத இடஒதுக்கீட்டை பெறும் அரசுப்பள்ளிக்கூட மாணவர்கள் சமூகத்திலும், கல்வியிலும் பின்தங்கிய வகுப்பினர். எனவே இந்த இடஒதுக்கீடு சட்டமன்றத்தின் அதிகாரத்துக்குட்பட்டது. மேலும் இந்த சட்டத்தை பரிந்துரை செய்த நீதிபதி பி.கலையரசன் ஆணையம், பல்வேறு நிலைமைகளை ஆராய்ந்தே தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. அரசுப்பள்ளிக்கூட மாணவர்களின் பெற்றோருடைய ஆண்டு வருமானம் ரூ.46 ஆயிரத்து 686. அதேநேரம் சி.பி.எஸ்.இ. மாணவர்களின் பெற்றோருடைய ஆண்டுவருமானம் ரூ.4 லட்சத்து 69 ஆயிரம். இதுமட்டுமில்லாமல், அரசுப்பள்ளிக்கூட மாணவர்களின் தந்தையரில் 83 சதவீதம் பேரும், தாய்மார்களில் 63 சதவீதம் பேரும் தினக்கூலிகள் என்பதையும் பார்த்தால், சமத்துவத்தை நிர்ணயிக்கும்போது இதை தள்ளிவிடமுடியாது. எனவே இந்த சட்டம் செல்லும் என்று தீர்ப்பு அளித்தனர்.

அந்த தீர்ப்பில் இன்னொரு முக்கியஅம்சமாக 5 ஆண்டுகளுக்குபிறகு, இந்த இடஒதுக்கீட்டை மறுபரிசீலனை செய்யவேண்டும். அதற்குள் அரசுப்பள்ளிக்கூடங்களில் கல்வித்தரத்தை உயர்த்தவேண்டும் என்ற எல்லோரும் வரவேற்கத்தக்க தீர்ப்பையும் வழங்கியுள்ளனர். நீதிபதி கலையரசன் ஆணையம் இதை பரிந்துரைத்து இருக்கிறது. இந்த 5 ஆண்டுகளில் அரசுப்பள்ளிக்கூடங்களின் கல்வித்தரத்தை உயர்த்தி 5 ஆண்டுகளுக்கு பிறகு, இந்த இடஒதுக்கீடு நீட்டிக்கப்படாத நிலையை உருவாக்கவேண்டும் என்று நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த தீர்ப்பின் வெற்றியில் எடப்பாடி பழனிசாமி, முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகிய இருவருக்குமே பங்கு இருக்கிறது என்றாலும், சமூகநீதி பயணத்தில் இந்த 10 மாதங்களில் மு.க.ஸ்டாலினுக்கு கிடைத்த 'ஹாட்ரிக்' வெற்றி என்பதை சமுதாயம் பெருமையோடு பாராட்டுகிறது. மருத்துவப்படிப்புகளுக்கான அகில இந்திய ஒதுக்கீட்டில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவீத இடஒதுக்கீட்டை உறுதிசெய்த சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு முதல்வெற்றி, மருத்துவ மேற்படிப்புகளில் ஊரகப்பகுதிகளில் பணியாற்றும் அரசு மருத்துவர்களுக்கு 50 சதவீத இடஒதுக்கீடு வழங்க தமிழக அரசுக்கு உரிமை உண்டு என்று சுப்ரீம் கோர்ட்டில் பெற்றது 2-வது வெற்றி, இப்போது ஐகோர்ட்டில் 7.5 சதவீத இடஒதுக்கீடு செல்லும் என்ற தீர்ப்பை பெற்றது 3-வது வெற்றியாகும்.

மக்கள் நல பணியாளர்கள் குடும்பத்தில் மறுமலர்ச்சி

கிராமப்புறங்களை மேம்படுத்தும் உயரிய எண்ணத்தில் 1989-ம் ஆண்டு அப்போதைய முதல்-அமைச்சர் கருணாநிதியால் மக்கள் நல பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

ஊரக பகுதிகளில் வேலையில்லாத படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல், கிராம பொது சொத்துக்களை பேணிக்காத்தல், சிறுசேமிப்பு திட்டத்துக்காக உதவுதல் போன்ற கிராமப்புறங்களில் உள்ள பல்வேறு பணிகளை மேற்கொள்ளும் வகையில் மக்கள் நலப்பணியாளர் என்கிற பணியிடம் உருவாக்கப்பட்டிருந்தது.

இதன்படி ஊராட்சிக்கு ஒரு ஆண், ஒரு பெண் வீதம் 12 ஆயிரத்து 617 ஊராட்சிகளுக்கும் 25 ஆயிரத்து 234 மக்கள் நல பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டனர். இந்த பணியிடங்கள் 1991-ம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் ரத்து செய்யப்பட்டன. பின்னர் தி.மு.க. ஆட்சியில் பொறுப்பேற்ற பிறகு 1997-ம் ஆண்டு மீண்டும் மக்கள் நல பணியாளர்கள் பணி அமர்த்தப்பட்டனர்.

பின்னர் 2001-ம் ஆண்டு அ.தி.மு.க. அரசால் மக்கள் நல பணியாளர்களின் பணியிடங்கள் மீண்டும் ஒருமுறை ரத்து செய்யப்பட்டன. இதன்பிறகு 2006-ம் ஆண்டு கருணாநிதி முதல்-அமைச்சர் ஆன போது மீண்டும் இந்த பணியிடங்கள் உருவாக்கப்பட்டன. ஊராட்சிக்கு ஒருவர் என 12 ஆயிரத்து 618 பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதன் பின்னர் 2011-ம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் இந்த பணியிடங்கள் மீண்டும் ரத்தானது.

இப்படி தி.மு.க. ஆட்சியில் பணி அமர்த்தப்பட்ட மக்கள் நல பணியாளர்கள், அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த போதெல்லாம் பந்தாடப்பட்டுள்ளனர். இந்நிலையில் மக்கள் நலப்பணியாளர்கள் குடும்பத்தில் மீண்டும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் அவர்களுக்கு புதிய வேலை வழங்கப்படும் என்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். கடந்த 10 ஆண்டுகளாக அ.தி.மு.க. ஆட்சியில் கண்டு கொள்ளப்படாமல் இருந்த மக்கள்நல பணியாளர்களின் குடும்பத்துக்கு இதன் மூலம் வருமானம் கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள 12 ஆயிரத்து 524 கிராம ஊராட்சிகளில் வேலை உறுதி திட்ட பணி ஒருங்கிணைப்பாளர் என்கிற பணியிடத்தில் சேருவதற்கு மக்கள் நல பணியாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பு மக்கள் நல பணியாளர்களின் வயிற்றில் பால் வார்ப்பதாகவே அமைந்துள்ளது.

இப்படி பணி அமர்த்தப்படும் மக்கள் நல பணியாளர்களுக்கு மதிப்பூதியமாக ரூ.7500 வழங்கப்படும் எனவும், மரணம் அடைந்துள்ள மக்கள் நல பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டப்பணி ஒருங்கிணைப்பாளராக பணியாற்ற வாய்ப்பு வழங்கப்படும் என்றும் சட்டமன்றத்தில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

வாழ்க்கையோடும், பணிக்காகவும் போராடிக் கொண்டிருந்த மக்கள் நல பணியாளர்கள் மகிழ்ச்சி அடையும் வகையில் முதல்-அமைச்சரின் இந்த முத்தான அறிவிப்பு அமைந்துள்ளது. அதே நேரத்தில் வேலையின்றி தவித்து வரும் மக்கள் நல பணியாளர்களின் வாரிசுகளுக்கு அரசு பணி கிடைக்க அருமையான வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

இதனால் மறைந்த மக்கள் நல பணியாளர்களின் குடும்பத்தினரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இப்படி ஒட்டு மொத்தமாக மக்கள் நல பணியாளர்கள் மற்றும் அவரது வாரிசுகள் மற்றும் குடும்பத்தினர் மிகவும் பயன்பெறும் வகையில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பு வரவேற்பை பெற்றிருக்கிறது.

மக்கள் நலனில் அக்கறை கொண்ட அரசாக திகழ்ந்து வரும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு கிராமப்புறங்களை முன்னேற்றும் வகையில் பல்வேறு திட்டங்களை கொண்டு வந்து செயல்படுத்தி வருகிறது.

இந்த எண்ணத்தில்தான் கிராமப்புற பொருளாதார மேம்பாட்டை கருத்தில் கொண்டு இருந்த அப்போதைய முதல்-அமைச்சர் கருணாநிதி 33 ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் நல பணியாளர்களை பணி அமர்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினின் அறிவிப்பால் மக்கள் நல பணியாளர்களும், அவர்களது வாரிசுகளும் மீண்டும் கிராமப்புறங்களில் பணியாற்றுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதன்மூலம் மு.க.ஸ்டாலின் மக்கள் நலன் சார்ந்த முதல்-அமைச்சர் என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபித்துள்ளார் என்றால் அது மிகையாகாது.

மாலை
முரசு

09-April-2022

ஜெயலலிதா போல் துணிவோடு எதிர்க்கிறார்:

முதல்வர் ஸ்டாலினால் தமிழகத்துக்கு நீட் தேர்வு விலக்கு நிச்சயம் கிடைக்கும்!

கவிஞர் முத்துலிங்கம் பேச்சு!!

சென்னை, ஏப்.09

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாநான்இருக்கும் வரையிலும் நீட் தேர்வை அனுமதிக்க மாட்டேன் என்று பகிரங்கமாக துணிச்சலோடு அறிவித்தார். அதே போன்று துணிச்சலுடன் இப்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்நீட் தேர்வை கடுமையாக எதிர்த்து வருகிறார். ஆகவே அவரால்தமிழகத்துக்கு நீட் தேர்வு விலக்கு நிச்சயம் கிடைக்கும் என்று கவிஞர் முத்துலிங்கம் பேசினார்.

டாக்டர் போஜன் குமரேசன் பாடிய அருணகிரி நாதரின் கந்தர் அநுபூதி இசைப் பேழை வெளியீட்டு விழா சென்னை வாணி மகாலில் நடைபெற்றது. விழாவிற்கு திரைப்பட இசைக்கலைஞர் சங்கத் தலைவர் இசையமைப்பாளர்தினாதலைமை வகித்தார். நீதியரசர் வள்ளி நாயகம், இசைப்பேழையை வெளியிட்டார்.

முத்துலிங்கம்

அருணகிரிநாதர்

இந்நிகழ்ச்சியில் திரைப்படப் பாடலாசிரியரும், முன்னாள் அரசவைக்கவிஞரும், முன்னாள் சட்டமன்ற மேலவை உறுப்பினரும், அ.தி.மு.க.நட்சத்திரப் பேச்சாளருமான கவிஞர் முத்துலிங்கம் சிறப்புரையாற்றினார். அவர் பேசியதாவது:

அருணகிரி நாதர் பாடிய கந்தர் அநுபூதிக் கவிதைகளை இசையுடன் சிறப்பாகப்பாடியிருக்கிறார்டாக்டர் போஜன் குமரேசன்.

நீட் தேர்வெல்லாம் இல்லாத காலத்தில் மருத்துவம் பயின்று டாக்டர் ஆனவர் போஜன் குமரேசன். நீட் தேர்வு என்பது ஏழை எளிய கிராமப்புறமாணவர்களுக்கு எதிரானதாக இருக்கிறது.

லட்சக்கணக்கான ரூபாய் செலவழித்து அவர்கள் நீட் தேர்வு பயிற்சி பெற முடியாது.

அதனால்தான் அன்றைய முதலமைச்சராக இருந்த ஜெயலலிதாநான்இருக்கும் வரையிலும் நீட்தேர்வை அனுமதிக்கமாட்டேன். இந்தத்திணிப்பையும் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று பகிரங்கமாகதுணிச்சலோடு அறிவித்தார். அவருக்குப் பின் வந்தவர்கள் துணிவோடு அதை எதிர்க்கவில்லை. அந்த வகையில் இன்றைய முதலமைச்சர் ஸ்டாலின்நீட்தேர்வைஜெயலலிதா போல் துணிவோடு எதிர்க்கிறார். அவர் துணிச்சலைவரவேற்கிறேன். மற்ற சில பிரச்சினைகளில் அவர் கருத்துக்குஎதிர்க்கருத்துஎன்னைப் போன்றவர்களுக்கு உண்டென்றாலும்நீட் தேர்வு விஷயத்தில் அவரை நான் பாராட்டுகிறேன். எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும் அந்தவகையில் அவரை ஆதரிப்பவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

கவர்னர் காலம் கடத்துவது தவறானது

ஆகவேதமிழ்நாட்டுச்சட்டமன்றத்தில்மீண்டும்நிறைவேற்றி அனுப்பப்பட்ட சட்டமசோதாவைகுடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்காமல் காலம் கடத்துவது தவறானது. தனது விருப்பு, வெறுப்பு அரசியலை கவர்னர் இதில் காட்டக்கூடாது. அந்த மசோதாவுக்கு ஒப்புதல் தர மறுக்கும் அளவுக்கு அளவுகடந்த அதிகாரம்கவர்னருக்குவழங்கப்படவில்லை. கவர்னர்காலம் கடத்துவது அரசியல்சட்டத்திற்கு எதிரானது.

முதல்வர் ஸ்டாலின் அவர்களால்தமிழ்நாட்டுக்கு நீட் தேர்வுவிலக்குக்கிடைக்கும் என்று நம்புகிறோம்.

'அரசியல் அமைப்புச் சட்ட முறைப்படி கவர்னர் நடந்து கொள்ளாவிட்டால் அன்று அண்ணா சொன்னது போல் கவர்னர் பதவியே தேவையில்லை யென்று நாடெங்கும் போராட்டம் நடத்தும் சூழ்நிலை கூட வரலாம். இவ்வாறுகவிஞர்முத்துலிங்கம் பேசினார்.

போக்குவரத்து துறையில் பதவி உயர்வு, பணியிட மாற்றம்:

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அரசு பணியாளர் சங்கம் நன்றி

சென்னை, ஏப்.10-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்கத்தின் சென்னை மாவட்ட தலைவர் அ.விஜயன், மாவட்ட செயலாளர் ச.சத்தியசங்கர், சட்ட ஆலோசகர் கு.பால்பாண்டியன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

போக்குவரத்து துறையில், சட்டம் அனுமதித்த படியும், அரசாணைகளின் படியும் 30 உதவியாளர்களுக்கு கண்காணிப்பாளர் பதவி உயர்வும், 30 உதவியாளர்களுக்கு அலகுப் பணியமர்த்த உத்தரவுகளும், 5 பெண் பணியாளர்களுக்கு விருப்ப விண்ணப்பத்தின் படி சொந்த ஊருக்கு அருகில் பணியிட மாறுதல் உத்தரவுகளும் வழங்கப்பட்டு உள்ளது.

அரசாணைகளின் படி பணியிட மாறுதல் உத்தரவுகள் வழங்கிட ஆவன செய்து வரலாறு படைத்திட்ட முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும், போக்குவரத்துத்துறை அமைச்சருக்கும் எங்களின் மனம் நிறைந்த பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

தினகரன்

10-April-2022

நியாயம் வென்றது

அதிமுக அரசால் பழி வாங்கப்பட்ட மக்கள் நலப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு என்ற அறிவிப்பின் மூலம் 12 ஆயிரம் குடும்பங்களின் வயிற்றில் பால் வார்த்துள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

ஊரகப் பகுதிகளில் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல், கிராம பொதுச் சொத்துக்களைப் பேணிக் காத்திடல், சிறு சேமிப்புத் திட்டத்திற்கு உதவுதல் போன்ற கிராம அளவிலான பல்வேறு பணிகளுக்காக கலைஞர் முதல்வராக இருந்தபோது 2-9-1989-ல், ஒரு ஊராட்சிக்கு ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் என்ற அடிப்படையில், மொத்தம் 12 ஆயிரத்து 617 ஊராட்சிகளுக்கு 25 ஆயிரத்து 234 மக்கள் நலப் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, ஜெயலலிதா தலைமையிலான அரசு பதவி ஏற்றதும் 13.07.1991-ல் இப்பணியிடங்கள் ரத்து செய்யப்பட்டது. மீண்டும் 1996ல் திமுக் ஆட்சிக்கு வந்ததும், மீண்டும் வேலை தரப்பட்டது. அத்தோடு முடிந்ததா? என்றால் இல்லை. 2001ல் அதிமுக பதவிக்கு வந்ததும், மீண்டும் பணி பறிப்பு. 2006ல் கலைஞர் மீண்டும் முதல்வரானதும் ஊராட்சிக்கு ஒருவர் என 12 ஆயிரத்து 618 மக்கள் நலப் பணியாளர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டன. மீண்டும் 2011ல் ஆட்சிக்கு வந்த வேகத்தில் ஜெயலலிதா அவர்களை நடுத்தெருவில் நிறுத்தினார்.

பல்வேறு போராட்டங்கள் நடத்தியும் ஜெயலலிதா அரசு செவிசாய்க்கவில்லை. சென்னை உயர் நீதிமன்றத்தின் கதவுகள் தட்டப்பட்டது. அவர்களுக்கு மீண்டும் பணி வழங்க நீதியரசர்கள் உத்தரவிட்டனர். ஆனால், நடந்ததோ அதிமுக ஆட்சி அல்லவா? உடனே உச்ச நீதிமன்றம் சென்று தடை வாங்கினார்கள். இந்த வழக்கு இன்னமும் விசாரணையில் உள்ளது.

மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுக ஆட்சிக்கு வந்ததும், மக்கள் நலப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலை தருவதற்கான பணிகள் அரசு மட்டத்தில் நடக்க துவங்கியது. கடந்த ஜூலை, ஆகஸ்ட் மாதத்திலேயே பணியிழந்த மக்கள் நலப் பணியாளர்களின் பெயர், முகவரி, ஆதார் எண் உள்ளிட்ட விவரங்கள் சேகரிக்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாக இப்போது, 12,524 பேருக்கு மீண்டும் வேலை என்ற அறிவிப்பை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டு, அவர்கள் குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்க செய்துள்ளார். 'மக்கள் நல பணியாளர்கள் விரும்பினால் அவர்களுக்கு கிராமப்புற வேலை உறுதித் திட்டத்தில் ஒருங்கிணைப்பாளர் பணி வழங்கப்படும்' என அறிவித்துள்ளார். முதல்வரின் இந்த உத்தரவால் நியாயம் வென்றுள்ளது.

மக்களுக்காக, மக்களால் நடத்தப்படும் ஆட்சி என்பது மக்களாட்சிக்கான இலக்கணம். இந்த இலக்கணப்படி இன்றைக்கு இந்தியாவில் ஆட்சி நடத்துவது யார் என்றால் அது நம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்தான். ஆட்சிக்கு வருவதற்கு முன்பே, யார், யாருக்கு என்னென்னவற்றை, எப்படி செய்ய வேண்டும் என்பது குறித்த திட்டங்களை வகுத்து, ஆட்சிக்கு வந்ததும் அதை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகிறார். இன்னும் பல நல்ல அறிவிப்புகளை வெளியிடுவதோடு, பல புதிய திட்டங்களை முதல்வர் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை தமிழக மக்களுக்கு இருக்கிறது.

Constitution-makers did not envisage a monolithic government

But the Union government is showing tendencies to concentrate powers with an intent to subjugate the States and local bodies, something that even the British didn't

M.K. STALIN

The founders of our Constitution did not create a unitary, monolith government. The powers and functions were separated into three, and they were placed under the State List, the Concurrent List and the Union List.

After the passing of the Panchayat Raj Act, local self-government bodies were given rights, and the powers were devolved. Hence, I said, villages must grow, and with the growth of villages, the States would grow, and with the growth of States, the nation would grow. The Union government is bent on decimating the villages and States of India. This is antithetical to the Constitution.

The Union government has breached the jurisdiction that was defined by the Constitution and is encroaching, intent on expanding its jurisdiction.

Even the British did not set out to create an all-powerful unitary structure as now. Even in the Government of India Act, 1919, it was said that self-government in provinces must be such that the interests of the locality and the provinces were taken care of. It was also said that the Union government must oversee and govern the unified framework of such provinces.

I explicitly accuse the Union government for its tendencies to concentrate powers with an intent to subjugate the States and local bodies, something that even the British did not undertake.

Mahatma Gandhi said then, "Self-government without autonomy is akin to replacing the white tiger with an Indian tiger." That is the reality now. Such independence is not worth anything, is what the revolutionary Bhagat Singh then said.

States are responsible for the well-being of their residents and are undertaking active efforts. Is it not treachery if our rulers in the Union government derive joy in subjugating and making the States crawl before them? Is that not an act of extracting revenge from them? Thinking that they are extracting revenge from the States, they are extracting revenge from the people.

Tamil Nadu CM M.K. Stalin and his Kerala counterpart Pinarayi Vijayan at the CPI(M) Party Congress in Kannur. • S.K. MOHAN

Tax revenues

Once the Bharatiya Janata Party (BJP) came to power, it implemented the Goods and Services Tax (GST) that infringes upon, and deprives, the fiscal rights of the State. They have snatched tax revenues. While they promised compensation, the disbursal of compensation is not complete. And the incomplete compensation has not been given on time. They are also not releasing the funds meant for the State government. Until now, Tamil Nadu is yet to receive ₹21,000 crore.

The Planning Commission was the place where States could raise these rightful demands. They have gone on to dismantle such an institution, which ensured a space for the voices of the States. The National Development Council was the place where States could articulate these demands. Predictably, they have gone on to dismantle such an institution as well. No funds are allocated to railway schemes in South India. To ensure there are no such debates, the Railway Budget was done away with, predictably.

They will legislate on agriculture, which is firmly placed on the State List of the Constitution. But they will not conduct a debate, a discussion on that. All Acts are now legislated without any debate. Parliament is now devoid of any special debates, and there are no appropriate answers to any questions raised.

The Union government is now operating with a thirst for power to control even the cooperative societies in our villages.

Constitutional questions

Given that they have a majority, they are executing every action with impunity. They think that all these acts can be implemented using the office of the Governor in each State. When there is an elected Cabinet in each State, is it not unconstitutional to seek to rule over the State via the office of the Governor? Can a Union government function in this way? Is it constitutional to seek to run a parallel government through the Governor's office in the States led by non-BJP parties? In Tamil Nadu, the NEET Bills passed twice by the constitutionally elected legislature have not been sent to the President by the Governor, who is engaging in delaying tactics. Is he acting in accordance with the Constitution?

It is not just NEET Bills – there are 11 Bills in the hands of the Governor. What is the reason for him not to act upon them? Do the powers of the nominated Governor overrule the will of eight crore people? If this is the norm of governance in several States ruled by Opposition parties, then can we call this a functioning democracy?

The reality is such that while I may be the Chief Minister of Tamil Nadu and Pinarayi Vijayan may be the Chief Minister of Kerala, if we are yes-men, they would not create any problems for the government. The moment we legislate for improving the life of the poor, vulnerable and subjugated; talk about educational rights; articulate the culture of South India; and speak on the principle of equality, they throw a spanner in the works and disrupt the proceedings.

We must face this, and we are facing this through the legislature, the courts, and the public space. To face and overcome these active efforts of disruption, we must organise the collective of States – to fight, to resist. We must form a collective of the Chief Ministers of South India, and then form a collective of Chief Ministers from all the States of India, separately.

The Constitution needs to be amended to bestow more rights to the States. To make this happen, we must come together, united, looking beyond the boundaries of politics. Given the current political climate, it is important for like-minded political parties to come together and bond, to form a united front.

Victory is possible only if like-minded political parties come together and it is this victory which will ensure the sustenance in this country of the ideals of social justice, equality, and secularism. I request every party to initiate actions to ensure such a victory.

Let us fight for State autonomy! Let us create a truly federal India!

Excerpt from the speech of the Tamil Nadu Chief Minister at a seminar at the CPI(M) Party Congress in Kannur

Hindustan Times

10-April-2022

Centre's agenda will hit federal structure: Stalin

Ramesh Babu
letters@hindustantimes.com

THIRUVANANTHAPURAM: Tamil Nadu chief minister M K Stalin on Saturday said Bharatiya Janata Party (BJP)-led central government's single point agenda will destroy the federal structure of the country.

Speaking at a seminar on Centre-state relations during the ongoing 23rd party congress of the Communist Party of India (Marxist) in Kannur (north Kerala), Stalin said the country would become strong only after states become stronger, but all efforts are being made to pull back and undermine the states.

"One religion, one language, one voice and one election....the list goes on. Even during the British Raj, power was not centralised on a single entity like this. This single point agenda will destroy the federal structure of the country," Stalin said, adding that said such an attitude was contrary to the guiding principle of the country - unity in diversity. He said all efforts are being made to weaken states and undermine their role.

MK Stalin

"If you are a yes man, then it is fine. If you disagree, they use every possible way to weaken you. It is a fact that non-BJP-ruled states are treated as second class. Central agencies to the governor, they use all means to undermine an elected government," he said, adding that even constitutional offices like planning commission and practices like railway budget were discontinued at the fancy of the BJP and many constitutional offices suffered.

"We have to ensure social justice, secularism and equality. Let us fight for states' autonomy and create a true federal India," he said. "The planning commission was the forum where states could raise rightful demands and have a meaningful dialogue. They have dismantled the institution which ensured a space for the voice of states."

Reacting to the Stalin's comments, the BJP Kerala secretary S Suresh said, "People will reject cheap rhetoric against the union government with contempt.The Congress and CPI(M) are on the same boat and both nurse common grudge against the BJP."

Meanwhile, Congress leader K V Thomas, who defied the party diktat to attend the seminar, said he came to the function as a Congressman, and the party would have to take Nehruvian spirit to respect the opposition and take everyone along. He supported the proposed high-speed rail project K-Rail and said such big-ticket projects are the need of the hour.

"Thomas has crossed all limits of party discipline. We have asked the central leadership to act against him. It is imminent," said PCC chief K Sudhakaran, reacting to Thomas's actions.

THE NEW INDIAN EXPRESS
10-April-2022

Pinarayi, Stalin take on Centre: Destroying our federal system

SHAJU PHILIP
KANNUR, APRIL 9

TAMIL NADU Chief Minister M K Stalin and his Kerala counterpart, Pinarayi Vijayan, on Saturday blamed the BJP-led government at the Centre for destroying India's federal system.

Addressing a seminar on "Centre-station relations", held as part of the ongoing CPI(M) congress here, they alleged that unity in diversity is the nation's culture but Hindutva forces want to do away with that and convert India into a unitary state.

Pointing out several instances in which the Centre failed to meet Kerala's demands, Vijayan said: "What is most important is to democratise relations between the Centre and states. Instead of strengthening the federal system, the Union government is thwarting mega-projects; NITI Aayog is directly dealing with local self-governing bodies, keeping the state government in the dark."

Under the guise of developing backward districts, the Centre is directly funding projects and monitoring them,

Tamil Nadu Chief Minister M K Stalin and his Kerala counterpart Pinarayi Vijayan at a seminar conducted as part of the 23rd CPI(M) party congress in Kannur, Kerala, Saturday. *PTI*

Vijayan said. "The Centre is not ready to seek the state's opinion when they are entering into deals, which would have far-reaching consequences in a state," he said.

Not sparing the Congress, main opposition to the CPI(M)-led LDF government in Kerala, Vijayan said, "The Congress does not help the state win fair share of projects and funds from the Centre. The Congress-led UDF has 18 MPs in Lok Sabha, (but) we have not seen these MPs intervening for Kerala."

Referring to Union Home Minister and BJP leader Amit Shah's statement on Thursday that people from different states should speak in Hindi, and not English, Vijayan said an attempt to foist Hindi will not be allowed. "The Sangh Parivar feels if different languages are destroyed, the diversity of the nation can be eliminated. Our democracy involves diverse cultures and languages. The Constitution has given due importance to different languages. Any bid to foist Hindi would eliminate local languages and cultures," he said.

Indirectly slamming the BJP-led NDA, Stalin said efforts are on to eliminate diversity in the country. Stating that unity in diversity is India's culture, the DMK chief said, "If India has to be protected, states should be first guarded. The nation can be safeguarded only if states are shielded."

Stalin said architects of the Constitution did not envisage a unitary structure of power but stood for division of powers, as reflected in features such as the state, the Centre and concurrent lists. The Panchayati Raj Act bestowed local bodies with rights, he said, and emphasised that states and the nation will witness development only if villages grow.

He said Kerala and Tamil Nadu, the CPI(M) and the DMK, have every right to speak about the Centre-state relations. "An elected Communist government in Kerala was dismissed by the Centre in 1959. In Tamil Nadu, DMK governments were dismissed twice in similar manner, first in 1976 and then in 1991, using that Constitutional provision," he pointed out.

மாநிலங்களுக்கு அதிகாரம்

கேரளாவில் நடந்த மார்க்சிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாட்டில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் பேச்சு, மாநில அதிகாரங்கள் குறித்தான மகத்தான கருத்துக்களாகும். மாநிலங்கள் அதிக அதிகாரம் கொண்டவையாக மாற, அரசியலமைப்பு சட்டத்தை திருத்த வேண்டும் என அவர் முழக்கம் எழுப்பியுள்ளார். இந்திய அரசியலமைப்பு சட்டம் ஏழின் கீழ் மாநில அரசின் அதிகாரங்கள் ஏற்கனவே பட்டியலிடப்பட்டுள்ளன. சட்டம் ஒழுங்கு தொடங்கி, பொது சுகாதாரம், கனிமவளம், தொழில்துறை, மின்சாரம் என பல்வேறு துறைகள் மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்றன. ஆனால் ஒன்றிய அரசு கடந்த சில ஆண்டுகளாக மாநிலங்களின் உரிமைகளை பறிப்பதையே வழக்கமாக கொண்டுள்ளது.

கல்வியை மாநிலப்பட்டியலில் இருந்து பொதுப்பட்டியலுக்கு மாற்றியது மட்டுமின்றி, மாநில அரசுகள் அனைத்திற்கும் ஒன்றிய அரசிடம் கையேந்த வேண்டும் என்ற சூழலை உருவாக்கி வருகிறது. ஒரே நாடு - ஒரே தேர்தல், ஒரே நாடு - ஒரே மொழி, ஒரே நாடு ஒரே பண்பாடு, கலாச்சாரம் என ஒன்றிய அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு நடவடிக்கைகள் மாநிலங்களின் உரிமைகளுக்கு வேட்டு வைப்பதாகும். மாநிலத்தின் உரிமைகள் பறிக்கப்படும் போதெல்லாம் அதற்கான ஆவேச குரல்கள் தென்னகத்தில் இருந்தே எழும். மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்ற முழக்கத்தை திமுகவே எழுப்பி, செயல்படுத்தியும் காட்டியது. ,

கடந்த 8 ஆண்டுகளாக ஒன்றிய அரசு மாநில உரிமைகள் மீது மறைமுக தாக்குதல் தொடுத்து வருகிறது. அதற்கு எதிரான குரல்கள் தமிழகம், கேரளாவில் இருந்தே அதிகம் எழுகின்றன. இந்தியாவின் கூட்டாட்சி தத்துவம் காப்பாற்றப்பட வேண்டுமானால், மாநிலங்களும், அதன் உரிமைகளும் எப்போதுமே வலுவாக இருத்தல் அவசியம். ஜிஎஸ்டி என்ற பெயரில் மாநிலங்களின் வரி வருவாயை பறித்துக்கொண்டு, அதை திரும்ப தருவதில் ஒன்றிய அரசு தயக்கம் காட்டி வருகிறது. கிராமங்களில் கூட்டுறவு சங்கங்களை கூட தனது கட்டுப்பாட்டில் கொண்டு வர ஒன்றிய அரசு முயல்கிறது.

மக்களால் தேர்வு செய்யப்பட்ட அமைச்சரவை இருந்தாலும், அவர்கள் சட்டம் இயற்ற ஆளுநரை எதிர்பார்த்து காத்திருக்க வேண்டியதுள்ளது. தமிழகத்தில் நீட் மசோதாக்கள் உட்பட 11 மசோதாக்கள் ஆளுநர் வசம் சிக்கியிருப்பது, ஆட்டுக்கு தாடி எதற்கு என்ற கேள்வியை நாம் திரும்ப எழுப்ப வேண்டியதிருக்கிறது. மாநிலங்களின் பண்பாடு, கலாசாரத்தை மதிக்காமல், தான் தோன்றித்தனமான செயல்படுவதிலும் ஒன்றிய அரசுக்கு நிகர் எதுவுமில்லை. தனக்கு வேண்டிய மாநிலங்களுக்கு வெண்ணெயும், விரும்பாத மாநிலங்களுக்கு சுண்ணாம்பும் தருவதில் ஒன்றிய அரசு உறுதியாக உள்ளது.

இத்தகைய சிக்கல்களில் இருந்து மாநிலங்கள் விடுபட வேண்டுமெனில், அவற்றிற்கான அதிகாரங்கள் வரையறுக்கப்பட வேண்டும். அதற்கான அரசியலமைப்பு சட்டத்தை திருத்தவும் தயக்கம் காட்டக்கூடாது. தமிழக முதல்வரின் பேச்சுக்கள் மாநில சுயாட்சிக்கு கூடுதல் பலம் சேர்ப்பதாகும்.

TN'S MODEL TO AID FUND-STARVED STATES

The advisory council constituted by Tamil Nadu to develop a Federal Fiscal Model is unique in many aspects. The six-member council will study the fiscal powers of the state and the Union with special reference to GST, levy of cesses and surcharges by New Delhi and its impact on TN's finances. It will also look at institutional mechanisms that support GST, including constitution of the GST Tribunal, compliance issues faced by large industries and MSMEs, and other issues relevant to the federal fiscal relationship.

Though Chief Minister M K Stalin had openly declared an ideological war against the BJP-ruled Centre, attempts by the DMK to build a broader 'coalition of the willing' to take on it had borne only limited results due to two factors. First, though the GST Council is expected to be an independent body of states that would debate, discuss and decide matters on consensus, there is very little opposition to the Centre on tax devolution as most of the states are ruled by the BJP. Party kinship takes precedence over the rights of the states. Second, most opposition-ruled states find it politically disconcerting to share a common platform with the Congress because of the electoral implications it may have in their respective states where they are political adversaries.

Though the 15th Finance Commission has fixed the quantum of tax transfer to states from the divisible tax pool at 41% for 2021-22 to 2025-26, the actual devolution is expected to be much lower due to the pervasive cesses and surcharges. According to FM Palanivel Thiaga Rajan, cesses and surcharges as a proportion of the gross tax revenue of the Centre have tripled from 6.26% in 2010-11 to 19.9% in 2020-21. States are deprived of a share in approximately 20% of the revenue collected by the Union. The new model is surely a step in the DMK government's push to establish and assert the rights of states whose importance hitherto was couched in ideological moorings and political rhetoric. It may offer them a fiscal blueprint to assert their rights on tax issues and provide a legal platform to fight for financial independence.

இந்தி பேசாத மாநிலங்கள் இதை ஏற்கவே ஏற்காது!

மொழி உணர்வு என்பது எல்லோருக்கும் உயிர் உணர்வாகும். ஒவ்வொருவருக்கும் அந்த உணர்வு தாய்க்கு நிகரானது. அதனால்தான் பாரதிதாசன், 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்று பாடினார். மொழி உணர்வு தேன் கூடுபோன்றது. அதை தொடாமல் இருந்தால் சுவைமிகு தேனை பெறலாம். தொட்டால் ஆயிரம் தேனீக்கள் ஒன்றுபோல வந்து கொட்டிவிடும். எதை தமிழர்கள் விட்டுக்கொடுத்தாலும், விட்டுக்கொடுப்பார்களோ தவிர, தமிழ் மொழிக்கு தீங்கு வந்தால் அதை தாங்கிக்கொள்ளமாட்டார்கள். சுதந்திரம் பெற்றதற்கு முன்பே இந்தியாவில் இந்தி திணிப்பு முயற்சிகள் நடந்தன.

தந்தை பெரியார் 1938-ம் ஆண்டிலேயே மாபெரும் இந்தி எதிர்ப்பு போராட்டத்தை நடத்தி சிறை தண்டனை பெற்று, பெல்லாரி, கோயம்புத்தூர் சிறைச்சாலைகளில் பெரும் துன்பங்களை அனுபவித்தார். அதே காலக்கட்டத்தில் அறிஞர் அண்ணா மற்றும் ஏராளமானவர்கள் சிறை சென்றனர். 1938-ம் ஆண்டு ஜூன் 3-ந்தேதி தனது பிறந்தநாளன்று, 14 வயதிலேயே கருணாநிதி தமிழ்க்கொடி ஏந்தி மாணவர் படையுடன்

திருவாரூர் வீதிகளில் "ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள்! நீ தேடி வந்த கோழையுள்ள நாடு இது அல்லவே! வாருங்கள் எல்லோரும் நாட்டினரே! வந்திருக்கும் இந்திப் பேயை விரட்டித் திரும்பிடுவோம்!" என்று முழக்கமிட்டார். 1965-ம் ஆண்டில் இந்தியை அலுவல் மொழியாக மாற்றிவிடும் முயற்சி நடந்தபோது, எழுந்த போராட்டத்தால் அப்போது பிரதமராக இருந்த ஜவகர்லால் நேரு, இந்தி பேசாத மாநில மக்கள் விரும்பும் வரை ஆங்கிலமே இந்தியாவில் அலுவல் மொழியாக நீடிக்கும் என்று உறுதியளித்தார்.

இந்தி எதிர்ப்பு போராட்டத்தின் விளைவுதான் தமிழ்நாட்டில் 1967-ல் தி.மு.க. ஆட்சி அமைக்க வழிவகுத்தது. இத்தகைய சூழ்நிலையில், மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா, இப்போது திடீரென பல்வேறு மொழிகளை பேசும் மாநிலங்கள் தங்களுக்குள் தொடர்புகொள்ள ஆங்கிலத்துக்கு பதிலாக இந்தியை பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று கூறியிருப்பது பெரிய எதிர்ப்பை நாடு முழுவதும் கிளப்பியிருக்கிறது. மேலும் அவர், 'இந்தியை அலுவல் மொழியாக மாற்றுவதற்கான நேரம் வந்துவிட்டது' என்று கூறியிருக்கிறார். 'பல்வேறு மாநில மக்கள் பல்வேறு மொழிகளை பேசும் மக்கள் தங்களுக்குள் தொடர்புகொள்ளும்போது ஆங்கிலத்துக்கு பதிலாக இந்தியில் தொடர்புகொள்ளவேண்டும். மத்திய மந்திரி சபையின் 70 சதவீத நிகழ்ச்சி நிரல்கள் இந்தி மொழியிலேயே தயாரிக்கப்படுகின்றன. ஆங்கிலத்துக்கு மாற்றாகத்தான் இந்தியை மக்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். உள்ளூர் மொழிகளுக்கு மாற்றாக இந்தியை மக்கள் கருதக்கூடாது' என்று கூறியது பெரிய எதிர்ப்பை கிளப்பியுள்ளது. உடனடியாக தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், 'ஆங்கிலத்துக்கு பதிலாக இந்தியை பயன்படுத்துங்கள் என்று அமித்ஷா சொல்லுவது இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு வேட்டு வைக்கும் செயல். இந்தியாவின் பன்முகத்தன்மையை பழுதாக்கும் வேலை. ஒற்றை மொழி என்பது ஒற்றுமைக்கு உதவாது. ஒற்றைத்தன்மை என்பது ஒருமைப்பாட்டையும் உருவாக்காது' என்று அடுத்த சில நிமிடங்களில் உறுதிப்பட தெரிவித்தார்.

கர்நாடகாவில் காங்கிரஸ் மூத்த தலைவரும், முன்னாள் முதல்-மந்திரியுமான சித்தராமையா, 'இந்தியை தேசிய மொழி ஆக்குவதற்கு ஒருபோதும் விடமாட்டோம். பன்முகத்தன்மையே நம்முடைய தேசத்தை ஒருங்கிணைத்துள்ளது' என்று கூறியிருக்கிறார். இதே உணர்வில் இருக்கும் இந்தி பேசாத மாநிலங்கள் இந்தி தொடர்பு மொழி என்பதை ஏற்கவே ஏற்காது. இந்தி என்பது தாய்மொழியாம் அன்னை தமிழ் மொழி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, குஜராத்தி போன்ற மாநில மொழிகள் போல ஒரு சில மாநிலங்களில் பேசும் மொழிதான். இதை அனைத்து மாநிலங்களும் தொடர்பு மொழியாக கொள்ளவேண்டும் என்பது நிச்சயமாக ஏற்புடையதல்ல. அப்படி மொழியின் சிறப்பு வைத்து தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்றால், உலகிலேயே மூத்த மொழியாம் தமிழ் மொழியை எல்லோரும் கற்று அதையே அலுவல் மொழியாக, தொடர்பு மொழியாக வைத்துக்கொள்வதில் என்ன தவறு ஏற்பட்டுவிடும்? என்பது தமிழறிஞர்களின் கேள்வியாகும்.

மாலை முரசு
12-April-2022

வரவேற்கத்தக்க தீர்மானம்!

மத்திய அரசின் கீழ் இயங்கும் பல்கலைக்கழக மானியக்குழு 2022–2023–ஆம் கல்வி ஆண்டு முதல் மானியக்குழுவின் நிதி உதவியுடன் இயங்கும் அனைத்து மத்திய பல்கலைக்கழகங்களிலும் இளங்கலை உள்ளிட்ட பல்வேறு படிப்புகளுக்கான சேர்க்கைகள் தேசிய தேர்வு முகமை நடத்தும் பொது பல்கலைக்கழக நுழைவுத்தேர்வு மூலம் மட்டுமே நடைபெறும் என்று அறிவித்துள்ளது. 12–ஆம் வகுப்பு தேர்வில் மாணவர்கள் பெறும் மதிப்பெண்களை கணக்கில் கொள்ளாமல் பொது பல்கலைக்கழக நுழைவுத் தேர்வில் மாணவர்கள் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் மட்டுமே சேர்க்கை நடைபெறும். மாநிலப் பல்கலைக்கழகங்கள், தனியார் மற்றும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் விரும்பினால் மாணவர்கள் சேர்க்கையை நடத்திக்கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளது.

இந்த பொது நுழைவுத்தேர்வு திட்டத்தை 2022–2023–ஆம் கல்வி ஆண்டு முதல் செயல்படுத்த மத்திய அரசு திட்டமிட்டிருக்கிறது. இந்த நுழைவுத்தேர்வு மதிப்பெண்களை மாநில பல்கலைக்கழகங்கள், நிகர்நிலை பல்கலைக்கழகங்கள், தனியார் பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் கூட இளங்கலை படிப்புகளில் மாணவர் சேர்க்கைக்கு பயன்படுத்திக்கொள்ளலாம் என மத்திய அரசின் கீழ் இயங்கக்கூடிய மானியக்குழு வெளியிட்டுள்ளது. 12–ஆம் வகுப்பு தேர்வில் மாணவர்கள் பெறும் மதிப்பெண்களை கணக்கில் கொள்ளாமல் பொதுப்பல்கலைக்கழக நுழைவுத் தேர்வில் மாணவர்கள் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் மட்டுமே சேர்க்கை நடைபெறும் எனவும், மாநிலப் பல்கலைக்கழகங்கள், தனியார் மற்றும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் விரும்பினால் மாணவர்கள் சேர்க்கையை நடத்திக்கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளது.

தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்குழு பாடதிட்டத்தை அடிப்படையாகக்கொண்ட எந்தவொரு நுழைவுத்தேர்வும் நாடு முழுவதும் உள்ள பல்வேறு மாநிலப் பாடத்திட்டங்களில் படித்த மாணவர்கள் அனைவருக்கும் சமமான வாய்ப்பினை வழங்கிடாது என்பதை தெளிவாகவே உணரலாம். பெரும்பாலான மாநிலங்களில்மொத்தமாணவர்களில்80சதவீதத்திற்கும் அதிகமான மாணவர்கள் மாநிலப் பாடத்திட்டங்களில் பயின்று வருபவர்கள். இவர்கள் பெரும்பாலும் விளிம்பு நிலை பிரிவினரை சேர்ந்தவர்கள். எனவே தேசிய பாடத்திட்டத்தின் அடிப்படையிலான நுழைவுத் தேர்வு தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கையை வெகுவாகக்குறைக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடம் இருக்காது.

இந்த நுழைவுத் தேர்வும் நீட் தேர்வைப் போன்றே நாடு முழுவதும் உள்ள பல்வேறு கல்வி முறைகளை ஓரங்கட்டி பள்ளிகளில்நீண்டகாலக்கற்றல்முறைகளைவெகுவாகக் குறைத்து மதிப்பிட வழிவகுப்பதோடு, மாணவர்கள் தங்களது நுழைவுத் தேர்வு மதிப்பெண்களை அதிகரிக்க பயிற்சி மையங்களை சார்ந்திருக்கும் ஒரு சூழலை ஏற்படுத்திவிடும் என்பதில் சந்தேகம் இல்லை. மேலும் மாணவர்களுக்கான பயிற்சி மையங்கள் புற்றீசலைப் போன்று வளர மட்டுமே இது சாதகமாக அமையும். இவ்வாறு ஒரு நுழைவுத் தேர்வினை செயல்முறைக்கு கொண்டு வருவதால் பள்ளிக்கல்வியோடு பயிற்சி மையங்களையும் நாடும் இளைய சமுதாயத்தினர் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாவார்கள் என்பதையும் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

மத்தியப் பல்கலைக்கழக மாணவர் சேர்க்கைக்கு பொது நுழைவுத் தேர்வு மாணவர்கள் மீது மேலும் சுமையை ஏற்றி வைப்பதாகவே அமையும். மேலும் மாநில அரசுகளின் உரிமையினை நிலைநாட்டும் பொருட்டு மத்திய பல்கலைக்கழகங்களில் பல்வேறு படிப்புகளில் சேர்வதற்காக நடத்தவிருக்கும் பொதுப்பல்கலைக்கழக நுழைவுத் தேர்வினை ரத்து செய்யக்கோரும் தனித்தீர்மானத்தை சட்டமன்றத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்தார். இந்த தீர்மானம் பா.ஜ.க.வை தவிர்த்து மற்ற கட்சிகளைச் சார்ந்த பிரதிநிதிகளும், தலைவர்களும் வரவேற்றுப் பேசினர். இந்தத் தீர்மானம் தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வினை பிரதிபலிப்பதாக இருப்பதால் இந்த பொது நுழைவுத் தேர்வினை ரத்து செய்திட வேண்டும் என்று தமிழக அரசு சார்பில் மத்திய அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்தார். மேலும் இந்த தீர்மானத்தை உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இதையடுத்து முதல்வர் கொண்டுவந்த தனித்தீர்மானம் சட்டசபையில் நிறைவேறியது.

THE HINDU
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

12-April-2022

STATE OF PLAY

March to national politics

There have been several efforts to project M.K. Stalin as a prime ministerial candidate

T. RAMAKRISHAN

Twenty-five years ago, in Tiruvarur, the then Tamil Nadu Chief Minister and DMK president M. Karunanidhi was asked by a journalist why he was not aspiring for the post of Prime Minister. He replied: "I know my limitations." The question was raised against the backdrop of a serious bid made by the founder of the Tamil Maanila Congress (Moopanar), G.K. Moopanar, to become Prime Minister following the resignation of H.D. Deve Gowda as the head of the United Front regime. Today, concerted efforts are on to project Karunanidhi's son and Chief Minister M. K. Stalin as a prime ministerial candidate.



In the last couple of months, many events can be cited as attempts at promoting Mr. Stalin to the national scene. In early February, the Chief Minister wrote to leaders of almost three dozen parties across the country, asking them to nominate their representatives to the All India Federation of Social Justice. Later that month, Kerala Chief Minister Pinarayi Vijayan, former Congress president Rahul Gandhi, Rashtriya Janata Dal leader Tejashwi Yadav, and former Chief Minister of Jammu and Kashmir Omar Abdullah came to Chennai to participate in the launch of the first volume of Mr. Stalin's autobiography, *Ungalil Oruvan* (One Among You). A month later, in New Delhi, leaders of various non-BJP Opposition parties came together during the inauguration of the DMK's office. Mr. Stalin's condemnation of Union Home Minister Amit Shah's observations on the Hindi language issue and his participation at a seminar held last week during the CPI(M)'s party congress in Kannur were also viewed as part of his march towards national politics.

It is rather uncommon for a leader of Tamil Nadu to get national prominence. Other than Moopanar, Congress leader K. Kamaraj and AIADMK leader J. Jayalalithaa were talked about as prime ministerial material. While Kamaraj was content playing the role of 'kingmaker' in 1964 and 1966, Jayalalithaa, despite her turning the 2014 Lok Sabha elections into a 'Lady versus Modi' fight, and her party bagging 37 seats out of 39 in Tamil Nadu, did not make it.

In the last three years, Mr. Stalin has tasted success twice as a leader of a coalition. In the 2019 Lok Sabha elections, when he proposed the name of Mr. Gandhi for the post of Prime Minister, the DMK-led front captured 39 constituencies, including one in Puducherry. Two years later, it got a two-thirds majority in the Tamil Nadu Assembly. After capturing power in the State, Mr. Stalin has continued to criticise the BJP on a host of issues. In the last 11 months, he has been particularly highlighting the importance of social justice, greater autonomy for the States and the Dravidian model of governance. Perhaps conscious of the criticism that Dravidian majors do not seek industrial investment in the way parties in other States do, Mr. Stalin has shown keenness in attracting investments in a big way. His visit to the UAE is the most recent indication of this. After he became Chief Minister in May 2021, the State government signed 131 MoUs involving an investment of ₹69,375 crore. Mr. Stalin also announced that the State would hold the next Global Investors' Meet by 2023 end, the previous two editions of which were held during the AIADMK regime. There are signs of his government willing to bite the bullet in economy-related matters, even as Mr. Stalin has been keeping all his political allies together. Though it is too early to talk about the compositions of political formations for the 2024 general polls, Mr. Stalin, according to DMK MP R.S. Bharathi, wants to consolidate all the Opposition parties to defeat the BJP. Regardless of the outcome of the efforts to promote Mr. Stalin as the next Prime Minister, what is certain is that interesting times are ahead.

ramakrishnan.t@thehindu.co.in

the pioneer

12-April-2022

Stalin's TN is in a league of its own?

KUMAR CHELLAPPAN

Going by his arbitrary demands list to the Centre, it seems that MK Stalin doesn't consider Tamil Nadu to be part of the Indian Union

Tamil Nadu Chief Minister MK Stalin was in New Delhi last week for shopping, making friends and influencing people. Fresh after holidaying in petro-rich West Asian countries, Stalin carried a shopping list in the form of a memorandum to the Prime Minister. The Thalapathi (Tamil for Commander) wanted the Centre to provide essential commodities and life-saving drugs to Sri Lankan Tamils, who have been severely hit by an economic crisis. He also wanted the Modi administration to ensure political and civil rights to Eelam Tamils.

The retrieval of Katchachatheev islet, which was handed over to Sri Lanka by former Prime Minister Indira Gandhi, also figures in the memorandum. The islet's transfer saw the international maritime boundary between the countries undergo a change. The treaty had stipulated that Indian fishermen could use Katchachatheev to take rest and dry their fishing nets. But Tamil Nadu fishermen started misusing the islet by fishing (bottom trawling) which made the Sri Lankan fishers furious.

Stalin's demand that the Centre provide free medical and food aid to Tamils in north and northeast Sri Lanka brought back memories of Operation Poomalai (Flower Garland in Tamil). On June 4, 1987, a fleet of the IAF's AN-31 military transport aircraft airdropped food and medicines in the Jaffna peninsula, much to the anguish of Sri Lanka. Tormented by terrorism unleashed by the Liberation Tigers of Tamil Eelam (LTTE), Sri Lanka's defence forces had laid siege to Jaffna peninsula, the stronghold of LTTE. Colombo had declared a total blockade over Jaffna to flush out the terrorists. Then Prime Minister Rajiv Gandhi ordered Operation Poomalai to mark India's solidarity with the island nation's Tamil population. The Sri Lankan Government accused India of violating its sovereignty. The incident exposed India's links with LTTE, which was out to disintegrate the island nation. The relations between New Delhi and Colombo plunged to an abyss and old mutual trust is yet to be restored. Is the Tamil Nadu leader on a mission to make the Centre undertake another misadventure?

When the LTTE took control of Elephant Pass, the narrow route that links mainland Sri Lanka to Jaffna, the Indian Government didn't do anything to help Colombo. A Sri Lankan presidential aide had told this reporter that at all critical moments, it was either Pakistan or China that offered military hardware free of cost to the island nation.

The DMK's dream project of a separate Dravidian Nation incorporating Tamil Nadu, the north and northeast of Sri Lanka is still on agenda. If more southern States join the DMK, it would make Stalin happy. Though the Katchachatheev islet was ceded to Sri Lanka in 1976, neither the DMK nor M Karunanidhi, the party's president till he breathed his last in 2017, spoke against it. It was Jayalalithaa who approached the Supreme Court in 2011 to challenge the Centre's decision and, not to be left behind, Karunanidhi too filed a petition. Mukul Rohatgi, then attorney general of India, told then Chief Justice RM Lodha on August 26, 2014, that Katchachatheev could be retrieved from Sri Lanka only by waging a war! The Indian Coast Guard is on record telling the Madras High Court that there was no instance of Tamil Nadu fishermen getting arrested by Sri Lankan Navy from the Indian side of the maritime boundary.

> THE ESTABLISHED POLICY OF BROTHERHOOD AMONG THE UNIFORMED FRATERNITY HAS TAKEN A BEATING BECAUSE OF THE POLICIES BEING PURSUED BY REGIONAL FORCES LIKE THE DMK AND AIADMK

These two instances prove the fallacy of the DMK's politics over Sri Lanka issues. Members of the Sri Lankan defence forces are not allowed in Indian defence establishments in Tamil Nadu. Cadets and officers from Sri Lankan Army, Navy or Air Force are not welcome in elite establishments like Officers Training Academy, Chennai, Flight Instructors Training Institute at Tambaram and the Defence Services Staff College, Wellington. The brotherhood among the uniformed fraternity has taken a beating because of the policies being pursued by regional forces like DMK and AIADMK. "The forces-to-forces ties are a must for mutual security and safety," said Captain Hariharan Balakrishnan of the Indian Navy.

The DMK's insistence that the Union Government should go ahead with the construction of the Sethusamudram Shipping Channel through Palk Bay itself was enmeshed in mysteries. Only ships with 25,000 Dead Weight Tonnage could sail through this narrow channel once it is built but such ships have become museum pieces as shippers are interested only in super carriers with 1.5 lakh tonne DWT or more. Ships with 25,000 DWT could be used only for gun-running and drug trafficking, according to veteran mariners.

Yet another demand by Stalin was for doing away with the National Eligibility Cum Entrance Test (NEET) for admission to undergraduate and postgraduate courses in medical and dental colleges in Tamil Nadu. The NEET was introduced by the Supreme Court's Constitution Bench following the decision of the UPA Government in which the DMK was the second largest constituent. Nobody has bothered to ask Stalin what is so unique about Tamil Nadu that the State be excluded from the ambit of NEET?

Is the DMK trying to convert Tamil Nadu into a Kashmir of South? It has asked the Prime Minister not to accord approval for Karnataka's proposal to build the Mekedatu dam deep inside that State across the Cauvery. Tamil Nadu also wants the Centre to not heed Kerala's wish to build a new dam in place of the 126-year-old Mullaperiyar Dam. If the existing dam bursts, 35 lakh people across five southern districts of Kerala would perish.

(The writer is a senior journalist with The Pioneer. The views expressed are personal.)

ஒன்றிய அரசின் இடையூறுகளை மீறி

முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏராளமான மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்துகிறார்

ஈவிகேஎஸ் இளங்கோவன் பாராட்டு

சிவகங்கை, ஏப்.13-

ஒன்றிய அரசு பல இடையூறுகளை கொடுத்தாலும் அதையும் மீறி முதல்வர் ஏராளமான மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாக ஈவிகேஎஸ் இளங்கோவன் தெரிவித்தார்.

தமிழக காங்கிரஸ் முன்னாள் தலைவர் ஈவிகேஎஸ். இளங்கோவன் சிவகங்கையில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது :

ஒன்றிய அரசு பல இடையூறுகளை கொடுத்தாலும் அதையும் மீறி முதல்வர் மு.க.ஸ்டாலின், ஏராளமான மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக பஸ்களில் பெண்களுக்கு இலவச பயணம், படிக்கும் பெண்களுக்கு ரூ.1,000 போன்ற நல்ல பல திட்டங்களை அறிவித்து அதை செயல்படுத்தியும் வருகிறார். தமிழகத்தில் நல்ல முறையில் ஆட்சி நடைபெறுகிறது. கிராமங்களிலும், நகரங்களிலும் வரியை உயர்த்த வேண்டும். அப்போதுதான் நகர ஊராட்சி மேம்பாட்டிற்கு நிதி அளிக்க முடியும் என்ற ஒன்றிய அரசின் அறிவிப்புதான் சொத்து வரி உயர்வதற்கு காரணம். பெட்ரோல், டீசல் விலையை அளவுக்கு மீறி ஒன்றிய அரசு உயர்த்தி கொண்டே இருக்கிறது. அதிக லாபம் சம்பாதிக்கலாம் என நினைக்காமல் பெட்ரோல் விலையை ஒரு அளவுக்கு மேல் உயர்த்த கூடாது என்ற உறுதியை ஒன்றிய அரசு தெரிவிக்க வேண்டும்.

தமிழக அரசுதான் வீட்டருக்கு ரூ.3 வரை பெட்ரோல், டீசல் விலையை குறைத்தது. மோடி, அமித்ஷாவின் பேச்சு ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே கலாச்சாரம், ஒரே பண்பாடு, ஒரே விதமான சாப்பாடு என்ற அடிப்படையில் உள்ளது. இவர்கள் இப்படியே பேசி அதை செயல்படுத்த முயல்வார்களேயானால், இருவரின் கொள்கையால் சோவியத் ரஷ்யா போல் இந்திய மாநிலங்களும் பல நாடுகளாக பிரியும் அபாயம் இருக்கிறது. இலங்கையிலே பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டது போல், இந்திய பொருளாதாரம் வீழ்ச்சி அடையும் நிலை ஏற்படும்.

இவ்வாறு கூறினார்.

தமிழ் முரசு

13-April-2022

வாரிசு சான்றிதழ் கோரிய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் 1000 எழுத்துகளில் காரணம் தெரிவிக்கப்படும்

அரசின் அறிவிப்புக்கு ஐகோர்ட் பாராட்டு

சென்னை, ஏப். 13-

சேலத்தை சேர்ந்த சின்னப்பையன் என்பவர் கடந்த 2021ல் இறந்தபிறகு வாரிசு சான்றிதழ் கோரி அரசின் இ-சேவை மூலம் அவரது தாயார் சின்னப்பிள்ளை என்பவர் அளித்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

இதையடுத்து, வாரிசு சான்றிதழ் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் அவர் வழக்கு தொடர்ந்திருந்தார். அவரது மனுவில், விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்களை தெளிவாக அளிக்கவில்லை. வட்டாட்சியர் பெயரில் வழங்கப்பட்ட உத்தரவில் 'விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது' என்று மட்டுமே இருந்தது.

நேரடியாக வாரிசு சான்றிதழ் கோரி விண்ணப்பிக்கும்போது, வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை ஆணையரின் 2019 ஆண்டு சுற்றறிக்கை அடிப்படையில், வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் மேற்கொள்ளும் நேரடி விசாரணையில் அளிக்கப்படும் அறிக்கை ஆகியவற்றை பரிசீலனை செய்து வட்டாட்சியர்கள் சான்றிதழ் வழங்குவார்கள். விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் குறிப்பிட்ட காரணங்களுக்காக சான்றிதழ் வழங்கப்படமாட்டாது என்று விளக்கமாக அளிக்கப்படும். தற்போதுள்ள இ- சேவை முறையில் முழுமையாக எந்த காரணமும் தெரிவிக்கப்படுவதில்லை என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி அனிதா சுமந்த் முன்பு கடந்த முறை விசாரணைக்கு வந்தபோது, இந்த நடைமுறைச் சிக்கலை தமிழக அரசு சரி செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தார்.

இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, தமிழக அரசின் வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை ஆணையர் சார்பில் அரசு வழக்கறிஞர் டி.என்.சி. கௌசிக் ஆஜராகி அறிக்கை ஒன்றை தாக்கல் செய்தார். அதில், தமிழ்நாடு அரசு இ-சேவை மூலமாக வாரிசு சான்றிதழ்கள் கேட்டு விண்ணப்பிக்க மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கும்போது அதற்கான காரணங்களை 100 எழுத்துகளில் தெரிவிக்க வேண்டுமென்ற வரையறை 1000 எழுத்துக்கள் என மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை உடனடியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்று கூறப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையை ஏற்று வழக்கை முடித்துவைத்த நீதிபதி அனிதா சுமந்த், நீதிமன்ற கருத்தினை உடனடியாக பரிசீலனை செய்து விரைந்து நடவடிக்கை எடுத்து மக்கள் பயனடையும் வகையில் நடவடிக்கை எடுத்த தமிழக அரசின் நடவடிக்கைக்கு பாராட்டுகள் என்று தெரிவித்தார்.

தினகரன்
14-April-2022

நெரிசலுக்கு தீர்வு

தலைநகர் சென்னையில் திமுக ஆட்சியில் அமைக்கப்பட்ட பல்வேறு பாலங்களால், பெரும் போக்குவரத்து நெரிசல் தவிர்க்கப்பட்டுள்ளது. இதை மனதில் கொண்டு சட்டப்பேரவையில் சாலைகள் சீரமைப்புக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், மக்கள் பயன்பாடு, வணிக நலனை கருத்தில் கொண்டு புதிய சாலைத்திட்டங்களும் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மானிய கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்டுள்ளன. அறிவிப்பில், செங்கல்பட்டு நகரத்தை தூத்துக்குடி துறைமுகத்துடன் இணைக்கும் சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றுவதற்கான திட்டம் தென்தமிழக மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இதன்மூலம் வன்முறை சம்பவங்கள் அதிகம் நடக்கும் தென்மாவட்டங்களில் தொழிற்சாலைகள் அதிகரித்து தொழில்வளம் மேம்படும் வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

கடந்த அதிமுக ஆட்சியில் தேர்தல் நடத்தை விதிகளை மீறி, 3,200 சாலைகள் புனரமைப்பு பணிகளுக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டதாக புகார் எழுந்தது. மேலும், ஏற்கனவே சாலை சீரமைப்பு என்ற பெயரில், தரமாக உள்ள சாலைகளையே புனரமைப்பு செய்வதாகவும், பெயரளவில் பணிகளை மேற்கொண்டதாக கணக்கு காட்டியதாகவும் பல்வேறு மோசடி புகார்கள் எழுந்தன. இதுதொடர்பாக 660 சாலை ஒப்பந்தங்களை சென்னை மாநகராட்சி கடந்தாண்டு ரத்து செய்தது குறிப்பிடத்தக்கது. அதிமுக ஆட்சியில் நடந்த சாலை முறைகேடு ஒப்பந்தம் தொடர்பாக விசாரணையும் நடத்தப்பட்டு வருகிறது.

தற்போதைய திமுக ஆட்சியில் மக்கள் நலன், போக்குவரத்து நெரிசல் குறைப்பு, வணிக நலன்களை கருத்தில் கொண்டு, நடப்பாண்டில் மட்டும் ரூ.2,300 கோடி மதிப்பீட்டில் 600 கிமீ சாலைகளை இருவழித்தடமாகவும், 150 கிமீ சாலைகளை நான்கு வழிச்சாலையாகவும் விரிவாக்கம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் கிராமங்கள், சிறு, பெரு நகர மக்கள் பயனடைவார்கள்.

மழைக்காலங்களில் தரைப்பாலங்களின் நிலைமை கவலைக்குரியதாகி விடுகிறது. வெள்ளத்தில் மூழ்கி அடித்துச் செல்வதும், உடைவதும் தொடர்கிறது. இதனை கருத்தில் கொண்டு ரூ.1,105 கோடி மதிப்பீட்டில், 435 தரைப்பாலங்களை உயர்மட்ட பாலங்களாக கட்டி முடிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், 8 மாவட்டங்களில் ரயில்வே மேம்பாலம் அமைக்கப்பட உள்ளது. மேலும், ஆற்றுப்பாலங்களும் கட்டப்பட உள்ளன. பிரபல சுற்றுலாத்தலமான கொடைக்கானலில் சீசன் மற்றும் விடுமுறை காலங்களில் போக்குவரத்து நெரிசல் தொடர்கதையாக உள்ளது. இதை மனதில் கொண்டு மலைச்சாலைகளை சீரமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் சுற்றுலாத்துறை மேம்படும். மேலும், பாரம்பரிய கட்டிடங்கள் புனரமைப்பு, வரலாற்று சிறப்புமிக்க கட்டிடங்கள் புனரமைப்புக்காகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது.

கல்வி, வேலைவாய்ப்பு, கிராம மற்றும் நகர்ப்புற மேம்பாடு உட்பட பல்வேறு நலத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருவதன் மூலம், தமிழகத்தை வளர்ச்சிப்பாதையை நோக்கி பயணிக்க வைக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

தினகரன்

14-April-2022

இ-சேவை முறையில் வாரிசு சான்று விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால்

1000 எழுத்துகளில் அதற்கான காரணம் தெரிவிக்கும் சுற்றறிக்கை

அரசின் அறிவிப்புக்கு ஐகோர்ட் பாராட்டு

சென்னை, ஏப்.14: சேலத்தை சேர்ந்த சின்னப்பையன் என்பவர் கடந்த 202ல் இறந்த பிறகு வாரிசு சான்றிதழ் கோரி அரசின் இ-சேவை மூலம் அவரது தாயார் சின்னப்பிள்ளை என்பவர் அளித்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

இதையடுத்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் அவர் வழக்கு தொடர்ந்திருந்தார். அவரது மனுவில், விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்களை தெளிவாக அளிக்கவில்லை. நேரடியாக வாரிசு சான்றிதழ் கோரி விண்ணப்பிக்கும்போது, வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை ஆணையரின் 2019ம் ஆண்டு சுற்றறிக்கை அடிப்படையில், வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் மேற்கொள்ளும் நேரடி விசாரணையில் அளிக்கப்படும் அறிக்கை ஆகியவற்றை பரிசீலனை செய்து வட்டாட்சியர்கள் சான்றிதழ் வழங்குவார்கள். விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் குறிப்பிட்ட காரணங்களுக்காக சான்றிதழ் வழங்கப்பட மாட்டாது என்று விளக்கமாக அளிக்கப்படும். தற்போதுள்ள இ-சேவை முறையில் முழுமையாக எந்த காரணமும் தெரிவிக்கப்படுவதில்லை என்று கூறியிருந்தார். இந்த வழக்கு நீதிபதி அனிதா சுமந்த் முன்பு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, தமிழக அரசின் வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை ஆணையர் சார்பில் அரசு வழக்கறிஞர் டி.என்.சி. கவுசிக் ஆஜராகி அறிக்கை ஒன்றை தாக்கல் செய்தார்.

அதில், இ-சேவை மூலமாக வாரிசு சான்றிதழ்கள் கேட்டு விண்ணப்பிக்கும் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கும்போது அதற்கான காரணங்களை 100 எழுத்துகளில் தெரிவிக்க வேண்டுமென்ற வரையறை 1000 எழுத்துகள் என மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை உடனடியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்று கூறப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையை ஏற்று வழக்கை முடித்து வைத்த நீதிபதி அனிதா சுமந்த், நீதிமன்ற கருத்தினை உடனடியாக பரிசீலனை செய்து விரைந்து நடவடிக்கை எடுத்து மக்கள் பயனடையும் வகையில் நடவடிக்கை எடுத்த தமிழக அரசின் நடவடிக்கைக்கு பாராட்டுகள் என தெரிவித்தார்.

தேநீர் விருந்து புறக்கணிப்பு

நீட் தேர்வில் இருந்து தமிழகத்துக்கு விலக்கு அளிக்க தமிழக அரசு, ஒன்றிய அரசை வலியுறுத்தி வருகிறது. மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக ஆட்சி தமிழகத்தில் பொறுப்பேற்ற பிறகு சட்டமன்றத்தில் நீட் தேர்வில் இருந்து தமிழகத்துக்கு விலக்க அளிக்க கூடிய மசோதா நிறைவேற்றப்பட்டு. அப்போது கவர்னராக இருந்த பன்வாரிலால் புரோகித்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது. ஆனால், ஆளுநர் மாளிகை அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்தது. இந்நிலையில், தமிழகத்தின் புதிய ஆளுநராக ஆர்.என்.ரவி நியமிக்கப்பட்டார். இவர், நீட் விலக்கு மசோதா கிராமப்புற மாணவர்களின் நலனுக்கு எதிரானது என்று மறுபரிசிலனை செய்ய கூறி, சபாநாயகருக்கு திருப்பி அனுப்பினார். இதற்கு தமிழக அரசியல் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

இதையடுத்து அனைத்துக்கட்சி தலைவர்களுடன் ஆலோசனை நடத்திய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், கடந்த பிப்ரவரி மாதம் சிறப்பு பேரவை கூட்டம் கூட்டி மீண்டும் நீட் விலக்கு மசோதாவை ஒருமித்த மனதுடன் நிறைவேற்றி ஆளுநருக்கு உடனடியாக அனுப்பிவைத்தார்.

தமிழக அரசு இரண்டாவது முறையாக அனுப்பிவைத்த நீட் விலக்கு மசோதாவையும் ஜனாதிபதியின் ஒப்புதலுக்கு அனுப்பிவைக்காமல் ஆளுநர் ஆர்.என்.ரவி காலதாமதம் செய்து வருகிறார். இது குறித்து, தமிழக முதல்வர் ஆளுநரை நேரில் சந்தித்து வலியுறுத்தியும் ஆளுநர் அலட்சியமாகவே உள்ளார். தமிழக திமுக எம்.பிக்கள் நாடாளுமன்றத்தில் இது குறித்து கேள்வி எழுப்பி போராட்டத்திலும் ஈடுபட்டனர். தமிழக ஆளுநரை திரும்ப பெற வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

இந்நிலையில், தமிழ் புத்தாண்டையொட்டி ராஜ்பவனில் தேநீர் விருந்துக்கு அனைத்து அரசியல் கட்சி தலைவர்களுக்கும் ஆளுநர் அழைப்பு விடுத்தார். தமிழக மாணவர்கள் நலனில் அக்கறையின்றி நீட் விலக்கு மசோதாவை ஜனாதிபதி ஒப்புதலுக்கு அனுப்பிவைக்க காலம் தாழ்த்தி வரும் ஆளுநரின் நடவடிக்கையை கண்டித்து அவரது தேநீர் விருந்தை புறக்கணிப்பதாக, தமிழக அரசு அறிவித்துள்ளது. இதே போன்று கம்யூனிஸ்ட் கட்சிகள், விடுதலை சிறுத்தைகள், மனித நேய மக்கள் கட்சியும் புறக்கணித்துள்ளது.

தமிழகத்துக்கு ஆளுநராக நியமிக்கப்படுபவர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஒன்றிணைந்து நிறைவேற்றி அனுப்பியுள்ள சட்டமசோதாவை அலட்சியப்படுத்துவது கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிரானது. நீட் மசோதா மட்டுமல்ல, இன்னும் பல மசோதாக்கள் மீது ஆளுநர் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் தமிழக வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போட்டு வருவது குறிப்பிடத்தக்கது. ஆளுநர் பொறுப்பில் இருப்பவர்கள் கட்சி வேறுபாடுகளை கடந்து மாநில வளர்ச்சியில் பங்கேற்க வேண்டும். ஆளும் கட்சியுடன் ஒன்றிணைந்து மாநில முன்னேற்றத்துக்கு துணை நிற்க வேண்டும். ஆனால், தமிழக ஆளுநர் செய்துவரும் அலட்சியமும், அரசியலும் தமிழக அரசை அவமானப்படுத்தும் வகையில் இருப்பதால் அவரது தேநீர் விருந்து அழைப்பை தமிழக அரசு புறக்கணித்ததில் தவறு ஒன்றும் இல்லை.

மாலை முரசு

15-April-2022

வரவேற்கத்தக்கது சமத்துவ நாள்!

பெரியாரின் பிறந்தநாளான செப்டம்பர் 17–ஆம் தேதி தமிழகத்தின் சமூக நீதி நாளாக கொண்டாடப்படும் என்று சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். அதேபோன்று டாக்டர் அம்பேத்கர் பிறந்தநாளான ஏப்.14–ஆம் தேதி ஆண்டுதோறும் சமத்துவ நாளாக கொண்டாடப்படும் என்று அறிவித்திருக்கிறார். பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கர் என்றும் பாபாசாகேப் அம்பேத்கர் என்றும் அழைக்கப்படுபவர் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர். இந்திய விடுதலைக்குப் பின்னர் நாட்டின் முதலாவது சட்ட அமைச்சராக பதவியேற்றவர். உயர்கல்வி பெறுவதற்காக அமெரிக்கா சென்ற முதல் இந்தியர். பட்டியல் சாதி மக்களுக்கென கழகம் ஒன்றைத் தொடங்கியவர். பரோடா மன்னருடன் இணைந்து தீண்டாமை ஒழியப் போராடியவர். பொருளாதாரம், அரசியல், வரலாறு, தத்துவம், சட்டம் ஆகிய துறைகளில் தேர்ந்தவர். ஆசிரியராகவும், இதழாளராகவும், எழுத்தாளராகவும், சமூகநீதிப் புரட்சியாளராகவும் விளங்கியவர்.

நவ புத்தகம் என்ற பெயரில் பல ஆயிரக்கணக்கான பட்டியல்சாதிமக்களைபுத்தசமயத்தைதழுவச்செய்தவர். இவை யாவற்றுக்கும் மேலாக இந்திய அரசியலமைப்புச் சாசனத்தை வரைவதற்கான குழுவின் தலைவராகவும் பொறுப்பேற்றவர். நாடு முன்னேற்ற பாதையில் செல்வதற்கு இந்திய அரசியல் சட்டங்கள் மிகவும் முக்கியம் என உணரவைத்த முதல் தலைவர் அம்பேத்கர். தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் போராடிய பல தலைவர்களில் அம்பேத்கர் மிகவும் முக்கிய தலைவர். தீண்டாமை என்ற கொடிய நோயை ஒழித்து அனைவரும் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்று நினைத்த அம்பேத்கர் ஒரு மராத்திய குடும்பத்தைச் சேர்ந்தவர்.

இன்றைய மத்திய பிரதேசத்தில் உள்ள மாவ் எனும் ஊரில் 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் தேதி பிறந்தவர். தந்தை பெயர் ராம்ஜி மாலோஜி சக்பால். தாயார் பெயர் பீமாபாய் ஆகும். தந்தை ராணுவ பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார். அம்பேத்கர் சாத்தாரா என்ற பள்ளியில் தனது கல்வியைத் தொடங்கினார். பள்ளியில் படிக்கும்போது தாழ்த்தப்பட்ட பிரிவைச் சார்ந்தவர் என்ற காரணத்திற்காக பள்ளியில் உள்ள மற்ற மாணவர்களுடன் ஒன்றாக அமரக்கூடாது. விளையாடக்கூடாது. அனைவரும் நீர் அருந்தும் பாத்திரத்தில் நீர் குடிக்கக்கூடாது. தனி மண்பானையில் தண்ணீர் குடிக்க வேண்டும் என பல இன்னல்களை சந்தித்து தனது ஆரம்பக் கல்வியை முடித்தார்.

அம்பேத்கர் பள்ளியில் படிக்கும்போது மகாதேவ அம்பேத்கர் என்ற ஆசிரியர் இவருக்கு உதவியாக இருந்தார். பின் அந்த ஆசிரியரின் மீது உள்ள அன்பை வெளிப்படுத்தும் காரணமாக பெற்றோர் வைத்த பீமாராவ் ராம்ஜி என்ற பெயருக்கு பின்னால் அவருடைய ஆசிரியர் பெயரான அம்பேத்கர் என்பதை இணைத்துக்கொண்டார்.

அன்று முதல் தான் இவருக்கு பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர் என்ற பெயர் கிடைக்கப்பெற்றது. தந்தையின் வேலை காரணமாக 1904–ஆம் ஆண்டு மும்பைக்கு இவரது குடும்பம் இடம் பெயர நேர்ந்தது. மும்பையில் தனது இளங்கலைப் படிப்பை முடித்த அம்பேத்கர் பரோடா மன்னரின் உதவியால் 1912–இல் அறிவியல், பொருளாதாரத் துறை மற்றும் அரசியலில் இளங்கலை பட்டம் பெற்றார். கல்லூரிப் படிப்பை முடித்ததும் பரோடா மன்னரின் அரசவையில் சிறிதுகாலம் படைத்தலைவராக இருந்தார். அந்த அரசவையிலும் பல இன்னல்களை சந்தித்தார். இதனால் அம்பேத்கர் படைத்தலைவர் வேலையை ராஜினாமா செய்துவிட்டு மும்பை திரும்பினார். அம்பேத்கர் சந்தித்த இன்னல்களை அறிந்த பரோடா மன்னர் அவருடைய கல்வியை மேம்படுத்துவதற்காக வெளிநாடு அனுப்பி படிப்பதற்கு உதவி செய்தார்.

முதுகலை படிப்பிற்காக அமெரிக்காவுக்குச் சென்று அங்கு கொலம்பியா பல்கலைக்கழகத்தில் அரசியல், பொருளாதாரம், தத்துவம் மற்றும் சட்டம் போன்ற படிப்புகளைப் படித்து தனது முதுகலைப் படிப்பை முடித்தார், அம்பேத்கர். பின்னர் அங்கிருந்து நாடு திரும்பினார். தீண்டாமை மற்றும் சாதி வன்கொடுமை போன்றவற்றை ஒழிப்பதற்காக மக்களிடையே விழிப்புணர்வை தனது பேச்சுக்கள் மூலம் வெளிப்படுத்தினார். இந்து மதத்தை சார்ந்தவர் என்ற காரணத்தால் தான் பல துன்பங்களை மேற்கொள்கிறோம் என்று கருதிய அம்பேத்கர் புத்த மதத்தின் மீது ஈடுபாடு கொண்டு பவுத்த மதத்திற்கு மாற முடிவு செய்தார். பவுத்த மதத்திற்கு மாறும் முன்னரே சர்க்கரை நோயால் 1955–ஆம் ஆண்டு பாதிக்கப்பட்டார். நோய் தீவிரமடைந்து தன் பார்வையை இழந்த பின், படுக்கையில் இருந்தார்.

1956–ஆம் ஆண்டு டிசம்பர் 6–ம் தேதி உறங்கிக் கொண்டிருக்கும் போதே டெல்லியில் அவருடைய உயிர் பிரிந்தது. தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காக போராடிய மாமனிதர் அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல்

14–ஆம் நாள் சமத்துவ நாளாக ஆண்டுதோறும் கொண்டாடப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் அறிவித்திருக்கிறார். அதோடு அம்பேத்கரின் தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்கள் செம்பதிப்பாக தமிழில் வெளியிடப்படும்என்றும்கூறியிருக்கிறார்.சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள் கூடாது. அனைவரும் சமம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் சமத்துவ சமுதாயத்தை உருவாக்கப்பாடுபட்டஅண்ணல்அம்பேத்கர்பிறந்தநாள், சமத்துவ நாளாக கொண்டாடப்படும் என்ற முதல்வரின் அறிவிப்பு சாலப்பொருத்தம் உடையதாகும்.

CM SENDS FIRM REMINDER TO GOVERNOR

After boycotting 'At Home' event hosted by RN Ravi, Stalin writes letter expressing pain over NEET Bill impasse

EXPRESS NEWS SERVICE
@ Chennai

EXPRESSING pain and disappointment over "the extraordinary delay" by Governor RN Ravi in forwarding the NEET Exemption Bill to the President, Chief Minister MK Stalin on Thursday sent a firm reminder to the Governor that he is bound to fulfil the constitutional mandate by forwarding the Bill without any further delay. The Bill has been sent seeking the Governor's assent for the second time.

Expressing confidence that the Governor would see the fairness in the State's request, the Chief Minister, in his letter to the Governor, said, "I am confident that when both of us discharge our constitutional duties constructively, the State shall stand to benefit and continue to prosper. I am sure that our relationship would continue to be warm and cordial in the best interest of the people of Tamil Nadu."

Giving a detailed account of what had happened so far regarding the NEET Exemption Bill, the Chief Minister said: "When the Bill was sent back from your good office to the Legislative Assembly, requiring certain clarifications and reconsideration, we did not view it as an adversarial stand. We had complied with the constitutional process, debated it in detail, clarified the points raised by you and sent it back for reserving the same for the Presidential assent."

The Chief Minister said despite reminders, the Bill remained at the Raj Bhavan. "You may recall that during our last meeting, you assured us that this process will be expedited, but I am pained to note that the Bill is yet to be transmitted to the Government of India."

Stalin also pointed out that the admission process for the medical courses for the next academic year will commence shortly and there is tremendous anxiety and uncertainty among the aspiring students and their parents.

"The NEET issue had been a matter of deep concern for the people of the State and gradually the social consensus on NEET evolved into a political and legislative consensus," Stalin added.

"Given this situation, I am sure that you would appreciate our sense of disappointment and dismay at this juncture over the impasse. I am pained to note that despite our repeated efforts to impress upon your good selves on the urgency and sensitivity of the matter, this issue is evoking no positive response from your side," the Chief Minister said.

In this connection, he explained why he and his Cabinet colleagues chose not to attend the At Home hosted by the Governor. "We consider that it would be inappropriate for us to attend this celebratory event hosted at Raj Bhavan," he added. The Chief Minister also recalled that since the Governor assumed office, there has been a cordial and productive relationship between the government and the Governor.

இந்து தமிழ் திசை
[PART OF THE HINDU GROUP]
16-April-2022

மக்களிடம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் ஆவடியில்

நரிக்குறவர் வீட்டில் உணவருந்திய முதல்வர் ஸ்டாலின்

திருவள்ளூர்

தமிழக முதல்வர் ஸ்டாலின் நேற்று ஆவடி நரிக்குறவர் இன மக்களின் குடியிருப்புக்குச் சென்று, உணவருந்தி, அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி பஸ் நிலையம் பின்புறம் நரிக்குறவர் இன மக்கள் வசிக்கும் குடியிருப்பு பகுதியை சேர்ந்த பள்ளி மாணவிகள் திவ்யா, பிரியா, தர்ஷினி ஆகியோர், தாங்கள் நரிக்குறவர் இனத்தை சேர்ந்தவர்களாக இருப்பதால், அரசுப் பள்ளி உள்ளிட்ட இடங்களில் சந்திக்கும் சமூக புறக்கணிப்பு உள்ளிட்டவை குறித்து பேசிய காணொலி கடந்த மாதம் சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது.

இதையடுத்து, தமிழக முதல்வர் ஸ்டாலின், கடந்த மாதம் 16-ம் தேதி பள்ளி மாணவிகள் திவ்யா, பிரியா, தர்ஷினி ஆகியோரை தலைமைச் செயலகத்துக்கு நேரில் அழைத்துப் பேசினார். அப்போது, மாணவிகளின் கல்விக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தருவதாக உறுதியளித்தார்.

தொடர்ந்து, மறுநாள் காலை பால்வளத் துறை அமைச்சர் சா.மு. நாசர், ஆவடி நரிக்குறவர் இன மக்கள் வசிக்கும் குடியிருப்பு வளாகத்துக்கு சென்று, நரிக்குறவர் இன மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார். அப்போது, வீடியோ காலில், நரிக்குறவர் இன மக்களிடம் பேசிய முதல்வர் ஸ்டாலின், "உங்களை சந்திக்க ஆவடிக்கு விரைவில் நேரில் வருகிறேன். அப்போது உங்கள் குறைகள் அனைத்தையும் நிவர்த்தி செய்வேன்" என்று தெரிவித்தார்.

அதன் பிறகு, ஆவடி நரிக்குறவர் குடியிருப்பு பகுதியில், மாநகராட்சி நிர்வாகம் மூலம் ரூ.29.50 லட்சத்தில் குடிநீர், மின் விளக்கு, சிமென்ட் சாலை, தனிநபர் கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டன.

▲ தமிழக முதல்வர் ஸ்டாலின் நேற்று ஆவடி நரிக்குறவர் இன மக்களின் குடியிருப்புக்கு சென்று, உணவருந்தினார். அப்போது, ஒரு மாணவிக்கு அவர் உணவு ஊட்டி மகிழ்ந்தார்.

இந்நிலையில், தான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் விதமாக நேற்று காலை ஆவடி நரிக்குறவர் குடியிருப்புக்கு முதல்வர் ஸ்டாலின் வருகை தந்தார்.

அங்கு புதிதாக அமைக்கப்பட்டுள்ள உயர் மின் கோபுர விளக்குகள், குடிநீர் தொட்டிகளை பயன்பாட்டுக்கு கொண்டு வந்தார்.

தொடர்ந்து, காணொலியில் பேசிய மாணவிகளில் ஒருவரான திவ்யாவின் வீட்டுக்குச் சென்ற முதல்வர், அங்கு திவ்யா, பிரியா, தர்ஷினி ஆகிய மாணவிகளிடம் கலந்துரையாடினார். அப்போது, அம்மாணவிகள், முதல்வருக்கு பாசிமணி மாலைகள் அணிவித்து, கவிதையுடன் கூடிய ஓவியம் மற்றும் புத்தகங்களைப் பரிசாக வழங்கினர்.

தொடர்ந்து திவ்யாவின் வீட்டில் முதல்வர் ஸ்டாலின் உணவருந்தினார். அப்போது, நாட்டுக்கோழி குழம்பில் அதிக காரம் இருப்பதாக முதல்வர் தெரிவித்தார். அதற்கு திவ்யாவின் தாய், "உணவில் அதிக காரம் சேர்ப்பதால்தான் எங்களை நோய்கள் நெருங்குவதில்லை" என்றார். அப்போது, மாணவி ஒருவருக்கு, முதல்வர் உணவை ஊட்டி மகிழ்ந்தார்.

தொடர்ந்து, நரிக்குறவர் இன மக்கள் 122 பேருக்கு, கிராம நத்தம் பட்டா, குடும்ப அட்டை, முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு அட்டை, முதியோர் உதவித் தொகை, சாலையோர வியாபாரத்துக்கான பட்டா உள்ளிட்ட அரசின் நலத்திட்டங்களை வழங்கினார்.

இந்நிகழ்வில், முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:

தமிழகத்தில் கடந்த நான்கு, ஐந்து மாதங்களில் நரிக்குறவர், பழங்குடியின மக்கள், இதர விளிம்பு நிலையில் இருக்கும் மக்கள் ஒவ்வொருவருடைய குடும்பத்துக்கும் அரசின் நலத் திட்ட உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும், வழங்கப்பட வேண்டிய நலத்திட்டங்கள் வரும் மே மாதத்துக்குள் அளிக்கப்படும்.

விளிம்பு நிலையில் உள்ள திவ்யா போன்ற பெண் பிள்ளைகள் துணிச்சலாகப் பேசுவது ஆச்சரியமாக, மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் இருக்கிறது. இதுதான் திராவிட இயக்கத்தின் பெண்ணுரிமை குரலாகும். திராவிட இயக்கத்தின் பெண்ணுரிமை கொள்கைக்கு கிடைத்த வெற்றியை திவ்யா, மாமல்லபுரம் - பூஞ்சேரி அஸ்வினி மூலமாகப் பார்க்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

முதல்வருக்கு, நரிக்குறவர் இன மக்களின் குழந்தைகள், பூங்கொத்துகள் அளித்தும், நரிக்குறவர் இன மக்கள் பாசி மணி மாலைகள் அணிவித்தும் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

முன்னதாக, திருமுல்லைவாயல் ஜெயா நகர் நரிக்குறவர் இன மக்கள் வசிக்கும் குடியிருப்பு பகுதிகளில் 101 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை முதல்வர் வழங்கினார்.

இந்நிகழ்வுகளில், பால்வளத் துறை அமைச்சர் சா.மு.நாசர், பூந்தமல்லி எம்எல்ஏ ஆ.கிருஷ்ணசாமி, ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார், துணை மேயர் சூர்யகுமார் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் பொன்னையா, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

THE TIMES OF INDIA
16-April-2022

CM visits Narikuravar family, has breakfast with them

SPECIAL VISIT: Chief minister M K Stalin feeds a child while having breakfast at a Narikuravar household in Avadi on Friday. The chief minister said he was committed to developing the marginalised sections of society and that his government would continue to work to uplift them

Times News Network

Chennai: It was with excitement that R Manjula, a member of the Narikuravar community, received the news on Thursday that she would be having a VVIP for breakfast in her tiny dwelling in Avadi in Chennai. Manjula got into a frenzy.

"Our area got a face lift. The roads were evened out and our house got a fresh coat of paint," Manjula told TOI. The clean-up work went on until 2am and then Manjula and her family had a short nap before waking up at 4am to cook breakfast for chief minister M K Stalin.

When some school students, including S S Dharshini, met Stalin a month ago in his chambers, and invited him to their home, little did they realise that the CM would keep his promise to visit them. On Friday, the students, including Dharshini, K Thivya and R Priyadharshini, all in their school uniforms, stood by Stalin's side while their mother served him breakfast.

"We just couldn't believe that he was actually sitting inside our home," said Manjula while the girls told the CM they had cooked a feast for him that included idlis, vada, country chicken curry, and sambar. "He shared his food with Priyadharshini, who was standing by his side. He even drank the water that we offered him in a 'sombu' (container)," said a neighbour.

The DMK government is striving hard to implement a scheme which would continue to light the life of the Narikuravar and Irular people, the CM said

"The DMK government is striving hard to implement a scheme which would continue to light the life of the Narikuravar and Irular communities, like the numerous schemes implemented for transgenders during Kalaignar's (M Karunanidhi) rule," said Stalin, addressing the community members in Jaya Nagar, in Thirumullaivoyal in Avadi constituency.

Stalin said he was committed to developing the marginalised sections and that his government would continue to work to uplift them. He said he had learnt about their plight while visiting Pooncheri village on November 4. "I know that getting voter IDs, housing pattas and community certificates are still a problem for this community, but I have asked district collectors to inspect the villages and take note of their requirements," he said. Benefits worth ₹4.5 crore had been provided to them so far, he added.

POWER SECTOR REFORMS A MUST IN TN

Nearly 12 years after Tamil Nadu issued a government order to reform the power sector, plans are afoot now for a giant recast. Though TANGEDCO (state-run company managing generation and distribution utilities) and TANTRANSCO (managing transmission) were created in November 2010 by splitting the erstwhile Electricity Board, the sector continued to be under generous political patronage. While all major industrialised states in India marched ahead with reforms, TN remained a laggard. The paltry average tariff for domestic consumers of ₹2.20 per unit, way below the average purchase cost of ₹5–6, tells us how various governments have shied away from raising the tariff since 2014 for the fear of a political backlash. With the demand for electricity shooting up, the Stalin government is treading cautiously on the reform process. Nightmares of long load-shedding and power outages that led to ouster of the previous DMK government in 2011 still haunt the party.

The political patronage over the years has led to a massive accumulated loss, currently at ₹81,000 crore even after the government's efforts to bring it down. The outstanding debt stands at ₹1.34 lakh crore. Obviously, the free electricity provided to all farmers and the low-end domestic consumers who utilise fewer than 100 units has been a major drag on the state exchequer. In the recent Budget, TN's finance minister allocated over ₹22,000 crore, including ₹13,108 crore for absorbing 100% of TANGEDCO's losses, and another ₹9,120 crore for providing free power to farmers and domestic consumers, and subsidised electricity to the power-loom industry. Clearly, the government can't afford to be so generous if it hopes to build more power plants to meet the rising demand. A team of consultants, led by EY India, is working with the profusely bleeding state-run power companies to find a way out. If they focus on renewable power and debt restructuring, it will surely yield some positive result. The government has made a successful attempt at bringing down the loss, but it faces a Herculean task ahead.

தினகரன்

17-April-2022

அளவிட முடியாத சாதனை

இலவச மின் இணைப்பு என்றதுமே உழவர்கள் மனக்கண் முன் தோன்றுபவர் கலைஞர் தான். ஏனென்றால், அதிமுக ஆட்சி காலத்தில் 1978ம் ஆண்டுமுதல் உழவர்கள் மின் கட்டணத் தில் சலுகை கேட்டு போராடினார்கள். ஆனால், கடைசிவரை அதிமுக ஆட்சியாளர்கள் விவசா யிகளின் கோரிக்கைக்கு செவி சாய்க்கவில்லை.

தமிழ்நாட்டில் வேளாண் உற்பத்தியை பெருக்கி, உழவர்களின் நலனை மேம்படுத்தும் நோக்குடன் கடந்த 19.11.1990 அன்று தமிழக முதலமைச்சராக இருந்த கலைஞர், அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் என்ற ஒரு அறிவிப்பை வெளியிட்டார்.

இது 1989ம் ஆண்டு சட்டப்பேரவை தேர்த லுக்கு திமுக வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றிருந்த வாக்குறுதி என்பது நினைவு கூரத்தக்கது. அன்று முதல் இன்று வரை தமிழ கத்தில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. இலவச மின்சாரம் என்று அறிவித்தால் மட்டும் போதுமா? அதிகளவில் இணைப்புகளையும் கொடுக்கச் சொன்னவர் கலைஞர். அதன் பலனை தமிழக விவசாயி கள் இன்றுவரை அனுபவித்து வருகிறார்கள். வேளாண் உற்பத்தியும் கணிசமாக அதிகரித் துள்ளது.

கடந்த 2011 முதல் 2021 வரையிலான பத்தாண்டு கால அதிமுக ஆட்சியில் விவசாயிகள் இலவச மின் இணைப்பு பெறுவது குதிரை கொம் பாகி போனது. விளைவு, 31-3-2021 நிலவரப்படி, மொத்தம் 4,52,777 வேளாண் மின் இணைப்பு விண்ணப்பங்கள் நிலுவையில் இருந்தன. பத்தாண்டுகளில் 2,21,579 இலவச மின் இணை ப்புகளை மட்டுமே அதிமுக ஆட்சி கொடுத் திருந்தது.

திமுக ஆட்சிக்கு வந்ததும் இலவச விவசாய மின் இணைப்புகள் கொடுக்கும் பணிகளை துரிதப்படுத்த முதல்வர் உத்தரவிட்டு அதற்கான திட்டமிடல் துவங்கியது. கடந்த 23-9-2021ல் ஒரு லட்சம் விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைத்தார். ஆறு மாத காலத்திற்குள்ளாகவே ஒரு லட்சம் உழவர்களுக்கும் மின் இணைப்புகள் 29.3.2022 அன்று கொடுக்கப்பட்டுவிட்டது.

இந்த திட்டம் செயல்படுத்தப்பட்ட வேகம், அபாரம். பத்தாண்டுகளில் அதிமுக கொடுத்த இணைப்புகளில் கிட்டதட்ட பாதியை ஆறே மாதத்தில் வழங்கியுள்ளனர். இதற்கு காரணம் சரியான திட்டமிடல், இந்த திட்டமிடலுக்கு அடித்தளமாக அமைந்தது மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற உண்மையான நோக்கம் கொண்டவர் நம் முதல்வராக இருப்பதுதான்.

ஒரு லட்சம் இணைப்பால், 1 லட்சம் குடும் பம் அடையும் பயன் மட்டுமல்ல - அவர்களது வேளாண் உற்பத்தியால் இந்த மாநிலம் அடை யும் வளர்ச்சியை நாம் சிந்தித்து பார்க்க வேண் டும். எனவே இந்த சாதனையை நாம் அளவிட முடியாத சாதனை என்றுதான் சொல்ல வேண்டும் என முதல்வரே கூறியுள்ளார். இந்த அர்ப்பணிப்பு, உழைப்புதான் இன்றைக்கு இந்த திட்டத்தை ஆறே மாதத்தில் நிறைவேற்றி உள்ளது. இன்னும் பல மக்கள் நல திட்டங்களை நமது முதல்வர் நிறைவேற்றுவார் என்பது உறுதி.

ராணி

17-April-2022

எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைக்கும் ஸ்டாலின்!

சித்திரைப் பிறப்போடு கோடை வெயில் தகிக்கத் தொடங்கிவிட்டது. கூடவே தமிழக அரசியலின் வெம்மையும்! தமிழக ஆளுநருக்கு எதிராக மக்களவையில் கண்டனம், வன்னியருக்கான 10.5% இட ஒதுக்கீட்டை சுப்ரீம் கோர்ட் ரத்து செய்தது, டெல்லியில் அண்ணா-கலைஞர் அறிவாலயத் திறப்பு விழா, சட்டமன்ற பட்ஜெட் தொடர் அமளி என்று படு ரூடு.

கவர்னர் மாளிகையில் பத்துக்கும் மேற்பட்ட சட்ட முன்வடிவுகள் பல மாதங்களாக நிலுவையில் இருக்கின்றன. ஆளுநரை முதல்வரே நேரில் சந்தித்தும் நோ ரெஸ்பான்ஸ். எனவே ஆளுநரைத் திரும்பப் பெற வேண்டும் என்ற கோரிக்கை முன்பைக் காட்டிலும் பலமாக எழத் தொடங்கியுள்ளது. ராஜ்பவனில் நிலுவையில் நிற்கும் 11 மசோதாக்கள் பல தரப்பட்டவை.

1. தமிழக சட்டப்பேரவையில் அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் இரண்டாவது முறையாக நிறைவேற்றப்பட்ட நீட் விலக்கு மசோதா, தமிழக கவர்னர் ஆர்.என். ரவியின் அலுவலகத்துக்கு 2022 பிப்ரவரி 8-ம் தேதி அனுப்பி வைக்கப்பட்டது. முதல் முறை அனுப்பப்பட்ட முன்வடிவில் சில விளக்கங்களைக் கேட்டுத் திருப்பி அனுப்பி இருந்தார் ஆளுநர். இரண்டாவது முறை திருப்பி அனுப்பச் சட்டத்தில் இடம் இல்லை. முதல்வர் நேரில் சென்று கேட்டுக்கொண்டபோது அனுப்பி வைப்பதாக உறுதி கூறினார் கவர்னர். ஆனாலும் இன்று வரை அது நிலுவையில்தான் உள்ளது.

2. கூட்டுறவுச் சங்கங்களின் பதவிக் காலத்தை 5 ஆண்டுகளில் இருந்து 3 ஆண்டுகளாகக் குறைக்கும் சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டு 2022 ஜனவரி 12-ல் அனுப்பி வைக்கப்பட்டது. அதுவும் ராஜ்பவனில் ஆழ்ந்த நித்திரையில் உள்ளது.

3. பாரதியார் பல்கலைக்கழகத்தின் கீழ் வரும் சுயநிதிக் கல்லூரிகள் மற்றும் தனியார் கல்லூரிகளில் இருந்து 5 உறுப்பினர்களை பல்வேறு அவைகளில் சேர்ப்பது தொடர்பான மசோதா, 2021 செப்டம்பர் 20-ல் அனுப்பி வைக்கப்பட்டது.

4. தமிழக மீன் வளப் பல்கலைக்கழகத்துக்கு துணைவேந்தரைத் தமிழக அரசே நியமிப்பது தொடர்பான சட்ட முன்வடிவு முந்தைய ஆட்சியில் 2020 ஜனவரி 13-ம் தேதி ஆளுநர்

'தராசு' ஷ்யாம்

அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. 27 மாதமாக அது கொர்.. கொர்..!

5. மாநில சட்டக்கமிஷனின் பரிந்துரைகளின்படி சில சட்டங்களை வாபஸ் பெறுவது தொடர்பான நிர்வாக மசோதா அ.தி.மு.க. ஆட்சியில் 2020 ஜனவரி 13-ல் கவர்னர் மாளிகைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதுவும் 27 மாதங்களாக டீப் ஸ்லீப்.

6. தமிழ்நாடு கால்நடைப் பல்கலைக்க ழகத்துக்கு தமிழக அரசே துணை வேந்தரை நியமிப்பது குறித்த அ.தி.மு.க. அரசின் மசோதா 2020 ஜனவரி 18-ல் கவர்னருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதுவும் 27 மாதங்களாக தூக்கத்தில்தான் உள்ளது.

7. டி.என்.பி.எஸ்.சி. போட்டித் தேர்வுகளில் பொதுத் தமிழை ஒரு பாடமாகச் சேர்ப்பதற்கான மசோதா சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு 2020 ஏப்ரல் 2-ம் தேதி கவர்னருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. 2 ஆண்டுகளாக அது கிடப்பில் உள்ளது.

8. கூட்டுறவுச் சங்கத்தில் இயக்குனர் குழுவை சஸ்பெண்ட் செய்யும்பட்சத்தில், உடனடியாக நிர்வாக அதிகாரி ஒருவரை நியமிக்கும் அதிகாரம் வழங்குவதற்கான சட்டத் திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டு 2020 செப்டம்பர் 24-ல் கவர்னருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக அதுவும் பெண்டிங்.

9. 'அண்ணா பல்கலைக்கழகத்தை அண்ணா தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சிப் பல்கலைக்கழகமாகப் பெயர் மாற்றம் செய்வதற்கான மசோதா கவர்னருக்கு 2020 செப்டம்பர் 24-ம் தேதி அனுப்பிவைக்கப்பட்டது. ஓராண்டுக்கு மேல் கவர்னரிடம் நிலுவையில் இருந்த இந்த மசோதாவை 2021 நவம்பர் 1-ம் தேதி புதிய அரசு வாபஸ் பெற்றது. அதுவாவது ராஜ்பவனுக்குத் தெரியுமோ, என்னவோ?

10. சென்னை பல்கலைக்கழகத் துணைவேந்தரை நியமிக்கும் தேர்வுக் கமிட்டி தொடர்பான மசோதா தமிழக கவர்னருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அது நீண்ட காலமாக நிலுவையில் இருந்தது. 2020 நவம்பர் 28-ம் தேதி அ.தி.மு.க. அரசே அதை விலக்கிக் கொண்டது.

பொதுவெளியில் கிடைத்த தகவல்கள் இவ்வளவுதான். இன்னும் பல இருக்கலாம் என்றே தோன்றுகிறது. தி.மு.க., அ.தி.மு.க. என்றில்லாமல் அனைத்து அரசுகளுமே ராஜ்பவனுக்கு இன்னுக் கிரைதானோ?

இத்தனைக்கும் கவர்னர் மாளிகையை கட்டிப் பெருக்குவது முதல் வெள்ளையடிப்பது வரை அனைத்திற்கும் மக்கள் வரிப்பணம்தான் செலவாகிறது. ஆனாலும் மக்கள் பிரதிநிதிகளின் எண்ணங்களை ஆளுநர் மதிப்பதே இல்லை என்பதே எதார்த்தம்.'

முன்னாள் முதல்வர் மறைந்த ஜெயலலிதா காலத்தில் ஆளுநர் நியமன சிண்டிகேட் உறுப்பினராக மதுரை காமராஜ் பல்கலையில் பணியாற்றி வந்தேன். அன்றைய ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டிக்கும், முதல்வருக்கும் இடையே பனிப்போர் நிலவி வந்தது.

ஆனால், சென்னாரெட்டி எந்த மசோதாவையும் நிலுவையில் வைத்தது இல்லை. பக்கத்து மாநிலங்களான தெலுங்கானா மற்றும் பாண்டிச்சேரியில் டாக்டர் தமிழிசை ஆளுநர். கோப்புகளில் அவர் துரிதக் கையெழுத்துப் போடுவதை அதிகாரிகளே பாராட்டுகின்றனர்.

பிரதிநிதித்துவ ஜனநாயகத்தில் சட்டப் பேரவைதான் சுப்ரீம். மக்களின் தேவைகளுக்கேற்ப சட்ட முன்வடிவுகளை விவாதிக்க அதுவே ஏற்ற இடம். உரிய விதிகளின்படி மசோதாக்கள் நிறைவேற்றப்படுகின்றன. அவற்றில் ஏதேனும் ஐயப்பாடு இருந்தால் கவர்னர் கேள்வி எழுப்பலாம். ஆனால், ஆண்டுக்கணக்கில் இழுத்தடிப்பதற்கு எந்த உரிமையும் இல்லை.

எனவே உள்நோக்கத்துடன் ஆளுநர் செயல்படுவதாகவே எண்ணத் தோன்றுகிறது. நிலைமை மேலும் சிக்கலாவதற்குள் குடியரசுத் தலைவர் உடனே தலையிட வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பு.

இதற்கிடையில் டெல்லியில் நடைபெற்ற அண்ணா-கலைஞர் அறிவாலயத் திறப்பு விழா தலைநகர் அரசியல்வாதிகள் மற்றும் ஊடகங்களின் கவனத்தைக் கவர்ந்துள்ளது.

அரசியல் கட்சிகளின் அலுவலகங்கள் அமைக்க இந்தியத் தலைநகரில் இடம் தரவேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாகவே இருந்து வந்தது. 1987-ல் காங்கிரஸ் கட்சிக்கு 8093 ச.மீ. ஒதுக்கப்பட்டது. தொடர்ந்து பாரதிய ஜனதாவிற்கும் அதே அளவு இடம் தரப்பட்டது. இந்த விஷயம் ஒரு ஆர்.டி.ஐ. விண்ணப்பம் மூலம் வெளிவந்ததும்.

கிட்டத்தட்ட அனைத்துக் கட்சிகளும் இதே கோரிக்கையை முன்வைத்தன. பின்னர் 2006 ஜூலை 13-ஆம் தேதியிட்ட சுற்றறிக்கை மூலம் மத்திய அரசின் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை குறைந்தது 7 எம்பிக்களைக் கொண்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக் கட்சிகளுக்கும் அலுவலக இடம் ஒதுக்கியது.

பின்னர் 2010-ல் அ.தி.மு.க., 2013-ல் தி.மு.க. திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளுக்கு இடம் ஒதுக்கப்பட்டது. எம்பிக்களின் எண்ணிக்கையைப் பொறுத்து இடத்தின் அளவு மாறுபட்டது. தி.மு.க.விற்கும், அ.தி.மு.க.விற்கும் கிட்டத்தட்ட ஒரே அளவு இடம் (1008 ச. மீ.)தான்.

ஆம் ஆத்மிக்கு எம்பி. எண்ணிக்கை கிடையாது. அப்போது அது டெல்லியில் ஆட்சி செய்து கொண்டிருந்தது. எனவே அது சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டுவந்து தனக்குத் தானே இடம் ஒதுக்கிக் கொண்டது.

அ.தி.மு.க., தி.மு.க. ஆகிய இரு கட்சிகளும் தங்களுக்கு அலுவலகம் கட்டத்தொடங்கின. தெலுங்கானா ராஷ்ட்ரீய சமிதி (டி. ஆர். எஸ்.) இப்போதுதான் பூமி பூஜை போட்டுள்ளது. தி.மு.க. அலுவலகம் கட்டி முடித்து 2022 ஏப்ரல் 2- ஆம் தேதி திறப்பு விழா நடத்தி முடித்துவிட்டது.

டெல்லி தீன்தயாள் உபாத்யாயா மார்க் பகுதியில் கட்டப்பட்டுள்ள அண்ணா-கலைஞர் அறிவாலயத் திறப்பு விழாவில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அலுவலகத்தைத் திறந்து, கட்சிக் கொடியை ஏற்றி வைத்தார். காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, சமாஜ்வாதி கட்சியின் அகிலேஷ் யாதவ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சீதாராம் யெச்சூரி, ஜம்மு-காஷ்மீர் முன்னாள் முதல்வர் பரூக் அப்துல்லா மற்றும் பல்வேறு எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

இதையடுத்து ஏ.எஸ். பன்னீர் செல்வம் எழுதிய கலைஞரின் வாழ்க்கை (*Karunanithi A Life*) நூலை இந்து என். ராம் வெளியிடக் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி பெற்றுக் கொண்டார். பொருளாதார நிபுணர் ஜெயரஞ்சன் எழுதிய 'ஒரு திராவிடப் பயணம்' (*A Dravidian Journey*) நூலை முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட தமிழக நீர்ப்பாசனத்துறை அமைச்சர் துரைமுருகன் பெற்றுக் கொண்டார். பொதுமக்கள் பயன்பாட்டிற்காக ஒரு பெரிய நூல் நிலையமும் முதல்வரால் அர்ப்பணிக்கப்பட்டது.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட மேற்குவங்க முதல்வர் மமதா பானர்ஜி, டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் ஆகியோருக்குப் பதிலாக அவர்களது கட்சிப் பிரதிநிதிகள் மட்டுமே கலந்து கொண்டனர். குஜராத் மற்றும் டெல்லி மாநிலச் சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. மற்றும் காங்கிரஸ் ஆகிய இரண்டு கட்சிகளையும் ஆம் ஆத்மி எதிர்ப்பதால் சோனியாவுடன் ஒரே நிகழ்ச்சியில் தோன்றுவது அரசியல் சிக்கல் என்று டெல்லி முதல்வர் கருதினார். அதே மாதிரியான உள்ளூர் அரசியல் திரிணாமுல் காங்கிரஸ் கட்சிக்கும் இருந்திருக்க வாய்ப்பு உள்ளது.

காங்கிரஸ் கட்சி, எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்க தவறிவிட்டதாக 'முரசொலி' குற்றம்சாட்டிய அதே நேரத்தில் ஆளும் பா.ஜ.க.வை வீழ்த்த எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை மிகவும் அவசியம் என்று வலியுறுத்தியது.

தேர்தல் முடிவுகளில் தி.மு.க.வுக்கு ஆச்சரியமோ அதிர்ச்சியோ இல்லை என்றும், பா.ஜ.க.தான் ஆட்சியில் இருந்த மாநிலங்களில் ஆட்சியை தக்கவைத்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது. பஞ்சாப்பில் இரண்டு இடங்களில் மட்டுமே வெற்றி கிடைத்துள்ளதால் பா.ஜ.க.வின் முயற்சிகளுக்கு வாக்காளர்கள் செவிசாய்க்கவில்லை என்றும் 'முரசொலி' தலையங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. உத்தரப் பிரதேசத்தில் கடந்த சட்டப்பேரவைத் தேர்தலைவிட பா.ஜ.க. குறைவான இடங்களைப் பெற்றுள்ளதையும் அது குறிப்பிட்டுள்ளது.

தனது நீண்ட காலக் கூட்டணியில் கட்சியான காங்கிரஸ் கட்சிக்கான ஆதரவை தி.மு.க. உறுதி செய்துள்ளது என்றே அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர். மூன்றாவது அணிக்கு தி.மு.க. ஆதரவு அளிக்காது என்றே தெரிகிறது.

டெல்லி தி.மு.க. அலுவலகத் திறப்பு விழாவுக்கு தேசியத் தலைவர்களை அழைத்தது பா.ஜ.க.வுக்கு எதிரான கூட்டணி காங்கிரஸ் தலைமையில் அமைக்கும் தி.மு.க.வின் முயற்சியே.

கார்கில் கதாநாயகனாக மறைந்த வாஜ்பாய் பெரும் புகழ் பெற்றுத் தனிப் பெருங்கட்சியாக 2004 தேர்தலில் பாரதிய ஜனதாவை வெற்றி பெற வைத்தார். ஆனால் கலைஞர்-சோனியா பார்முலா காரணமாக பா.ஜ.க.வுக்கு மாற்றாக யு.பி.ஏ. 1 ஆட்சி அமைத்தது.

எங்கெல்லாம் மாநிலக் கட்சிகளுக்குப் பலம் இருந்ததோ அங்கெல்லாம் காங்கிரஸ் அவற்றுக்கு விட்டுக் கொடுத்தது என்பதே 2004 கூறும் வரலாறு. அப்போது பிரதமர் வேட்பாளர் யார் என்ற பிளவுபடுத்தும் சர்ச்சைக்குள்

போகாமல் டாக்டர் மன்மோகன்சிங் பிரதமர் ஆனார். அவர் தொடர்ந்து பத்து ஆண்டுகள் (யு.பி.ஏ.2)ஆட்சி செய்தார்.

தந்தையின் பாணியில் மீண்டும் 2004 பார்முலாவைக் கையில் எடுத்து பாரதிய ஜனதாவுக்கு மாற்றாக தேசிய அரசியலில் அணி திரட்ட தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் முயற்சிக்கிறார் என்றே தோன்றுகிறது.

தினத் தந்தி
DAILY THANTHI

18-April-2022

தி.மு.க. ஆட்சி தமிழகத்தில் நன்றாக இருக்கிறது

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் மின்னல் வேகத்தில் பணியாற்றுகிறார்

ஆந்திர மந்திரி ரோஜா பேட்டி

திருவண்ணாமலை, ஏப்.18-
தி.மு.க. ஆட்சி தமிழகத்தில் நன்றாக இருக்கிறது. தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் மின்னல் வேகத்தில் பணியாற்றுகிறார் என்று ஆந்திர மாநில மந்திரியும், நடிகையுமான ரோஜா கூறினார்.

தரிசனம்

சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு, நேற்று முன்தினம் ஆந்திர மாநில சுற்றுலா, கலாசாரம் மற்றும் இளைஞர் நலத்துறை மந்திரியும், நடிகையுமான ரோஜா திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் சாமி தரிசனம் செய்தார். தொடர்ந்து அவர் திருவண்ணாமலையில் தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலுவை மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து பேசினார்.

முன்னதாக ரோஜா நிருபர்களிடம் கூறியதாவது:-

மின்னல் வேகத்தில் பணியாற்றுகிறார்

ஆந்திராவில் நான் மந்திரியாக பொறுப்பேற்றதற்கு ஆந்திர மக்கள் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தார்களோ, தமிழக மக்களும் அதே மகிழ்ச்சியோடு என்னை வரவேற்கின்றனர். ஆந்திரா தனது அம்மா வீடு, தமிழ்நாடு தனது மாமியார் வீடு என 2 பேர் ஆசீர்வாதமும் எனக்கு உள்ளது.

ஆந்திர முதல்-மந்திரி ஜெகன்மோகன் ரெட்டி தங்கைக்கு கொடுக்க வேண்டிய மரியாதையை கொடுத்து என்னை அமைச்சரவையில் இடம்பெற வைத்துள்ளார். அவருக்கு நல்ல பெயர் கிடைக்கும் வகையில் பணியாற்றுவேன்.

தி.மு.க. ஆட்சி தமிழகத்தில் நன்றாக இருக்கிறது. முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அமைதியாகவும், திறமையாகவும், மின்னல் வேகத்தில் பணியாற்றுகிறார். தற்போது படிக்கும் இளைஞர்கள் அனைவரும் இந்திய அளவில் அல்ல, உலக அளவில் சென்று நல்ல இடத்தில் பணியாற்ற வேண்டும் என்று நினைக்கிறார்கள். அதனால், அந்தந்த மாநில தாய்மொழி மட்டும் தெரிந்தால் போதாது. தாய் மொழியோடு சேர்த்து ஆங்கிலம், இந்தி மிகவும் முக்கியம். ஆனால், இந்தியை படிக்க சொல்லி கட்டாயப்படுத்த முடியாது.

இவ்வாறு அவர் கூறினார்.

According to experts, MK Stalin is on a politically strong wicket because the AIADMK, the chief opponent and being a divided house, is weak

Stalin bests critics after one year

STATE SCAN
TAMIL NADU

SHINE JACOB

Addressing a sea of the red brigade at the 23rd party congress of the Communist Party of India (Marxist), Tamil Nadu Chief Minister M K Stalin scripted a history of relationship between communism and the Dravidian movement in India.

Responding to a thunderous applause by those attending the event, he explained why he attended the CPI(M) event — "after all, my name is Stalin".

To those who follow the Dravida Munnetra Kazhagam (DMK) supremo, this was not just a single episode but an example of how he won hearts in his first year as chief minister, in "Stalin Style". From attracting investment to being a torch-bearer of federalism to projecting himself as a national leader, Stalin has taken all the right steps.

"One year was a revelation for Stalin himself. He cultivated an independent image of himself, without relying on the legacy of his father or the past history of the DMK. He has been able to consolidate his position in the party. His government I don't think has earned any ill will in the past one year," said Ramu Manivannan, political analyst and former head of the department of politics and public administration, University of Madras.

The state has signed 130 MoUs for investment, worth ₹68,375 crore, with the potential to generate 205,802 jobs. In Stalin's recent UAE trip, the government grabbed investment of around ₹6,000 crore. The Tamil Nadu government saw an increase in foreign direct investment by 41.5 per cent during the April-December period.

"One year is too early to gauge the success of a government on the economic front. But the indications are in the right direction," Manivannan added.

A Covid relief of ₹2,000 for people, free travel for women in state-run buses, appointing non-Brahmin priests to Tamil Nadu's temples, and his stand on the National Eligibility cum Entrance Test (NEET) for medical admission — all won applause from the public.

However, his critics are calling these a "publicity stunt".

"The DMK has failed. There is no generation of employment. Several of its poll promises are yet to be fulfilled. The state's law and order situation is deteriorating. They may have signed MoUs, but on the ground nothing is happening," said Narayanan Thirupathy, spokesperson for the BJP in Tamil Nadu.

The DMK stalwart's recent visit to Delhi comes as a change in tradition because he not just reached out to the Aam Aadmi Party leader and Delhi Chief Minister Arvind Kejriwal but also launched a party office in the capital.

"We do not have the infrastructure in place for industry to develop. We need agro-based industries and I believe development is still not inclusive because southern districts are not seeing any major investment," said V Narayanan (Maalan), a political analyst and writer.

According to experts like him, Stalin is on a politically strong footing because the AIADMK, the chief opponent and being a divided house, is weak.

"He wants to become a national leader but the fact is that each of the leaders whom he is in touch with has national ambitions," Maalan added.

Creating an identity for the Tamil population should not work against the national interests, he said.

No matter what the critics say, the thumping win at the recent local body elections shows Stalin's popularity is ascendant.

தினத் தந்தி

DAILY THANTHI

19-April-2022

தமிழ்நாட்டில் குவிகிறது அன்னிய நேரடி முதலீடுகள்!

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு கடந்த ஆண்டு மே மாதம் 7-ந்தேதி பொறுப்பேற்றது. முதல்நாளில் இருந்தே அவர் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் மிகத்தீவிரமாக கவனம் செலுத்தி வருகிறார். மாநிலத்தில் தொழில் வளர்ந்தால்தான், குறிப்பாக முதலீடுகள் பரவலாக மேற்கொள்ளப்பட்டால்தான் அந்தந்த பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதி மேம்படும். நிறைய பேருக்கு வேலைவாய்ப்பு வரும். மாநிலத்தின் தொழில்வளர்ச்சி பெருகும். தொழில் வளர்ச்சி பெருகினால் உற்பத்தி பெருகும். மாநிலத்துக்கு வருமானம் கிடைக்கும் என்று பல வகைகளிலும் நன்மைகள் வந்து பெருகும். எல்லா இடங்களிலும் எல்லா வளர்ச்சிகளும் பெற வேண்டும் என்ற திராவிட மாடல் ஆட்சியை நடத்தி வரும் மு.க.ஸ்டாலின், தமிழ்நாட்டில் முதலீட்டாளர்கள் கதவை தட்டவேண்டிய அவசியம் இல்லாமல், எங்கள் கதவுகள்

எப்போதும் திறந்தே இருக்கும் வகையில் தமிழக அரசின் தொழில் கொள்கை வகுக்கப்பட்டு உள்ளது என்று அடிக்கடி சொல்லி வருகிறார்.

தி.மு.க. அரசு அமைக்கப்பட்டதில் இருந்தே தமிழக அரசு முதலீடுகளை ஈர்ப்பதில் பெரும் முயற்சி எடுத்து வருகிறது. துடிப்புள்ள தொழில்துறை அமைச்சரான தங்கம் தென்னரசு, 'எங்கள் அரசின் முன்னுரிமை இலக்கு என்பது, 2030-ல் 23 லட்சம் கோடி ரூபாய்க்கான முதலீடுகளை தமிழ்நாட்டுக்கு கொண்டு வந்து, 46 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதுதான்' என்று கூறுரைத்துள்ளார். எல்லோருமே பொதுவான ஒரு குறிக்கோளாக, முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் முத்திரை பதித்தாற்போல் சொல்லிவரும், தமிழ்நாட்டில், 2030-ல் ரூ.75 லட்சம் கோடி பொருளாதாரத்தை உருவாக்குவதுதான் எனது இலக்கு என்பதை நோக்கியே செயல்பட்டு வருகிறார்கள். அதை நோக்கித்தான் அரசு வேகமாக பீடு நடைபோடுகிறது. இதுவரை தமிழக அரசு ரூ.69 ஆயிரத்து 375 கோடியே 54 லட்சம் மதிப்புள்ள 131 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. இதன் மூலம் 2 லட்சத்து 25 ஆயிரத்து 402 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களை எல்லாம் செயல்பாட்டுக்கு கொண்டுவர மிக வேகமாக பணிகள் நடந்து வருகின்றன. இதில் மிகவும் பெருமைப்படத்தக்க நிகழ்வு என்னவென்றால் முதல்-அமைச்சரின் துபாய் சுற்றுப்பயணத்தில் ரூ.6 ஆயிரத்து 100 கோடி முதலீட்டில் 14 ஆயிரத்து 700 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் 6 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்தான். தமிழ்நாட்டில் இப்போது அன்னிய நேரடி முதலீடுகளும் வந்து குவிகின்றன.

பல வெளிநாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்காக மிக எளிதாக முதல்-அமைச்சருடனேயே பேச்சுவார்த்தை நடத்தி, வெற்றிகரமாக புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு விடுகிறார்கள். மத்திய அரசாங்கத்தின் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை வெளியிட்டுள்ள புள்ளிவிவரமே இதற்கு சான்று ஆகும். இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட அன்னிய நாட்டு முதலீடுகளில் தமிழ்நாட்டின் பங்கு 4 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக உயர்ந்துள்ளது. மராட்டியம், கர்நாடகா, குஜராத், டெல்லிக்கு பிறகு தமிழ்நாடுதான் இந்த வரிசையில் இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அன்னிய நேரடி முதலீடுகளில் தொழில் துறை செயலாளரான கூடுதல் தலைமை செயலாளர் எஸ்.கிருஷ்ணன், சிறு தொழில் துறை செயலாளர் அருண்ராய் ஆகியோரின் அயராத முயற்சியால், தொடர்ந்து அன்னிய நேரடி முதலீடுகள் தமிழ்நாட்டுக்கு வந்து கொண்டு இருக்கின்றன. தமிழக அரசு மிக சரியான பாதையில் வேகமாக முன்னேறி கொண்டு இருக்கிறது என்று தொழில் அதிபர்கள், மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறார்கள். அதே நேரம் இந்த தொழில் வளர்ச்சியை கண்டு மனம் பூரித்து தமிழக அரசை மனமுவந்து பாராட்டி கொண்டு இருக்கும் பொதுமக்கள், இது போதாது, 5-வது இடத்தில் இருக்கும் தமிழ்நாடு முதலிடத்துக்கு வர வேண்டும். முதல்-அமைச்சரின் கனவு அவர் குறிப்பிட்ட நாளுக்கு முன்பாகவே நிறைவேற வேண்டும். அந்த நாளும் தூரத்தில் இல்லை என்றே கருதுகிறார்கள்.

THE HINDU
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878
20-April-2022

Revisiting India's federalist ethos

Tamil Nadu Chief Minister M.K. Stalin could spark a broad-based challenge to the BJP's centralising moves

NARAYAN LAKSHMAN

The recent speech by Tamil Nadu Chief Minister M.K. Stalin at the 23rd party congress of the Communist Party of India (Marxist) in Kannur, Kerala will go down in political history for at least two reasons. First, Mr. Stalin, in both this speech and in prior statements and actions, has put forth a profound challenge to the model of 'federalism' that has become the foundational basis of public policy under Prime Minister Narendra Modi's Bharatiya Janata Party (BJP)-led government at the Centre.

Second, his speech could be considered an early signal of potential convergence – at least in an ideological, if not tactical, sense – of two radical-revolutionary political paradigms, Dravidianism and communism. This development might fuel momentum for a coalition of dissenting voices at the State level against a ham-handed Central government that appears to be penalising non-BJP-led State governments by weaponising certain aspects of public policy. Both dimensions of Mr. Stalin's challenge are worth considering in closer detail.

Threats to State autonomy

First, as he elucidated at the CPI (M) congress in Kannur on April 9 – to thunderous applause for his allusion to the historical cultural connections between Tamil Nadu and Kerala – Mr. Stalin's challenge to the model of federalism in vogue today is to question whether, in its current form, it is a cause and consequence of excessive concentration of power in the Central government. The 'so what' of his argument is that this comes at the cost of denying States their rightful place in the scheme of things as envisioned in the Constitution of India. This change is located in the context of implementations of the Goods and Services Tax (GST) and the National Eligibility-cum-Entrance Test (NEET), dissolution of the Planning Commission and the status of the National Development Council.

Among the greatest concerns voiced by Mr. Stalin and Kerala Chief Minister Pinarayi Vijayan at the CPI(M) congress was that the conduct of revenue sharing between the Centre and certain States has been less than satisfactory, out of line with Finance Commission recommendations, and that it has effectively cut off funding for policy implementation, which is the life blood of State administration.

It is not only Mr. Stalin's speech. His recent visit to the nation's capital was aimed precisely at attempted redress for the Tamil Nadu public exchequer suffering shortfalls owing to this situation: although the 14th Finance Commission had recommended ₹2,524.20 crore in performance grant to Tamil Nadu during the period from 2016-17 to 2019-20, the Union government released ₹494.99 crore for 2016-17. According to the memorandum Mr. Stalin handed over in person to Union Finance Minister Nirmala Sitharaman, "Despite compliance with the conditions and furnishing of utilisation certificates, the grant for 2017-18 has not been released. Subsequently, the grants for 2018-19 and 2019-20 have also not been released."

On Governors

In recent times Mr. Stalin has also flagged – as indeed have Mr. Vijayan and other non-BJP Chief Ministers – an alarming tendency for Governors of their respective States to break with hallowed constitutional tradition. This is taking the form of Governors getting involved in the minutiae of administration – normally considered the sole domain of the State executive – or holding up specific processes involving their office in a manner that tips political circumstances against the State government in question.

For example, in his Republic Day address this year, Tamil Nadu Governor R.N. Ravi set off a political firestorm when he called for States to adopt a three-language formula. This was a move that the Dravida Munnetra Kazhagam (DMK) leadership clearly considered an affront to the State's cherished Tamil linguistic identity and cultural ethos. The apparent gubernatorial overreach stung even more in the context of the 2019 protests in Tamil Nadu, which led to the dropping of a clause in the draft National Education Policy requiring mandatory Hindi lessons in schools.

Another instance of the Governor stepping beyond the routine constitutional duties and engaging in what some have described as

pressing a thumb on the scales of State politics in favour of the Union government policy position is the inordinate delay by Raj Bhavan in Chennai in sending the Tamil Nadu NEET Bill for presidential assent. In these two cases, the rightful indignation of Mr. Stalin and his colleagues stems from the fact that education, after all, has been on the Concurrent List since 1976.

Unity among dissenters

Tussles between the Centre and States are hardly new. State autonomy, as supported by the Sarkaria Commission, has been fiercely fought for across many decades and by Chief Ministers of every political hue – including vociferously on Twitter and beyond by the erstwhile Chief Minister of Gujarat, Narendra Modi, prior to 2014. Yet for Mr. Stalin and the DMK, the drive for self-determination of a people has a deeper meaning than mere squabbles over policy.

The resistance of both the DMK and the All India Anna Dravida Munnetra Kazhagam (AIADMK) to the very notion of Hindi imposition stems from decades of experience negotiating with an elitist, upper caste-dominated government entity in faraway Delhi – and pushing back against the latter's repeated attempts to make inroads into the politics of a State that has largely been impermeable to its machinations. Indeed, the essence of the impulse that animated the Dravidian movement and in 1967 enabled the remarkable mobilisation of a smorgasbord of middle and lower castes against Brahmin dominance of the organs of the state came from the very same rejection of 'Delhi politics' that we are seeing the DMK battle today.

Regardless of whether it was the DMK or the AIADMK at the helm of affairs in Tamil Nadu, since the late 1960s, the 'social contract' of Dravidian party leaders with their constituents has revolved around mass welfare policies as a key vector of resource allocation, specifically redistribution towards poorer and marginalised sections of society.

This historical trend has resulted in Tamil Nadu consistently performing well in terms of human development indicators – provisioning of public goods such as health and education has always been consistent with this form of 'paternalist populism'. It leaves a few unanswered questions in terms of financing for these worthy policies. To what extent can revenue from an over-regulated liquor sector offset the considerable dent in public finances that these policies entail? To what extent do these policies cripple the working population from looking beyond 'freebies' towards productive employment and income-generating activities? These are tough questions that the Dravidian movement is yet to provide satisfactory answers for.

Pro-poor impulse

But it explains why the question of public finance support from the Central government matters greatly in Tamil Nadu at the present juncture – as it does in Kerala, where there is a class element undergirding public policy based on the pro-poor redistributive intent of the CPI(M). It drives leaders like Mr. Stalin and Mr. Vijayan to take on the Central government for under-delivering on their revenue-sharing promises, especially at a time when State taxes are at a low ebb owing to the moribund state of economic activity in a post-COVID economy.

In batting on the front foot for clearly defined values of this unique social movement, Mr. Stalin has made a strong claim as a deserving legatee of the mantle of his late father, former Chief Minister and Dravidian movement stalwart M. Karunanidhi. While there were genuine questions in May 2021 about his capability to govern an entire State when he took up the Chief Ministerial berth, Mr. Stalin proved that his days as Mayor of Chennai and Deputy Chief Minister under the tutelage of his father only honed his political instinct. Along the way he appears to have genuinely imbibed something of the spirit of Dravidian politics. If this spirit finds resonance in States such as Kerala and West Bengal, perhaps even Andhra Pradesh and Telangana, there is a possibility that an alternative governance ethos to saffron politics may be around the corner.

narayan@thehindu.co.in

A rare honour

Amarjit Singh, an industrialist in England, on Tuesday handing over a letter to CM M.K. Stalin, inviting him on behalf of Lord Patel of Bradford to speak at the House of Lords in the U.K.

Stalin invited to House of Lords

Chennai: Amarjit Singh, founder and CEO of India Business Group, a leading business advisory consultancy in the United Kingdom, on Tuesday called on Chief Minister MK Stalin at the Secretariat and invited him to visit the UK and the House of Lords to enhance the bilateral ties. "Great to meet with the Chief Minister of Tamil Nadu in Chennai. We discussed deepening bilateral ties across a range of industries and sectors," Amarjit Singh said in his tweet and added that the Chief Minister has been invited to visit the House of Lords to enhance the relationship. ENS

சிலம்ப விளையாட்டை அங்கீகரித்த முதல்வருக்கு நன்றி

இந்திய நாடார்கள் பேரமைப்பு அறிக்கை

சென்னை, ஏப்.22-

இந்திய நாடார்கள் பேரமைப்பு தலைவர் சவுந்தர பாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழகத்தில் இளைய சக்தியை ஆக்கப்பூர்வமான வழிகளில் பயன்படுத்தஎப்போதும் முனைப்புடன் செயல்படும் என அறிவித்த இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை தொடர்பான அறிவிப்புக்கு இந்திய நாடார்கள் பேரமைப்பு நன்றி தெரிவித்துக்கொள்கிறது. மேலும் சிலம்பம் விளையாட்டை அங்கீகரித்து வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு வழங்கிய தமிழக முதல்வர் நன்றி. மேலும் சிலம்பம் விளையாட்டை கற்றுக்கொடுக்கும் பயிற்சியாளர்களுக்கும், ஆசான்களுக்கும் உதவித்தொகை அறிவித்து அவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவேண்டும். சிலம்பம் ஒலிம்பிக் போட்டியில் இன்னும் இணைக்கப்படாமல் உள்ளது. இதனால் அரசு உதவியின்றி சொந்த செலவிலேயே வெளிநாடுகளுக்கு சிரமத்துடன் வீரர்கள் சென்று வருகின்றனர்.

எனவே, தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பாட்டத்தை ஒலிம்பிக் போட்டியில் சேர்க்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சட்டமன்றத்தில் 110விதியின் கீழ் விளையாட்டு துறையில் மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் பயன்பெறும் வகையில் அறிவித்த திட்டங்களுக்கும் நன்றி. மக்களின் மனநிலை அறிந்து செயல்படும் தங்களின் தலைமையின் கீழான அரசின் நடவடிக்கைகளால் தமிழக விளையாட்டு வீரர்கள் உலக அரங்கில் உயர்ந்து விளங்க உறுதுணையாக இருப்பீர்கள் என நம்புகிறோம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

முரசொலி
23-April-2022

மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு சலுகைகளை அறிவித்த

தமிழக முதல்வருக்கு நன்றி!

ஆவின் கி.கோபிநாத் அறிக்கை!

சென்னை, ஏப்23-

மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் மானியக் கோரிக்கையில், மாற்றுத் திறனாளிகளுக்கு பல்வேறு புதிய சலுகைகள், அறிவிப்புக்கள், திட்டங்கள் அறிவித்துள்ள தமிழக முதல்வருக்கு தமிழ்நாடு உதவிக்கரம் மாற்றுத் திறனாளர் நல்வாழ்வு சங்க மாநில பொதுச் செயலாளர் டாக்டர் ஆவின் கி. கோபிநாத் நன்றி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தமிழக அரசின் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் மானியக் கோரிக்கையில், அரசு வளாகங்களில் மாற்றுத் திறனாளிகள் ஆவின் பாலகம் அமைக்க வாடகை, முன் தொகை செலுத்துவதிலிருந்து முழு விலக்கு அளித்துள்ளதற்கும், மாற்றுத் திறனாளிகளுக்கு அரசால் வழங்கப்படும்.

திருமண நிதி உதவித் தொகை முழுவதையும் ரொக்கமாக வழங்கிடவும், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை வாயிலாக, வீட்டு மனைப் பட்டா வழங்கப்படும் எனவும், சென்னையில் 1.51 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம் கூடுதலாக அமைக்கப்படும் எனவும், முதுகு தண்டுவடம் பாதிக்கபட்ட மாற்றுத் திறனாளிகள் பயன் பெறும் வகையில், ரூபாய் 1 கோடி செலவில், திருப்பூர், கோவை, திருவண்ணாமலையில் சிறப்பு இல்லங்கள் அமைக்கப்படும் எனவும், மாவட்ட கலெக்டர் நடத்தும் கூட்டம் மற்றும் முக்கிய நிகழ்வுகளில், செவித்திறன் பாதிக்கப்பட்டோர் பயன் பெறும் வகையில், சைகை மொழி பெயர்ப்பாளர் வசதி செய்துத் தரப்படும் எனவும், மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு வேலை வாயப்பில், 4 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்குவதற்கான உயர் மட்டக் குழு ஒன்று அமைக்கப்படும் எனவும், பல்வேறு புதிய அறிவிப்புக்கள் வெளியிட்டு, தமிழகத்தில் உள்ள 25 லட்சம் மாற்றுத் திறனாளர்களின் வயிற்றில் பால் வார்த்துள்ள தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, தமிழ்நாடு உதவிக் கரம் மாற்றுத் திறனாளர் நல்வாழ்வு சங்கம் சார்பில், மனமார்ந்த நன்றியினையும், பாராட்டுக்களையும் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தினகரன்

23-April-2022

ஆல் ரவுண்டர் முதல்வர்

ஒலிம்பிக் உள்ளிட்ட சர்வதேச விளையாட்டு போட்டிகளில் தமிழக வீரர்கள் வெற்றி வாகை சூடுவதற்காக உலகத்தரத்திலான கட்டமைப்புகளுடன் சென்னை அருகே பிரமாண்டமான விளையாட்டு நகரம் அமைக்கப்படும் என்று தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் 110-வது விதியின்கீழ் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

ஒலிம்பிக் போன்ற சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்லும் வாய்ப்பை ஏற்படுத்த, தமிழகத்தின் 4 மண்டலங்களில் தலா ஒன்று வீதம் 4 ஒலிம்பிக் அகாடமிகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் தலா ₹3 கோடி செலவில் சிறு விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்பட உள்ளது. "ஒலிம்பிக் தங்கம் தேடுதல்" என்ற திட்டம் ₹25 கோடியில் செயல்படுத்தப்பட உள்ளது"''' என முதல்வர் தனது அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இது ஒருபுறம் இருக்க, இன்னொருபுறம் இந்தியாவில் விளையாட்டு உலகின் மணிமகுடமாக விளங்கக்கூடிய 44-வது செஸ் ஒலிம்பியாட் போட்டி வரும் ஜூலை 28ம் தேதி முதல் ஆகஸ்ட் 10ம் தேதி வரை தமிழகத்தில் நடக்க உள்ளது. உலகமே வியக்கக்கூடிய வகையில் இந்த போட்டி, தமிழக அரசால் பிரமாண்டமாக நடத்தப்பட உள்ளது. இப்போட்டியில், 180 நாடுகளை சேர்ந்த சதுரங்க விளையாட்டு வீரர்கள் பங்கு பெறுகிறார்கள். இந்த பணிகளும் சிறப்பாக நடந்து வருகிறது. இதன்மூலம் விளையாட்டு துறையில் தமிழகம் முன்னணி மாநிலமாக உயர, வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழக முதல்வராக பதவி ஏற்றதுமுதல் மு.க.ஸ்டாலின் கல்வித்துறை, தொழில்துறை, வேளாண்மை துறை, குடிநீர் வழங்கல்துறை, வருவாய்துறை, மின்சாரத்துறை என ஒவ்வொரு துறையிலும் மேம்பாட்டு பணிகளையும், புதிய திட்டங்களையும் அதிரடியாக அறிவித்து அவற்றை அமல்படுத்தியும் வருகிறார். ஏழை-பணக்காரன் என்ற பாகுபாடின்றி, அனைவரது நலனும் பேணி வருகிறார். நரிக்குறவர் சமுதாய மேம்பாட்டை, இதுவரை தமிழகத்தை ஆண்ட எந்த முதல்வர்களும் கையில் எடுக்கவில்லை. ஆனால், முதல்வர் மு.க.ஸ்டாலின் அச்சமுதாய மக்களின் மேம்பாட்டில் கவனம் செலுத்தி வருவதுடன், "நான் இருக்கிறேன்.., கவலை வேண்டாம்..." என அச்சமுதாய மக்களையும் அரவணைத்து செல்கிறார்.

சென்னை ஆவடியில் அச்சமுதாய மக்களின் வீட்டுக்கே நேரில் சென்று உணவருந்தி வந்துள்ளார். தமிழ்நாட்டில் ஒரு துறை மட்டும் வளர்ந்தால் போதாது, ஒட்டுமொத்த துறைகளும் வளரவேண்டும், இந்திய அளவில், "நம்பர் ஒன் மாநிலம் - தமிழ்நாடு" என்பதை நிலைநிறுத்த வேண்டும் என்ற ஒற்றை கொள்கையுடன் சுழன்று பணியாற்றி வருகிறார். இப்படி இந்திய அரசியல் களம் மற்றும் மாநில அரசு நிர்வாகத்தில் ஒரு "ஆல் ரவுண்டர்" முதல்வராக வலம் வருகிறார் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

பாமக எம்எல்ஏ புகழாரம்

முதல்வர் மு.க.ஸ்டாலினை காமராஜர் போல நினைக்கிறேன்

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் மேட்டூர் சதாசிவம் (பாமக) பேசுகையில், 'மேட்டூர் தொகுதியில், கொளத்தூர் ஒன்றியத்தில் தோனிமடுவு பள்ளத்தில் நீர்த்தேக்கம் அமைக்க வேண்டும். அந்த மக்களை காப்பாற்றுவதில் நம்முடைய முதல்வர், பெருந்தலைவர் காமராஜரை போல நினைக்கிறேன். புகழ்ந்து பேசுகிறேன் என்று நினைக்காதீர்கள். மன்னிக்கவும். புகழ்ந்து பேசக்கூடாது. காரியம் நடக்க வேண்டும்' என்றார். எம்எல்ஏவின் பேச்சை கேட்டு முதல்வர், அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் அனைவரும் சிரித்தனர். இதனால் அவையில் சிரிப்பலை எழுந்தது. தொடர்ந்து எம்எல்ஏ சதாசிவம் பேச்சை தொடர்ந்தார்.

RAJASTHAN APPROACHES TN

Many takers for Illam Thedi Kalvi lesson

R SATHYANARAYANA

CHENNAI: The successful implementation of the 'Illam Thedi Kalvi' (education at doorsteps) scheme in Tamil Nadu has become an inspiration of sorts for several other states, especially the Rajasthan government, who now wish to execute it.

'Illam Thedi Kalvi', launched in October 2021, has been the country's first and single largest post-pandemic educational outreach programme. It is being steered by a massive 1.81 lakh volunteer base with the core objective of bridging learning gaps due to lack of access to structured education during the pandemic among students from Classes 1-8 and even helping those children who dropped out of school during that time.

Pic for representation

A senior official from the School Education Department told *DT Next*, that the scheme has inspired many states which have evinced interest in launching it in their respective regions. "The Rajasthan government interacted with our authorities with regard to the scheme discussing possible ways to use it in their State," he said. Rajasthan authorities also submitted reports to their government and their Chief Minister appreciated Tamil Nadu's efforts in successfully implementing the programme, the official added. Claiming that a panel from Rajasthan is likely to visit Tamil Nadu to seek further details, he added, "Officials from Andhra Pradesh and Karnataka also enquired about the Illam Thedi Kalvi project."

The official said authorities have been instructed to provide all possible help to the other states in this regard. "Field visits might also be arranged for the visiting officials so they can gain practical knowledge. The syllabus, which was developed by the State Council of Educational Research and Training (SCERT), will also be shared if required," he said. Detailed contents from the scheme will also be uploaded on Tamil Nadu's official website.

▲ சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் நிர்வாகப் பிரிவுக்கான 9 மாடிகள் கொண்ட கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டு விழா முதல்வர் ஸ்டாலின் தலைமையில் நேற்று நடைபெற்றது. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா குத்துவிளக்கேற்றி விழாவை தொடங்கிவைத்தார். உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ராமசுப்பிரமணியன், எம்.எம்.சுந்தரேஷ், சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி முனீஷ்வர்நாத் பண்டாரி, தமிழக சட்டத் துறை அமைச்சர் ரகுபதி, அரசு தலைமை வழக்கறிஞர் சண்முகசுந்தரம், தமிழ்நாடு, புதுச்சேரி பார் கவுன்சில் தலைவர் அமல்ராஜ், இந்திய பார் கவுன்சில் துணைத் தலைவர் பிரபாகரன் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர். படங்கள்: ம.பிரபு

தமிழகத்தின் ஒளிமயமான எதிர்காலத்துக்கு கடுமையாக உழைக்கும்

முதல்வர் ஸ்டாலினை மனதார பாராட்டுகிறேன்

● உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா பெருமிதம்

சென்னை

தமிழகத்தின் ஒளிமயமான எதிர்காலத்துக்கு கடுமையாக உழைத்து வரும் முதல்வர் ஸ்டாலினை மனதார வாழ்த்துகிறேன் என்று உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா தெரிவித்தார்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் நேற்று நடந்த விழாவில் பங்கேற்றவர்கள் பேசியதாவது:

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா: 'ஓர்ந்து கண்ணோடாது' என தொடங்கும் திருக்குறள்படி நீதிமன்றங்கள் தங்கள் உரிமையை பாதுகாக்கும் என மக்கள் நம்புகின்றனர். உடனடி காபி, உடனடி நூடுல்ஸ் போல மக்கள் உடனடி நீதிபரிபாலனத்தை எதிர்பார்க்கின்றனர். ஆனால் நீதித் துறையின் நிலையை மக்கள் உணரவில்லை. நீதித் துறைக்கு சீர்திருத்தம் தேவை.

ஆக்கப்பூர்வமான தீர்வுகள் காணும்போது நீதிபதிகள் சட்டத்தை மட்டும் சார்ந்து இருக்காமல் சமூக உண்மையையும் உணர்ந்து செயலாற்ற வேண்டும்.

திருமணத்தில் ஓதப்படும் மந்திரங்கள்போல இல்லாமல், வழக்காடிகள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் வழக்கு விசாரணைகள் இருக்க வேண்டும். நீதிமன்ற விசாரணையில் அந்தந்த மாநில அலுவல்

▲ விழாவில் பேசிய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா.

மொழியை பயன்படுத்துவதில் நடைமுறை சிக்கல்கள் உள்ளன. தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்தி உயர் நீதிமன்றங்களில் மாநில அலுவல் மொழிகளில் வழக்காடுவது குறித்து விரைவில் தீர்வு காணப்படும்.

தமிழகத்தில் நீதித் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், வழக்கறிஞர்களின் நலன் காக்கவும் நடவடிக்கை எடுத்து வரும் முதல்வர் ஸ்டாலினுக்கு எனது நன்றி, வாழ்த்துகள். தமிழகத்தின் ஒளிமயமான எதிர்காலத்துக்கு கடுமையாக உழைத்து வரும் அவரை மனதார வாழ்த்துகிறேன்.

உச்ச நீதிமன்ற நீதிபதி வெ.ராமசுப்பிரமணியன்: இந்திய நீதித் துறைக்கே தமிழகம் முன்னோடி மாநிலமாக செயலாற்றி வருகிறது. கடந்த ஆண்டு 1.33 லட்சம் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. 1.46 லட்சம் வழக்குகள் முடித்து வைக்கப்பட்டுள்ளன. இது இந்திய அளவில் மிகப்பெரிய சாதனை.

உச்ச நீதிமன்ற நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ்: தமிழகத்தில் சட்டக் கல்வி இயக்குநர் பதவி காலியாக உள்ளது. அப்பதவிக்கு மாவட்ட நீதிபதியை நியமிக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் பேசினர்.

விழாவில், சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி முனீஷ்வர்நாத் பண்டாரி, சட்டத் துறை அமைச்சர் ரகுபதி, அரசு தலைமை வழக்கறிஞர் ஆர்.சண்முகசுந்தரம், தமிழ்நாடு, புதுச்சேரி பார் கவுன்சில் தலைவர் பி.எஸ்.அமல்ராஜ், அகில இந்திய பார் கவுன்சில் துணைத் தலைவர் எஸ்.பிரபாகரன், உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி சதாசிவம், ஜம்மு காஷ்மீர் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி பால்வசந்தகுமார், முன்னாள் நீதிபதி என்.கிருபாகரன், தலைமைச் செயலர் இறையன்பு, டிஜிபி சைலேந்திரபாபு, சென்னை காவல் ஆணையர் சங்கர் ஜிவால், பார் கவுன்சில் செயலாளர் சி.ராஜகுமார், பார் கவுன்சில் உறுப்பினர்கள், வழக்கறிஞர்கள் சங்கத்தினர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

மக்கள் குரல்

24-April-2022

வழக்காடு மொழி கோரிக்கை விரைவில் நிறைவேறும்

தமிழ்நாட்டின் ஒளிமயமான எதிர்காலத்திற்காக முதல்வர் ஸ்டாலின் கடுமையாக உழைக்கிறார்: சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி பாராட்டு

சென்னை, ஏப்.24

தமிழ்நாட்டின் ஒளிமயமான எதிர்காலத்துக்காக கடுமையாக உழைக்கும் உழைப்பாளியாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளார் என்று சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி என்.வி.ரமணா பாராட்டியுள்ளார்.

சென்னை ஐகோர்ட்டில் நேற்று நடந்த கட்டிட அடிக்கல் நாட்டு விழாவில் சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி என்.வி.ரமணா பேசியதாவது:

தமிழர்கள் தங்களது அடையாளத்தையும், மொழியையும், கலாசாரத்தையும் எப்போதுமே பாதுகாக்கக்கூடியவர்கள். குறிப்பாக தங்கள் தாய்மொழியை பாதுகாக்கும் போராட்டத்தில் முதலில் நிற்பார்கள். இப்போது அல்ல 1965ம் ஆண்டே தாய்மொழிக்காக மிகப்பெரிய போராட்டத்தில் ஈடுபட்டவர்கள். அப்போது நான் சென்னையில் உள்ள உறவினர் வீட்டுக்கு வந்திருந்தபோது அந்த போராட்டத்தை பார்த்தேன்.

நீதி பரிபாலனம் என்பது அரசியல் அமைப்பு சட்டத்தின்படியான நீதிபதிகளின் கடமை மட்டும் அல்ல, அது ஒரு சமூக பொறுப்புகளுடன் கூடியது ஆகும். இந்தியா போன்ற நாடுகளில் நீதிபதிகள் கண்ணை மூடிக்கொண்டு சட்டத்தை பின்பற்றி விட முடியாது. சமூக நடைமுறைகளையும் பின்பற்ற வேண்டும். சமுதாய மாற்றங்களை நீதிபதிகள் கவனிக்க வேண்டும்.

சீர்திருத்தம்

உடனடி காபி, உடனடி நூடுல்ஸ் போல உடனடி நீதியையும் பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். ஆனால், நீதித்துறையின் உண்மையான நிலையை அவர்கள் உணர்வது இல்லை. பொதுமக்கள் தங்களது உரிமைகளை கோர்ட்டுகள் பாதுகாக்கிறது என்று நம்புகின்றனர். இதற்காக நீதித்துறையில் சீர்திருத்தம் தேவைப்படுகிறது.

பொதுமக்கள் நீதி பரிபாலனங்களில் பங்கேற்க வேண்டும். அதற்கு மொழி அவர்களுக்கு தடையாக இருக்கக்கூடாது. கோர்ட்டுகளில் தன் வழக்கு என்ன நிலையில் செல்கிறது? என்பதை பொதுமக்களுக்கு தெரியவேண்டும். மாறாக கோவிலில் மந்திரம் சொல்வது போல, புரியாத மொழிகளில் வழக்குகளை நடத்தக்கூடாது.

வழக்காடு மொழி

அரசியல் சாசனத்தின் அடிப்படையில், அந்தந்த

சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற நீதிமன்றக் கட்டட திறப்பு மற்றும் அடிக்கல் நாட்டு விழாவிற்கு வருகை தந்தை சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி என்.வி. ரமணாவை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வரவேற்று புத்தகம் வழங்கினார். ஐகோர்ட் தலைமை நீதிபதி முனீஷ்வர்நாத் பண்டாரி உடன் உள்ளார்.

மாநில மொழிகளை வழக்காடும் மொழியாக ஐகோர்ட்டுகளில் கொண்டு வரவேண்டும் என்று பல கோரிக்கைகள் வருகின்றன. இதற்காக பல விவாதங்கள் நடக்கின்றன. உள்ளூர் மொழியை வழக்காடும் மொழியாக அறிவிக்க பல தடைகள் உள்ளன. ஆனால், வழக்காடும் மொழி கோரிக்கை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக விரைவில் நிறைவேறும் என்று உறுதி அளிக்கிறேன்.

நீதித்துறையின் உள்கட்டமைப்பை மாற்றி அமைத்து, மக்கள் தொகைக்கு ஏற்ப நீதிபதி பணியிடங்களை அதிகரிக்க வேண்டும். அப்போதுதான், வழக்குகளை விரைவாக முடித்துக் கொண்டு வரமுடியும்.

நாடு முழுவதும் உள்ள ஐகோர்ட்டுகளில் 388 நீதிபதி பணியிடங்கள் காலியாக உள்ளன. இதை நிரப்ப தீவிர நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சுப்ரீம் கோர்ட் கிளையை சென்னையில் அமைக்க மத்திய அரசு விரும்புகிறதா? என்பது பற்றி எனக்கு தெரியாது.

தமிழ்நாட்டின் ஒளிமயமான எதிர்காலத்துக்காக கடுமையாக உழைக்கும் உழைப்பாளியாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளார். அதற்காக அவரை வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக சுப்ரீம் கோர்ட் நீதிபதி வி.ராமசுப்பிரமணியன் பேசும்போது, "என்னையும், நீதிபதி எம்.எம். சுந்தரேசையும், இந்த மண்ணின் மைந்தர்கள் என்று ஐகோர்ட் தலைமை நீதிபதி முனீஷ்வர்நாத் பண்டாரி குறிப்பிட்டார். ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தில்தான் முன்பு ஆந்திராவும் இருந்தது. சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி என்.வி.ரமணாவும் இந்த மண்ணின் மைந்தர்தான். மேலும், நாட்டிலேயே அதிக வழக்குகளை பைசல் செய்து முதல் இடத்தில் இருப்பது சென்னை ஐகோர்ட்தான். கடந்த ஆண்டு மட்டும், 1 லட்சத்து 33 ஆயிரத்து 799 வழக்குகள் தாக்கலாகி உள்ளது. 1 லட்சத்து 46 ஆயிரத்து 344 வழக்குகள் பைசல் செய்துள்ளது. இது இந்திய நீதித்துறையில் மிகப்பெரிய சாதனை ஆகும்" என்றார்.

சுப்ரீம் கோர்ட் நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ் பேசும்போது, "தமிழ்நாட்டில் சட்டப்படிப்பின் தரத்தை உயர்த்தும் விதமாக தமிழ்நாடு சட்டக்கல்வி இயக்குனர் பதவிக்கு மாவட்ட நீதிபதியை நியமிக்க தமிழ்நாடு அரசு பரிசீலிக்க வேண்டும்" என்று கோரிக்கை விடுத்தார்.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் தலைவர் பி.எஸ்.அமல்ராஜ், வக்கீல்கள் நலனுக்காக பல கோரிக்கைகளை முன் வைத்து பேசினார்.

Ensure social justice in the appointment of Judges: Stalin

According to Stalin, the Parliament, Assembly & Judiciary should function reflecting the feelings of the people

INDO-ASIAN NEWS SERVICE
CHENNAI, 23 APRIL

Tamil Nadu Chief Minister M. K. Stalin on Saturday requested Chief Justice of India N.V. Ramana and other judges to consider social justice in appointment of judges, setting up of the apex court bench here and use of Tamil in the Madras High Court.

Speaking at the foundation stone laying function at the Madras High Court here, Stalin requested that the Collegium may ensure the principle of social justice in the appointment of High Court and Supreme Court judges.

"In this way, I consider that the principle of inclusiveness would be ensured in higher judiciary," Stalin said.

He also requested for the setting up of a bench of the Supreme Court at Chennai and the use of Tamil - the official language of Tamil Nadu in the Madras High Court.

"Already four States namely - Rajasthan, Uttar Pradesh, Bihar and Madhya Pradesh - use their official language of the State in their respective High Courts. This is a long pending and important request of the people and legal community of the State," Stalin said.

According to Stalin, the Parliament, Assembly and Judiciary should function reflecting the feelings of the people and Ramana is functioning like that.

He said the state government has issued orders for setting up of commercial courts and is taking steps to move the local courts functioning in rented buildings to their own premises.

On the welfare of advocates, Stalin announced that the state would soon disburse Rs 20 crore to the lawyers who died due to Covid-19 and the increase in death benefit by Rs 3 lakh to Rs 10 lakh under the Tamil Nadu Advocates Welfare Fund.

Ramana laid the foundation stone for the nine-storeyed building in the Madras High Court complex and also inaugurated other judicial buildings. On his part, Stalin inaugurated the commercial court building here.

TRINITY MIRROR

24-April-2022

Judges to weigh social economic factors before delivering Judgment: CJI

Stalin ensures adequate infra for judiciary

Chennai, Apr 24: Judges have to weigh several socio-economic factors and the impact of the decisions on society before delivering judgments, Chief Justice of India N.V. Ramana said at the function held at Madras High Court.

CJI thanked Chief Minister Stalin for ensuring creation of adequate infrastructure for the judiciary in the State.

Chief Justice of India (CJI) N.V. Ramana said The constructive resolution of conflicts was not a mere technical job, particularly in a country like India where judges cannot blindly apply rules, procedures and statutes as, after all, conflicts have a human face. Judges have to weigh several socio-economic factors and the impact of the decisions on society before delivering judgments.

Speaking at an event at the Madras High Court, in the presence of Chief Minister M. K. Stalin, the CJI said he firmly believed that the judiciary should never be viewed as a mere enforcer of law, but as an engine of social integration. "Judging is not an easy task. Judges have to be aware of social realities. You have to carefully watch the changing social needs and expectations," he said.

Justice Ramana said, "The world is moving very fast. We are witnessing this change in every sphere of life. In this era of instant noodles, people expect instant justice, but they have not realised that real justice will be a casualty if we strive for instant justice. Judges have to sharpen our ideas and perceptions, we need to expand our knowledge base and adapt technology. There cannot be a gap between the mind of a judge and the needs of society. Ultimately, we are entrusted with the duty of dispensing justice to all."

Praising the Tamils for being at the forefront of protecting cultural and linguistic rights in the country, he recalled the anti-Hindi agitations of 1960s in the city, which he had visited as a child. He praised the luminaries of the Madras Bar and Bench for their immense contribution to nation-building.

"Language barrier is an issue of concern as most people will want to understand court proceedings in their regional languages. The demand for using local language shall be met with in the near future with the assistance of technical advancements including artificial intelligence," Justice NV Ramana said during his maiden visit to the Madras High Court. Justice NV Ramana also wanted the judges to sharpen their ideas and perception and expand their knowledge.

As CM Stalin requested the CJI to establish the southern bench of the Supreme Court, the CJI recalled a private member bill moved by DMK MP P Wilson in the Parliament. "I am not aware whether the government has taken any decision on it. However, we are having the online hearing facility that will help advocates argue their cases from anywhere," the CJI noted.

Speaking about the judges' appointments, he said the collegium is following the inclusivity to appoint judges. "The appointments are made by considering all sections, genders and geography. I have asked the HC CJs to send recommendations for 388 judges' vacancies out of 1,104 sanctioned strength," the CJI said.

The CJI maintained that improving the judicial infrastructure has been his top priority and it is important to contemplate how to improve the functioning of the judiciary to reach out to the people.

தினகரன்

25-April-2022

ஆண்டுக்கு 6 கிராம சபை கூட்டங்கள்

தமிழக அரசின் அறிவிப்புக்கு கமல்ஹாசன் வரவேற்பு

சென்னை, ஏப். 25: தேசிய பஞ்சாயத்து ராஜ் தினம் நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி, மக்கள் நீதி மய்யம் கட்சி நிர்வாகிகளுடன் அதன் தலைவர் கமல்ஹாசன் காணொலி மூலம் கலந்துரையாடினார். அப்போது அவர் பேசியதாவது:

கிராம சபைகள் பற்றி மக்கள் மத்தியில் கொண்டு சென்றதில் மக்கள் நீதி மய்யத்தின் பணி மகத்தானது. இது மக்களுக்கு கிடைத்த வெற்றி. கிராம சபை கூட்டங்களை ஆண்டுக்கு 6 ஆக உயர்த்திய தமிழக அரசின் முடிவு வரவேற்கத்தக்கது. பாராட்டுகள். கூட்டத்தின் எண்ணிக்கையை அதிகரித்தால் மட்டும் போதாது. அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை செயல்படுத்த வேண்டும். அவ்வாறு செயல்படுத்துவதை மக்கள் கண்கூடாகப் பார்க்க வேண்டும். அரசும் இதை கண்காணிக்க வேண்டும். அப்போதுதான் கிராம சபை கூட்டங்களுக்கு முழு வெற்றி கிடைத்ததாக அர்த்தம்.

மக்கள் நலன் என்ற பாதையில் இருந்து அரசியல் கட்சிகள் நழுவிவிடக் கூடாது. நான் அரசியலுக்கு வந்ததும், நாம் அரசியலுக்கு வந்ததும் அதற்காகத்தான். அதில் கொஞ்சம் கூட நழுவாமல் மக்கள் நீதி மய்யம் செயல்படுகிறது. சுயநலத்துக்காகவும், ஆதாயங்களுக்காகவும் எடுக்கப்படும் முடிவுகளை விமர்சிப்போம். மாற்றங்களைக் கொண்டு வந்தால் வரவேற்போம். பாராட்டுவோம். அரசியலில் உறவும் தேவை இல்லை. பகையும் தேவை இல்லை.

அரசாங்கம் நிறைவேற்றிய தீர்மானத்தை ஆளுநர் நிறைவேற்றவில்லை. விளையாடிக் கொண்டிருக்கிறார். அதற்கு என்ன காரணம்? ஜனநாயகம் இருப்பது போல் பிரம்மை தெரிகிறது. ஆனால், ஜனம் தனியாகவும், நாயகம் தனியாகவும்தான் இருக்கிறது. கிராம சபை கூட்டங்களை அதிகமாக நடத்த வேண்டும். அதேவேளையில், கண்துடைப்புக்காக நடத்திவிடக் கூடாது. எந்த மாற்றமும் வரவில்லை என்று சோர்ந்துவிடக் கூடாது. நம்பி செயல்படுவோம். நம்பிக்கையுடன் செயல்படுவோம். இவ்வாறு கமல்ஹாசன் பேசினார். இதை தொடர்ந்து மக்கள் நீதி மய்யம் கட்சி நிர்வாகிகளும், உறுப்பினர்களும் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

இந்தியாவிலேயே முன்மாதிரி நிருவாக அமைப்பாக 600 ஊராட்சிகளில் 'ஊரகச் செயலகம்' அமைக்கும் திட்டம்

முதலமைச்சர் ஸ்டாலினின் திராவிட மாடலுக்கு சபாஷ்!

நாடும் நடப்பும்

ஆர் முத்துக்குமார்

இந்தியாவின் உயிரோட்டம் ஊரகப் பகுதிகளில்தான் உள்ளது என்றார் மகாத்மா காந்தியடிகள். இது மிகவும் ஆழமான பொருள்தரக் கூடிய உண்மையான சொற்றொடர் என்றே கூற வேண்டும். தேசிய ஊராட்சிகள் நாளான நேற்று டுவிட்டரில் பதிவிட்ட பிரதமர் மோடி, ஊராட்சி அமைப்புகள் இந்திய மக்களாட்சியின் தூண்கள் என்றும் அதன் பலத்தில் புதிய இந்தியாவின் செழுமை உள்ளது என்றும் தன்னம்பிக்கை மிக்க இந்தியாவை உருவாக்குவதில் நமது ஊராட்சிகளை வலுப்படுத்த உறுதி ஏற்போம் என்றார்.

அதேநாளில் ஜம்மு காஷ்மீரில் பேசியமோடி, நாட்டின் வளர்ச்சியில் ஊராட்சிகளின் பங்கு முதன்மையானது. ஊராட்சி நிர்வாகம், ஜனநாயகத்தின் அடித்தட்டு மக்களின் பங்களிப்புக்கு மிகவும் முக்கியமானது. ஊரகப் பகுதிகளின் வளர்ச்சிக்கான ஒவ்வொரு திட்டத்தையும் திட்டமிட்டு செயல்படுத்துவதில் ஊராட்சி நிர்வாகத்தின் பங்கு ஆழமாக இருக்க வேண்டும். நாட்டு வளர்ச்சிக்கான திட்டங்களை நிறைவேற்றுவதில் ஊராட்சி ஒரு முக்கிய இணைப்பாக இருக்கும் என்றும் அதுவே இந்திய விடுதலையின் பொற்காலம் என்றும் கூறினார்.

அந்த வகையில் ஊரகப் பகுதிகளை உயிரோட்டமாக வைக்க வேண்டும் என்றால், நிருவாக முறை அங்கிருந்து தொடங்க வேண்டும். தலைமைச் செயலகத்தில் இருந்து எந்த ஒரு ஊரகப் பகுதியின் தேவைகளையும் நிறைவேற்றி வைப்பது உடனடியாக முடியக்கூடிய செயலல்ல. ஊராட்சிகளில் வாழும் வேளாண் குடிமக்களோ, அல்லது ஊரகப் பகுதிகளுக்கே உரிய சிறுசிறு தொழில், வணிகம் செய்யும் மக்களோ தங்களுக்கு தேவையான அரசு உதவிகளையோ, அரசு சான்றிதழ்களையோ பெற நகரத்தை நோக்கி படை எடுக்க வேண்டி உள்ளது. அது அத்தனை எளிதாக நடக்கக்கூடியதாகவும் இருப்பதில்லை. அதனால், பல நாட்கள் அலைய வேண்டியும், அவர்களுக்கு வரும் சிறு வருவாயை, இதற்காக பெருமளவு செலவு செய்வது என்பதும் தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

திருப்பிப்போடும் திட்டம்

இதை எல்லாம் கருத்தில் கொண்டே, எதிலும் முன்னோடும் பிள்ளையாக இருக்கக்கூடிய தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின், நாட்டிலேயே முதன் முறையாக நிருவாக அமைப்பை திருப்பிப்போடும் விதமாக, ஒரு மாநிலத்துக்கு தலைமைச் செயலகம் என்பது எப்படி முதன்மையானதோ, அதேபோல ஒவ்வொரு ஊராட்சிக்கும் கணினி வசதியுடன் கூடிய ஒரு 'ஊரகச் செயலகம்' முதன்மையான தேவை என்பதை கருத்தில் கொண்டு, 4 நாட்களுக்கு முன்னரே மிகவும் தொலைநோக்கோடு இத்திட்டத்தை சட்டப்பேரவையில் அறிவித்துள்ளார். அதிலும் இந்த ஆண்டிலேயே முதற்கட்டமான 600 ஊராட்சிகளில் 'ஊரகச் செயலகம்' அமைக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார். இது இன்னும் சில ஆண்டுகளில் ஊரகப்பகுதிகளை மீட்டெடுக்கும் புதுமையான, அருமையான திட்டம் என்பதை மறுக்க முடியாது.

அதுதவிர, ஊராட்சிகளின் செயல்பாடுகளை மேம்படுத்தும் விதமாக, கிராம சபைக் கூட்டங்களை ஆண்டுக்கு 6 முறை கூட்டுவது என்றும் முதலமைச்சர் அறிவித்திருக்கிறார். ஏறத்தாழ 2 மாதத்துக்கு ஒரு முறை மக்களின் குறைகளை இந்த கிராம சபைகளில் வெளிப்படுத்தவும், அவர்களுடைய துயர் துடைக்கவும் இதன் மூலம் வாய்ப்பு ஏற்படும் என்பது நீதியை விரைவாக்கும் ஒரு சிறந்த பணி என்றே சொல்ல வேண்டும். மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆண்டுதோறும் ஒரு சிறந்த ஊராட்சித் தலைவரை தேர்ந்தெடுத்து உத்தமர் காந்தி விருதுடன் ரூ.10 லட்சம் பரிசு வழங்கும் திட்டமும் ஊராட்சி தலைவர்களிடையே, சிறந்த நிருவாகத்தை கொடுக்க, போட்டியை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

திட்டத்தின் நோக்கம்

இந்த திட்டத்தை முதலமைச்சர் ஸ்டாலின் சட்டப்பேரவையில் அறிவிக்கும் போதே, உள்ளாட்சியில் நல்லாட்சி என்ற நோக்கத்துடன், மக்களாட்சியின் மாண்பினை ஊரக அளவில் உறுதி செய்திட ஏதுவாக, ஊரக வளர்ச்சித் துறை, வருவாய்த் துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மற்றும் சமூக நலத்துறை போன்ற முக்கிய துறைகளின்மூலம் செயல்படுத்தப்படக்கூடிய அரசின் பல்வேறு திட்டங்களை, ஊராட்சி அளவில் ஒருங்கிணைந்து செவ்வனே நிறைவேற்றும் வகையில், இந்த ஊரகச் செயலகங்களில் ஊராட்சித் தலைவருக்கான அறை, அனைத்துத் துறை கூட்ட அரங்கம், கிராம நிர்வாக அலுவலருக்கான அறை, ஊராட்சிச் செயலருக்கான அறை, இணைய வசதி, கழிவறை வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் கொண்டதாக இருக்கும் என்று அறிவித்தார்.

தலைமைச் செயலகத்தில் இருந்து திட்டங்களை வகுத்து, அதற்கான அரசாணைகளை அரசு பிறப்பித்தாலும், அவற்றினை மக்களிடம் கொண்டு சேர்க்கும் முக்கிய பணியை ஆற்றிக் கொண்டிருப்பது உள்ளாட்சி அமைப்புகள்தான். அந்தக் காரணத்திற்காகத்தான், நாங்கள் ஊரக, உள்ளாட்சி அமைப்புகளுக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறோம் என்று கூறி, இந்த ஊரகச் செயலகங்கள் அமைக்கும் திட்டத்தை இந்தியாவிலேயே முதன் முதலாக அறிவித்துள்ளார் முதலமைச்சர். வரவேற்று பேசிய பாரதிய ஜனதா உள்ளிட்ட சட்டப்பேரவை கட்சித் தலைவர்களும் கூட, நிருவாக முறையையே புரட்டிப்போடும் புரட்சிகரமான திட்டம் என்று பாராட்டி உள்ளனர் என்பதையும் கவனிக்க வேண்டும்.

திராவிட மாடல்

திமுக உள்ளிட்ட திராவிட கட்சிகளின் அடிநாதமான கொள்கையே 'மாநிலத்தில் சுயாட்சி; மையத்தில் கூட்டாட்சி' என்பதுதான். இதன் பொருள், அதிகாரத்தை பரவலாக்குவதும், எளிமையாக்குவதும், பொதுமக்களிடம் நெருக்கமாக இருக்கக் கூடியவர்களிடம் அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்பதும்தான். அதனை சொல்லளவில் இல்லாமல் செயல் அளவில் செயல்படுத்திக் காட்டும் திட்டமே முதலமைச்சர் ஸ்டாலினின் இந்த ஊரகச் செயலகத் திட்டம்.

தமிழ்நாடு முதலமைச்சர் மட்டுமின்றி, நிதி அமைச்சரும் இதனை அடிக்கடி வலியுறுத்தி கூறுவதை அண்மை காலமாக நாம் கவனித்து வருகிறோம். இந்திய ஒன்றிய அரசுக்கு மக்கள் கிடையாது. மாநிலங்களுக்குத்தான் மக்கள் இருக்கிறார்கள். அந்த மாநில மக்களுடைய தேவைகளை மட்டுமின்றி, சேவைகளையும் கூட மாநில அரசுகளால்தான் உடனடியாக நிறைவேற்றித் தர முடியும் என்பதே இந்த மாநில உரிமைக்குரல். இது உலகம் முழுவதும் இப்போது நடைமுறையில் உள்ளதுதான்.

வீடுகள் சேர்ந்து தெருக்களாகவும் தெருக்கள் இணைந்து சிற்றூராகவும் சிற்றூர்கள் சேர்ந்து ஒரு ஊராட்சியாகவும் நிர்வாக அமைப்பை பெறுகிறது. அந்த ஊராட்சிகள் இணைந்து ஒரு ஊராட்சி ஒன்றியம், பல ஊராட்சி ஒன்றியங்கள் இணைந்து ஒரு மாவட்டம், பல மாவட்டங்கள் இணைந்து ஒரு மாநிலம், அந்த மாநிலத்தின் நிர்வாகத்துக்கு ஒரு தலைமை செயலகம் என்ற படி நிலை அமைப்பு உள்ளது.

அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்ற திமுகவின் அடிப்படை கொள்கையை செயல்படுத்தும் விதமாகவே, இந்த படிநிலையின் முதல்கட்டத்திலேயே நிர்வாகத்தை உறுதிப்படுத்தும் விதமாக, முதலமைச்சர் ஸ்டாலின் 'ஊரகச் செயலகத்தை' அமைத்துள்ளது மிகப்பெரிய புரட்சித் திட்டம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஊரகப்பகுதி நகரப்பகுதி என்று இல்லாமல், அனைவருக்கும் அனைத்தும் சமமாக சமத்துவத்துடன் கிடைக்க வேண்டும் என்ற நோக்கமே முதலமைச்சர் ஸ்டாலின் கூறும் திராவிட மாடல் என்றால், அதனை பாராட்டி வரவேற்பதுடன் இந்தியாவின் மற்ற மாநிலங்களும் இதனை பின்பற்ற வேண்டும் என்று நிச்சயமாக வலியுறுத்தலாம்.

துணைவேந்தர்கள் நியமன மசோதாவுக்கு கமல் வரவேற்பு

'முன்பே செய்திருக்க வேண்டும்'



சென்னை, ஏப். 25-

துணைவேந்தர்களை அரசே நியமிக்க வேண்டும் என்ற சட்ட மசோதா இன்று சட்ட சபையில் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டன. இதற்கு அ.தி.மு.க., பா.ஜனதா ஆகிய கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. கமலின் மக்கள் நீதி மய்யம் இந்த மசோதாவுக்கு வரவேற்பு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக கமல் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் கூறி இருப்பதாவது:-

துணைவேந்தர்களை மாநில அரசே நியமிக்க தாக்கல் செய்யப்பட்ட சட்ட மசோதாவை மக்கள் நீதி மய்யம் வரவேற்கிறது. பொது பல்கலைக்கழகங்கள் சட்ட திருத்த மசோதாவை மகாராஷ்டிரா அரசு கொண்டு வந்த போதே தமிழகம் இதனை முதலில் மேற்கொண்டிருக்க வேண்டும் என்ற நம் அறிக்கையை ஏற்று செயல்பட்ட அரசுக்கு நன்றி.

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

அத்துடன் 30.12.2021 அன்று கவர்னரின் அதிகாரத்தை தி.மு.க. அரசு மறுவரையறை செய்ய வேண்டும் என்று மக்கள் நீதி மய்யம் சார்பில் கேரளா மற்றும் மகாராஷ்டிராவை மேற்கோள்காட்டி வெளியிட்ட அறிக்கையையும் இணைத்து வெளியிட்டுள்ளார்.

THE NEW INDIAN EXPRESS
25-April-2022

State supporting judiciary's projects: CJ

EXPRESS NEWS SERVICE
@Thanjavur/Tiruchy

Chief Justice Munishwar Nath Bhandari speaks in Pattukkottai | EXPRESS

ACKNOWLEDGING the chief minister's support, Madras High Court Chief Justice Munishwar Nath Bhandari on Sunday mentioned that the State government has been supportive of the judiciary's projects, be it in allocation of land or lending financial assistance in construction of buildings for courts.

The chief justice made the statement after inaugurating the District Munsif-cum-Judicial Magistrate Court at Peravurani via video-conferencing from Pattukkottai in Thanjavur district. With regard to the demand for a lift facility at the district court campus, the chief justice said sanction would be given for the same. As far as lawyers' chambers is concerned, it would be made available not only for Thanjavur but for all districts in the State, he assured. Basic facilities need to be made available for the public and the lawyers, he added.

Later in the day, Justice Bhandari inaugurated a guest house constructed at a cost of ₹2.08 crore at the Tiruchy district integrated court complex. Following this, he said, "Tiruchy is the centre of Tamil Nadu, the city of spirituality and a clean city. I am proud to come to such a city."

While pointing to the need for more judges to handle the pending cases in the State, Justice Bhandari said Tamil Nadu still emerges as a pioneer State in handling cases. Not only judges but the lawyers too are responsible for the feat, he added.

முரசொலி

26-April-2022

தலைமை நீதியரசரின் தலைசிறந்த பாராட்டு!

சென்னை உயர்நீதிமன்றத்தில் நடந்த நிகழ்ச்சியும், அதில் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்ட பாராட்டும் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பதிவு செய்ய வேண்டியவை ஆகும். நீதித்துறையில் இருப்பவர்களின் பாராட்டு என்பது மிகச் சாதாரணமாகக் கிடைத்து விடுவது இல்லை. இன்னும் சொன்னால் நீதிபதிகள் வெளிப்படையான பாராட்டுகளைப் பொதுமேடைகளில் வெளிப்படுத்தும் சூழ்நிலைகள் அமைவதும் இல்லை. ஆனால் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை இந்திய நீதித்துறையின் மிக உயர்ந்த பொறுப்பில் – அதாவது உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருக்கும் என்.வி.ரமணா அவர்கள் பாராட்டிய பாராட்டு என்பது இதுவரை கிடைத்த பாராட்டுக்களில் தலையாய பாராட்டு ஆகும். தலைசிறந்த பாராட்டு ஆகும்.

"I appreciate the efforts of the Government of Tamil Nadu for extending a helping hand for the cause of lawyers.

I would like to compliment the Chief Minister, who is working hard for the bright future of the state.

Chief Justice Mr. Bhandari informs me, that the Chief Minister and the government are extremely co-operative in his efforts to strengthen the judiciary" என்பதுதான் மாண்பமை உச்சநீதிமன்ற நீதியரசர் அவர்களின் பாராட்டு ஆகும்.

"தமிழ்நாட்டின் ஒளிமயமான எதிர்காலத்துக்காக முதலமைச்சர் அவர்கள் மிகக் கடுமையாக உழைத்துக் கொண்டு இருக்கிறார்" என்று பாராட்டி இருப்பவர் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் என்.வி.ரமணா அவர்கள். கடந்த பதினோரு மாதகாலமாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆற்றி வரும் பணிகளுக்கும் உழைப்புக்கும், செயல்பாட்டுக்கும் உச்சநீதிமன்றமே வழங்கிய பாராட்டுப் பத்திரம்தான் இது.

"தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நீதித்துறையுடன் இணைந்து செயல்படுவதாகவும், அதன் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றித் தருவதாகவும் சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி பண்டாரி அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள்" என்றும் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி என்.வி.ரமணா அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதாவது உச்சநீதி மன்ற தலைமை நீதியரசர் அவர்களும், உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர் அவர்களும் முதலமைச்சர் குறித்து எவ்வளவு உயர்வாக தங்களுக்குள் பேசிக் கொண்டுள்ளார்கள் என்பது இதன் மூலமாகத் தெரிய வந்துள்ளது.

அதே விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மூன்று முக்கியமான கோரிக்கைகளை உச்சநீதிமன்ற தலைமை நீதியரசர் அவர்கள் முன்னால் வைத்தார்கள்.

• உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் சமூக நீதியும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

• தமிழ் மொழியினையும் உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்காடு மொழியாக ஆக்க வேண்டும்.

• பொதுமக்கள் மற்றும் வழக்கறிஞர்களின் நலனைக் கருத்தில் கொண்டு உச்சநீதிமன்றத்தின் ஒரு கிளையினை சென்னையில் அமைக்க வேண்டும்

– என்பதுதான் முதலமைச்சர் அவர்கள் வைத்த கோரிக்கைகள் ஆகும். இவை மூன்றுக்கும் அதே மேடையில் உச்சநீதிமன்ற நீதியரசர் அவர்கள் பதில் அளித்ததுதான் முதலமைச்சருக்குக் கிடைத்த மற்றொரு வெற்றியாகும்.

• That social representation should definitely be considered while appointing judges. **(நீதிபதிகளை நியமிக்கும்போது சமூகப் பிரதிநிதித்துவம் நிச்சயமாகப் பரிசீலிக்கப்பட வேண்டும்)**

• That there is already a private member Bill for the establishment of Regional Benches of Supreme Court introduced by MP P. Wilson & Union Government should take a call on it. **(உச்சநீதி மன்றத்தின் மண்டல அளவிலான கிளைகளை அமைப்பது குறித்து ஏற்கனவே மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் அவர்களால் நாடாளுமன்றத்தில் தனிநபர் மசோதா அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஒன்றிய அரசு முடிவு செய்யும்)**

• It is important that regional languages are made languages of the court because the litigant must understand the process of administration of justice. It should not be like chanting of mantra that no one understands. **(எவருக்கும் புரியாத வகையில் மந்திரம் உச்சரிப்பதைப் போன்று இல்லாமல், வழக்காடுபவர்கள் நீதித்துறையின் நிர்வாக செயல்பாடுகளை புரிந்து கொள்ளும் வகையில் நீதிமன்றங்களின் வழக்காடு மொழியாக மாநில மொழிகள் ஆக்கப்பட வேண்டியது அவசியம்)**

– இவைதான் முதலமைச்சர் அவர்களுக்கு உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி அளித்த பதில்கள் ஆகும். இவை பதில்கள் மட்டுமல்ல, முதலமைச்சர் அவர்களின் சிந்தனைதான் உச்சநீதிமன்ற நீதியரசர் அவர்களுக்கும் இருக்கிறது என்பதற்கான எடுத்துக்காட்டுகள் ஆகும்.

"உயர் நீதிமன்றம் மற்றும் நீதிமன்றங்களுக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. உயர்நீதிமன்ற வளாகத்துக்கு அருகில் உள்ள நிலத்தை வழங்கியுள்ளது தமிழ்நாடு அரசு" என்று பாராட்டு தெரிவித்துள்ளார் சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி முனீஷ்வர்நாத் பண்டாரி அவர்கள்.

அதாவது உச்சநீதிமன்றமும் உயர்நீதிமன்றமும் ஒருசேர இணைந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களைப் பாராட்டிப் போற்றி உள்ளது.

உழைப்பு, உழைப்பு, உழைப்பு என்பது, கட்சி எல்லைகளைக் கடந்து, மாநில எல்லைகளைக் கடந்து, அரசியல் எல்லைகளைக் கடந்து பாராட்டப்படுவதுதான் பெருமகிழ்ச்சிக்குரியது!

●●

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
26-April-2022

சமத்துவத்தை செயலில் காட்டினார், மு.க.ஸ்டாலின்!

“இருட்டறையில் இருக்குதடா உலகம்; சாதி இருக்கிறதென்போனும் இருக்கின்றானே” என்று வேதனையோடு தன் உணர்வுகளை கொட்டினார், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அன்று. அந்த இருட்டிலிருந்து தமிழ்நாட்டை வெளிச்சத்துக்கு கொண்டுவரவும், சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கவும் பணியாற்றிவரும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், பெரியார் பிறந்தநாளை சமூக நீதி நாளாக அறிவித்த அடுத்தநாளே, அண்ணல் அம்பேத்கரின் பிறந்தநாளை சமத்துவநாள் என்று கொண்டாடப்படும் என அறிவித்தார்.

தான் சொன்னதை ஏற்கனவே சில மாதங்களுக்கு முன்பே செய்து காட்டினார், முதல்-அமைச்சர். ‘வாட்ஸ்-அப்’பில் மாமல்லபுரம் அருகிலுள்ள பெருமாள்கோவில் அன்னதான நிகழ்ச்சியில், எல்லோருடனும் உட்கார்ந்து சாப்பிட நரிக்குறவ பெண் அஸ்வினி அனுமதிக்கப்படாததை பார்த்து, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபுவை அழைத்து, ‘அந்த பெண்ணை சாப்பிட வைக்கவேண்டும்’

என்று கூறியவுடன், அமைச்சர் அந்த பெண்ணை அழைத்து, அருகில் உட்காரவைத்து சாப்பிடவைத்தார்.

அதோடு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் விட்டுவிடவில்லை. அந்தப்பெண், உறவினர்கள் வாழும் பூஞ்சேரி கிராமத்துக்கு நேரில் சென்று அங்குள்ள மக்களிடம் என்ன குறையிருக்கிறது? என்று கேட்டு, அவர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டை, வீட்டுமனை பட்டாக்கள், சாதி சான்றிதழ், முதியோர் உதவித்தொகை என பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அதோடு விட்டுவிடவில்லை. உடனடியாக, அனைத்து மாவட்ட கலெக்டர்களும், “நரிக்குறவர், பழங்குடியின மக்கள், இதர விளிம்புநிலை மக்கள் வசிக்கும் ஒவ்வொரு கிராமத்துக்கும் சென்று, அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்கவேண்டும்” என்று உத்தரவிட்டார்.

இதன் விளைவாக, உடனடியாக பல கோடி ரூபாய் செலவில் பல்வேறு உதவிகள், வீடுகள், கழிப்பறைகள், குடிநீர் இணைப்புகள், மின்சார இணைப்புகள், வீட்டுமனை பட்டாக்கள், வாக்காளர் அடையாளஅட்டை உள்பட இன்னும் ஏராளமான உதவிகளை அரசு சார்பில் வழங்கிடச் செய்தார். இப்போது, சமீபத்தில் ஒருநாள், சென்னை ஆவடி பருத்திப்பட்டிலுள்ள நரிக்குறவர் குடியிருப்பை சேர்ந்த பள்ளி மாணவிகள் திவ்யா, பிரியா, தர்ஷினி ஆகியோர், தாங்கள் நரிக்குறவ இனத்தை சேர்ந்தவர்கள் என்பதால், அரசு பள்ளி உள்பட பல இடங்களில் புறக்கணிக்கப்படுவதாக பேசி வெளியிட்ட வீடியோ காட்சிகளை சமூக வலைதளத்தில் பார்த்த முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், பால் வளத்துறை அமைச்சர் சா.மு.நாசரை நேரடியாக அங்கு அனுப்பி, அந்த மாணவிகளோடு வீடியோ காலில் பேசினார். அவர்களிடம் குறைகளை கேட்டார். “ஒரு வாரத்தில் உங்கள் குடியிருப்புக்கு வருகிறேன். அப்போது உங்கள் குறைகளையெல்லாம் கேட்டு நிவர்த்தி செய்கிறேன்” என்று கூறியதுடன், “உங்கள் வீட்டுக்கு வந்தால் எனக்கு சோறு போடுவீர்களா?” என்று உரிமையுடன் கேட்டார். உடனே அந்த மாணவிகள், “எங்கள் வீட்டுக்கு வந்தால் மகிழ்ச்சி அடைவோம். கண்டிப்பாக கறி சோறு போடுகிறோம்” என்று கூறினர்.

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் எப்போதும், “சொன்னதை செய்வேன். செய்வதை சொல்வேன்” என்று கூறுவதைப்போல, நரிக்குறவ இன மாணவி தர்ஷினி வீட்டுக்கு திடீரென சென்றார். அங்கு அவர் காபி குடித்தார். அப்போது ஒரு நரிக்குறவ பெண், “அய்யா.. உங்களுக்காக இட்லி, வடை, சாம்பார், சட்னி நாட்டுக்கோழி சமைத்து வைத்திருக்கிறேன், சாப்பிடுங்கள்” என்று கூறினார். மு.க.ஸ்டாலினும் மிக மகிழ்ச்சியோடு “சாப்பிடுகிறேன்” என்று கூறி, அவர்கள் வழங்கிய உணவை தானும் சாப்பிட்டு, பக்கத்திலுள்ள குழந்தைக்கும் ஊட்டினார். இந்த காட்சியை பார்த்து அங்குள்ள நரிக்குறவ இனமக்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தனர்.

விளிம்புநிலை மக்களின் குறைகளை தீர்க்க, அவர்கள் வசிக்கும் இடத்துக்கே நேரடியாக சென்றதோடு மட்டுமல்லாமல், அவர்கள் வீட்டில் உணவருந்திய மு.க.ஸ்டாலின் சமத்துவத்தை செயலில் காட்டிவிட்டார். அவர் காட்டிய வழியை அமைச்சர்கள், அதிகாரிகள் மட்டுமல்லாமல், மக்களும் பின்பற்றி, “எல்லோரும் சமமே” என்ற சமத்துவத்தை தமிழ்நாட்டில் உருவாக்கவேண்டும் என்பதுதான் சமத்துவ திருநாளை கொண்டாடிய எல்லோருடைய தணியாத ஆசையாக இருக்கிறது.

தினகரன்

26-April-2022

பாஜ நயினார் நாகேந்திரன் பாராட்டு

கட்சி பாராமல் தொகுதிக்கு திட்டங்களை முதல்வர் தொடர்ந்து கொடுக்கிறார்

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது பாஜ சட்டபேரவை கட்சி தலைவர் நயினார் நாகேந்திரன் பேசுகையில் "திருநெல்வேலியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்க வேண்டும்" என்றார்.

இதற்கு பதில் அளித்து அமைச்சர் பொன்முடி பேசுகையில், "திருநெல்வேலி மாவட்டத்தில் தற்போது 1 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, 9 அரசு உதவிபெறும் கலை அறிவியல் கல்லூரியும், 18 சுயநிதி கலை அறிவியல் கல்லூரிகளும் உள்ளது. திருநெல்வேலி மாவட்டம் மானூரில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க அனுமதி வழங்கப்பட்டு 2022-23ம் ஆண்டு முதல் செயல்பட உள்ளது. இதை தவிர 1 அரசு பொறியல் கல்லூரியும், 12 சுயநிதி பொறியியல் கல்லூரியும், 1 பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியும் மற்றும் 1 அரசு உதவி பெறும் தொழில் நுட்ப கல்லூரியும், 14 சுயநிதி தொழில் நுட்ப கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இந்த கல்லூரிகள் தொகுதி மாணவர்களின் உயர்கல்வி தேவைகளை நிறைவு செய்வதால், புதிதாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் இல்லை" என்றார்.

நயினார் நாகேந்திரன்: இந்த கேள்வி நமது அரசு வந்த உடன் முதல் முதவில் போடப்பட்டு அதை உடனடியாக முதல்வர் நிறைவேற்றி கொடுத்தார். அதற்கு நன்றி. ஏற்கனவே நன்றி சொல்லிட்டேன், இரண்டாம் முறை நன்றி சொல்கிறேன். அதே போல் திருநெல்வேலி

நெல்லையப்பர் கோயிலுக்கு ₹30 கோடி செலவில் முதல்வர் அறிவுறுத்தல் பெயரில் அறநிலை துறை அமைச்சர் திட்டங்கள் கொடுத்துள்ளார். அதே போல் நெடுஞ்சாலை துறை அமைச்சர் முதல்வர் அறிவுறுத்தல்படி புறவழிச் சாலை வெகு விரைவில் அமைக்கப்படும் என தெரிவித்துள்ளார். முதல்வர் ஏற்கனவே ஆதிச்சநல்லூர் ஆராய்ச்சி நிலையம் ₹18 கோடியில் திருநெல்வேலியில் அமைத்து தரப்படும் என தெரிவித்துள்ளார். இப்படி தொடர்ந்து கட்சி பாராமல் திருநெல்வேலி மாவட்டத்திற்கு திட்டங்கள் தரும் முதல்வருக்கு மனமார்ந்த நன்றி என்று பேசினார்.

மக்கள் குரல்

26-April-2022

விளையாட்டுகளின் விளை நிலமாக தமிழ்நாடு: உறுதி செய்கிறார் முதலமைச்சர் ஸ்டாலின்!

கடந்த வாரம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ள பல திட்டங்கள், தமிழ்நாட்டை விளையாட்டு துறையில் முன்னணியில் நிறுத்தும் என்று எதிர்பார்க்கலாம்.

ஜூலை 28 ந்தேதி முதல், 44 வது செஸ் ஒலிம்பியாட் சென்னையில் துவங்க இருப்பதை முதலமைச்சர் உறுதி செய்துள்ளதை நாம் அறிவோம். உக்ரைனில் போர் பதட்டம் காரணமாக, ரஷ்யாவில் நடைபெற இருந்த இந்த சர்வதேச வரவேற்பை பெற்றுள்ள இந்த பிரபல சர்வதேச போட்டி, மீண்டும் சென்னையில் நடைபெற இருக்கிறது. அதில் பல்வேறு நாடுகள் பங்கேற்க இருக்கிறது.

23 பேர் கொண்ட குழு

இந்தப் போட்டிகள் உலக விளையாட்டு வீரர்கள் மற்றும் ரசிகர்கள் கவனத்தை ஈர்த்து விட்டாலும், பல சிறப்பாகவும் விமர்சையாகவும் நடைபெற 23 பேர் கொண்ட உயர்மட்ட குழுவை முதலமைச்சர் ஸ்டாலின் தன் தலைமையில் உருவாக்கியுள்ளார். இந்த செஸ் போட்டிகள், சர்வதேச நிகழ்வாக, உலகமே வியந்து பாராட்டும் வகையில் நடைபெற வேண்டும் என்பதில் முதலமைச்சர் உறுதியாக இருப்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது.

அந்த குழுவில், தமிழ்நாடு அரசின் விளையாட்டு துறை அமைச்சர் மட்டுமின்றி, சுற்றுலாத்துறை அமைச்சரும் இதர பல்வேறு துறைகளின் செயலாளர்களும் இருப்பது இப்போட்டிகள் சிறப்பாக நடைபெறுவதுடன் தமிழ்நாட்டின் சிறப்பை உலகமே பார்த்து ரசிக்க, இது நல்ல வாய்ப்பு என்பதையும் மனதில் கொண்டு, இப்போட்டிகளை நடத்த இருக்கிறார் என்பதும் நல்ல செய்தி தான்.

செஸ் ஒலிம்பியாட் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வெவ்வேறு நாடுகளில் தான் நடைபெற்று வருகிறது. இம்முறை சென்னையில் நடைபெறுவதால், செஸ் போட்டிகளின் வல்லரசு என்று சென்னை மீண்டும் செஸ் உலக பார்வையை தன் பக்கம் கவர்ந்து வருகிறது.

180 நாடுகள் பங்கேற்பு

உலக புகழ்பெற்ற செஸ் ஆனந்த் முதல், இன்றைய இளம் நட்சத்திரம் பிரக்ஞானந்தா வரை (இவர் தான் உலகிலேயே மிக இளம் வயதில் கிராண்ட் மாஸ்டர் பட்டத்தை வென்ற ஐந்தாவது வீரர்) பலர் இப்போட்டியில் பங்கேற்பார்கள். 10 வயதிலேயே சர்வதேச கிராண்ட் மாஸ்டர் பட்டத்தை வென்றவர் என்பதுடன் தற்போதைய உலக தர வரிசையில் முதலில் இருக்கும் மேக்னஸ் கார்ல்சனை தோற்கடித்த போது இவரது வயது 16 மட்டுமே. உலக சேம்பியன் ஆனந்தால் முடியாத ஒரு சாதனையைதான் பிரக்ஞானந்தா செய்துள்ளார் என்பதை பார்க்கும் போது நமக்கு சிலிர்க்கத் தான் செய்கிறது.

இந்த செஸ் ஒலிம்பியாட் போட்டியில் 180 நாடுகள் பங்கேற்க தகுதி பெற்றுள்ளன. மேலும் 140 பெண்கள் அணி பதக்கத்தை பெற களம் இறங்க இருக்கிறார்கள். செஸ் போட்டி திருவிழா கோலாகலத்துடன் நடைபெறுகையில் சென்னை தனது சிறப்புகளை உலக நாடுகள் தெரிந்து கொள்ள நல்ல வாய்ப்பாக இருப்பதை மறந்து விடக்கூடாது.

தமிழ்நாட்டின் கவுரவம்

ஒலிம்பிக்கில் செஸ் போட்டிகளை சேர்க்க வழியே கிடையாது காரணம் ஒலிம்பிக் விளையாட்டுகள் உடல் உறுதியை சோதிப்பதாகும். ஆனால் செஸ் போட்டியே அறிவுசார் விளையாட்டாகும். ஆக ஒலிம்பிக் போட்டிகளுக்கு இணையான 'செஸ்' ஒலிம்பியாட்டை சென்னை நடத்த இருப்பது மிகப் பெரிய கவுரவமாகும்.

கடந்த வார இறுதியில் முதலமைச்சர் ஸ்டாலின் ஒலிம்பிக் உள்ளிட்ட சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டு வீரர்கள் வெற்றி வாகை சூடுவதற்காக உலகத் தரத்திலான கட்டமைப்புகளுடன் சென்னை அருகே பிரம்மாண்டமான விளையாட்டு நகரம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

தமிழ்நாட்டின் பல்வேறு சர்வதேச போட்டிகளை நடத்த முயற்சிப்பதால், விளையாட்டு சார்ந்த பொருளாதாரம் உருவாகும். அந்த வகையில் சென்னை ஓபன் ஏடிபி டென்னிஸ் தொடரை மீண்டும் நடத்தவும் கடற்கரை ஒலிம்பிக்ஸ் தொடரை நடத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதும் பாராட்டத்தக்கது.

மாலை முரசு

26-April-2022

பல்கலைக்கழக துணை வேந்தர்களை

மாநில அரசே நியமனம் செய்யும் சட்டவரைவுக்கு தார்மீக ஆதரவு!

சீமான் அறிக்கை!!

சென்னை, ஏப். 26—

பல்கலைக்கழக துணை வேந்தர்களை மாநில அரசே நியமனம் செய்ய வழிவகை செய்யும் சட்டவரைவுக்கு தார்மீக ஆதரவு அளிப்பதாக சீமான் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக நாம்தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:—

தமிழகப்பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களை மாநில அரசே நியமனம் செய்ய வழிவகை செய்திடும் சட்டமுன்வடிவை சட்டமன்றத்தில் இயற்றியிருக்கும் தமிழக அரசின் செயல்பாட்டை முழுமையாக வரவேற்கிறேன். உயர்கல்வியில் ஆளுநரின் அதிகாரத்தைக் குறைக்கும் வகையிலான சட்டமுன்வடிவைக் கொண்டு வர வேண்டுமென ஏற்கனவே வலியுறுத்திவந்தநிலையில், அதனையேற்று செயலாக்கம் செய்திருக்கும் திமுக அர

சீமான்

சின் முடிவு மிகச்சரியான முன்நகர்வாகும். மக்களால் தேர்வுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைக்கொண்ட தமிழகச் சட்டமன்றத்தினைத் துளியும் மதியாது, அதன் மாண்பினையும், மதிப்பினையும் குலைத்திடும் வகையில் தொடர்ச்சியாகச் செயல்பட்டு வரும் தமிழக ஆளுநரின் அத்துமீறலுக்கு முடிவு கட்டி, மாநிலத்தன்னாட்சியையும், தன்னுரிமையையும் நிலைநாட்ட வேண்டுமெனும் நிலைப்பாட்டில் நாம் தமிழர் கட்சி உறுதிபூண்டு நிற்கிறது. ஆகவே, தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இச்சட்டவரைவுக்கு நாம் தமிழர் கட்சி தனது தார்மீகமான ஆதரவினைவழங்குகிறது. இத்தோடு, மத்தியப்புலனாய்வுத்துறை விசாரணைக்கான மாநில அரசின் பொது ஒப்புதலைத் திரும்பப் பெற வேண்டியதன் அவசியத்தையும் இச்சமயத்தில் வலியுறுத்துகிறேன். முன்னதாக, ராஜஸ்தான், கேரளா, மேற்கு வங்கம், மராட்டியம் போன்ற மாநிலங்களின் அரசுகள் மத்தியப் புலனாய்வுத்துறைக்கு வழங்கிய மாநில அரசின் பொது ஒப்புதலைரத்துசெய்திருக்கும் நிலையில், தமிழக அரசும் அதனைப் பின்பற்றி மாநிலத்தன்னுரிமையை நிறுவ முற்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

மாலை முரசு
26-April-2022

துணைவேந்தர்கள் தேர்வு:

மாநில அரசின் உரிமையை நிலை நாட்டி இருப்பது பாராட்டுக்குரியது!

வைகோ அறிக்கை!!

சென்னை ஏப்.26

துணை வேந்தர்கள் தேர்வு தொடர்பாக மாநில அரசின் உரிமையை நிலைநாட்டி இருப்பது பாராட்டுக்குரியது என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ புகழாரம் சூட்டியுள்ளார். இது தொடர்பாக வைகோ அறிக்கையில் கூறியிருப்ப தாவது: சென்னைப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட 13 பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களை, மாநில அரசே தேர்வு செய்ய வகை செய்யும் சட்ட முன்வரைவு, தமிழ்நாடு சட்டப்பேரவையில் நேற்று நிறைவேற்றப்பட்டு இருக்கின்றது. கல்வித் துறையில் மாநில உரிமையை முற்றாகப் பறிக்கும் நோக்கத்தில், தேசியக்கல்விக் கொள்கையை ஒன்றிய பா.ஜ.க. அரசு செயல்படுத்த முனைந்துள்ள நேரத்தில், திமுக அரசு இத்தகைய சட்ட முன்வரைவைக் கொண்டு வந்து இருப்பது வரவேற்கத் தக்கது., கடந்த அதிமுக ஆட்சிக் காலத்தில் துணைவேந்தரைத் தெரிவு செய்யும் தேடுதல் குழுவையே நியமிக்கும் அதிகாரத்தை ஆளுநர் எடுத்துக் கொண்டார். அதுமட்டும் அன்றி, துணைவேந்தர் பதவி நியமனத்திலும் ஆளுநர் விருப்பம்தான் மேலோங்கியது. மாநில அரசுடன் பெயரளவுக்குக்கூடக்கலந்துஆலோசிக்காமல், ஆளுநரே துணை வேந்தர்களைத் தேர்வு செய்வது தொடர்ந்தது. நாடாளுமன்ற மக்கள் ஆட்சி முறையில், மக்களால் தேர்ந்து எடுக்கப்படும் முதல்வர்தான் உண்மையான ஆட்சி அதிகாரத்தைக் கொண்டுள்ளார். மேலும், ஒருவர் ஆளுநராக இருப்பதால்தான் பல்கலைக் கழகங்களின் வேந்தராக உள்ளார்; ஆளுநரேஅமைச்சரவையின் அறிவுரையின் பேரில் தான் செயல்பட வேண்டும் என்றால், வேந்தர் பணியும் அமைச்சரவையின்பெயரிலே தான்செயல்பட முடியும். பல்கலைக் கழக 'வேந்தர்' எனும் பதவி, மாநில அரசின் கீழ் உள்ள பல்கலைக் கழக சட்ட விதிகளின்படி வழங்கப்பட்டது ஆகும். எனவே, வேந்தர் பதவி அதிகாரத்தை ஆளுநர் தம்உளத்தேர்வின்படி செயல்படுத்த முடியாது. இந்தநிலையில், தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள இச்சட்ட முன்வரைவுமூலம், கல்வித் துறையில் மக்களால் தேர்வு செய்யப்பட்ட மாநில அரசின் உரிமையை நிலை நாட்டி இருப்பதுபாராட்டுக்கு உரியது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

DECCAN HERALD
26-April-2022

TN passes bills to clip Guv's power to appoint vice-chancellors

Govt's move comes amid ongoing confrontation with Governor R N Ravi

E T B SIVAPRIYAN
CHENNAI, DHNS

Tamil Nadu Assembly on Monday passed two bills that seek to transfer the power of appointing vice-chancellors to state-funded universities from Governor R N Ravi to the state government, amid a full-blown tussle between the DMK dispensation and the Raj Bhavan over exemption from NEET.

The move by the M K Stalin-led government to amend two laws came on the day Ravi inaugurated a two-day conference of vice-chancellors of state, central and private universities of the state in the picturesque Nilgiris district, apparently not taking the state government into confidence.

The amended laws seek to transfer the powers of appointing V-Cs to 13 state-owned universities from the Governor to the state government.

Both the bills cited the Gujarat University Act, 1949, Telangana Universities Act, 1991, and Karnataka State Universities Act, 2000 to drive home the point that the state government should be empowered to appoint V-Cs of state universities.

As principal Opposition AIADMK and BJP opposed the Bill, Stalin cited the example of Gujarat, ruled by the BJP for decades together, where the state government appoints V-Cs and not the Governor.

While BJP staged a walkout, the AIADMK, which passed two bills that allow the state government to appoint V-Cs to two newly-formed universities, said it was opposing the legislation at their "introduction stage."

The government's move comes amid its confrontation with Ravi over a slew of issues – as many as nine bills are pending with the Governor and if one includes the two passed on Monday, the number will be 11.

According to the bills, the state government will constitute a three-member committee to search for V-Cs and appoint them, instead of the Governor.

Clash of functions

Recalling the observations of the Punchhi Commission on Centre-state relations that "there would be a clash of functions and powers" if the authority to choose the top academician was wrested with the Governor, Stalin said V-Cs in Telangana, Karnataka, Andhra Pradesh, and Gujarat are appointed by the respective state governments.

முரசொலி
27-April-2022

முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில்

இந்து சமய அறநிலையத் துறையின் செயல்பாடுகள் சிறப்பாக உள்ளன!

குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பாராட்டு!

சென்னை, ஏப். 27 –

சென்னை, இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அலுவலகத்தில், நேற்று முன்தினம் (25.4.2022) நவீன வசதிகளுடன் கூடிய கூடுதல் கட்டடம் ரூ.15 கோடி செலவில் கட்டுவதற்கான பணிகளை அடிக்கல் நாட்டி திருக்கோயில்களில் பணிபுரியும் தினக் கூலி/தொகுப்பூதியப் பணியாளர்கள் 33 நபர்களுக்கு பணி வரன் முறை செய்து அதன் ஆணையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இதில் கலந்துகொண்ட குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் கூறியதாவது :–

இந்து சமய அறநிலையத் துறையின் புதிய கட்டடம் கால்கோள் இடப்பட்டது. இத்துறை வரலாற்றிலே பெரிய சாதனை ஆகும். ஏறத்தாழ 1950–ஆம் ஆண்டுக் குப் பிறகு, புதிய கட்டடம் இல்லாமல் செயல்பட்டு வந்த இந்து சமய அறநிலை யத்துறை அலுவலகத்திற்கு ரூ.15 கோடி மதிப்பீட்டில் 40 ஆயிரம் சதுர அடியில் நவீன வசதிகளோடு தகவல் தொடர்புடைய ஆணையர் அலுவலகம் உருவாவது. வரவேற்புக்குரியது, பாராட்டுக்குரியது. தமிழக அரசின் இந்து சமய அறநிலையத்துறையின் செயல்பாடுகள் மிக சிறப்பாக நடை பெற்று வருகின்றன. இவ்வாறு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் குறிப்பிட்டார்.

குமரகுருபர சுவாமிகள் பாராட்டு!

கௌமார மடாலயம் குமரகுருபர சுவாமிகள் பேசும்போது தெரிவித்த தாவது:–

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று ஓராண்டிலே பல்வேறு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வரு வது, மகிழ்ச்சிக்குரியதாக இருக்கின் றது. அனைவரும் அர்ச்சகர் ஆகலாம், மாற்றுத் திறனாளிகளுக்கு இலவசத் திருமணத் திட்டம், ஓதுவார்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பது, 5 ஆண்டுகளுக்கு மேலாக தற்காலிக பணியாளர்களாக பணி புரிபவர்களுக்கு நிரந்தர அடிப்படையில் கால நிர்ணயம் செய்து ஊதியம் வழங்கி 1500க்கும் மேற்பட்டவர்களுக்கு பணி நியமனம் வழங்கியிருப்பது மகிழ்விற்குரியது.

இவ்வாறு குமரகுருபர சுவாமிகள் பேசினார்.

அரசியல் நெடுங்கணக்கில்

முன்னெப்போதுமில்லாத முதல் நிகழ்வு!

கவிப்பேரரசு வைரமுத்து பெருமிதம்!

தமிழ்நாட்டு
அரசியல் நெடுங்கணக்கில்
முன்னெப்போதுமில்லாத
முதல் நிகழ்வு!

முதலமைச்சராகத்
தலையெடுத்த தனயன்
முதலமைச்சராகிய
தந்தைக்குச் சிலையெடுப்பது!

எட்டிய தரவுகள் வரை
இந்தியாவிலும்



இதுவே முதல் என்று
தோன்றுகிறது!

முன்னவர் பின்னவர்
இருவரையும் போற்றுகிறேன்!

மக்கள் குரல்

27-April-2022

திருக்கோயில் பணியாளர்களுக்கு பணி நியமன ஆணை: முதல்வருக்கு நன்றி

சென்னை ஏப். 26 –

திருக்கோயில் பணியாளர்களுக்கு பணி நியமனை ஆணை வழங்கி முதலமைச்சருக்கு தொழிலாளர் யூனியன் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு திருக்கோயில்களில் 31.07.2019 வரை 5 ஆண்டுகளுக்கு மேலாக தினக்கூலி / தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து வந்த திருக்கோயில் பணியாளர்களை முதலமைச்சர் சட்டப்பேரவை விதி எண் 110ன் கீழ் பணிவரன்முறை செய்யப்படும் என அறிவித்ததன் பேரில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் பணிநியமனை ஆணை வழங்கப்பட்டது. இதற்காக முதலமைச்சர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், அறநிலையத்துறை செயலாளர், ஆணையர், கூடுதல் ஆணையர்கள் மற்றும் தமிழ்நாடு திருக்கோயில் தொழிலாளர்கள் யூனியனின் மாநில துணை பொதுச் செயலாளரும், சென்னை கோட்ட பொருளாளரும் மற்றும் சென்னை வில்லிவாக்கம் அகத்தீஸ்வர சுவாமி திருக்கோயிலின் மணியம் பணியாளருமான தே.குகன் மற்றும் இதர திருக்கோயில் பணியாளர்களுக்கும் அனைத்து உயர் அதிகாரிகளுக்கும் தமிழ்நாடு திருக்கோயில் தொழிலாளர் யூனியன் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்று தமிழ்நாடு திருக்கோயில் தொழிலாளர் யூனியன் மாநில துணை தலைவர், சென்னை கோட்ட தலைவர் எஸ். தனசேகர் கூறியுள்ளார்.

எங்கள் கொள்கைகளில் தலையிடுவதில்லை

ஆன்மீக அரசு: ஸ்டாலினுக்கு தருமபுரம் ஆதீனம் பாராட்டு

சென்னை, ஏப்.27–

"இந்த ஆட்சிக் காலத்தில், எங்களுக்கு சொந்தமான 28 கோயில்களில் 11 கோயில்களுக்கு நாங்கள் கும்பாபிஷேகம் செய்துவிட்டோம். குழுக்கள் மூலம் தீர்மானம் போட்டு, நாங்கள் கேட்டபோதெல்லாம் நிறைவேற்றி விட்டார்கள். இது ஆன்மிக அரசுதான். எங்களது கொள்கையில் அரசு தலையிடுவதில்லை" என்று தருமபுரம் ஆதீனம் கூறியுள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் வரும் மே மாதம் 5–ம் தேதி இந்துசமய அறநிலையத்துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற உள்ளது. இந்நிலையில், தமிழகத்தில் உள்ள தருமபுரம் ஆதீனம் உள்ளிட்ட 11 ஆதீனங்கள் முதல்வர் மு.க.ஸ்டாலினை இன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்தனர்.

முதல்வரைச் சந்தித்த பின்னர் தருமபுரம் ஆதீனம் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

"திருமடங்களுக்கு என்று குத்தகைதாரர்களுக்கு பட்டா நிலங்கள் கொடுப்பது உள்ளிட்டவைகள் குறித்து அரசு இணைந்து செயல்படுத்தவேண்டும் என்று கோரிக்கை விடுத்தோம். மேலும் திருக்குவளையில் மரகதலிங்கம் கிடைத்திருக்கிறது. அதனை இந்த அரசுத்துறையினர்தான் தேடி கண்டுபிடித்தனர். எனவே அதனை மீண்டும் திருக்கோயிலில் ஒப்படைக்க வேண்டிய வழிவகைகளை செய்ய வேண்டும் எனக் கேட்டுள்ளோம்.

தெய்வீகப் பேரவை என்பது, அனைத்து ஆதீனங்கள், சங்கராச்சாரியார்கள், ஜீயர்கள் அனைவரும் சேர்ந்திருக்கிற அமைப்பாகும். இந்த அமைப்பு முன்னாள் முதல்வர் கருணாநிதி ஆட்சிக்காலத்தில் செம்மையாகவே நடைபெற்றது. எனவே அதனை முதல்வர் ஸ்டாலின் செயல்படுத்த வேண்டும் என்று விரும்புகிறோம். அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் ஆணையரிடம் முதல்வர் கூறியிருக்கிறார்.

ஆதீனங்களுக்கென்று சில சட்ட திட்டங்கள், சில பழக்க வழக்கங்கள் இருக்கின்றன. எனவே அரசு, திருக்கோயில்களோடு, திரு மடங்களுக்கு தேவையான கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும் என சொல்லியிருக்கிறோம்.

இந்த ஆட்சிக் காலத்தில், எங்களுக்குச் சொந்தமான 28 கோயில்களில் 11 கோயில்களுக்கு நாங்கள் கும்பாபிஷேகம் செய்துவிட்டோம். குழுக்கள் மூலம் தீர்மானம் போட்டு, நாங்கள் கேட்டபோதெல்லாம் நிறைவேற்றிவிட்டார்கள். இது ஆன்மிக அரசுதான். அவர்கள் அவர்களுடைய கொள்கையை பார்த்துக் கொள்கின்றனர், நாங்கள் எங்கள் கொள்கையை பார்த்துக் கொள்கிறோம். எங்களது கொள்கைகளில் அவர்கள் தலையிடவில்லை. எனவே அதனைப் பாராட்டுகிறோம்" என்று அவர் கூறினார்.

மாலை மலர்

27-April-2022

10 மாதங்களில் மு.க.ஸ்டாலின் சாதனை

தமிழ்நாடு தெலுகு இளம் சக்தி சார்பில் கோவில்களில் சிறப்பு பூஜை

கே. ஜெகதீஸ்வரரெட்டி ஏற்பாடு

சென்னை,ஏப். 27–

தமிழ்நாடு தெலுகு இளம் சக்தி தலைவரும் ஆந்திர பிரதேச தெலுகு திரைப்பட தயாரிப்பாளர் சங்க நிர்வாகி யுமான கே. ஜெகதீஸ்வரரெட்டி ஏற்பாட்டில் 10 மாதங்களில் ஒரு மாநில முதல்வராக மு.க. ஸ்டாலின் நிகழ்த்திய வெற்றி களை 5 நாட்கள் விழாவாக கொண்டாடப்படுகிறது.

சென்னையில் தொடங்கும் இவ்விழா சேலம், திருச்சி, திரு வள்ளூர்,ஓசூர் மற்றும் திருத்தணி சுப்ரமணிய சுவாமி கோவிலில் பூஜைகள், ரதவிழா போன்ற நிகழ்ச்சிகளுடன் நடைபெறுகிறது.

நாளை (வியாழக்கிழமை) சென்னை ஆர்.கே.நகரில் உள்ள காமராஜ் நகரில் தொடங்கும் விழாவில் பெண் களுக்கு சேலைகள் வழங்கப் படுகிறது. சனிக் கிழமை ஓசூர் சாய்பாபா ஆலயத்தில் அன்ன தானம், ஞாயிற்றுகிழமை திருத் தணி சுப்ரமணிய சுவாமி கோவிலில் பூஜை மற்றும் பக்தர்களுக்கு பிர சாதம் வழங்கப்படுகிறது. வருகிற திங்கட்கிழமை திருச்சி ஸ்ரீரங்கம் கோவிலில் பூஜைகள் மற்றும் அன்னதானம் வழங்கப்படுகிறது. சென்னை மவுண்ட் ரோட்டில் உள்ள தர்காவில் பூஜைகள் நடத்தி அங்குள்ள முஸ்லிம்களுக்கு சிற்றுண்டி, செயின்ட் தாமஸ் சர்ச்சில் பாதிரியார் தலைமை யில் கிறிஸ்தவர்களுக்கு சிற்றுண்டி வழங்கப்படுகிறது. நிகழ்ச்சி களில் ஏழை மக்கள் கலந்து கொண்டு பயன் பெறுமாறு கே.ஜெகதீஸ்வர ரெட்டி கேட்டுக் கொண்டுள் ளார்.

கே.ஜெகதீஸ்வரரெட்டி

தினமணி
28-April-2022

மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு ஆன்மிக அரசு

தருமபுரம் ஆதீனம் புகழாரம்

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஆதீனங்களுடன் தலைமைச் செயலகத்தில் புதன்கிழமை ஆலோசனை நடத்திய முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் பி.சந்தரமோகன், ஆணையர் ஜெ.குமரகுருபரன்.

சென்னை, ஏப்.27: முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு ஆன்மிக அரசு என தருமபுரம் ஆதீனம் மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள் புகழாரம் சூட்டினார்.

சென்னை தலைமைச் செயலகத்தில், தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள ஆதீனங்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் புதன்கிழமை ஆலோசனை நடத்தினார். இந்தக் கூட்டத்தில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் ஆட்சியில் சைவ, வைணவம் இணைந்து ஆன்மிக பேரவை ஒன்றை உருவாக்கி மூன்று மாதத்துக்கு ஒரு முறை ஆதீனங்களிடம் குறைகளை கேட்டு நிவர்த்தி செய்து வந்தார். அதன் பிறகு நீண்ட காலம் இந்தப் பேரவையின் செயல்பாடுகள் இல்லாமல் இருந்தது. தங்களது ஆட்சியில் மீண்டும் ஆன்மிக பேரவை உருவாக்க வேண்டும் என ஆதீனங்கள் வலியுறுத்தினர்.

இதைத்தொடர்ந்து இந்து அறநிலையத் துறை மானிய கோரிக்கை மீது வருகிற மே 5-ஆம் தேதி விவாதம் நடைபெறவிருப்பதை யொட்டி, துறையின் திட்டங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. முன்னதாக தஞ்சாவூர் மாவட்டத்தை அடுத்த களிமேடு கிராமத்தில் உயிரிழந்தோருக்கு இரண்டு நிமிஷங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதையடுத்து தருமபுரம் ஆதீனம் மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஆதீன கர்த்தர்கள், சங்கராச்சாரியர்கள், ஜீயர்களை உள்ளடக்கிய தெய்வீகப்பேரவை மீண்டும் நடத்தப்பட வேண்டும்.

ஆதீனங்களுக்கான சட்டதிட்டங்கள், பழக்க வழக்கங்களின்படி அரசு செயல்பட வேண்டும். திருக்குவளையில் கண்டறியப்பட்ட மரகதலிங்கத்தை திருக்கோயிலுக்கு ஒப்படைக்க வேண்டும். முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசு ஆன்மிக அரசாக செயல்படுகிறது என்றார் அவர்.

இந்த ஆலோசனையில், குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், திருக்கயிலாயப் பரம்பரை தருமையாதீனம், ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பராமாச்சாரியார் சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பராமாச்சாரியார் சுவாமிகள், சாந்தலிங்க மருதாச்சல அடிகளார், குமரகுருபர சுவாமிகள், ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சிவ ஞான பாலய குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சத்தியஞானதேசிகபராமாச்சாரியார் சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ மகாலிங்க பண்டார சன்னதி 28-ஆவது குருமகா சன்னிதானம், அழகிய மணவாள சம்பத்குமார் ராமானுஜஜீயர், திருகைலாய பரம்பரை செங்கோல் ஆதீனம் 103 -ஆவது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக சத்தியஞான பராமாச்சாரிய சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ திரம்ப அழகிய தேசிகர் ஆகிய ஞானபிரகாச தேசிக சுவாமிகள் 29- ஆவது குருமகா சன்னிதானம், ஸ்ரீகாமாட்சிதாஸ் சுவாமிகள், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறைத் துறை ஆணையர் ஜெ.குமரகுருபரன் அறநிலையத் துறை உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

முரசொலி

29-April-2022

களிமேடு திருவிழா விபத்து:

முதலமைச்சர் வந்து பார்த்தது மனசுக்கு நிறைவாக இருக்கு!

விபத்தில் சிக்கி காயமுற்றவர்கள் கலைஞர் செய்திகள் தொலைக்காட்சிக்கு பேட்டி!

சென்னை, ஏப்.29–

களிமேடு திருவிழாவின் போது ஏற்பட்ட விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவர்களைப் பார்த்து நலம் விசாரித்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உடனடியாக நேரில் சென்று பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தவர்களை சந்தித்து அவர்களிடம் நலம் விசாரித்தார். சிகிச்சை முறை குறித்து கேட்டறிந்த துடன், டாக்டர்களிடமும் அவர்களுக்குரிய சிகிச்சை அளிக்கவும் வலியுறுத்தினார்.

முதல்வர் வந்து சென்றது குறித்து கலைஞர் செய்திகள் தொலைக்காட்சி, மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்களையும், சிகிச்சை பெற வந்தவர் களையும் நேர்காணல் கண்டது. அதில் அவர்கள் கூறிய கருத்தினை இங்கே வெளியிட்டுள்ளோம்.

ஆண் 1: எனது ஊர் களிமேடு. விவசாயம் தான் பார்க்கிறேன் சார், தேருக்கு பின்னாடி போனபோது இந்த மாதிரி ஆகிடுச்சு, என்னை தூக்கி விட்டெறிஞ் சுடுச்சு, முதலமைச்சர் என்னை வந்து பார்த்து, 50 ஆயிரம் செக்கும், 25 ஆயிரம் பணமும் கொடுத்து உடம்பை பார்த்துக்கொள்ளச்சொல்லி இருக்கிறார். என்னை வந்த நேரா வந்து பார்த்து, நல்லா ஆகிடுவிங்கோன்னு தட்டிக்கொடுத்து சென்றார். டாக்டர்கள் எல்லாம் அடிக்கடி வந்து பார்த்துக் கிட்டுத்தான் இருக்காங்க.

ஆண் 2: முதலமைச்சர் வந்து எல்லோரையும் பார்த்து விட்டுச் சென்று இருக்காங்க. எனது சொந்தக்காரர்கள் சிலரை நான் பார்க்க வந்திருக்கேன். இதே மாதிரி எந்த ஒரு முதலமைச்சரும் நேரில் வந்து பார்த்தது கிடையாது. மக்களுக்கு இதே மாதிரியான உதவிகளையெல்லாம் செய்தது இல்லை. தஞ்சை மாவட்டம் என்று சொன்ன உடனே வந்துட்டாரு. அதுவே எங்களுக்கு பெரிய பெருமை! சிகிச்சை பெற்று வருபவர்களை பார்த்துட்டு அவங்களுக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் செய்துட்டு போய் இருக்கார்.

மேல் சிகிச்சைக்கு எல்லாம் டாக்டரை அழைத்து சொல்லிட்டுப் போய் இருக்கார். இப்படி ஓடோடி வந்து செய்த முதலமைச்சரை பார்த்தது இல்லை. இதுதான் எங்களுக்கு ஆச்சரியம். இப்படி ஒரு முதலமைச்சர் வந்ததே கிடையாது. அதுவே எங்களுக்கு பெருமையா இருக்குது.

ஒரு முதலமைச்சர் உடனடியாக சட்டமன்றத்தை விட்டுவிட்டு வந்திருக்காரு. அது எங்களுக்கு ஒரு பெருமை!

ஆண் 3: சி.எம். அய்யா வந்தது நாங்க எதிர்பார்க்காதது. அய்யா நேரா வந்து நல்ல உதவி செய்தாங்க. இதனை நாங்க எதிர்ப்பார்க்கவில்லை. அய்யா வந்து பார்த்துட்டுப்போனது கொஞ்சம் ஆறுதலா இருக்கு! அவங்க, அவங்க பேமலி நல்லா இருக்கனும், நாட்டு மக்களுக்கு நல்லா உதவி செய்யனும், இதே மாதிரி அவங்க தொண்டு தொட்டு செய்யனும். மக்களுக்கு உறுதுணையா, அய்யா இருக்கனும், அவர் நேரா வந்து பார்த்தது எங்க ஊருக்கு மிகப்பெருமை. இந்த விபத்து வருத்தப்படக்கூடிய செய்தி தான். சி.எம். அய்யா வந்து பார்த்தது மனசுக்கு ஒரு நிறைவா இருக்கு. கடவுள் பொதுவா எல்லோரும் நல்லா இருக்கனும். சி.எம். அய்யாவும் நல்லா இருக்கனும்.

இவ்வாறு சிகிச்சை பெறுபவர்களும், அவர்களைப் பார்க்க வந்தவர்களும் கூறினர்.

நகர்ப்புற உள்ளாட்சிகளுக்குப் புதிய விடியல்

ஜெயபால் இரத்தினம்

நகர்ப்புற உள்ளாட்சிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளுக்கான ஒருநாள் பயிற்சி முகாம்கள் நடைபெற்றுள்ளன. மாநகராட்சி மேயர்கள், துணை மேயர்கள் மற்றும் நகராட்சித் தலைவர்கள், துணைத் தலைவர்கள் ஆகியோருக்குத் தனியாக ஒரு நாளிலும், பேரூராட்சித் தலைவர்கள், துணைத் தலைவர்களுக்கு மற்றொரு நாளிலும் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. மக்கள் பிரதிநிதிகளின் மனதில் தன்னம்பிக்கையை வளர்த்து, அவர்களை ஊக்குவிக்கும் வண்ணம் நடந்தேறிய வரவேற்கத்தக்க நிகழ்வுகள் இவை.

முதலமைச்சர் இம்முகாம்களில் ஆற்றிய உரைகள் தனிக் கவனம் பெறுகின்றன. சென்னை மாநகர மேயராகப் பணியாற்றியதன் மூலம், தான் பெற்ற அனுபவங்களை அவர்களோடு பகிர்ந்துகொண்டதுடன், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் எப்படியெல்லாம் பணியாற்ற வேண்டும், எப்படியெல்லாம் பணியாற்றினால் மக்களின் நன்மதிப்பைப் பெற முடியும் என்ற ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார். அவ்வுரைகள், உள்ளாட்சியீது அவர் கொண்டிருக்கும் பிணைப்பையும் அக்கறையையும் வெளிப்படுத்தின. புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியத்தின் பெருந்தலைவராகச் சிறப்பாகப் பணியாற்றியதுடன், எல்லாக் காலத்திலும் மக்களோடு நெருக்கமாகப் பழகிவருபவர், உள்ளூர் நிர்வாகம், மக்கள் பிரச்சினைகள் ஆகியவற்றையும் நன்கு அறிந்தவர் அமைச்சர் நேரு. சென்னை மேயராகப் பணியாற்றி மக்கள் அன்பைப் பெற்றவர் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், ஆலந்தூர் நகராட்சித் தலைவராகப் பணியாற்றியவர் மாநிலங்களவை உறுப்பினர் ஆர்.எஸ்.பாரதி. இந்த அனுபவசாலிகள் எல்லாம் இப்பயிற்சி முகாமில் கலந்துகொண்டு, உள்ளாட்சிப் பிரதிநிதிகளாகத் தாங்கள் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டதுடன் பயனுள்ள ஆலோசனைகளையும் வழங்கியுள்ளனர்.

இதற்கு முன்பு எந்த ஒரு முதலமைச்சரோ, துறை அமைச்சரோ உள்ளாட்சித் தேர்தல் முடிந்து மக்கள் பிரதிநிதிகள் பொறுப்பேற்றவுடன், அவர்கள் அனைவரையும் அழைத்து ஒன்றுசேர அமர்த்தி, அறிவுரைகளும் ஆலோசனைகளும் வழங்கியது இல்லை. அந்த வகையில், இது ஒரு வரலாற்றுச் சிறப்பு. நகர்ப்புற உள்ளாட்சிகளின் நிதி ஆதாரங்களை வலுப்படுத்தும் முயற்சிகளில் ஒன்றாக சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள அனுமதி வழங்கியது, நவம்பர் மாதம் முதல் நாளை 'உள்ளாட்சிகள் தினம்' என்று கொண்டாட ஆணையிட்டுள்ளது, ஊராட்சிகளின் கிராமசபைக் கூட்டத்தில் முதலமைச்சரே கலந்துகொண்டு பொதுமக்களைச் சந்திப்பது போன்ற செயல்பாடுகளெல்லாம் முதலமைச்சர் உள்ளாட்சிகள்மீது கொண்டுள்ள அக்கறையை மீண்டும் மீண்டும் வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளன.

நகர்ப்புற உள்ளாட்சிகளின் பொறுப்புக்கு வந்திருப்பவர்களில் பெரும்பாலோருக்கு உள்ளாட்சி நிர்வாகம் புதிது. பலருக்குப் பொதுவாழ்க்கையே புதிது. இவர்களில் பாதிக்கும் மேலானவர்கள் பெண்கள். இவர்கள் எல்லோரும் எந்த ஊரின் நிர்வாகத்துக்குப் பொறுப்பேற்றுள்ளார்களோ அந்த ஊர் அவர்கள் அறிந்த, அவர்கள் வாழும் சொந்த ஊர்தான். இத்தனை நாட்களாக உள்ளாட்சி மன்றங்களின் சேவைகளை எதிர்நோக்கியிருந்த, சாதாரணக் குடிமக்களாக இருந்த இவர்கள், இன்று அந்த உள்ளாட்சி மன்றங்களின் நிர்வாகப் பொறுப்புக்கு வந்துள்ளார்கள். குடிமக்களாக இருப்பது வேறு, ஆட்சியின் நிர்வாகப் பொறுப்பில் செயல்படுவது வேறு என்பதை அவர்கள் உணரும் நேரம் இது. இந்தப் புதியவர்களின் தோள்களில் புதிய சுமை ஏறியுள்ளது. இது அவர்கள் விரும்பிக் கேட்டுக்கொண்டதன் பேரில் உள்ளூர் மக்கள் ஏற்றிவைத்த சுமையான சுமை. நல்லனை முன்னிலைப்படுத்துவதற்கான நம்பிக்கையாக மக்களுக்கு நல்ல நிர்வாகத்தைக் கொடுப்பதுடன், தற்கால, எதிர்காலத் தலைமுறையினருக்குப் பயன்படும் வகையில் உள்கட்டமைப்பு வசதிகளைச் சிறப்பாக மேம்படுத்தித் தரவேண்டிய பொறுப்பும் கடமையும் அவர்களுக்கு இருக்கின்றன.

பொறுப்புக்கு வந்திருப்பவர்கள் அறிந்துகொள்ள வேண்டியவை ஏராளமாக உள்ளன. மன்றக் கூட்டச் செயல்பாடுகளை நன்கு அறிந்து வைத்திருத்தல், அலுவலக நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மை பற்றிய புரிதல்கள், பொதுமக்களுடன் நல்லிணக்கத்துடன் உறவாடுதல் பற்றிய தெளிவு, சட்டப்படி நிர்ணயிக்கப்பட்ட கடமைகள் மற்றும் பொறுப்புகளைப் பற்றிய புரிதல்கள், பொதுமக்களின் அடிப்படைத் தேவைகள் குறித்த புரிதல்கள், அடிப்படைத் தேவைகளுக்கான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கான திட்டங்களைத் தீட்டுதல், அவற்றைச் செயல்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்தல் என்று எத்தனையோ விஷயங்களை அவர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது. சுருக்கமாக, அவர்களின் இன்றைய தேவை திறன் மேம்பாடு. முறையான பயிற்சிகள் மட்டுமே இத்தகைய திறன் மேம்பாட்டுக்கு உதவும். சமீபத்தில் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள ஒருநாள் பயிற்சி நல்ல தொடக்கம்தான் என்றாலும், அவர்களின் திறன் மேம்பாட்டுக்குத் தேவையான அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய வலுவான அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுவது ஒரு அவசரத் தேவையாக உள்ளது. காரணம், அவர்கள் தங்களின் பணியை ஏற்கெனவே தொடங்கிவிட்டார்கள். இவர்களைத் தேர்ந்தெடுத்த பொதுமக்கள் இவர்களிடமிருந்து நிறைய எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். இந்நிலையில், எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் இவர்களின் திறனை மேம்படுத்த வேண்டும். ஒரு திறமையான நிர்வாகம் என்பது நிர்வாக அமைப்பின் முடிவெடுப்பவர்களை மட்டும் சார்ந்தது அல்ல. நிர்வாக இயந்திரமும் தனது பங்களிப்பைத் திறம்பட வழங்கினால் மட்டுமே எதிர்பார்க்கப்படும் சிறப்பான பலன்களை எட்ட முடியும். தற்போதைய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகக் கட்டமைப்பும், அவற்றின் செயல்திறனும் எதிர்பார்ப்புகளை எட்டும் அளவுக்கு வலுவானவையாக இல்லை. சில மாநகராட்சிகளும் பெரிய நகராட்சிகளும் மட்டுமே அத்தகைய கட்டமைப்புகளைக் கொண்டிருக்கின்றன.

நிர்வாகக் கட்டமைப்பை மேம்படுத்துவது என்பது போதுமான அளவில் பணியாளர்களை நியமிப்பது மட்டுமல்ல, அவர்களின் செயல்திறன் தொடர்பானதும்கூட. நகர்ப்புற உள்ளாட்சிகளில் போதுமான அளவில் பணியாளர்கள் இல்லை என்பது நீண்ட காலமாக நிலவிவரும் பெருங்குறைபாடு. பணியிலும் குறைந்தபட்ச அலுவலர்களும் பணியாளர்களுங்கூட, பணிச்சுமையாலும் அழுத்தங்களாலும் தங்கள் பணிகளை இயந்திரகதியில் செய்துவருகிறார்கள் என்பதும், பொதுமக்களுக்கு மரியாதை அளிப்பது இல்லை என்பதும் பொதுவான குற்றச்சாட்டுகள். பணியாளர்கள் தங்கள் திறனை மேம்படுத்திக்கொள்ள வசதியாகப் புத்தாக்கப் பயிற்சிகள் எதுவும் நீண்ட காலமாக வழங்கப்படவில்லை. அரசுத் துறைப் பணியிடங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல் குறித்த சீராய்வு எதுவும் நீண்ட காலமாக செய்யப்படவில்லை என்பதும், அதனால் பல குறைபாடுகள் ஏற்பட்டுள்ளன என்பதும், அவ்வாறான சீராய்வு முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் சில நாட்களுக்கு முன்பு தமிழக நிதியமைச்சர் தெரிவித்தார். அமைச்சர் குறிப்பிட்ட அந்த நிலை, நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கும் பொருந்தும். எனவே, அதேபோல ஒரு நடவடிக்கை நகர்ப்புற உள்ளாட்சிகளிலும் மேற்கொள்ளப்பட்டால் அது நிர்வாகத்துக்கு மட்டுமல்லாது பொதுமக்களுக்கும் பயன் அளிக்கும்.

மொத்தத்தில், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், தற்போதைய சூழ்நிலைகளுக்கேற்பத் தங்களைத் தகவமைத்துக்கொண்டு புதிய விடியலை நோக்கி நடைபோட வேண்டிய காலம் கனிந்திருக்கிறது.

- ஜெயபால் இரத்தினம், 'தமிழக வரலாற்றில் பெரம்பலூர்' உள்ளிட்ட நூல்களின் ஆசிரியர்
தொடர்புக்கு: jayabalrathinam@gmail.com

தமிழ் முரசு
29-April-2022

பத்திரப்பதிவில் தட்கல் திட்டம்

முதல்வருக்கு வணிகர் சங்கம் பாராட்டு

சென்னை, ஏப்.29-
தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநிலத்தலைவர் விக்கிரமராஜா வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழக அரசின் முன்மாதிரி பட்ஜெட் கூட்டத்தில் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கிய தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு, பல்வேறு துறைகளில் உள்ள குறைகளை களையும் விதமாகவும், ஊழலை ஒழிக்கும் வகையிலும், பொதுமக்கள் பயன்பெறும் வகையிலும் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி கோரிக்கை மனு சமர்ப்பித்திருந்தது. அதில் குறிப்பாக பத்திரப்பதிவுத்துறை, வாகன பதிவுத்துறை, பட்டா மாற்று அலுவலகங்களில் முறைகேடுகளை தவிர்த்திட தட்கல் திட்டங்களை அறிமுகப்படுத்தி, அரசுக்கு வருவாய் பெருக்கி, கையூட்டை தவிர்த்திடும் விதமாக தமிழ்நாடு அரசு உரிய சட்ட நடவடிக்கைகளை எடுத்திட விடுக்கப்பட்டுள்ள கோரிக்கையை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆளுமையின்கீழ், பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் மூர்த்தி சட்டமன்றத்தில் மானிய விவாதத்தின்போது தட்கல் திட்டம் பத்திரப்பதிவுத் துறையில் அறிமுகப்படுத்த இருப்பதாக அறிவித்திருப்பதை தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு இதயபூர்வமாக வரவேற்கிறது. இத்திட்டத்தின் மூலம் அரசுக்கு வருவாய் பெருக்கம் மட்டுமின்றி, இத்திட்டத்தினை பொதுமக்கள் பெரிதும் பயன்படுத்திக் கொள்வார்கள். பொதுமக்களை பாதிக்கும் பத்திரப்பதிவுத்துறை சிரமங்கள் வெகுவாகக் குறையும் என்பதனால், இத்திட்டம் நிச்சயம் வெற்றி பெறும் திட்டமாக அமையும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

தினகரன்

30-April-2022

கூடுதல் கிராமசபை கூட்டம்

முதல்வர் அறிவிப்புக்கு காங்கிரஸ் வரவேற்பு

சென்னை, ஏப்.30: தமிழக காங்கிரஸ் கட்சி தலைவர் கே.எஸ்.அழகிரி வெளியிட்ட அறிக்கை:

இனிவரும் காலங்களில் கூடுதலாக மார்ச் 22 உலக தண்ணீர் தினத்தன்றும், நவம்பர் 1 உள்ளாட்சி தினத்தன்றும் கிராமசபை கூட்டம் நடத்தப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருப்பதை வரவேற்கிறோம்.

மேம்தேதி தொழிலாளர் தினத்தன்று தமிழகத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராமசபைக் கூட்டங்களில் காங்கிரஸ் கட்சியினர் பங்கேற்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். மக்கள் பங்கேற்கிற ஜனநாயகமான உள்ளாட்சி அமைப்புகளில் கடந்த 10 ஆண்டுகளாக தேர்தல் நடத்தாமல் புறக்கணிக்கப்பட்டு வந்தது. ஆனால், ஊர்ப்புற, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேர்தல்கள் நடத்தப்பட்டு ஜனநாயகம் உறுதி செய்யப்பட்ட அமைப்புகளாக பஞ்சாயத்து ராஜ் விளங்குகிறது. அதன் முதுகெலும்பாக இருந்து முடிவெடுக்கிற அதிகாரம் பெற்ற கிராமசபை கூட்டங்கள் வெற்றிகரமாக நடைபெற காங்கிரஸ் கட்சியின் துணை அமைப்பான செங்கம் ஜி.குமார் தலைமையில் இயங்குகிற ராஜிவ்காந்தி பஞ்சாயத் துராஜ் சங்கதன் உறுப்பினர்கள் இதனை ஒருங்கிணைத்து உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்

30-April-2022

தமிழக முதல்வர் அனைவருக்கும் பொதுவானவர்

நெல்லையில் சுவாமி நாராயணதீர்த்தர் பேட்டி

நெல்லை, ஏப்.30: தமிழக முதல்வர் அனைவருக்கும் பொதுவானவர் என இமாலய கங்கோத்ரி காளி காம்பா பீடம் சுவாமி நாராயண தீர்த்தர் தெரிவித்தார்.

தமிழகத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று நெல்லை வந்த அவர் அளித்த பேட்டி: கடந்த 2018ம் ஆண்டு நெல்லையில் நடந்த தாமிரபரணி புஷ்கரத்தில் பங்கேற்றேன். தற்போது மீண்டும் நெல்லைக்கு வந்துள்ளேன்.

தமிழகத்தில் பல மாற்றங்கள் நடந்துள்ளன. ஆட்சி மாற்றம், காட்சி மாற்றம் நடந்துள்ளது. அதில் பல நன்மைகளும் நடந்துள்ளன. ஆன்மீகத்தில் நிறைவேற்ற வேண்டிய பணிகள் அதிகம் உள்ளன. தமிழகத்தில் ராஜ ராஜசோழன், சேரர்கள், பாண்டியர்கள் அதிக கோயில்களை அமைத்துள்ளனர். அதனை பாதுகாப்பது நமது கடமை.

தமிழக முதல்வர் அனைவருக்கும் பொதுவானவர். அனைத்து மதத்தினரையும் அரவணைத்து செல்ல வேண்டும் என இந்து மதம் வலியுறுத்துகிறது. இதனால் தமிழகம் வளர்ச்சி பாதையை நோக்கிச் செல்லும். இந்துக் கோயில்கள் மூலம் பெறப்படும் வருமானத்தை இந்து ஆலய மேம்பாட்டு வளர்ச்சிக்கு பயன்படுத்த வேண்டும் என்றார்.

தினகரன்

30-April-2022

ஓங்கட்டும் மனிதாபிமானம்

இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஒரு வேளை உணவுக்குக் கூட அல்லல்படும் அளவுக்கு தவிக்கும் இலங்கை மக்கள், தற்போது குடும்பம் குடும்பமாக தமிழகத்தை நாடி வரும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். எனவே இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு உதவும் வகையில் மருந்து, உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை அனுப்ப அனுமதிக்க வேண்டும் என ஒன்றிய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகத்தை தமிழக அரசு நாடியது. இது குறித்து வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதினார். ஆனால் இதுவரை அனுமதி கிடைக்கவில்லை.

இந்த நிலையில் நேற்று தமிழக சட்டப்பேரவையில் சிறப்பு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. "கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை மக்களுக்கு நிவாரண பொருட்களை வழங்க மத்திய அரசு அனுமதி அளிக்கவேண்டும். அதற்கான ஏற்பாடுகளை செய்து தர வேண்டும்" என அந்த தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த தீர்மானத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்மொழிந்தார்.

அப்போது அவர் பேசுகையில்,"இலங்கை தமிழர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் தமிழ்நாடு அரசு உதவ தயாராக உள்ளது. இலங்கை தமிழர்களுக்கு உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை தமிழ்நாட்டில் இருந்து அனுப்பி வைக்க வேண்டும். இலங்கை தமிழர்களுக்கு உதவிட அனுமதி கோரி தமிழ்நாடு அரசு கடிதம் எழுதியும் ஒன்றிய அரசிடமிருந்து பதில் கிடைக்கவில்லை. இலங்கை தமிழர்களுக்கு மட்டுமல்ல, இலங்கை சிங்களர்களுக்கும் உதவ தமிழக அரசு தயார்" என்றார். இந்த தீர்மானம் குரல் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. அனைத்து கட்சி உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்த நிலையில் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த தீர்மானம் ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பிரதமருக்கும் இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். மாநில அரசின் உரிமையை நிலைநாட்டுவதில், தமிழக அரசு தற்போது மிக உறுதியாக செயல்பட்டு வருகிறது. ஒன்றிய அரசிடமிருந்து மாநில அரசுக்கு வரவேண்டிய சலுகைகள் மற்றும் நிதி ஒதுக்கீடு ஆகியவற்றை பெறுவதற்கும் தமிழக அரசு போராடி வருகிறது. ஆனால் தமிழகத்தை ஒதுக்கி வைக்கும் வகையிலேயேதான் ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் இருந்து வருகிறது.

தற்போது மனிதாபிமானத்துடன் அண்டை நாடான இலங்கை மக்களுக்கு உதவ தமிழக அரசு முன்வந்துள்ளது. ஆனால் இதற்கு அனுமதி கேட்டு கிடைக்காத நிலையில்தான் தற்போது சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்த விவகாரத்தில் எந்தவித பாகுபாடும் பார்க்காமல், வாடி தவிக்கும் இலங்கை மக்களுக்கு உதவ நினைக்கும் தமிழக அரசின் இந்த நல்ல முடிவுக்கு துணை நிற்பதுதான் ஒன்றிய அரசின் கடமையாக உள்ளது. அதைத்தான் ஒட்டுமொத்த தமிழ் சமுதாயமும் எதிர்பார்க்கிறது. எனவே ஒன்றிய அரசின் அனுமதி நிச்சயம் கிடைக்கும். வெல்லட்டும் தமிழக அரசின் முயற்சி. ஓங்கட்டும் மனிதாபிமானம்.

மாலை
முரசு
30-April-2022

காலத்தால் செய்யும் உதவி....!

இலங்கை வரலாற்றில் இதுவரை ஏற்படாத அளவுக்கு கடும் பொருளாதார நெருக்கடியில் அங்குள்ள மக்கள் சிக்கித் தவித்து வருகின்றனர். இதற்கு அங்குள்ள ஆட்சியாளர்கள் பொறுப்பேற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இருந்தாலும் அவர்களை மீறி இது மிதமிஞ்சி போய்விட்டது. இதனால் அடுத்த நாடுகளின் உதவிகளை எதிர்பார்க்கும் நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டு இருக்கிறது. தமிழர்களை வதை செய்யும் அரசாக சிங்கள அரசு இருந்தாலும் ஒரு இன்னல் என்று வருகிறபோது அது அனைத்து மக்களையும் வாட்டுகிறபோது பக்கத்து நாடானநாம்வேடிக்கைபார்த்துக்கொண்டிருக்கமுடியாது. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு என்ற வகையில் தமிழக அரசு அங்கு தமிழ் மக்கள் இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்பட்டாலும் அதை ஒரு புறம் தள்ளிவிட்டு இலங்கைமக்களுக்குஉதவமுன்வந்துள்ளதுதமிழர்களின் சிறந்த பண்பை எடுத்துக்காட்டுகிறது.

இலங்கை முழுவதும் எரிபொருள் தட்டுப்பாடு மிகக் கடுமையாக இருக்கிறது. பெட்ரோல், டீசலுக்காக வாகனங்கள் பல மணி நேரம் வரிசையிலே காத்திருக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. மண்ணெண்ணெய் வாங்க பொதுமக்கள் 6 மணி நேரம் வரிசையில் நின்று காத்திருக்க வேண்டிய ஒரு அவல நிலையும் ஏற்பட்டு இருக்கிறது. எரிவாயு சிலிண்டர்கள் கிடைப்பதில் கடுமையான தட்டுப்பாடும் இருக்கிறது. இவ்வளவு ஏன் சமையல் செய்வதே சிக்கலுக்குரியதாக மாறி இருக்கிறது என்ற தகவல்கள் கசிகின்றன. நாடு முழுவதும் மின்சாரத் தட்டுப்பாடு நிலவுகிறது. அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள் செயல்பட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

பல அத்தியாவசிய பொருட்களுடைய விலை பல மடங்கு உயர்ந்து போய்க்கொண்டே இருக்கிறது. ரசாயன உரங்களுக்கு தடை விதிக்கப்பட்டதால் மலையகப் பகுதிகளில் தேயிலை விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் தேயிலை தோட்டங்களில் பணிபுரியக்கூடிய மலையகத் தமிழர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அன்றாட வாழ்வுக்கே அவர்கள் அல்லாடுகிறார்கள். இலங்கை நாடு முழுவதும் உயிர்காக்கும் பல மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் கடும் பஞ்சம் தலைவிரித்து ஆடுகிறது. சாதாரணமாக ரூ.1,200க்கு கிடைத்த உரமூட்டை ரூ.32 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. பால் விலை, பால் பவுடர் விலை, உணவுப்பொருட்கள் அனைத்தும் பல நூறு மடங்கு உயர்ந்துவிட்ட நிலையில் பச்சிளம் குழந்தைகளும் துன்பத்துக்கு ஆளாகி உள்ளனர். மொத்தத்தில் இலங்கை மக்களின் வாழ்க்கை மிகமிக மோசமான நிலையை அடைந்துள்ளது.

ஆகவே இலங்கை தமிழ் மக்களுக்கு உதவ தமிழக அரசு முன்வந்திருக்கிறது. பகைவனுக்கும் அருள்வாய் நன்னெஞ்சே என்ற வாக்கிற்கிணங்க சிங்கள அரசு தமிழர்களை இரண்டாம் தர குடிமக்களாக நடத்தி வந்தாலும், சிங்கள மக்களின் துயரத்தை போக்கும் வகையில் அவர்களுக்கும் உதவ தமிழக அரசு முன்வந்துள்ளது. துயரத்தில் இருக்கும் மக்களுக்கு தம்மால் இயன்ற உதவியை காலத்தே செய்ய தமிழக அரசு முனைந்துள்ளது. இலங்கை மக்களின் துயரைப் போக்கும் வகையில் முக்கியமாக ரூ.80 கோடி மதிப்புள்ள 40 ஆயிரம் டன் அரிசி, ரூ.28 கோடி மதிப்புள்ள உயிர் காக்கக்கூடிய 137 மருந்துப்பொருட்கள், குழந்தைகளுக்கு வழங்க ரூ.15 கோடி மதிப்புள்ள 500 டன் பால் பவுடர் வழங்க தமிழக அரசு தயார் நிலையில் உள்ளது.

இதில் உள்ள பிரச்சினை என்னவெனில் இந்தப் பொருட்களை இலங்கைக்கு அனுப்ப வேண்டுமானால் அதற்கு மத்திய அரசின் அனுமதி வேண்டும். ஆகவே இது தொடர்பாக தமிழக சட்டசபையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனித்தீர்மானம் கொண்டுவந்தார். ஒட்டுமொத்த கட்சி உறுப்பினர்களின் ஆதரவோடு இந்த தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. இந்த பொருட்களை இலங்கைக்கு அனுப்ப அனுமதி வழங்கக்கோரி பிரதமர் மோடிக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். ஆகவே தமிழக அரசின் இந்த கோரிக்கையை உடனடியாக ஏற்று இலங்கைக்கு அத்தியாவசியப் பொருட்களை அனுப்பி வைக்க மத்திய அரசு உடனடி அனுமதி வழங்க வேண்டும். வழங்கும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

இந்த பொருட்களோடு இலங்கை மக்களுக்கு இன்னும் உதவி தேவைப்படும் என்றால் அடுத்தக்கட்டமாக உதவிகள் செய்வதற்கு தமிழக அரசு எந்நேரமும் தயாராக இருக்கிறது என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவாதம் அளித்திருக்கிறார். இலங்கை மக்களின் துயர்துடைக்க தனது குடும்பத்தின் சார்பில் ரூ.50 லட்சம் அளிக்கிறேன் என்று சட்டசபையில் அ.தி.மு.க. எதிர்க்கட்சி துணைத்தலைவர் ஓ.பன்னீர்செல்வம் அறிவித்தார். அவரது இந்த மனிதாபிமானம் வரவேற்கத்தக்கது. இதுபோன்ற மனிதாபிமானம் எல்லோருக்கும் வரவேண்டும். அண்டை நாடான இலங்கை மக்கள் பட்டினியில் கிடப்பதை வேடிக்கை பார்க்காமல் உரிய நேரத்தில் தமிழக அரசு அவர்களுக்கு உதவ முன்வந்திருப்பது மிகுந்த பாராட்டுதலுக்குரியது. தமிழர்கள் அனைவரும் பெருமைப்படக்கூடியது.

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது – குறள்

மாலை முரசு

30-April-2022

சென்னையில் சித்தா பல்கலைக்கழகம்!

மு.க.ஸ்டாலினுக்கு சித்த மருத்துவர்கள் நன்றி!!

சென்னை,ஏப்.30–

சென்னையில்சித்த பல்கலைக்கழகம் அமைக்க சட்டமசோதா தாக்கல் செய்தமைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு சித்த மருத்துவர்கள் நன்றி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாகசென்னை அரசுசித்தமருத்துவர்கல்லூரி ஆசிரியர் மருத்துவர் பாஸ்கர் ராஜமாணிக்கம் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழக சட்டமன்றத்தில் சுகாதாரத்துறைஅமைச்சர்மா' சுப்பிரமணியன்,தமிழகத்தின் பாரம்பரிய மருத்துவமுறையான சித்தாவை போற்றும் வகையில் இந்தியாவிலேயே முதன்முதலாகசென்னைஅருகேசித்தாவிற்குமருத்துவபல்கலைக்கழகம் அமைக்கப்படும் எனவும் அதற்கு ஆரம்பகட்ட தொகையாக ரூபாய் 2 கோடி நிதிஒதுக்கி சட்டமசோதவை தாக்கல் செய்துள்ளார்.

தமிழகத்தில் உள்ள சித்த மருத்துவக் கல்லூரிகளை ஒருங்கிணைத்து சித்தா மருத்துவ பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் என்பது சித்த மருத்துவர்களின் நீண்ட நாள் கனவு. அதனை முதலமைச்சர்,மு.க.ஸ்டாலின் இன்று நிறைவேற்றியுள்ளார். அவருக்கும் அமைச்சர் மா. சுப்பிரமணியத்திற்கும், அரசு உயர் அதிகாரிகள்அனைவருக்கும், நன்றியைதெரிவித்துக்கொள்கிறோம்.

TN Urges Centre to Allow Humanitarian Aid to Crisis-hit Lanka

CHENNAI The Tamil Nadu Assembly on Friday adopted a resolution urging the Centre to positively consider the state government's request to immediately dispatch food and life-saving medicines to crisis-hit Sri Lanka as chief minister MK Stalin stressed on the need for the state to extend humanitarian aid to the island republic on time. The resolution, piloted by Stalin, was unanimously passed by the House, including the opposition AIADMK and the BJP. Interestingly, apart from extending support to the government resolution, Deputy Leader of the Opposition AIADMK O Panneerselvam pledged ₹50 lakh in his personal capacity, to be extended as aid to Sri Lankan Tamils.

Hours after, the chief minister wrote to Prime Minister Narendra Modi on the passage of the resolution. Stalin urged Modi to immediately issue directions to the Ministry of External Affairs to facilitate early shipment of food, essential goods and lifesaving medicines from Tamil Nadu to Sri Lanka.

The chief minister underscored that Tamil Nadu has not received any official communication on its earlier requests seeking the Centre's nod to send the supplies. A memorandum was given to Modi on March 31 by him, Stalin said and he recalled that he had also spoken and written to External Affairs Minister S Jaishankar. –PTI

The Statesman

30-April-2022

TN passes resolution to send essential items to Sri Lanka

INDO-ASIAN NEWS SERVICE
CHENNAI, 29 APRIL

Tamil Nadu Assembly on Friday passed a unanimous resolution urging the central government to permit the state to send essential items, medicines to Sri Lanka on humanitarian basis.

The resolution was moved by Chief Minister M.K.Stalin signalling the government's changed stance.

Earlier, the DMK government in the state had asked the central government's permission to send the essential items to only Sri Lankan Tamils.

On Friday, moving the resolution, Stalin said the island nation is facing a severe economic crisis and the prices of essential items have gone up and are not affordable to the people.

